உ
சிவமயம்

# பதினொராந் திருமுறை



வெளியீடு:
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பதினொராந் திருமுறை

வெளியீடு:
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
தெல்லிப்பழை - இலங்கை
SRI DURGADEVI DEVASTHANAM
TELLIPPALAI - SRI LANKA.
T.P NO. 021 3213151, 021 2241909
Fax: 021 2241909
e-mail: thurkaiammantemple@gmail.com

***08-07-2014***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# இத்திருமுறை மலரினை அன்னைக்கு காணிக்கை செய்கிறோம்



**சிவத்தமிழ்ச்செல்வி, அன்னை, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி**

*(முன்னாள் தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)*

* வாயாரப் பாடி வாழ்நாள் முழுவதும் திருமுறைக்கு மதிப்புக் கொடுத்த அன்னை.
* திருமுறை மடம் கட்டுவித்து தினமும் நால்வருக்கு திருவமுது படைத்த திருமுறைச் செல்வி.
* காலமெல்லாம் திருமுறைச் செல்வம் காத்திடுவீர் என்ற கட்டளையைப் பிறப்பித்த தெய்வத்திருமகள்

**உங்கள் திருவடி போற்றுகிறோம்.**

**நிர்வாக சபை**

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,

தெல்லிப்பழை.

**2014**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# வெளியீட்டுரை

## செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன்

அவர்கள் வழங்கிய வெளியீட்டுரை

எல்லாம் வல்ல துர்க்காதேவியின் திருவருளை முதற்கண் வேண்டுதல் செய்கிறேன். அம்பாளின் திருவருளால் திருமுறைகளை வெளியிடும் புண்ணியகைங்கரியம் தொடர்கிறது. எமது தேவஸ்தானம் முதலாம் திருமுறை முதல் பன்னிரெண்டாம் திருமுறை வரை வெளியிட வேண்டும் என்ற சிந்தனை வெற்றி பெற்றுள்ளது. எம் ஈழத்திருநாட்டில் தொன்று தொட்டு திருமுறைகளைப் பேணிப்பாதுகாக்கும் பாரம்பரியம் எம்முன்னோர்களால் பின்பற்றப்பட்டு வந்தது. அப்பாரம்பரியத்தை பேண வேண்டியது எம் கடனாகும். அவ்வகையில் இவ்வாண்டு பதினொராம் திருமுறையை வெளியிடுவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். பதினோராந் திருமுறை தமிழால் பரம்பொருளை அர்ச்சித்த மூத்தோரின் பாக்களை உள்ளடக்கியவை.

சங்கால நக்கீரர் முதல் சோழர்கால நம்பியாண்டார் நம்பிகள் வரையுள்ள அருளாளர்களின் அற்புத பாடல்களை கொண்டதாகும். பதினோராந்திருமுறையில் பதிகங்கள், சிறுபிரபந்ங்கள், அந்தாதி, கோவை, மாலை, உலா, ஆற்றுப்படை எனபல வடிவங்களில் இறைவன் மேல் பாடப்பட்டவை ஒன்றாக தொகுக்கப்பட்டுள்ளது. ஏனைய திருமுறைகள் பாடியவர்கள் பொதுவாக ஆண் அடியவர்கள். இத்திருமுறையில் பெண்பால் அடியவரும் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திருமுறைகளை தொகுத்து அவற்றைக்காத்த நம்பியாண்டார் நம்பியின் பாடல்கள் இத்திருமுறையில் இடம்பெற்றுள்ளமை சிறப்புக்குரியது. முதல் முதல் தமிழில் பதிகம் பாடியவர் காரைக்கால் அம்மையார். அவரின் பதிகங்கள் இந்நூலில் அடங்குவது பெருமைக்குரியது. சேக்கிழார்சுவாமிகளின் பெரியபுராணம் எழுவதற்கு பதினொராம் திருமுறை ஏதுவாக அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினொராம் திருமுறையில் நாற்பது பிரபந்தங்கள் உள்ளன. இவை மிகவும் ஆழமான கருத்துக்களை வெளிப்படுத்துவன. தெய்வீகத்தை பாக்களால் அனுபூதியாளர்கள் முன்வைத்த சிறப்பினை உணரலாம். பதினோராந்திருமுறையை படிப்பவர்கள் பொருள் விளங்கி உணர்வுரீதியாக படித்தால் பயன்அதிகம்.

எங்கள் தேவஸ்தானத்தில் பெரும்தலைவராகவும் ஈழத்து சைவர்களின் பெருங்காவலராகவும் விளங்கிய அன்னை சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் அவர்களுக்கு வழமைபோல் சமர்ப்பணம் செய்து வெளியிடுவதில் பேரானந்தம் அடைகிறோம். எமது தேவஸ்தானத்தின் உன்னத சமயப்பணிகளில் ஒன்றாக திருமுறைகளை பதிப்பித்து வெளியிடும் பெரும்பணியை வெற்றிகரமாக நிறைவேற்றி வருகிறோம். அருளாளர்களின் அற்புதபடைப்பான திருமுறைகளை எம் சந்ததி தொடர்ந்து காப்பாற்றவேண்டும். என்றும் அருள்வலிமையுடைய திருமுறைகளுக்கு ஈடாக வேறொரு பக்திஇலக்கியத்தை சொல்ல முடியாது. எனவே திருமுறைகள் தொடர்பான தெளிந்த ஞானஅறிவு எம்மக்களுக்கு வழங்கவேண்டியது காலத்தின் கட்டாய கடனாகும்.

திருமுறைகளை ஆரம்பகாலத்தில் மன்னர்கள் பாதுகாத்தார்கள் பின்பு மடங்களும், ஆதினங்களும் காத்தன. இன்று திருக்கோவில்களே திருமுறைகளை காக்கவேண்டிய நிலமை ஏற்பட்டுள்ளது. ஈழத்திருநாட்டில் எங்கள் திருக்கோவில் பன்னிருதிருமுறைகளையும் வெளியிடுகின்ற பேற்றினைப் பெற்றுள்ளது. இந்நூலை வெளியிடுவதற்கு உதவிய "அனுஷ் பிரின்டர்ஸ்" நிறுவனத்தினருக்கும் இந்நூலினை பிழையின்றி வெளியிட ஒப்புநோக்கி உதவிய எங்கள் தேவஸ்தான உபதனாதிகாரியும் இளைப்பாறிய அரச நிர்வாக உத்தியோகஸ்தருமான திரு. சு. ஏழூர்நாயகம் அவர்கட்கு தேவஸ்தானத்தின் சார்பில் மனப்பூர்வமான நன்றிகளை சமர்ப்பித்துக் கொள்கிறேன். துர்க்காதேவியின் திருவருளால் விரைவில் பன்னிரெண்டாம் திருமுறையும் வெளியிட பிரார்த்தித்து அமைகிறேன்.

**கலாநிதி. ஆறு. திருமுருகன்**
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

**1. திருஆலவாய் உடையார்**

| | |
|---|---|
| *1. திருமுகப் பாசுரம்* | *01* |

**2. காரைக்காலம்மையார்**

| | |
|---|---|
| *1. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் (2)* | *01* |
| *2. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் (3)* | *05* |
| *3. திருஇரட்டை மணிமாலை* | *07* |
| *4. அற்புதத் திருவந்தாதி* | *13* |

**3. ஐயடிகள் காடவர்கோன் நாயனார்**

| | |
|---|---|
| *1. க்ஷேத்திர வெண்பா* | *28* |

**4. சேரமான் பெருமாள் நாயனார்**

| | |
|---|---|
| *1. பொன் வண்ணத் திருவந்தாதி* | *33* |
| *2. திருவாரூர் மும்மணிக்கோவை* | *59* |
| *3. திருக்கைலாய ஞான உலா* | *70* |

**5. நக்கீர தேவ நாயனார்**

| | |
|---|---|
| *1. கயிலை பாதி காளத்தி பாதித் திருவந்தாதி* | *88* |
| *2. திருஈங்கோய்மலை எழுபது* | *109* |
| *3. திருவலஞ்சுழி மும்மணிக்கோவை* | *120* |
| *4. திருஎழுகூற்றிருக்கை* | *125* |
| *5. பெருந்தேவபாணி* | *128* |
| *6. கோபப் பிரசாதம்* | *131* |
| *7. கார் எட்டு* | *135* |
| *8. போற்றித் திருக்கலிவெண்பா* | *137* |
| *9. திருமுருகாற்றுப்படை* | *141* |
| *10. திருக்கண்ணப்பதேவர் திருமறம்* | *153* |

**6. கல்லாட தேவ நாயனார்**

| | |
|---|---|
| *1. திருக்கண்ணப்ப தேவர் திருமறம்* | *159* |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7. கபில தேவ நாயனார்**

1. மூத்த நாயனார் திருஇரட்டை மணிமாலை 161
2. சிவபெருமான் திருஇரட்டை மணிமாலை 167
3. சிவபெருமான் திருவந்தாதி 177

**8. பரண தேவ நாயனார்**

1. சிவபெருமான் திருவந்தாதி 192

**9. இளம் பெருமான் அடிகள்**

1. சிவபெருமான் திருமும்மணிக்கோவை 207

**10. அதிராவடிகள்**

1. மூத்தபிள்ளையார் மும்மணிக்கோவை 215

**11. பட்டினத்துப் பிள்ளையார்**

1. பிரபந்தங்கள் 221
2. திருக்கழுமல மும்மணிக்கோவை 243
3. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை 250
4. திருஏகம்பமுடையார் திருவந்தாதி 274
5. திருவொற்றியூர் ஒருபா ஒருப..து 300

**12. நம்பியாண்டார் நம்பிகள்**

1. திருநாரையூர் விநாயகர் திரு இரட்டை மணிமாலை 309
2. கோயில் திருப்பண்ணியர் விருத்தம் 315
3. திருத்தொண்டர் திருவந்தாதி 333
4. ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி 363
5. ஆளுடைய பிள்ளையார் திருசண்பை விருத்தம் 389
6. ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை 392
7. ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை 404
8. ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் 416
9. ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை 435
10. திருநாவுக்கரசு தேவர் திருவேகாதச மாலை 438



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினொராந் திருமுறை

**40 பதிகங்கள் – 1401 பாடல்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினொராந் திருமுறை

## நூல் ஆய்வு

பதினொராம் திருமுறையில் அமைந்த நூல்கள் நாற்பது, பன்னிரு புலவர்கள் பாடிய நூலின் தொகுப்பே 11 - ஆம் திருமுறை. இதனைப் பிரபந்தம் என அழைப்பதில் தவறில்லை.

இப்பன்னிரு புலவர்களை அவர்கள் தாம் பாடிய பாடல்களால் (எண்ணிக்கையால்) நிரற்படுத்துகின்றோம்.

| | | |
|---|---|---|
| 1. | நக்கீரதேவ நாயனார் | 10 நூல்கள் |
| 2. | நம்பியாண்டார் நம்பி | 10 நூல்கள் |
| 3. | பட்டினத்துப் பிள்ளையார் | 5 நூல்கள் |
| 4. | காரைக்கால் அம்மையார் | 3 நூல்கள் |
| 5. | சேரமான் பெருமாள் | 3 நூல்கள் |
| 6. | கபில தேவர் | 3 நூல்கள் |
| 7. | திரவாலவாயுடையார் (இறைவன்) | 1 மட்டும் |
| 8. | ஐயடிகள் காடவர்கோன் | 1 மட்டும் |
| 9. | கல்லாட தேவ நாயனார் | 1 மட்டும் |
| 10. | பரண தேவ நாயனார் | 1 மட்டும் |
| 11. | இளம் பெருமான் அடிகள் | 1 மட்டும் |
| 12. | அதிராவடிகள் | 1 மட்டும் |
| | | 40 |

மதுரை ஆலவாய்ச் சொக்கேசனே திருவாலவாயுடையார் ஆவர். இறைவனின் திருமுகப்பாசுரம் 11ஆம் திருமுறையின் முதலில் நின்று திருமுறையைத் தொடங்கி வைக்கின்றது. (பத்துப் பாட்டில் முதல் பாட்டாக திருமுருகாற்றுப்படை அமைந்தது போல் பெருமானின் திருமுகப்பாசுரம் இத்திருமுறைக்கு அமைந்த சிறப்பு என்க.)

| | |
|---|---|
| இத்திருமுறையில் சிவனைப்பற்றி நுவலும் நூல்கள் | 25 |
| விநாயகர் பெருமை பேசும் நூல் | 3 |
| முருகன் பெருமை பேசும் நூல் | 1 |
| அடியார்களின் பெருமைகள் பேசும் நூல்கள் | 11 |
| | 40 |

இத்திருமுறையைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பிகளே ஆவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருச்சிற்றம்பலம்

# பதினொராந் திருமுறை

திருஆலவாய் உடையார் அருளிய

பண்: நட்ட பாடை

## திருமுகப்பாசுரம்

01. மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிறகு
அன்னம் பயில் தொழில் ஆலவாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்கும் சேரலன் காண்க
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன் போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண் பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே.

திருச்சிற்றம்பலம்

காரைக்கால் அம்மையார் அருளிய

## திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் (2)

## முதல் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

01. கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர் பெண் பேய்
தங்கியலறியுவறு காட்டில்
தாழ்சடை எட்டுத் திசையும் வீசி
அங்கங் குளிர்ந்தன லாடும்எங்கள்
அப்ப னிடந்திரு ஆலங்காடே. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. கள்ளிக் கவட்டிடைக் காலைநீட்டிக்
கடைக்கொள்ளி வாங்கி மசித்துமையை
விள்ள எழுதி வெடுவெடென்ன
நக்கு வெருண்டு விலங்கு பார்த்து
துள்ளி சுடலைச் சுடு பிணத்தீச்
சுட்டிட முற்றும் சுளிந்துபூழ்கி
அள்ளி அவிக்கநின் றாடும் எங்கள்
அப்ப னிடம்திரு ஆலங்காடே. 3

03. வாகை விரிந்து வெண் ணெற்றொலிப்ப
மயங்கிருள் கூர்நடு நாளையாங்கே
கூகையோடு ஆண்டலை பாட ஆந்தை
கோடதன் மேற்குதித்து ஓடவீசி
ஈகை படர் தொடர் கள்ளி நீழல்
ஈமம் இடுசுடு காட்டகத்தே
ஆகம் குளிர்ந்தனல் ஆடும் எங்கள்
அப்பன் இடம்திரு ஆலங்காடே. 4

04. குண்டில்ஓ மக்குழிச் சோற்றை வாங்கிக்
குறுநரி தின்ன அதனை முன்னே
கண்டிலோ மென்று கனன்று பேய்கள்
கையடித்து ஓடிடு காடரங்கா
மண்டலம் நின்றங்கு உளாளம் இட்டு
வாதித்து வீசி எடுத்த பாதம்
அண்டம் உறநிமிர்ந்து ஆடும் எங்கள்
அப்பன் இடம்திரு ஆலங்காடே. 5

05. விழுது நிணத்தை விழுங்கியிட்டு
வெண்தலை மாலை விரவப்பூட்டிக்
கழுதுதன் பிள்ளையைக் காளியென்று
பேரிட்டுச் சீருடைத் தாவளர்த்துப்
புழுதி துடைத்து முலை கொடுத்துப்
போயின தாயை வரவுகாணாது
அழுதுபுறங் கும்புறங் காட்டில் ஆடும்
அப்பன் இடம்திரு ஆலங்காடே. 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. பட்டடி நெட்டுகிர்ப் பாறுகாற்பேய்
பருந்தொடு கூகை பகண்டை ஆந்தை
குட்டி யிட முட்டை கூகைபேய்கள்
குறுநரி சென்றணங்கு ஆடுகாட்டில்
பிட்டடித் துப்புறங் காட்டில் இட்ட
பிணத்தினைப் பேரப் புரட்டி ஆங்கே
அட்டமே பாயநின்று ஆடும் எங்கள்
அப்பன் இடம்திரு ஆலங்காடே. 7

07. சுழலும் அழல்விழிக் கொள்ளிவாய்ப்பேய்
சூழ்ந்து துணங்கையிட்டு ஓடியாடித்
தழலுள் எரியும் பிணத்தைவாங்கித்
தான்தடி தின்றணங்கு ஆடுகாட்டில்
கழல்ஒலி ஓசைச் சிலம்பொலிப்பக்
காலுயர் வட்டணை இட்டு நட்டம்
அழல்உமிழ்ந்து ஓரி கதிக்க ஆடும்
அப்பன் இடம்திரு ஆலங்காடே. 8

08. நாடும் நகரும் திரிந்து சென்று
நன்னெறி நாடி நயந்தவரை
மூடி முதுபிணத்து இட்டமாடே
முன்னிய பேய்க்கணம் சூடிச்சூழக்
காடும் கடலும் மலையும் மண்ணும்
விண்ணும் சுழல அனல்கையேந்தி
ஆடும் அரவப் புயங்கன் எங்கள்
அப்பன் இடம்திரு ஆலங்காடே. 9

09. துத்தங்கைக் கிள்ளை விளரிதாரம்
உழைகுளி ஓசைபண் கெழுமப்பாடிச்
சச்சரி கொக்கரை தக்கையோடு
தகுணிதந் துந்துபி தாளம் வீணை
மத்தளம் கரடிகை வன்கை மென்தோல்
தமருகம் குடமுழா மொந்தை வாசித்து
அத்தனை விரவினோடு ஆடும் எங்கள்
அப்பன் இடம்திரு ஆலங்காடே. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. புந்தி கலங்கி மதி மயங்கி
இறந்தவ ரைப்புறங் காட்டில் இட்டுக்
சந்தியில் வைத்துக் கடமை செய்து
தக்கவர் இட்டசெந் தீவிளக்கா
முந்தி அமரர் முழலின் ஓசை
திசைகது வச்சிலம் புஆர்க்க ஆர்க்க
அந்தியில் மாநடம் ஆடும் எங்கள்
அப்பன் இடம்திரு ஆலங்காடே. 11

11. ஒப்பினை இல்லவன் பேய்கள் கூடி
ஒன்றினை ஒன்றடித்து ஒக்கலித்துப்
பப்பினை யிட்டுப் பகண்டை யாடப்
பாடிருந்து அந்நரி யாழ்அமைப்ப
அப்பனை அணிதிரு ஆலங்காட்டுள்
அடிகளைச் செடிதலைக் காரைக்காற்பேய்
செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார்
சிவகதி சேர்ந்தின்பம் எய்துவாரே. 12

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைக்காலம்மையார் அருளிய

## திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம் (3)

பண்: இந்தளம்

திருச்சிற்றம்பலம்

01. எட்டி இலவம் ஈகை சூரை காரை படர்தெங்கும்
சுட்ட சுடலை சூழ்ந்த கள்ளி சேர்ந்த குடர்கௌவப்
பட்ட பிணங்கள் பரந்த காட்டிற்பறை போல் விழிகட்பேய்
கொட்ட முழவங்கூளி பாடக்குழகன் ஆடுமே. 13

02. நிணந்தான் உருகி நிலந்தான் நனைப்ப நெடும்பற் குழிகட்பேய்
துணங்கையெறிந்து சூழும் நோக்கிச் சுடலை நவிழ்த்தெங்கும்
கணங்கள் கூடிப்பிணங்கள் மாந்திக்களித்த மனத்தவாய்
அணங்கு காட்டில் அனல்கை யேந்தி அழகன் ஆடுமே. 14

03. புட்கள் பொதுத்த புலால் வெண்தலையைப் புறமே நரிகவ்வ
அட்கென் றழைப்ப ஆந்தை வீச அருகே சிறு கூகை
உட்க விழிக்க ஊமன் வெருட்ட ஓரிகதித்தெங்கும்
மிட்க நட்டம் பேணும் இறைவன் பெயரும் பெருங்காடே. 15

04. செத்த பிணத்தைத் தெளியாது ஒரு பேய் சென்று விரல் கூட்டிக்
கத்தி உறுமிக் கனல்விட்டு எறிந்து கடக்கப் பாய்ந்து போய்ப்
பத்தல் வயிற்றைப் பதைக்க மோதிப் பல பேய் இரிந்தோடப்
பித்த வேடம் கொண்டு நட்டம் பெருமான் ஆடுமே. 16

05. முள்ளி தீந்து முளரி கருகிமூளை சொரிந்துக்குக்
கள்ளி வற்றி வெள்ளில் பிறங்குகடுவெங் காட்டுள்ளே
புள்ளி உழைமான் தோலொன்று உடுத்துப் புலித்தோல் பயிற்கிட்டும்
பள்ளி இடமும் அதுவே யாகப் பரமன் ஆடுமே. 17

06. வாளைக்கிளர வளைவாள் எயிற்று வண்ணச் சிறுகூகை
மூளைத் தலையும் பிணமும் விழுங்கி முரலும் முதுகாட்டில்
தாளிப் பனையின் இலைபோல் மயிர்க்கட்டழல்வாய் அழல்கட்பேய்
கூளிக் கணங்கள் குழலோ டியம்பக் குழகன் ஆடுமே. 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. நொந்திக்கிடந்த சுடலைதடவி நுகரும் புழுக்கின்றிச்
சிந்தித்திருத்தங்கு உறக்குஞ் சிறுபேய் சிரமப் படுகாட்டின்
முந்தி அமரர் முழவின் ஓசை முறைமை வழுவாமே
அந்தி நிருத்தம் அனல்கை ஏந்தி அழகன் ஆடுமே. 19

08. வேய்கள் ஓங்கி வெண்முத்து உதிர வெடிகொள் சுடலையுள்
ஓயும் உருவில் உலறு கூந்தல் அலறுபகுவாய்
பேய்கள் கூடிப்பிணங்கள் மாந்தி சுணங்கும் பெருங்காட்டின்
மாயன் ஆட மலையான் மகளும் மருண்டு நோக்குமே. 20

09. கடுவன் உகளும் கழைசூழ் பொதும்பிற் கழுகும் பேயுமாய்
இடுவெண் மழுவுலையும் ஏமப்புகையும் எழுந்த பெருங்காட்டில்
கொடுவெண்மழுவும் பிறையும் ததும்பக் கொள்ளென்று இசைபாடப்
படுவெண் துடியும் பறையும் கறங்கப் பரமன் ஆடுமே. 21

10. குண்டை வயிற்றுக்குறிய சிறிய நெடிய பிறங்கற்பேய்
இண்டை படர்ந்த இருள்சூழ் மயானத்து எரிவாய் எயிற்றுப் பேய்
கொண்டு குழவிதடவி வெருட்டிக் கொள்ளென்று இசைபாட
மிண்டி மிளிர்ந்த சடைகள் தாழ விமலன் ஆடுமே. 22

11. சூடும் மதியும் சடைமேல் உடையார் கழல்வார் திருநட்டம்
ஆடும் அரவம் அரையில் ஆர்த்த அடிகள் அருளாலே
காடுமலிந்த கனல்வாய் எயிற்றுக் காரைக் காற்பேய்தன்
பாடல் பத்தும் பாடி ஆட பாவம் நாசமே. 23

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைக்காலம்மையார் அருளிய

# திருஇரட்டை மணிமாலை (3)

திருச்சிற்றம்பலம்

## கட்டளைக் கலித்துறை

01. கிளர்ந்துந்து வெந்துயர் வந்தடும்
போது அஞ்சி நெஞ்சம் என்பாய்த்
தளர்த்திங்கு இருத்தல் தவிர்திகண்
டாய் தளராதுவந்தி
வளர்ந்துந்து கங்கையும் வானத்து
இடைவளர் கோட்டு வெள்ளை
இளந்திங் களும்எருக் கும்மிருக்
குஞ் சென்னி ஈசனுக்கே. 24

## வெண்பா

02. ஈசன் அவன் அல்லாது இல்லை யெனநினைந்து
கூசி மனத்தகத்துக் கொண்டிருந்து - பேசி
மறவாது வாழ்வாரை மண்ணுலகத்து என்றும்
பிறவாமைக் காக்கும் பிரான். 25

## கட்டளைக் கலித்துறை

03. பிரானென்று தன்னைப்பன் னாள்புர
வித்தொழு வார்இடர்கண்டு
இரான்என்ன நிற்கின்ற ஈசன்கண்
டீர்இன வண்டுகிண்டிப்
பொராநின்ற கொன்றைப் பொதும்பர்க்
கிடந்துபொம் மென்துறைவாய்
அராநின்று இரைக்கும் சடைச்செம்பொன்
நீள்முடி அந்தணனே. 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெண்பா

04. அந்தணனைத் தஞ்சமென்று ஆட்பட்டார் ஆழாமே
வந்தணைந்து காத்தளிக்கும் வல்லாளன் - கொந்தணைந்த
பொன் கண்டால் பூணாதே கோள் அரவம் பூண்டானே
என் கண்டாய் நெஞ்சே இனி. 27

### கட்டளைக் கலித்துறை

இனிவார் சடையினில் கங்கையென்
பாளைஅங் கத்திருந்த
கனிவாய் மலைமங்கை நாணில் என்
செய்திகை யிற்சிலையால்
முனிவார் திரிபுரம் மூன்றும் வெந்து
அன்றுசெந் தீயில் மூழ்கத்
தனிவார் கணைஒன்றி னால் மிகக்
கோத்தளஞ் சங்கரனே. 28

வங்கமலி கடல் நாகைக்கா
ரோணத்துஎம் வானவனே
எங்கள் பெருமானார் விண்ணப்பம்
உண்டது கேட்டருள்வீர்
கங்கை சடையுட் கரந்தாய் அக்
கள்ளத்தை மெள்ளஉமை
நங்கை அறியிற்பொல் லாதுகண்
டாய் எங்கள் நாயகனே (4.103.8)

### வெண்பா

06. சங்கரனை தாழ்ந்த சடையானை அச்சடைமேல்
பொங்கரவம் வைத்துகந்த புண்ணியனை - அங்கொருநாள்
ஆவாவென்று ஆழாமைக் காப்பானை எப்பொழுதும்
ஓவாது நெஞ்சே உரை. 29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கட்டளைக் கலித்துறை

07. உரைக்கப்படுவதும் ஒன்றுண்டு
கேட்கிற்செவ் வான்தொடைமேல்
இரைக்கின்ற பாம்பினை என்றும்
தொடேல் இழிந்து ஓட்டந்து எங்கும்
திரைக்கின்ற கங்கையும் தேன்நின்ற
கொன்றையும் செஞ்சடைமேல்
விரைக்கின்ற வன்னியும் சென்னித்
தலைவைத்த வேதியனே. 30

### வெண்பா

08. வேதியனை வேதப்பொருளானை வேதத்துக்கு
ஆதியனை ஆதிரைநன் னாளனைச் - சோதிப்பான்
வல்லேன் மாய்புக்கு மாலவனும் மாட்டாது
கில்லேன் மாஎன்றான் கீழ். 31

### கட்டளைக் கலித்துறை

09. கீழா யின துன்ப வெள்ளக்
கடல்தள்ளி உள்ளுறப் போய்
வீழா திருந்தின்பம் வேண்டும்என்
பீர்வர வார்புரங்கள்
பாழா யிடக்கண்ட கண்டனன்எண்
தோளன்பைம் பொற்கழலே
தாழாது இறைஞ்சிப் பணிந்துபன்
னாளும் தலைநின்மினே. 32

### வெண்பா

10. தலையாய ஐந்திணையுஞ் சாதித்துத் தாழ்ந்து
தலையா யின வுணர்ந்தோர் காண்பர் - தலையாய
அண்டத்தான் ஆதிரையான் ஆலாலம் உண்டிருண்ட
கண்டத்தான் செம்பொற் கழல். 33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டளைக் கலித்துறை

11. கழற்கொண்ட சேவடி காணலுற்
றார்தம்மைப் பேணலுற்றார்
நிழற் கண்ட போழ்தத்து நில்லா
வினை நகர் ஏதுமின்றித்
தழற்கொண்ட சோதிச்செம் மேனிஎம்
மானைக்கம் மாமலர்தூய்த்
தொழக்கண்டு நிற்கிற்கு மோதுன்னி
நம்அடுந் தொல்வினையே. 34

## வெண்பா

12. தொல்லை வினை வந்து சூழாமுன் தாழாமே
ஒல்லை வணங்கி உமையென்னும் - மெல்லியல்ஓர்
கூற்றானைக் கூற்றுருவங் காய்ந்தானை வாய்ந்திலங்கு
நீற்றானை நெஞ்சே நினை. 35

## கட்டளைக் கலித்துறை

13. நினையாது ஒழிதிகண் டாய்நெஞ்ச
மே இங்கோர் தஞ்சமென்று
மனையா ளையும் மக்கள் தம்மையும்
தேறியோர் ஆறுபுக்கு
நனையாச் சடைமுடி நம்மன்நந்
தாதைநொந் தாதசெந்தீ
அனையான் அமரர் பிரான் அண்ட
வாணன் அடித்தலமே. 36

## வெண்பா

14. அடித்தலத்தின் அன்றரக்கன் ஐந்நான்கு தோளும்
முடித்தலமும் நீ முரித்த வாறென் - முடித்தலத்தின்
ஆறாடி ஆறா அனலாடி அவ்வனலின்
நீறாடி நெய்யாடி நீ. 37

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டளைக் கலித்துறை

15. நீநின்று தானவர் மாமதில்
மூன்றும் நிரந்துடனே
தீநின்று வேவச் சிலைதொட்ட
வாறென் திரங்குவல்வாய்ப்
பேய்நின்று பாடப் பெருங்காடு
அரங்காப் பெயர்ந்து நட்டம்
போய்நின்று பூதம் தொழச் செய்யும்
மொய்கழற் புண்ணியனே. 38

## வெண்பா

16. புண்ணியங்கள் செய்தனவும் பொய்ந்நெறிக்கட் சாராமே
எண்ணியோ ரைந்தும் இசைந்தனவால் - திண்ணிய
கைம்மாவின் ஈருரிவை மூவுருவும் போத்துகந்த
அம்மானுக் காட்பட்ட அன்பு. 39

## கட்டளைக் கலித்துறை

17. அன்பால் அடைவதெவ் வாறுகொல்
மேலதோர் ஆடரவம்
தன்பால் ஒருவரைச் சார ஓட்
டாதது வேயும் அன்றி
முன்பா யினதலை யோடுகள்
கோத்தவை ஆர்த்து வெள்ளை
என்பா யினவும் அணிந்தங்கோர்
ஏறுகந்து ஏறுவதே. 40

## வெண்பா

18. ஏறலால் ஏறமற் றில்லையே எம்பெருமான்
ஆறெலாம் பாயும் அவிர்சடையார் - வேறோர்
படங்குலவு நாகமுமிழ் பண்ட மரர்ச் சூழ்ந்த
தடங்கடல்நஞ் சுண்டார் தமக்கு. 41

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டளைக் கலித்துறை

19. தமக்கென்றும் இன்பணி செய்திருப்
பேழுக்குத் தாம் ஒரு நாள்
எமக்கொன்று சொன்னால் அருளுங்கொ
லாமிணை யாதுமின்றிச்
சுமக்கின்ற பிள்ளைவெள் ளேறொப்ப
தொன்றுதொண்டைக் கனிவாய்
உமைக்கென்று தேடிப் பெறாதுட
னே கொண்ட உத்தமரே. 42

## வெண்பா

20. உத்தமராய் வாழ்வார் உலந்தக்கால் உற்றார்கள்
செத்த மரமடுக்கித் தீயாமுன் - உத்தமனாம்
நீளாழி நஞ்சுண்ட நெய்யாடி தன்திறமே
கேளாழி நெஞ்சே கிளர்ந்து 43

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரைக்காலம்மையார் அருளிய

# அற்புதத் திருவந்தாதி (4)

திருச்சிற்றம்பலம்

01. பிறந்து மொழிபயின்று பின்னெல்லாம் காதல்
சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்பது இடர். 44

02. இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரும் நெறி பணியாரேனும் - சுடருருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மனார்க்கு
அன்பறாது என் நெஞ் சவர்க்கு 45

03. அவர்க்கே எழுபிற்பும் ஆளாவோம் என்றும்
அவர்க்கேநாம் அன்பாவ தன்றிப் - பவர்சடைமேற்
பாகாப்போழ் சூடும் அவர்க்கல்லால் மற்றொருவர்க்கு
ஆகாப்போம் எஞ்ஞான்று ஆள். 46

04. ஆளானோம் அல்லல் அறிய முறையிட்டாற்
கேளாதது என் கொலோ கேள் ஆமை - நீளாஆகம்
செம்மையான் ஆகித் திருமிடறு மற்றொன்றாம்
எம்மையாட் கொண்ட இறை. 47

05. இறைவனே எவ்வுயிருந் தோற்றுவிப்பான் தோற்றி
இறைவனே ஈண்டிறக்கஞ் செய்வான் - இறைவனே
எந்தாய் என இரங்கும் எங்கள்மேல் வெந்துயரம்
வந்தால் அதுமாற்று வான். 48

06. வானத்தான் என்பாரும் என்கமற் றும்பர்கோன்
தானத்தான் என்பாரும் தாமென்க - ஞானத்தான்
முன் நஞ்சத் தாலிருண்ட மெய்யொளிசேர் கண்டத்தான்
என் நெஞ்சத் தானென்பன் யான். 49

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. யானே தவமுடையேன் என்னெஞ்சே நன்னெஞ்சம்
யானே பிறப்பறுப்பான் எண்ணினேன் - யானேஅக்
கைம்மா உரிபோர்த்த கண்ணுதலான் வெண்ணீற்ற
அம்மானுக்கு ஆளாயி னேன். 50

08. ஆயினேன் ஆள்வானுக்கு அன்றே பெறற்கரியன்
ஆயினேன் அஃதன்றே யாமாறு - தூய
புனற்கங்கை ஏற்றானோர் பொன்வரையே போல்வன்
அனற்கங்கை ஏற்றான் அருள். 51

09. அருளே உலகெலாம் ஆள்விப்பது ஈசன்
அருளே பிறப்பறுப்ப தானால் - அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவது எனக்கு. 52

10. எனக்கினிய எம்மானை ஈசனையான் என்றும்
மனக்கினிய வைப்பாக வைத்தேன் - எனக்கவனைக்
கொண்டேன் பிரானாகக் கொள்வதுமே இன்புற்றேன்
உண்டே எனக்கரியது ஒன்று. 53

11. ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன்
ஒன்றேயென் உள்ளத்தின் உள்ளடைத்தேன் - ஒன்றேகாண்
கங்கையான் திங்கட் கதிர்முடியான் பொங்கொளிசேர்
அங்கையாற்கு ஆளாம் அது. 54

12. அதுவே பிரான் ஆமாறு ஆட்கொள்ளுமாறும்
அதுவே யினியறிந்தோ மானால் - அதுவே
பனிக்கணங்கு கண்ணியார் ஒண்ணுதலின் மேலோர்ங்
தனிக்கணங்கு வைத்தார் தகவு. 55

13. தகவுடையார் தாமுளரேல் தாரகலஞ் சாரப்
புகவிடுதல் பொல்லாது கண்டீர் - மிகவடர
ஊர்ந்திடுமா நாகம் ஒருநாள் மலைமகளைச்
சார்ந்திடுமேல் ஏபாவம் தான். 56

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. தானே தனி நெஞ்சந் தன்னையுயக் கொள்வான்
தானே பெருஞ்சேமம் செய்யுமால் - தானேயோர்
பூணாகத் தாற்பொலிந்து பொங்கழல்சேர் நஞ்சுமிழும்
நீணாகத் தானை நினைந்து. 57

15. நினைந்திருந்து வானவர்கள் நீள்மலராற்பாதம்
புனைந்தும் அடிபொருந்த மாட்டார் - நினைந்திருந்து
மின் செய்வான் செஞ்சடையாய் வேதியனே என்கின்றேர்க்கு
என் செய்வான் கொல்லோ இனி. 58

16. இனியோ நாம் உய்ந்தோம் இறைவன் அருள்சேர்ந்தோம்
இனியோர் இடரில்லோம் நெஞ்சே - இனியோர்
வினைக்கடலை யாக்குவிக்கும் மீளாப் பிறவிக்
கனைக்கடலை நீந்தினோம் காண். 59

17. காண்பார்க்குங் காணலாந் தன்மையனே கைதொழுது
காண்பார்க்குங் காணலாம் காதலால் - காண்பார்க்குச்
சோதியாய்ச் சிந்தையுள்ளே தோன்றுமே தொல்லுலகுக்கு
ஆதியாய் நின்ற அரண். 60

18. அரனென்கோ நான்முகன் என்கோ அரிய
பரனென்கோ பண்புணரமாட்டேன் - முரண் அழியத்
தானவனைப் பாதத் தனிவிரலால் செற்றானை
யானவனை எம்மானை இன்று. 61

19. இன்று நமக்கெளிதே மாலுக்கும் நான் முகற்கும்
அன்றும் அளப்பரியன் ஆனானை - என்றும் ஓர்
மூவா மதியானை மூவேழ் உலகங்கள்
ஆவானைக் காணும் அறிவு. 62

20. அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே - அறிகின்ற
மெய்ப்பொருளும் தானே விரிசுடர்பார் ஆகாயம்
அப்பொருளுந்தானே அவன். 63

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. அவனே இருசுடர் தீ ஆகாசம் ஆவான்
அவனே புவிபுனல் காற்றாவான் - அவனே
இயமான னாய் அட்ட மூர்த்தியுமாய் ஞான
மயனாகி நின்றானும் வந்து. 64

22. வந்திதனைக் கொள்வதே யொக்குமிவ் வாளரவின்
சிந்தையது தெரிந்து காண்மினோ - வந்தோர்
இராநீர் இருண்டனைய கண்டத்தீர் எங்கள்
பிரானீரும் சென்னிப் பிறை. 65

23. பிறையும் புனலும் அனலரவுஞ் சூடும்
இறைவர் எமக்கிரங் காரேனுங் - கறைமிடற்ற
எந்தையார்க்கு ஆட்பட்டேம் என்றென்று இருக்குமே
எந்தையா உள்ளம் இது. 66

24. இதுவன்றே ஈசன் திருவுருவம் ஆமாறு
இதுவன்றே என்றனக்கோர் சேமம் - இதுவன்றே
மின்னுஞ் சுடருருவாய் மீண்டாயென் சிந்தனைக்கே
இன்னுஞ் சுழல்கின்றது இங்கு. 67

25. இங்கிருந்து சொல்லுவதென் எம்பெருமான் எண்ணாதே
எங்கும் பலதிரியும் எத்திறமும் - பொங்கிரவில்
ஈமவனத்து ஆடுவதும் என்னுக்கென்று ஆராய்வோம்
நாமவனைக் காணலுற்ற ஞான்று. 68

26. ஞான்ற குழற்சடைகள் பொன்வரைபோல் மின்னுவன
போன்ற கறைமிடற்றான் பொன்மார்பின் - ஞான்றெங்கும்
மிக்கயலே தோன்ற விங்கி மிளருமே
அக்கயலே வைத்த அரவு. 69

27. அரவம் ஒன்று ஆகத்து நீ நயந்து பூணேல்
பரவித் தொழுதிரந்தோம் பன்னாள் - முரணழிய
ஒன்னாதார் மூவெயிலும் ஓரம்பால் - எய்தானே
பொன்னாரம் மற்றொன்று பூண். 70

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. பூணாக வொன்று புனைந்தொன்று பொங்கதளின்
நாணாக மேல்மிளிர நன்கமைத்துக் - கோள்நாகம்
பொன்முடிமேற் சூடுவது மெல்லாம் - பொறியிலியேற்கு
என் முடிவ தாக இவர். 71

29. இவரைப் பொருளுணர மாட்டாதார் எல்லாம்
இவரை யிகழ்வதே கண்டீர் - இவர் தமது
பூக்கோல மேனிப் பொடிபூசி என்பணிந்த
பேய்க்கோலங் கண்டார் பிறர். 72

30. பிறர் அறிய லாகாப் பெருமையரும் தாமே
பிறர் அறியும் பேருணர்வும் தாமே - பிறருடைய
என்பே அணிந்திரவில் தீயாடும் எம்மானார்
வன்பேயும் தாமும் மகிழ்ந்து. 73

31. மகிழ்தி மடநெஞ்சே மானுடரில் நீயும்
திகழ்தி பெருஞ்சேமஞ் சேர்ந்தாய் - இகழாதே
யாரன்பே யேனும் அணிந்துழல்வார்க்குஆட் பட்ட
பேரன்பே இன்றும் பெருக்கு. 74

32. பெருகொளிய செஞ்சடைமேற் பிள்ளைப் பிறையின்
ஒரு கதிரே போந்தொழுகிற்று ஒக்கும் - தெரியின்
முதற்கண்ணான் முப்புரங்கள் அன்றெரித்தான் மூவா
நுதற்கண்ணான் தன் மார்பின் நூல். 75

33. நூலறிவு பேசி நுழைவிலா தார்திரிக
நீல மணிமிடற்றான் நீர்மையே - மேலுவந்தது
எக்கோலத்து எவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும்
அக்கோலத்து அவ்வுருவே ஆம். 76

34. ஆமாறு அறியாவே வல்வினைகள் அந்தரத்தே
நாமாள் என்று ஏத்தார் நகர்மூன்றும் - வேமாறு
ஒருகணையால் செற்றானை உள்ளத்தால் உள்ளி
அருகணையா தாரை அடும். 77

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. அடுங்கண்டாய் வெண் மதியென்று அஞ்சி இருள்போந்து
இடங்கொண்டு இருக்கின்றது ஒக்கும் - படங்கொள்
அணிமிடற்ற பேழ்வாய் அரவசைத்தான் கோல
மணிமிடற்றின் உள்ள மறு. 78

36. மறுவுடைய கண்டத்தீர் வார்சடைமேல் நாகம்
தெறுமென்று தேய்ந்துழலும் ஆ ஆ - உறுவான்
தளரமீது ஓடுமேல் தான் அதனை அஞ்சி
வளருமோ பிள்ளை மதி. 79

37. மதியா அடல் அவுணர் மாமதில் மூன்(று) அட்ட
மதியார் வளர்சடையி னானை - மதியாலே
என்பு ஆக்கை யால் இகழாது ஏத்துவரேல் இவ்வுலகில்
என்பு ஆக்கை யாய்ப்பிறவார் ஈண்டு. 80

38. ஈண்டொளிசேர் வானத்து எழுமதியை வாளரவம்
தீண்டச் சிறுகியதே போலாதே - பூண்டதோர்
தாரேறு பாம்புடையான் மார்பில் தழைத்திலங்கு
கூரேறு கார் எனக் கொம்பு. 81

39. கொம்பினையோர் பாகத்துக்கொண்ட குழகன்தன்
அம்பவளமேனி அது முன்னம் - செம்பொன்
அணிவரையே போலும் பொடியணிந்தால் வெள்ளி
மணிவரையே போலும் மறித்து 82

40. மிறித்தும் மடநெஞ்சே வாயாலும் சொல்லிக்
குறித்துத் தொழுதொண்டர் பாதம் - குறித்தொருவர்
கொள்ளாத திங்கட் குறுங்கண்ணி கொண்டார்மாட்டு
உள்ளதார் கூட்டம் ஒருவு. 83

41. ஒருபால் உலகளந்த மாலவனாம் மற்றை
ஒருபால் உமையவளாம் என்றால் - இருபாலும்
நின்னுருவமாக நிறந்தெரிய மாட்டோமால்
நின்னுருவோ மின்னுருவோ நேர்ந்து. 84

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. நேர்ந்தரவம் கொள்ளச் சிறுகிற்றோ நீயதனை
ஈர்ந்தளவே கொண்டிசைய வைத்தாயோ - பேர்ந்து
வளங்குழவித் தாய்வளர மாட்டாதோ என்னோ
இளங்குழவித் திங் களிது? 85

43. திங்கள் இது சூடிச் சில்பலிக்கு என்று ஊர்திரியேல்
எங்கள் பெருமானே என்றிரந்து - பொங்கொளிய
வானோர் விலக்காரேல் யாம் விலக்க வல்லமே
தானே அறிவான் தனக்கு. 86

44. தனக்கே அடியனாய்த் தன்னடைந்து வாழும்
எனக்கே அருளாவாறு என்கொல் - மனக்கினிய
சீராளன் கங்கை மணவாளன் செம்மேனிப்
பேராளன் வானோர் பிரான். 87

45. பிரானவனை நோக்கும் பெருநெறியே பேணிப்
பிரானவன்தன் பேரருளே வேண்டிப் - பிரானவனை
எங்குற்றான் என்பீர்கள் என்போல்வார் சிந்தையினும்
இங்குற்றான் காண்பார்க்கு எளிது. 88

46. எளியது இதுவன்றே ஏழைகாள் யாதும்
அளியீர் அறிவிலீர் ஆ ஆ - ஒலிகொள்மிடற்று
எந்தை அராப் பூண்டுழலும் எம்மானை உள்நினைந்த
சிந்தையராய் வாழுந் திறம். 89

47. திறத்தான் மடநெஞ்சே சென்றடைவ தல்லால்
பெறத்தானும் ஆதியோ பேதாய் - நிறத்த
இருவடிக்கண் ஏழைக்கு ஒருபாகம் ஈந்தான்
திருவடிக்கண் சேரும் திரு. 90

48. திருமார்பில் ஏனச் செழுமருப்பைப் பார்க்கும்
பெருமான் பிறைக்கொழுந்தை நோக்கும் - ஒரு நாள்
இதுமதியென்று ஒன்றாக இன்றளவுந் தேரா
தது மதியொன்று இல்லா அரா. 91

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. அராவி வளைத்தனைய அங்குபுவித் திங்கள்
விராவு கதிர் விரிய ஓடி - விராவுதலால்
பொன்னோடு வெள்ளிப் புரிபுரிந்தாற் போலாவே
தன்னோடே யொப்பான் சடை. 92

50. சடைமேல் அக்கொன்றை தருகனிகள் போந்து
புடைமேவித் தாழ்ந்தனவே போலும் - முடிமேல்
வலப்பால் அக் கோலமதி வைத்தான் தன் பங்கின்
குலப்பாவை நீலக் குழல். 93

51. குழலார் சிறுபுறத்துக் கோல்வளையைப் பாகத்து
எழிலாக வைத்தேக வேண்டா - கழலார்ப்பப்
பேரிரவில் ஈமப் பெருங்காட்டில் பேயோடும்
ஆரழல்வாய் நீயாடும் அங்கு. 94

52. அங்கண் முழுமதியும் செக்கர் அகல்வானத்து
எங்கும் இனி தெழுந்தால் ஒவ்வாதே - செங்கண்
திருமாலைப் பங்குடையான் செஞ்சடைமேல் வைத்த
சிரமாலை தோன்றுவதோர் சீர். 95

53. சீரார்ந்த கொன்றை மலர்தழைப்பச் சேணுலாவி
நீரார்ந்த பேரியாறு நீத்தமாய்ப் - பேரார்ந்த
நாண் பாம்பு கொண்ட சைத்த நம்மீசன் பொன்முடிதான்
காண்பார்க்குச் செவ்வேயோர் கார். 96

54. காருருவக் கண்டெத்தெம் கண்ணுதலே எங்கொளித்தாய்
ஓர்உருவாய் நின்னோடு உழிதருவான் - நீர்உருவ
மேகத்தால் செய்தனைய மேனியான் நின்னுடைய
பாகத்தான் காணாமே பண்டு. 97

55. பண்டமரர் அஞ்சப் படுகடலின் நஞ்சுண்டு
கண்டம் கறுத்ததுவும் அன்றியே - உண்டு
பணியுறுவார் செஞ்சடைமேல் பால்மதியின் உள்ளே
மணிமறுவாய்த் தோன்றும் வடு. 98

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. வடுவன்று எனக்கருதி நீமதித்தி யாயில்
கடுவெண்பொடி நிறத்தாய் சொல்வாய் - படுவண்
புலால் தலையி னுள் ஊண் புறம் பேசக் கேட்டோம்
நிலாத்தலையில் சூடுவாய் நீ. 99

57. நீயுலகம் எல்லாம் இரப்பினும் நின்னுடைய
தீய அரவொழியச் செல்கண்டாய் - தூய
மடவரலார் வந்து பலியிடார் அஞ்சி
விட அரவம் மேல்ஆட மிக்கு. 100

58. மிக்க முழங்கெரியும் வீங்கிய பொங்கிருளும்
ஒக்க உடனிருந்தால் ஒவ்வாதே - செக்கர் போல்
ஆகத்தான் செஞ்சடையும் ஆங்கவன்தன் பொன்னுருவில்
பாகத்தாள் பூங்குழலும் பண்பு. 101

59. பண்புணர மாட்டேன் நான் நீயே பணித்துக்காண்
கண்புணரும் நெற்றிக் கறைக்கண்டா - பெண்புணரும்
அவ்வுருவோ மாலுருவோ ஆனேற்றாய் நீறணிவது
எவ்வுருவோ நின்னுருவ மேல். 102

60. மேலாய மேகங்கள் கூடியோர் பொன் விலங்கல்
போலாம் ஒளி புதைத்தால் ஒவ்வாதே - மாலாய
கைம்மா மதக்களிற்றுக் காருரிவை போர்த்தபோது
அம்மான் திருமேனி அன்று. 103

61. அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்
இன்றும் திருவுருவம் காண்கிலேன் - என்றும்தான்
எவ்வுருவோ நும்பிரான் என்பார்கட்கு என்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவம் ஏது. 104

62. ஏதொக்கும் ஏதொவ்வாது ஏதாகும் ஏதாகாது
ஏதொக்கும் என்பதனை யார் அறிவார் - பூதப்பால்
வில்வேடனாகி விசயனோடு ஏற்றநாள்
வல்வேடன் ஆன வடிவு. 105

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63. வடிவுடைய செங்கதிற்கு மாறாய்ப் பகலே
நெடிதுலவி நின்றெறிக்கும் கொல்லோ - வடியுலவு
சொன்முடிவுஒன் றில்லாத சோதியாய் சொல்லாயால்
நின்முடிமேல் திங்கள் நிலா. 106

64. நிலாஇலங்கு வெண்மதியை நேடிக் கொள் வான்போல்
உலாவி உழிதருமா கொல்லோ - நிலாவிருந்த
செக்கர்அவ் வானமே ஒக்கும் திருமுடிக்கே
புக்கரவம் காலையே போன்று. 107

65. காலையே போன்றிலங்கும் மேனி கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு - மாலையின்
தாங்குருவே போலுஞ் சடைக்கற்றை மற்றவற்கு
வீங்கிருளே போலும் மிடறு. 108

67. மிடற்றில் விடமுடையீர் உம்மிடற்றை நக்கி
மிடற்றில் விடங்கொண்ட வாறோ - மிடற்றகத்து
மைத்தாம் இருள்போலும் வண்ணம் கரிதாலோ
பைத்தாடும் நும்மார்பிற் பாம்பு. 109

68. பாம்பும் மதியும் மடமானும் பாய்புலியும்
தாம்பயின்று தாழ்அருவி தாங்குதலால் - ஆம்பொன்
உருவடிவில் ஓங்கொளிசேர் கண்ணுதலான் கோலத்
திருவடியின் மேய சிலம்பு. 110

69. சிலம்படியாள் ஊடலைத் தான் தவிர்ப்பான் வேண்டிச்
சிலம்படிமேல் செல்வரத்தம் சேர்த்தி - நலம் பெற்று
எதிராய செக்கரினும் இக்கோலஞ் செய்தான்
முதிரா மதியான் முடி. 111

70. முடிமேல் கொடுமதியான் முக்கணான் நல்ல
அடிமேற் கொடுமதியோம் கூற்றைப் - படிமேல்
குனியவலமாம் அடிமை கொண்டாடப் பெற்றோம்
இனியவலம் உண்டோ எமக்கு. 112

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70. எமக்கு இதுவோ பேராசை என்றும் தவிராது
எமக்கொருநாள் காட்டுதியோ எந்தாய் - அமைக்கவே
போந்தெரிபாய்ந் தன்ன புரிசடையாய் பொங்கிரவில்
ஏந்தெரிபாய்ந் தாடும் இடம். 113

71. இடப்பால வானத்து எழுமதியை நீயோர்
மடப்பாவை தன்னருகே வைத்தால் - இடப்பாகம்
கொண்டாள் மலைப்பாவை கூறொன்றும் கண்மலங்காண்
கண்டாயே முக்கண்ணாய் கண். 114

72. கண்டெந்தை என்றிறைஞ்சிக் கைப்பணியான் செய்யேனேல்
அண்டம் பெறினும் அது வேண்டேன் - துண்டஞ்சேர்
விண்ணாளுந் திங்களாய் மிக்குலகம் ஏழினுக்கும்
கண்ணாளா ஈதென் கருத்து. 115

73. கருத்தினால் நீ கருதிற் றெல்லாம் உடனே
திருத்தலாம் சிக்கென நான் சொன்னேன் - பருத்தரங்க
வெள்ளநீர் ஏற்றான் அடிக்கமலம் நீ விரும்பி
உள்ளமே எப்போதும் ஓது. 116

74. ஓத நெடுங்கடல்கள் எத்தனையும் உய்த்தட்ட
ஏதும் நிறைந்தில்லை என்பரால் - பேதையர்கள்
எண்ணாது இடும்பலியால் என்னோ நிறைந்தவா
கண்ணார் கபாலக்கலம். 117

75. கலங்கு புனற்கங்கை ஊடாட லாலும்
இலங்கு மதிஇயங்கலாலும் - தலங்கொள்
பரிசுடையான் நீள் முடிமேல் பாம்பியங்க லாலும்
விரிசடையாம் காணில் விசும்பு. 118

76. விசும்பில் விதியுடைய விண்ணோர் பணிந்து
பசும்பொன் மணிமகுடந் தேய்ப்ப - முசிந்தெங்கும்
எந்தாய் தழும்பேறி யேபாவம் பொல்லாவாம்
அந்தா மரைபோல் அடி. 119

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

77. அடிபேரின் பாதாளம் பேரும் அடிகள்
முடிபேரின் மாமுகடு பேரும் - கடகம்
மறிந்தாடு கைபேரில் வான்திசைகள் பேரும்
அறிந்தாடும் ஆற்றாது அரங்கு. 120

78. அரங்கமாப் பேய்க்காட்டில் ஆடுவான் வாளா
இரங்குமோ எவ்வுயிர்க்கும் ஏழாய் - இரங்குமேல்
என்னாக வையான்தான் எவ்வுலகம் ஈந்தளியான்
பன்னாள் இரந்தால் பணிந்து. 121

79. பணித்தும் படர்சடையான் பாதங்கள் போதால்
அணிந்தும் அணிந்தவரை ஏத்தத் - துணிந்தென்றும்
எந்தையார்க்கு ஆட்செய்யப் பெற்ற இதுகொலோ
சிந்தையார்க்கு உள்ள செருக்கு. 122

80. செருக்கினால் வெற்பெடுத்த எத்தனையோ திண்தோள்
அரக்கனையும் முன்னின்று அடர்த்த - திருத்தக்க
மாலயனுங் காணாது அரற்றி மகிழ்ந்தேத்தக்
காலனையும் வென்று தைத்த கால். 123

81. காலனையும் வென்றோம் கடுநரகம் கைகழன்றோம்
மேலை இடுவினையும் வேரறுத்தோம் - கோல
அரணார் அவிந்தழிய வெந்தீயம் பெய்தான்
சரணார விந்தங்கள் சார்ந்து. 124

82. சார்ந்தார்க்குப் பொற்கொழுந்தே ஒத்திலங்கிச் சாராது
பேர்ந்தார்க்குத் தீக்கொடியின் பெற்றிய தாம் - தேர்ந்துணரில்
தாழ்சுடரோன் செங்கதிரும் சாயும் தழல் வண்ணன்
வீழ்சடையே என்றுரைக்கும் மின். 125

83. மின்போலும் செஞ்சடையான் மாலோடும் ஈண்டிசைந்தால்
என்போலும் காண்பார்கட்கு என்றிரேல் - தன் போலும்
பொற்குன்றம் நீலமணிக்குன்றும் தாமுடனே
நிற்கின்ற போலும் நெடிது. 126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84. நெடிதாய பொங்கெரியும் தண்மதியும் நேரே
கடிதாம் கடுஞ்சுடரும் போலும் - கொடிதாக
விண்டார்கள் மும்மதிலும் வெந்தீ யினில் அழியக்
கண்டாலும் முக்கணான் கண். 127

85. கண்ணாரக் கண்டும்என் கையாரக் கூப்பியும்
எண்ணார எண்ணத்தால் எண்ணியும் - விண்ணோன்
எரியாடி என்றென்றும் இன்புறுவன் கொல்லோ
பெரியானைக் காணப் பெறின். 128

86. பெறினும் பிறிதியாதும் வேண்டேம் நமக்கீது
உறினும் உறாதொழியு மேனும் - சிறிதுணர்த்தி
மற்றொருகண் நெற்றிமேல் வைத்தான்தன் பேயாய
நற்கணத்தில் ஒன்றாய நாம். 129

87. நாமாலை சூடியும் நம் ஈசன் பொன்னடிக்கே
பூமாலை கொண்டு புனைந்தன்பாய் - நாமோர்
அறிவினையே பற்றினால் எற்றே தடுமே
எறிவினையே என்னும் இருள். 130

88. இருளின் உருவென்கோ மாமேகம் என்கோ
மருளின் மணிநீலம் என்கோ - அருளெமக்கு
நன்றுடையாய் செஞ்சடைமேல் நக்கிலங்கு வெண்மதியம்
ஒன்றுடையாய் கண்டத்து ஒளி. 131

89. ஒளிவிலி வன்மதனை ஒண்பொடியா நோக்கித்
தெளிவுள்ள சிந்தனையில் சேர்வாய் - ஒளிநஞ்சம்
உண்டவாய் அ்.திருப்ப உன்னுடைய கண்டம் இருள்
கொண்டவாறு என் இதனைக்கூறு. 132

90. கூறெமக்கீது எந்தாய் குளிர்சடையை மீதழித்திட்டு
ஏறமிகப்பெருகின என் செய்தி - சீறி
விழித்தூரும் வாளரவும் வெண்மதியும் ஈர்த்துத்
தெழித்தோடும் கங்கைத் திரை. 133

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

91. திரைமருவு செஞ்சடையான் சேவடிக்கே ஆளாய்
உரைமருவு யாமுணர்ந்தோம் கண்டீர் - தெரிமினோ
இம்மைக்கும் அம்மைக்கும் எல்லாம் அமைந்தோமே
எம்மைப் புறனுரைப்பது என். 134

92. என்னை உடையானும் ஏகமாய் நின்றானும்
தன்னை அறியாத தன்மையானும் - பொன்னைச்
சுரளாகச் செய்தனைய தூர்ச்சடையான் வானோர்க்கு
அருளாக வைத்த அவன். 135

93. அவன் கண்டாய் வானோர் பிரானாவான் என்றும்
அவன் கண்டாய் அம்பவள வண்ணன் - அவன் கண்டாய்
மைத்தமர்ந்த கண்டத்தான் மற்றவன்பால் நன்னெஞ்சே
மெய்த்தமர்ந்தான் பாய்நீ விரும்பு. 136

94. விரும்பினால் நீ பிரிய கில்லாயோ வேறா
இருப்பிடமற் றில்லையோ என்னோ - பொருப்பன்மகள்
மஞ்சுபோல் மால்விடையாய் நிற்பிரிந்து வேறிருக்க
அஞ்சுமோ சொல்லாய் அவள். 137

95. அவளோர் குலமங்கை பாகத் தகலாள்
இவளோர் சலமகளும் ஈதே! - தவளநீறு
என்பு அணிவீர் என்றும் பிரிந்தறியீர் ஈங்கியருள்
அன்பு அணியார் சொல்லுமின் இங்கு ஆர். 138

96. ஆர்வல்லார் காண அரனவனை அன்பென்னும்
போர்வை அதனாலே போர்த்தமைத்துச் - சீர்வல்ல
தாயத்தால் நாமும் தனி நெஞ்சின் உள்ளடைத்து
மாயத்தால் வைத்தோம் மறைத்து. 139

97. மறைத்துலகம் எழினிலும் வைத்தாயோ அன்றேல்
உறைப்போடும் உன்கைக்கொண் டாயோ நிறைத்திட்டு
உளைந்தெடுந்து நீயெரிப்ப மூவுலகும் உள்புக்கு
அளைந்தெழுந்த செந்தீ யழல். 140

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

98. அழலாட அங்கை சிவந்ததோ அங்கை
அழகால் அழல்சிவந்த வாறோ - கழலாடப்
பேயோடு கானிற் பிறங்க அனலேந்தித்
தீயாடு வாயிதனைச் செப்பு. 141

99. செப்பேந்து இளமுலையாள் காணவோ தீப்படுகாட்டு
அப்பேய்க்கணம் அவைதாம் காணவோ - செப்பெனக்கொன்று
ஆகத்தான் அங்காந்து அனல் உமிழும் ஐவாய
நாகத்தாய் ஆடுன் நடம். 142

100. நடக்கிற் படி நடுங்கும் நோக்கில் திசைவேம்
இடிக்கின் உலகனைத்தும் ஏங்கும் - அடுக்கல்
பொரும்ஏறோ ஆனேறோ பொன் ஒப்பாய் நின்னேறு
உரும்ஏறோ ஒன்றா உரை. 143

## (திருக்கடைக்காப்புச் செய்யுள்)

101. உரையினால் இம்மாலை அந்தாதி வெண்பாக்
கரைவினாற் காரைக்கால் பேய்சொல் - பரவுவார்
ஆராத அன்பினோடு அண்ணலைச் சென்று ஏத்துவார்
பேராத காதல் பிறந்து. 144

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளிச்செய்த

# க்ஷேத்திர வெண்பா (திருக்கோயில் திருவெண்பா)

திருச்சிற்றம்பலம்

## திருத்தில்லை

01. ஓடுகின்ற நீர்மை ஒழிதலுமே உற்றாரும்
கோடுகின்றார் மூப்பும் குறுகிற்று - நாடுகின்ற
நல்லச்சிற் றம்பலமே நண்ணாமுன் நன்னெஞ்சே
தில்லைச் சிற்றம்பலமே சேர். 145

## திருநாகேச்சுரத்திருக்கோயில் (கும்பகோணம்)

02. கடுவடுத்த நீர்கொடுவா காடிதா என்று
நடுநடுத்து நாஅடங்கா முன்னம் - பொடி அடுத்த
பாழ்கோட்டம் சேராமுன் பன்மாடத் தென்குடந்தைக்
கீழ்க்கோட்டம் செப்பிக் கிட. 146

## திருவையாறு

03. குந்தி நடந்து குனிந்தொருகை கோல் ஊன்றி
நொந்திருமி ஏங்கி நுரைத்தேறி - வந்துந்தி
ஐயாறு வாயாறு பாயாமுன் நெஞ்சமே
ஐயாறு வாயால் அழை. 147

## திருவாரூர்

04. காளை வடிவொழிந்து கையுறவோடு ஐயுறவாய்
நாளும் அணுகி நலியாமுன் - பாளை
அவிழ்கமுகம் பூஞ்சோலை ஆரூரற்கு ஆளாய்க்
கவிழ்கமுகம் கூம்புகஎன் கை. 148

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருந்துருத்தி (குத்தாலம்)

05. வஞ்சியன நுண்ணிடையார் வாள்தடங்கண் நீர்சோரக்
குஞ்சி குறங்கின்மேல் கொண்டிருந்து - கஞ்சி
அருத்தொருத்தி கொண்டுவா என்னாமுன் நெஞ்சே
திருத்துருத்தி யான் பாதம் சேர். 149

## திருக்கோடிக்கா

06. காலைக் கலையிழையால் கட்டித்தாங் கையார்ந்து
மாலைத் தலைக்கணிந்து மை எழுதி - மேலோர்
பருக்கோடி மூடிப் பலர்அழா முன்னம்
திருக்கோடி காஅடைநீ சென்று. 150

## திருவிடைவாய்

07. மாண்டுவாய் அங்காவாய் முன்னம் மடநெஞ்சே
வேண்டுவாய் ஆகி விரைந்தொல்லைப் - பாண்டவாய்த்
தென்இடைவாய் மேய சிவனார் திருநாமம்
நின்னிடைவாய் வைத்து நினை. 151

## திருநெடுங்களம்

08. தொட்டுத் தடவித் துடிப் பொன்றும் காணாது
பெட்டப் பிணம் என்று பேரிட்டுக் - கட்டி
எடுங்களத்தா என்னாமுன் ஏழைமட நெஞ்சே
நெடுங்களத்தான் பாதம் நினை. 152

## குழித்தண்டலை (குளித்தலை – கடம்பர் கோயில்)

09. அழகு திரிகுரம்பை ஆங்கதுவிட்டு ஆவி
ஒழுகும் பொழுதறிய ஒண்ணா - கழுகு
கழித்துண்டு அலையாமுன் காவிரியின் தென்பால்
குழித்தண் டலையானைக் கூறு. 153

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொது

10. படி முழுதும் வெண்குடைக்கீழ்ப் பாரெல்லாம் ஆண்ட
முடியரசர் செல்வத்து மும்மைக் - கடியிலங்கு
தோடேந்து கொன்றையந்தார்ச் சோதிக்குத் தொண்டுபட்டு
ஓடேந்தி உண்பது உறும். 154

### திருவானைக்கா

11. குழீஇயிருந்த சுற்றம் குணங்கள்பா ராட்ட
வழீஇயிருந்த அங்கங்கள் எல்லாம் - தழீஇயிருந்தும்
என்னானைக் காவா இதுதகாது என்னாமுன்
தென்னானைக் கா அடைநீ சென்று. 155

### திருமயிலை

12. குயிலொத்து இருள்குஞ்சி கொக்கொத்து இருமல்
பயிலப் புகாமுன்னம் நெஞ்சே - மயிலைத்
திருப்புன்னை யங்கானல் சிந்தியா யாகில்
இருப்பின்னை அங்காந்து இளைத்து. 156

### உஞ்சேனை மாகாளம் (வடபுலத்திலுள்ள உஜ்ஜைனி மாகாளம்)

13. காளையர்கள் ஈளையர்கள் ஆகிக் கருமயிரும்
பூளையெனப் பொங்கிப் பொலிவிழுந்து - சூளையர்கள்
ஓகாளஞ் செய்யாமுன் நெஞ்சே உஞ்சேனை
மாகாளங் கைதொழுது வாழ்த்து. 157

### வளைகுளம் (சோழநாட்டு வைப்புத் தலம்)

14. இல்லும் பொருளும் இருந்த மனையளவே
சொல்லும் அயலார் துடிப்பளவே - நல்ல
திளைகுளத்து நீர் அளவே கிற்றியே நெஞ்சே
வளை குளத்துள் ஈசனையே வாழ்த்து. 158

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சாய்க்காடு

15. அஞ்சனஞ்சேர் கண்ணார் அருவருக்கும் அப்பதமாய்க்
குஞ்சி வெளுத்துடலம் கோடாமுன் - நெஞ்சமே
போய்க்காடு கூடப் புலம்பாது பூம்புகார்ச்
சாய்க்காடு கைதொழுநீ சார்ந்து. 159

## திருப்பாச்சிலாச்சிராமம் (திருவாசி)

16. இட்ட குடிநீர் இருநாழி ஓர்உழக்காச்
சட்ட ஒரு முட்டை நெய் தான் கலந்து - அட்ட
அருவாச்சார் என்றங்கு அழாமுன்னம் பாச்சில்
திருவாச்சி ராமமே சேர். 160

## திருச்சிராமலை (திருச்சி)

17. கழிந்தது நென்னற்றுக் கட்டுவிட்டு நாறி
ஒழிந்த துடன் இரா வண்ணம் - அழிந்தது
இராமலையா கொண்டுபோ என்னாமுன் நெஞ்சே
சிராமலையான் பாதமே சேர். 160

## திருமழபாடி

18. இழவாடிச் சுற்றத்தார் எல்லாருங்கூடி
விழவாடி ஆவிவிடா முன்னம் - மழபாடி
ஆண்டானை ஆரமுதை அன்றயன்மால் காணாமை
நீண்டானை நெஞ்சே நினை. 162

## திருவாப்பாடி

19. உள்ளிடத்தான் வல்லையே நெஞ்சமே ஊழ்வினைகள்
கள்ளிடத்தான் வந்து கலவாமுன் - கொள்ளிடத்தின்
தென்திருவாய்ப் பாடியான் தெய்வமறை நான்கினையும்
தன்திருவாய்ப் பாடியான் தாள். 163

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவேகம்பம் (காஞ்சி)

20. என்னெஞ்சே உன்னை இரந்தும் உரைக்கின்றேன்
கன்னஞ்செய் வாயாகில் காலத்தால் - வன்னெஞ்சேய்
மாகம்பத் தானை உரித்தானை வண்கச்சி
ஏகம்பத் தானை இறைஞ்சு. 164

## திருப்பனந்தாள்

21. கரம் ஊன்றி கண் இடுங்கிக் கால்குலைய மற்றோர்
மரம் ஊன்றி வாய்குதட்டா முன்னம் - புரம்மூன்றும்
தீச்சரத்தால் செற்றான் திருப்பனந்தாள் தாடகைய
ஈச்சரத்தான் பாதமே ஏத்து. 165

## திருவொற்றியூர்

22. தஞ்சாக மூவுலகும் ஆண்டு தலையளித்திட்டு
எஞ்சாமை பெற்றிடினும் யான்வேண்டேன் - நஞ்சம்
கரந்துண்ட கண்டர்தம் ஒற்றியூர் பற்றி
இரந்துண் டிருக்கப் பெறின். 166

## பொது

23. நூற்றனைத்தோர் பல்லூழி நுண்வயிர வெண்குடைக்கீழ்
வீற்றிருந்த செல்வம் விழையாதே - கூற்றுதைத்தான்
ஆடரவம் கச்சா அரைக்கசைத்த அம்மான்தன்
பாடவரம் கேட்ட பகல். 167

## திருமயானம்

24. உய்யும் மருந்திதனை உண்மின் எனஉற்றார்
கையைப் பிடித்தெதிரே காட்டியக்கால் - பைய
எழுந்திருமி யான் வேண்டேன் என்னாமுன் நெஞ்சே
செழுந்திரும யானமே சேர். 168

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரமான் பெருமாள் நாயனார்

## பொன்வண்ணத் திருவந்தாதி (6)

திருச்சிற்றம்பலம்

1. பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மேனி பொலிந்திலங்கும்
மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
வீழ்சடை வெள்ளிக்குன்றம்
தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மால்விடை தன்னைக்கண்ட
என்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
ஆகிய ஈசனுக்கே. 169

2. ஈசனைக் காணப் பலிகொடு
செல்லஎற் றே இவளோர்
பேயனைக் காமுறு பிச்சிகொ
லாம்என்று பேதையர்முன்
தாயெனை ஈர்ப்பத் தமியேன்
தளரஅத் தாழ்சடையோன்
வாவெனைப் புல்லஎன் றான்இமை
விண்டன வாட்கண்களே. 170

3. கண்களங் கம்செய்யக் கைவளை
சோரக் கலையுஞ்செல்ல
ஒண்களங் கண்ணுதல் வேர்ப்பஒண்
கொன்றையந் தாருருவப்
பெண்களங் கம்இவள் பேதுறும்
என்பதோர் பேதைநெஞ்சம்
பண்களங் கம்இசை பாடநின்று
ஆடும் பரமனையே. 171

4. பரமனை யேபலி தேர்ந்துநஞ்
சுண்டது பன்மலர்சேர்
பிரமனை யேசிரம் கொண்டும்
கொடுப்பது பேரருளாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரமனை யேஉடம் பட்டும்
உடம்பொடு மாதிடமாம்
வரமனை யேகிளை யாகும்முக்
கண்ணுடை மாதவனே. 172

5. தவனே உலகுக்குத் தானே
முதல்தான் படைத்தவெல்லாம்
சிவனே முழுதும்என் பார்சிவ
லோகம் பெறுவர் செய்ய
அவனே அடல்விடை ஊர்தி
கடலிடை நஞ்சமுண்ட
பவனே எனச்சொல்லு வாரும்
பெறுவர்இப் பாரிடமே. 173

6. இடமால் வலந்தான் இடப்பால்
துழாய்வலப் பால்ஒண் கொன்றை
வடமால் இடந்துகில் தோல்வலம்
ஆழி இடம்வலம் மான்
இடமால் கரிதால் வலஞ்சேது
இவனுக்கு எழில்நலஞ்சேர்
குடமால் இடம் வலம் கொக்கரை
யாம் எங்கள் கூத்தனுக்கே. 174

7. கூத்துக் கொலாம்இவர் ஆடித்
திரிவது கோல்வளைகள்
பாத்துக் கொலாம்பலி தேர்வது
மேனி பவளம் கொலாம்
ஏத்துக் கொலாம்இவர் ஆதரிக்
கின்றது இமையவர்தம்
ஒத்துக் கொலாம்இவர் கண்டத்துஇண்
டைச்சடை உத்தமரே. 175

8. உத்தம ராய்அடி யார்உல
காளத் தமக்குரிய
மத்தம் அராமதி மாடம்
பதிநலம் சீர்மைகுன்றா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தம ராயும் பணிகொள்ள
வல்ல இறைவர்வந்தென்
சித்தம ராயக லாதுடன்
ஆடித் திரிதவரே. 176

9. திரிதவர் கண்ணுள்ளும் உள்ளத்தின்
உள்ளும் திரிதரினும்
அரிதவர் தன்மை அறிவிப்ப
தாயினும் ஆழிநஞ்சேய்
கரிதவர் கண்டம் வெளிதவர்
சாந்தம்கண் மூன்றொடு ஒன்றாம்
பரிதவர் தாமே அருள்செய்து
கொள்வர்தம் பல்பணியே. 177

10. பணிபதம் பாடிசை ஆடிசை
யாகப் பனிமலரால்
அணிபதங் கன்பற் கொளப்பனை
அத்தவற் கேயடிமை
துணிபதங் காமுறு தோலொடு
நீறுடல் தூர்த்துநல்ல
தணிபதங் காட்டிடும் சஞ்சலம்
நீஎன் தனிநெஞ்சமே. 178

11. நெஞ்சம் தளிர்விடக் கண்ணீர்
ததும்ப முகம்மலர
அஞ்செங் கரதலம் கூம்பவட்
டாங்கம் அடிபணிந்து
தஞ்சொல் மலரால் அணியவல்
லோர்கட்குத் தாழ்சடையான்
வஞ்சம் கடிந்து திருத்திவைத்
தான்பெரு வானகமே. 179

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. வானகம் ஆண்டுமந் தாகினி
ஆடிநந் தாவனம்சூழ்
தேனக மாமலர் சூடிச்செல்
வோரும் சிதவல்சுற்றிக்
கானகந் தேயத் திரிந்திரப்
போரும் கனகவண்ணம்
பால்நிற நீற்றற்கு அடியரும்
அல்லாப் படிறருமே. 180

13. படிறா யின சொல்லிப் பாழுடல்
ஓம்பிப் பலகடைச் சென்று
இடறாது ஒழிதும் எழு நெஞ்ச
மேளரி ஆடி எம்மான்
கடல்தா யினநஞ்சம் உண்ட
பிரான்கழல் சேர்தல்கண்டாய்
உடல்தான் உளபயன் ஆவசொன்
னேன்இவ் வுலகினுள்ளே. 181

14. உலகா ளுறுவீர் தொழுமின்விண்
ணாள்வீர் பணிமின்நித்தம்
பலகா முறுவீர் நினைமின்
பரமனோடு ஒன்றலுற்றீர்
நலகா மலரால் அருச்சிமின்
ஆள்நர கத்துநிற்கும்
அலகா முறுவீர் அரனடி
யாரை அலைமின்களே. 182

15. அலையார் புனல் அனல் ஞாயிறு
அவனி மதியம்விண்கால்
தொலையா உயிருடம் பாகிய
சோதியைத் தொக்குமினோ
தலையாற் சுமந்துந் தடித்துங்
கொடித்தேர் அரக்கன் என்னே
கலையான் ஒருவிரல் தங்ககில்
லான்விட்ட காரணமே. 183

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. காரணன் காமரம் பாடவோர்
காமரம் பூடுறத்தன்
தாரணங் காகத் தளர்கின்ற
தையலைத் தாங்குவர்யார்
போரணி வேற்கண் புனற்படம்
போர்த்தன பூஞ்சுணங்கார்
ஏரணி கொங்கையும் பொற்படம்
மூடி இருந்தனவே. 184

17. இருந்தனம் எய்தியும் நின்றும்
திரிந்தும் கிடந்தலைந்தும்
வருந்திய வாழ்க்கை தவிர்த்திடு
போகநெஞ் சேமடவாள்
பொருந்திய பாகத்துப் புண்ணியன்
புண்ணியல் சூலத்தெம்மான்
திருந்திய போதவன் தானே
களையும்நம் தீவினையே. 185

18. தீவினை யேனைநின்று ஐவர்
இராப்பகல் செத்தித்தின்ன
மேவின வாழ்க்கை வெறுத்தேன்
வெறுத்துவிட் டேன்வினையும்
ஓவினது உள்ளந் தெளிந்தது
கள்ளங் கடிந்து அடைந்தேன்
பாவின செஞ்சடை முக்கணன்
ஆரணன் பாதங்களே. 186

19. பாதம் புவனி சுடர்நய
னம்பவ னம்உயிர்ப்புஒங்
கோதம் உடுக்கை உயர்வான்
முடிவிசும் பேயுடம்பு
வேதம் முகம்திசை தோள்மிகு
பன்மொழி கீதமென்ன
போதம் இவற்கோர் மணிநிறம்
தோற்பது பூங்கொடியே. 187

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. கொடிமேல் இடபமுங் கோவணக்
கீளுமோர் கொக்கிறகும்
அடிமேற் கழலும் அகலத்தில்
நீறும்ஐ வாயரவும்
முடிமேல் மதியும் முருகலர்
கொன்றையும் மூவிலைய
வடிவேல் வடிவும்என் கண்ணுள்ளப்
போதும் வருகின்றனவே. 188

21. வருகின்ற மூப்பொடு தீப்பிணிக்
கூற்றம்வை கற்குவைகல்
பொருகின்ற போர்க்கொன்றும் ஆற்றகில்
லேன்பொடி பூசிவந்துன்
அருகொன்றி நிற்க அருளுகண்
டாய் அழல் வாயரவம்
வெருகொன்ற வெண்மதி செஞ்சடை
மேல்வைத்த வேதியனே. 189

22. வேதியன் பாதம் பணிந்தேன்
பணிந்துமெய்ஞ் ஞானமென்னும்
சோதியென் பால்கொள்ள உற்றுநின்
றேற்குஇன்று தொட்டியதுதான்
நீதியென் றான்செல்வம் ஆவதென்
றேன்மேல் நினைப்புவண்டோர்
ஓதிநின் போல்வகைத் தேயிரு
பாலும் ஒழித்ததுவே. 190

23. ஒழித்தேன் பிறவியை ஊர்ந்தேன்
உவகையை ஓங்கிற்றுள்ளம்
இழித்தேன் உடம்பினை ஏலேன்
பிறரிடை இம்மனையும்
பழித்தேன் பழியே விளைக்கும் பஞ்
சேந்தியக் குஞ்சரமும்
தெழித்தேன் சிவனடி சேர்ந்தேன்
இனிமிகத்தெள்ளியனே. 191

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. தெள்ளிய மாந்தரைச் சேர்ந்திலேன்
தீங்கவி பாடலுற்றேன்
ஒள்ளிய சொல்லும் பொருளும்
பெறேன் உரைத் தார்உரைத்த
கள்ளிய புக்காற் கவிகள்ஓட்
டார்கடல் நஞ்சயின்றாய்
கொள்ளிய அல்லகண் டாய்புன்சொல்
ஆயினும் கொண்டருளே. 192

25. அருளால் வரும் நஞ்சம் உண்டுநின்
றாயை அமரர்குழாம்
பொருளார் கவிசொல்ல யானும்புன்
சொற்கள் புணர்க்கலுற்றேன்
இருளா சறவெழில் மாமதி
தோன்றவும் ஒன்றதென்ன
வெருளாது எதிர்சென்று மின்மினி
தானும் விரிகின்றதே. 193

26. விரிகின்ற ஞாயிறு போன்றது
மேனியஞ் ஞாயிறு சூழ்ந்து
எரிகின்ற வெங்கதிர் ஒத்தது
செஞ்சடை அச்சடைக்கீழ்ச்
சரிகின்ற காரிருள் போன்றது
கண்டம் அக்காரிருட்கீழ்ப்
புரிகின்ற வெண்முகில் போன்றுள
தால்எந்தை ஒண்பொடியே. 194

27. பொடிக்கின் றிலமுலை போந்தில
பல்சொற் பொருள்தெரியா
முடிக்கின் றிலகுழல் ஆயினும்
கேண்மின்கள் மூரிவெள்ளம்
குடிக்கொண்ட செஞ்சடைக் கொண்டலங்
கண்டன்மெய்க் கொண்டணிந்த
கடிக்கொன்றை நாறுகின் றாள் அறி
யேன்பிறர் கட்டுரையே. 195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. உரைவளர் நான்மறை ஓதி
உலகம் எலாந் திரியும்
விரைவளர் கொன்றை மருவிய
மார்பன் விரிசடைமேல்
திரைவளர் கங்கை நுரைவளர்
தீர்த்தம் செறியச் செய்த
கரைவளர் ஒத்துள தால்சிர
மாலைஎம் கண்டனுக்கே. 196

29. கண்டங் கரியன் கரியீர்
உரியன் விரிதருசீர்
அண்டங் கடந்த பெருமான்
சிறுமான் தரித்தபிரான்
பண்டன் பரமசிவனோர்
பிரமன் சிரம்அரிந்த
புண்தங் கயிலன் பயிலார
மார்பன்எம் புண்ணியனே. 197

30. புண்ணியன் புண்ணியல் வேலையான்
வேலைய நஞ்சன் அங்கக்
கண்ணியன் கண்ணியல் நெற்றியன்
காரணன் காரியங்கும்
விண்ணியன் விண்ணியல் பாணியன்
பாணி கொளஉமையாள்
பண்ணியன் பண்ணியல் பாடலன்
ஆடற் பசுபதியே. 198

31. பதியார் பலிக்கொன்று வந்தார்
ஒருவர்க்குப் பாவைநல்லீர்
கதியார் விடைஉண்டு கண்மூன்று
உளகறைக் கண்டமுண்டு
கொதியார் மழுவுண்டு கொக்கரை
உண்புறை கூத்துமுண்டு
மதியார் சடையுள மாலுளது
ஈவது மங்கையர்க்கே. 199

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. மங்கைகொங் கைத்தடத் திங்குமக்
குங்குமப் பங்கநுங்கி
அங்கமெங் கும்நெகச் சங்கமங்
கைத்தலத் துங்கவர்வான்
கங்கைநங் கைத்திரைப் பொங்குசெய்
கண்ணர வங்கள்பொங்கிப்
பங்கிதங் கும்மலர்த் திங்கள்தங்
கும்முடிப் பண்டங்களே. 200

33. பண்டங்கள் வந்து பலிதா என்
றான்பக லோற்கு இடு என்றேன்
அண்டங் கடந்தவன் அன்னம் என்
றான் அயன் ஊர்தியென்றேன்
கொண்டிங்கு உன்ஐயம்பெய் என்றான்
கொடித்தேர் அநங்கன் என்றேன்
உண்டிங்கு அமைந்ததென் றாற்குஅது
சொல்ல உணர்வுற்றதே. 201

34. உற்றடி யார்உல காளஓர்
ஊணும் உறக்கும் இன்றிப்
பெற்றம தாவதென்று ஏறும்
பிரான்பெரு வேல்நெடுங்கண்
சிற்றடி யாய் வெண்பல் செவ்வாய்
இவள்சிர மாலைக்குஎன்றும்
இற்றிடை யாம்படி யாகாஎன்
னுக்கு மெலிக்கின்றதே. 202

35. மெலிக்கின்ற வெந்தீ வெயில்வாய்
இழுதழல் வாய்மெழுகு
கலிக்கின்ற காமம் கரதலம்
எல்லி துறக்கம் வெங்கூற்று
ஒலிக்கின்ற நீருறு தீயொளி
யார்முக்கண் அத்தர்மிக்க
பலிக்கென்று வந்தார் கடிக்கொன்றை
சூடிய பல்லுயிரே. 203

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. பல்லுயிர் பாகம் உடல்தலை
தோல்பக லோன்மறல்பெண்
வில்லியோர் வேதியன் வேழம்
நிரையே பறித்துதைத்துப்
புல்லியும் சுட்டும் அறுத்தும்
உரித்துங் கொண்டான்புகழே
சொல்லியும் பாடியும் ஏத்தக்
கெடும்நங்கள் சூழ்துயரே. 204

37. துயரும் தொழும் அழும் சோரும்
துகிலும் கலையும் செல்லப்
பெயரும் பிதற்றும் நகும்வெய்
துயிர்க்கும் பெரும்பணி கூர்ந்து
அயரும் அமர்விக்கும் மூரி
நிமிர்க்கும் அந்தோஇங்ஙனே
மயரும் மறைக்காட்டு இறையினுக்கு
ஆட்பட்ட வாணுதலே. 205

38. வாணுதற்கு எண்ணம்நன் றன்று
வளர்சடை எந்தைவந்தால்
நாணுதற்கு எண்ணாள் பலிகொடு
சென்று நகும்நயந்து
பேணுதற்கு எண்ணும் பிரமன்
திருமால் அவர்க்கு அரிய
தாணுவுக்கு என்னோ இராப்பகல்
நைந்துஇவள் தாழ்கின்றதே. 206

39. தாழும் சடைசடை மேலது
கங்கையக் கங்கை நங்கை
வாழும் சடைசடை மேலது
திங்கள்அத் திங்கட்பிள்ளை
போழும் சடைசடை மேலது
பொங்கரவு அவ்வரவம்
வாழும் சடைசடை மேலது
கொன்றையெம் மாமுனிக்கே. 207

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. முனியே முருகலர் கொன்றையி
னாய்என்னை மூப்பொழித்த
கனியே கழலடி அல்லால்
களைகண்மற்று ஒன்றுமிலேன்
இனியேல் இருந்தவம் செய்யேன்
திருந்தவஞ் சேநினைந்து
தனியேன் படுகின்ற சங்கடம்
ஆர்க்கினிச் சாற்றுவனே. 208

41. சாற்றுவன் கோயில் தலையும்
மனமும் தவம் இவற்றால்
ஆற்றுவான் அன்பெனும் நெய்சொரிந்து
ஆற்றிஅம் சொல்மலரால்
ஏற்றுவன் ஈசன்வந்து என்மனத்
தான்என்று எழுந்தலரே
தூற்றுவன் தோத்திரம் ஆயின
வேயினிச் சொல்லுவனே. 209

42. சொல்லா தனகொழு நாவல்ல
சோதியுள் சோதிதன்பேர்
சொல்லாச் செவிமரம் தேறித்
தொழாதகை மண்திணிந்த
கல்லாம் நினையா மனம்வணங்
காத்தலை யும்பொறையாம்
அல்லா அவயவம் தானும்
மனிதர்க்கு அசேதனமே. 210

43. தனக்குன்றம் மாவையம் சங்கரன்
தன்னருள் அன்றிப்பெற்றால்
மனக்கென்றும் நஞ்சிற் கடையா
நினைவன் மதுவிரியும்
புனக்கொன்றை யான்அரு ளால்புழு
வாகிப் பிறந்திடினும்
எனக்கென்றும் வானவர் பொன்னுல
கோடுஒக்க எண்ணுவனே. 211

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. எண்ணம் இறையே பிழைக்கும்
கொலாம்இமை யோர்இறைஞ்சும்
தண்ணம் பிறைச்சடைச் சங்கரன்
சங்கக் குழையன் வந்தென்
உண்ணன் குறைவது அறிந்தும்
ஒளிமா நிறங்கவர்வான்
கண்ணும் உறங்காது இராப்பகல்
எய்கின்ற காமனுக்கே. 212

45. காமனை முன்செற்றது என்றாள்
அவளிவள் காலன் என்னும்
தாமநன் மார்பனை முன்செற்றது
என்றுதன் கையெறிந்தாள்
நாம்முனம் செற்றதன் றாரைஎன்
றேற்குஇரு வர்க்கும் அஞ்சி
ஆலமெனக் கிற்றிலர் அற்றெனக்
கிற்றிலர் அந்தணரே. 213

46. அந்தண ராம்இவர் ஆரூர்
உறைவதென் றேன்அதுவே
சந்தனை தோளியென் றார்தலை
யாய சலவர் என்றேன்
பந்தனை கையாய் அதுவும்உண்
டென்றார் உமையறியக்
கொந்தணை தாரீர் உரைமின் என்
றேன்துடி கொட்டினரே. 214

47. கொட்டும் சிலபல சூழநின்
றார்க்கும்குப் புற்றெழுந்து
நட்ட மறியும் கிரீடிக்கும்
பாடும் நகும்வெருட்டும்
வட்டம் வரும் அருஞ் சாரணை
செல்லும் மலர்தயங்கும்
புட்டங்கு இரும்பொழில் சூழ்மறைக்
காட்டான் பூதங்களே. 215

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. பூதப் படையுடைப் புண்ணிய
ரேபுறஞ் சொற்கள் நும்மேல்
ஏதப் படஎழு கின்றன
வாலினை யானொடும் மைக்
காதற் படுப்பான் கணைதொட்ட
காமனைக் கண்மலரால்
சேதப் படுத்திட்ட காரணம்
நீரிறை செப்புமினே. 216

49. செப்பனக் கொங்கைக்குத் தேமலர்க்
கொன்றை நிறம்பணித்தான்
மைப்புரை கண்ணுக்கு வார்புனல்
கங்கைவைத் தான் மனத்துக்கு
ஒப்பன இல்லா ஒளிகிளர்
உன்மத்தமும் அமைத்தான்
அப்பனை அம்மனை நீயென்
பெறாதுநின் றார்க்கின்றதே. 217

50. ஆர்க்கின்ற நீரும் அனலும்
மதியும்ஐ வாய் அரவம்
ஓர்க்கின்ற யோகும் உமையும்
உருவும் அருவும்வென்றி
பார்க்கின்ற வேங்கையும் மானும்
பகலும் இரவும் எல்லாம்
கார்க்கொன்றை மாலையி னார்க்குடன்
ஆகிக் கலந்தனவே. 218

51. கலந்தனக் கென்பலர் கட்டவிழ்
வார்கொன்றை கட்டரவார்
சலந்தனக் கண்ணிய கானகம்
ஆடியோர் சாணகமும்
நிலந்தனக் கில்லா அகதியன்
ஆகிய நீலகண்டத்து
அலந்தலைக்கு என்னே அலந்தலை
யாகி அழிகின்றதே. 219

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52. அழிகின்றது ஆருயிர் ஆகின்றது
ஆகுலம் ஏறிடும்மால்
இழிகின்ற சங்கம் இருந்த
முலைமேல் கிடந்தனபீர்
பொழிகின்ற கண்ணீர் புலர்ந்தது
வாய்கலை போனவந்தார்
மொழிகின்றது என்இனி நான்மறை
முக்கண் முறைவனுக்கே. 220

53. முறைவனை மூப்புக்கு நான்மறைக்
கும்முதல் ஏழ்கடலந்
துறைவனைச் சூழ்கயி லாயச்
சிலம்பனைத் தொண்மைகுன்றா
இறைவனை எண்குணத்து ஈசனை
ஏத்தினர் சித்தம்தம்பால்
உறைவனைப் பாம்பனை யாம்பின்னை
என்சொல்லி ஓதுவதே. 221

54. ஓதவன் நாமம் உரையவன்
பல்குணம் உன்னைவிட்டேன்
போதவன் பின்னே பொருந்தவன்
வாழ்க்கை திருந்தச் சென்று
மாதவ மாகிடு மாதவ
மாவளர் புன்சடையான்
யாதவன் சொன்னான் அது தொண்டு
ஒழியினி ஆரணங்கே. 222

55. ஆரணங் கின்முகம் ஐங்கணை
யானகம் அவ்வகத்தில்
தோணந் தோனவன் தேரகல்
அல்குல்தொன் மைக்கண்வந்த
பூரண கும்பம் முலையிவை
காணப் புரி சடைஎம்
காரணன் தாள்தொழும் அன்போ
பகையோ கருதியதே. 223

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. கருதியது ஒன்றில்லை ஆயினும்
கேண்மின்கள் காரிகையாள்
ஒருதின மும்முள ளாகஒட்
டாதொடுங் கார்ஒடுங்கப்
பொருதநன் மால்விடைப் புண்ணியன்
பொங்கிளங் கொன்றை இன்னே
தருதிர்நன் றாயிடும் தாரா
விடிற்கொல்லும் தாழ்இருளே. 224

57. இருளார் மிடற்றால் இராப்பகல்
தன்னால் வரைமறையால்
பொருளார் கமழ்கொன்றை யால்முல்லை
புற்றர வாடுதலால்
தெருளார் மதிவிசும் பால் பௌவந்
தெண்புனல் தாங்குதலால்
அருளாற் பலபல வண்ணமு
மாஅரன் ஆயினனே. 225

58. ஆயின அந்தணர் வாய்மை
அரைக்கலை கைவளைகள்
போயின வாள்நிகர் கண்ணுறு
மைந்நீர் முலையிடையே
பாயின வேள்கைக் கரபத்
திரத்துக்குச்சூத்திரம்போல்
ஆயின பல்சடை யார்க்கு அன்பு
பட்டவெம் ஆயிழைக்கே. 226

59. இழையார் வனமுலை வீங்கி
இடையிறு கின்றதுஇற்றால்
பிழையாள் நமக்கிவை கட்டுண்க
என்பது பேச்சுக்கொலாம்
கழையார் கழுக்குன்ற வாணனைக்
கண்டனைக் காதலித்தாள்
குழையார் செவியொடு கோலக்
கயற்கண்கள் கூடியவே. 227

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60. கூடிய தன்னிடத் தான்உமை
யாளிடத் தானை ஐயாறு
ஈடிய பல்சடை மேற்றெரி
வண்ணம் எனப்பணிமின்
பாடிய நான்மறை பாய்ந்தது
கூற்றைப் படர்புரஞ்சுட்டு
ஆடிய நீறுசெஞ் சாந்திவை
யாம்எம் அயன் எனவே. 228

61. அயமே பலிஇங்கு மாடுள
தாணுவோர் குக்கிக்கிடப்
பயமே மொழியும் பசுபதி
ஏறெம்மைப் பாய்ந்திடுமால்
புயமேல் குழலியர் புண்ணியர்
போமின் இரத்தல்பொல்லா
நயமே மொழியினும் நக்காம்அம்
மாஉம்மை நாணுதுமே. 229

62. நாணா நடக்க நலத்தார்க்கு
இடையில்லை நாம்எழுத
ஏணார் இருந்தமி ழால்மற
வேனுந் நினைமின் என்றும்
பூணார் முலையீர் நிருத்தன்
புரிசடை எந்தைவந்தால்
காணா விடேன்கண் டிரவா
தொழியேன் கடிமலரே. 230

63. கடிமலர்க் கொன்றை தரினும்புல்
லேன்கலை சாரலொட்டேன்
முடிமலர் தீண்டின் முனிவன்
முலைதொடு மேற்கெடுவன்
அடிமலர் வானவர் ஏத்தநின்
றாய்க்குஅழ கல்லஎன்பன்
தொடிமலர்த் தோள்தொடு மேல்திரு
ஆணை தொடங்குவனே. 231

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

64. தொடங்கிய வாழ்க்கையை வாளா
துறப்பர் துறந்தவரே
அடங்கிய வேட்கை அரன்பால்
இலாஅறு காற்பறவை
முடங்கிய செஞ்சடை முக்கண
னார்க்கன்றி இங்கும் அன்றிக்
கிடங்கின்றி பட்ட காரஅனை
யார்பல கேவலரே. 232

65. வலந்தான் கழல்இடம் பாடகம்
பாம்பு வலம் இடமே
கலந்தான் வலம்நீ றிடம்சாந்
தெரிவலம் பந்திட மென்
பலந்தார் வலம்இடம் ஆடகம்
வேல்வலம் ஆழிஇடம்
சலந்தாழ் சடைவலம் தண்ணங்
குழல்இடம் சங்கரற்கே. 233

66. சங்கரன் சங்கக் குழையன்
சரணார விந்தந் தன்னை
அங்கரங் கூப்பித் தொழுதாட்
படுமின் தொண் டீர்நமனார்
கிங்கரர் தாம்செய்யும் கீழா
யினமிறை கேட்டலுமே
இங்கரம் ஆயிரம் ஈரஎன்
நெஞ்சம் எரிகின்றதே. 234

67. எரிகின்ற தீயொத்து உளசடை
ஈசற்குஅத் தீக்குஇமையோர்
சொரிகின்ற பாற்கடல் போன்றது
சூழ்புனல் அப்புனலிற்
சரிகின்ற திங்களோர் தோணிஒக்
கின்றதுஅத் தோணிஉய்ப்பான்
தெரிகின்ற திண்கழை போன்றுள
தால்அத் திறல்அரவே. 235

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

68. அரவம் உயிர்ப்ப அழலும்அங்
கங்கை வாய்க்குளிரும்
குரவம் குழல்உமை ஊடற்கு
நைந்துரு கும் அடைந்தோர்
பரவும் புகல் அண்ணல் தீண்டலும்
பார்வா னவைவிளக்கும்
விரவும் இடர்இன்பம் எம்இறை
சூடிய வெண்பிறையே. 236

69. பிறைத்துண்டம் சூடலுற் றோபிச்சை
கொண்டனல் ஆடலுற்றோ
மறைக்கண்டம் பாடலுற்றோஎன்பும்
நீறும் மருவலுற்றோ
கறைக்கண்டம் புல்லலுற் றோகடு
வாய்அர ஆடலுற்றோ
குறைக் கொண் டிவள்அரன் பின்செல்வ
தென்னனுக்குக் கூறுமினே. 237

70. கூறுமின் ஈசனைக் செய்ம்மின் குற்
றேவல் குளிர்மின் கண்கள்
தேறுமின் சித்தம் தெளிமின்
சிவனைச் செறுமின் செற்றம்
ஆறுமின் வேட்கை அறுமின்
அவலம் இவைநெறியா
ஏறுமின் வானத்து இருமின்
விருந்தாய் இமையவர்க்கே. 238

71. இமையோர் கொணர்ந்திங்கு இழித்திட
நீர்மைகெட்டு ஏந்தல்பின்போய்
அமையா நெறிச் சென்றோர் ஆழ்ந்த
சலமக ளாய் அணைந்தே
எமையாளு டையான் தலைமக
ளாஅங்கு இருப்பஎன்னே
உமையாள் அவள்கீழ் உறைவிடம்
பெற்றோ உறைகின்றதே. 239

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

72. உறைகின்றனர்ஐவர் ஒன்பது
வாயில்ஓர் மூன்றுளதால்
மறைகின்ற என்பு நரம்போடு
இறைச்சி உதிரம்மச்சை
பறைகின்ற தோல்போர் குரம்பை
பயன்இல்லை போய் அடைமின்
அறைகின்ற தெண்புனல் செஞ்சடைக்
கொண்டோன் மலரடிக்கே. 240

73. அடிக்கண்ணி கைதொழு தார்க்கு அகன்
ஞாலங் கொடுத்தடிநாய்
வடிக்கண்ணி நின்னைத் தொழவளை
கொண்டனை வண்டுண்கொன்றைக்
கடிக்கண்ணி யாய்எமக்(கு) ஒரூர்
இரண்டகங் காட்டினையால்
கொழக்கண்ணி மேல்நல்ல கொல்லேறு
உயர்ந்த குணக்குன்றமே. 241

74. குன்றெடுத் தான்செவி கண்வாய்
சிரங்கள் நெரித்தலற
அன்றடர்த் தற்றுகச் செற்றவன்
நற்றவர்க் கற்றசிவன்
மன்றிடைத் தோன்றிய நெல்லிக்
கனிநிற்ப மானுடர்போய்
ஒன்றெடுத்து ஓதிப் புகுவர்
நரகத் துறுகுழியே. 242

75. குழிகட் கொடுநடைக் கூன்பற்
கவட்டடி நெட்டிடை ஊன்
உழுவைத் தழைசெவித் தோல்முலைச்
சூறை மயிர்ப்பகுவாய்த்
தெழிகாட் டிரைகுரல் தேம்பல்
வயிற்றுத் திருக்குவிரற்
கழுதுக் குறைவிடம் போல் கண்டன்
ஆடும் கடியரங்கே. 243

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

76. அரங்கா மணி அன்றில் தென்றல் ஓர்
கூற்றம் மதியம் அந்தீச்
சரம்காமன் எய்யஞ்சு சந்துட்
பகையால் இவள்தளர்ந்தாள்
இரங்கா மனத்தவர் இல்லை
இரங்கான் இமையவர்தம்
சிரங்கா முறுவான் எலும்புகொள்
வான்என்றன் தேமொழிக்கே. 244

77. மொழியக்கண் டான்பழி மூளக்கண்
டான்பிணி முன்கைச்சங்கம்
அழியக்கண் டான்அன்றில் ஈரக்கண்
டான்தென்றல் என்உயிர்மேல்
கழியக்கண் டான்துயர் கூரக்கண்
டான்துகில் சூழ்கலையும்
கழியக்கண் டான்தில்லைக் கண்ணுத
லான்கண்ட கள்ளங்களே. 245

78. கள்ள வளாகங் கடிந்தடி
மைப்படக் கற்றவர்தம்
உள்ள வளாகத்து உறுகின்ற
உத்தமன் நீளமுடி மேல்
வெள்ள வளாகத்து வெண்ணுரை
சூடி வியன்பிறையைக்
கொள்ள அளாய்கின்ற பாம்பொன்று
உளது குறிக்கொண்மினே. 246

79. குறிக்கொண்டு இவள்பெய்த கோல்வளை
யேவந்து கோள்இழைத்தீர்
வெறிக்கொண்ட வெள்ளிலம் போதோ
எலும்போ விரிசடை மேல்
உறைக்கொன்றை யோவுடைத் தோலோ
பொடியோ உடை கலனோ
கறைக்கண்ட ரேநுமக்கு என்னோ
சிறுமி கடவியதே. 247

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

80. கடவியது ஒன்றில்லை ஆயினும்
கேண்மின்கள் காரிகையாள்
மடவிய வாறுகண் டாம்பிறை
வார்சடை எந்தைவந்தால்
கிடவிய நெஞ்சம் இடங்கொடுத்
தாட்குஅவ லங்கொடுத்தான்
தடவிய கொம்புதன் தாள்மேல்
இருந்து தறிக்குறுமே. 248

81. தறித்தாய் அயன்தலை சாய்த்தாய்
சலந்தர னைத்தழலாப்
பொறித்தாய் அனங்கனைச் சுட்டாய்
புரம்புன லும்சடைமேல்
செறித்தாய்க்கு இவைபுகழ் ஆகின்ற
கண்டிவள் சில்வளையும்
பறித்தாய்க்கு இதுபழி ஆகுங்கொ
லாம்என்று பாவிப்பனே. 249

82. பாவிக்கும் பண்டையள் அல்லள்
பரிசறி யாள்சிறுமி
ஆவிக்கும் குற்குலு நாறும்
அகம்நெக அங்கம்எங்கும்
காவிக்கண் சோரும்பொச் சாப்புங்
கறைமிடற் றானைக் கண்ணில்
தாவிக்கும் வெண்ணகை யாளம்மெல்
லோதிக்குச் சந்தித்தவே. 250

83. சந்தித்த கூற்றுக்குக் கூற்றாம்
பிணிக்குத் தணிமருந்தாம்
சிந்திக்கிற் சிந்தா மணியாகித்
தித்தித்து அமுதமுமாம்
வந்திக்கில் வந்தென்னை மால்செய்யும்
வானோர் வணங்கநின்ற
அந்திக்கண் ணாடியி னான்அடி
யார்களுக்கு ஆவனவே. 251

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84. ஆவன யாரே அழிக்குவல்
லார்அமை யாவுலகில்
போவன யாரே பொதியகிற்
பார்புரம் மூன்றெரித்த
தேவனைத் தில்லைச் சிவனைத்
திருந்தடி கைதொழுது
தீவினை யேன்இழந் தேன்கலை
யோடு செறிவளையே. 252

85. செறிவளை யாய்நீ விரையல்
குலநலம் கல்விமெய்யாம்
இறையவன் தாமரைச் சேவடிப்
போதென்றல் லோரும் ஏத்தும்
நிறையுடை நெஞ்சிது வேண்டிற்று
வேண்டிய நீ சர்தம்பால்
கறைவளர் கண்டனைக் காணப்
பெரிதும் கலங்கியது. 253

86. கலங்கின மால்கடல் வீழ்ந்தன
கார்வரை ஆழ்ந்ததுமண்
மலங்கின நாகம் மருண்டன
பல்கணம் வானம்கைபோய்
இலங்கின மின்னொடு நீண்ட
சடைஇமை யோர்வியந்தார்
அலங்கல்நன் மாநடம் ஆர்க்கினி
ஆடுவது எம்மிறையே. 254

87. எம்இறை வன்இமை யோர்தலை
வன்உமை யாள்கணவன்
மும்முறை யாலும் வணங்கப்
படுகின்ற முக்கண்நக்கற்கு
எம்முறை யாள்இவள் என்பிழைத்
தாட்குஇறை என்பிழைத்தான்
இம்முறை யாலே கவரக்
கருதிற்று எழிற்கலையே. 255

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

88. கலைதலை சூலம் மழுக்கனல்
கண்டைகட் டங்கம்கொடி
சிலைஇலை ஏந்திய எண்தோள்
சிவற்கு மனஞ்சொற் செய்கை
நிலைபிழை யாதுகுற் றேவல்செய்
தார்நின்ற மேரு என்னும்
மலைபிழை யார்என்ப ரால் அறிந்
தோர்கள்இம் மாநிலத்தே. 256

89. மாநிலத் தோர்கட்குத் தேவர்
அனைய அத்தேவர் எல்லாம்
ஆனலத் தால்தொழும் அஞ்சடை
ஈசன் அவன் பெருமை
தேனலர்த் தாமரை யோன்திரு
மாலவர் தேர்ந்துணரார்
பானலத் தாற்கவி யாமெங்ங
னேஇனிப் பாடுவதே. 257

90. பாடிய வண்டுறை கொன்றையி
னான்படப் பாம்புயிர்ப்ப
ஓடிய தீயால் உருகிய
திங்களின் ஊறல் ஒத்தது
ஆடிய நீறது கங்கையும்
தெண்ணீர் யமுனையுமே
கூடிய கோப்பொத்த தால்உமை
பாகம்எம் கொற்றவர்க்கே. 258

91. கொற்றவ னேஎன்றும் கோவணத்
தாய்என்றும் மாவணத்தால்
நற்றவ னேஎன்றும் நஞ்சுண்டி
யேஎன்றும் அஞ்சமைக்கப்
பெற்றவ னேஎன்றும் பிஞ்ஞக
னேஎன்றும் மன்மதனைச்
செற்றவ னேஎன்றும் நாளும்
பரவும்என் சிந்தனையே. 259

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

92. சிந்தனை செய்ய மனம் அமைத்
தேன்செப்ப நாஅமைத்தேன்
வந்தனை செய்யத் தலைஅமைத்
தேன்கை தொழ அமைத்தேன்
பந்தனை செய்வதற்கு அன்பமைத்
தேன்மெய் அரும்பவைத்தேன்
வெந்தவெண் ணீறணி ஈசற்கு
இவையான் விதித்தனவே. 260

93. விதித்தன வாழ்நாள் பெரும்பிணி
விச்சைகள் கொண்டுபண்டே
கொதிப்பினில் ஒன்றும் குறைவில்லை
குங்குமக் குன்றனைய
பதித்தனம் கண்டனம் குன்றம்வெண்
சந்தனம் பட்டனைய
மதித்தனம் கண்டனம் நெஞ்சினி
என்செய்யும் வஞ்சனையே. 261

94. வஞ்சனை யாலே வரிவளை
கொண்டுள்ள மால்பனிப்பத்
துஞ்சும் பொழுதும் உறத்தொழு
தேன்சொரி மால்அருவி
அஞ்சன மால்வரை வெண்பிறை
கவ்விஅண் ணாந்தனைய
வெஞ்சி ஆனையின் ஈருரி
மூடிய வீரனையே. 262

95. வீரன் அயன் அரி வெற்பலர்
நீர்எரி பொன்எழிலார்
காரொண் கடுக்கை கமலம்
துழாய்விடை தொல்பறவை
பேர்ஒண் பதிநிறம் தார்இவர்
ஊர்திவெவ் வேறென்பரால்
யாரும் அறியா வகை எங்கள்
ஈசர் பரிசுகளே. 263

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

96. பரியா தனவந்த பாவமும்
பற்றும்மற் றும்பணிந்தார்க்கு
உரியான் எனச் சொல்லி உன்னுடன்
ஆவன் என் அடியார்க்கு
அரியான் இவன்என்று காட்டுவன்
என்றென்றும் இவை இவையே
பிரியாது உறையும் சடையான்
அடிக்கென்றும் பேசுதுமே. 264

97. பேசுவது எல்லாம் அரன்திரு
நாமம்அப் பேதைநல்லாள்
காய்சின வேட்கை அரன்பா
வதுஅறு காற்பறவை
மூசின கொன்றை முடிமே
வதுமுலை மேல் முயங்கப்
பூசின சாந்தம் தொழுமால்
இவைஒன்றும் பொய்யலவே. 265

98. பொய்யா நரகம் புகினும்
துறக்கம் புகினும்புக்கிங்கு
உய்யா உடம்பினோடு ஊர்வ
நடப்ப பறப்ப என்று
நையா விளியினும் நானிலம்
ஆளினும் நான்மறைசேர்
மையார் மிடற்றான் அடிமற
வாவரம் வேண்டுவனே. 266

99. வேண்டிய நாள்களில் பாதியும்
கங்குல் மிக அவற்றுள்
ஈண்டிய வெந்நோய் முதலது
பிள்ளைமை மேலது மூப்பு
ஆண்டின் அச்சம் வெகுளி
அவாஅழுக் காறு இங்ஙனே
மாண்டன சேர்தும் வளர்புன்
சடைமுக்கண் மாயனையே. 267

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100. மாயன்நன் மாமணி கண்டன்
வளர்சடை யாற்குஅடிமை
ஆயின தொண்டர் துறக்கம்
பெறுவது சொல்லுடைத்தே
காய்சின ஆனை வளரும்
கனக மலையருகே
போயின காக்கையும் அன்றே
படைத்தது பொன்வண்ணமே. 268

### ஆக்கியோன் பெயர்

101. அன்றுவெள் ளானையின் மீதிமை
யோர்சுற் றணுகுறச்செல்
வன்தொண்டர் பின்பரி மேற்கொண்டு
வெள்ளி மலையரன்முன்
சென்றெழில் ஆதி உலாஅரங்
கேற்றிய சேரர்பிரான்
மன்றிடை ஓதுபொன் வண்ணத்
தந்தாதி வழங்கிதுவே. 269

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரமான் பெருமாள் அருளிய

# திருவாரூர் மும்மணிக்கோவை (7)

திருச்சிற்றம்பலம்

## 1. அகவல்

விரிகடல் பருகி அளறுபட் டன்ன
கருநிற மேகம் கல்முக டேறி
நுண்துளி பொழிய நோக்கி ஒண்தொடி
பொலங்குழை மின்னப் புருவ வில்லிட்டு
இலங்கெழிற் செவ்வாய்க் கோபம் ஊர்தரக்
கைத்தலம் என்னும் காந்தள் மலர
முத்திலங்கு எயிறெனும் முல்லை யரும்பக்
குழலும் சுணங்கும் கொன்றை காட்ட
எழிலுடைச் சாயல் இளமயில் படைப்ப
உள்நிறை உயிர்ப்பெனும் ஊதை ஊர்தரக்
கண்ணீர்ப் பெருமழை பொழிதலின் ஒண்ணிறத்து
அஞ்சனக் கொழுஞ்சேறு அலம்பி எஞ்சா
மணியும் பொன்னும் மாசறு வயிரமும்
அணிகிளர் அகிலும் ஆரமும் உரிஞ்சிக்
கொங்கை என்னும் குவட்டிடை இழிதரப்
பொங்குபுயல் காட்டி யோளே கங்கை
வருவிசை தவிர்த்த வார்சடைக் கடவுள்
அரிவை பாகத்து அண்ணல் ஆரூர்
எல்லையில் இரும்பலி சொரியும்
கல்லோ சென்ற காதலர் மனமே. 270

## 2. வெண்பா

மனமால் உறாதே மற்றென்செய் யும்வாய்ந்த
கனமால் விடையுடையோன் கண்டத்து - இனமாகித்
தோன்றினகார் தோன்றிலதேர் சோர்ந்தனசங்கு ஊர்ந்தனபீர்
கான்றனநீர் ஏந்திழையாள் கண். 271

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. கட்டளைக் கலித்துறை

கண்ணார் நுதலெந்தை காமரு
கண்ட மென இருண்ட
விண்ணால் உருமொடு மேலது
கீழது கொண்டல்விண்ட
மண்ணார் மலைமேல் இளமயி
லால்மட மான் அனைய
பெண்ணாம் இவள்இனி என்னாய்க்
கழியும் பரிந்துறைவே. 272

## 4. அகவல்

உறைகழி ஒள்வாள் மின்னி உருமெனும்
அறைகுரல் முரசம் ஆர்ப்பக் கைபோய்
வெஞ்சிலை கோலி விரிதுளி என்னும்
மின்கரந் துரந்தது வானே நிலனே
கடிய வாகிய களவநன் மலரொடு
கொடிய வாகிய தளவமும் அந்தண்
குலைமேம் பட்ட காந்தளும் இவற்றொடு
காயா வெந்துயர் தருமேல் அவரே
பொங்கிரும் புரிசை போக்கற வளைஇக்
கங்குலும் பகலும் காவில்மேலி
மாசறு வேந்தன் பாசறை யோரே
யானே இன்னே
அலகி லாற்றல் அருச்சுனற்கு அஞ்ஞான்று
உலவா நல்வரம் அருளிய உத்தமன்
அந்தண் ஆரூர் சிந்தித்து மகிழா
மயரிய மாக்களைப் போலத்
துயருழந்து அழகியக் கண்துயி லாவே. 273

## 5. வெண்பா

துயிலாநோய் யாம் தோன்றத்தீத் தோன்ற
மயிலால வந்ததால் மாதோ - அயலாய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டத்துக்கு அப்பாலான் அந்திங்கட் கண்ணியான்
கண்டத்துக்கு ஒப்பாய கார். 274

## 6. கட்டளைக் கலித்துறை

சாரும் முழக்கொடு மின்னொடு
வந்தது காதலர்தம்
தேரும் தெருவும் சிலம்பப்
புகுந்தது சில்வளைகள்
சோருஞ்சிலபல அங்கே
நெரிந்தன துன்னருநஞ்
சாரும் மிடற்றண்ணல் ஆரூர்
அனைய அணங்கினுக்கே. 275

## 7. அகவல்

அணங்குறை நெடுவரை அருமைபே ணாது
மணங்கமழ் தெரியல் சூடி வைகலும்
விடுசுடர் நெடுவேல் முன்னடி விளக்காக்
கடுவிசைக் கான்யாற்று நெடுநீர் நீந்தி
ஒருதனி பெயரும் பொழுதிற் புரி குழல்
வானர மகளிர்நின் மல்வழங்கு அகலத்து
ஆனாக் காதல் ஆகுவர் என்று
புலவி உள்ளமொடு பொருந்தாக் கண்ணள்
கலைபிணை திரியக் கையுறவு எய்தி
மெல்விரல் நெரித்து விம்மி வெய்துயிர்த்து
அல்லியங்கோதை அழலற் றாஅங்கு
எல்லையில் இருந்துயர் எய்தினள் புல்லார்
திரிபுரம் எரிய ஒருகணைதெரிந்த
அரிவை பாகத்து அண்ணல் ஆரூர்
வளமலி கமல வாள்முகத்து
இளமயிற் சாயல் ஏந்திழை தானே. 276

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. வெண்பா

இழையார் வனமுலை ஈர்ந்தண் புனத்தில்
உழையாகப் போந்ததொன்று உண்டே - பிழையாச்சீர்
அம்மான் அனலாடி ஆரூர்க்கோன் அன்றுரித்த
கைம்மானேர் அன்ன களிறு. 277

## 9. கட்டளைக் கலித்துறை

களிறு வழங்க வழங்கா
அதிர்கதிர் வேல்துணையா
வெளிறு விரவ வருதிகண்
டாய்விண்ணின் நின்றழிந்து
பிளிறு குரற்கங்கை தாங்கிய
பிஞ்சகன் பூங்கழல்மாட்டு
ஒளிறு மணிக்கொடும் பூணிமை
யோர்செல்லும் ஓங்கிருளே. 278

## 10. அகவல்

இருள்புரி கூந்தலும் எழில்நலம் சிதைந்து
மருள்புரி வண்டறை மாலையும் பரிந்தது
ஒண்ணுதல் திலகமும் அழிந்தது கண்ணும்
மைந்நிறம் ஒழிந்து செந்நிறம் எய்தி
உள்ளறி கொடுமை உரைப்ப போன்றன
சேதகம் பரந்தது செவ்வாய் மேதகு
குழை கெழு திருமுகம் வியப்புள் உறுத்தி
இழைகெழு கொங்கையும் இன்சாந்து அழீஇக்
கலையுந் துகிலும் நிலையிற் கலங்கி
என்னிது விளைந்த வாறென மற்றிஃது
அன்னதும் அறிகிலம் யாமே செறிபொழில்
அருகுடை ஆரூர் அமர்துறை அமுதன்
முருகவிரி தெரியல் முக்கண் மூர்த்தி
மராமரச் சோலை சிராமலைச் சாரல்
சுரும்பிவர் நறும்போது கொய்யப்
பெருஞ்செறி வனத்தில்யான் பிரிந்ததிப் பொழுதே. 279

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 11. வெண்பா

பொழுது கழிந்தாலும் பூம்புனங்காத்து எள்கி
எழுது பொடியிடையாய் ஏகான் - தொழுதமரர்
முன்னஞ்சேர் மொய்கழலான் முக்கணான் நான்மறையான்
மன்னுஞ்சேய் போலொருவன் வந்து. 280

### 12. கட்டளைக் கலித்துறை

வந்தார் எதிர்சென்று நின்றேன்
கிடந்தவன் தார்தழைகள்
தந்தார் அவையொன்றும் மாற்றகில்
லேன்தக்கன் வேள் விசெற்ற
செந்தா மரைவண்ணன் தீர்த்தச்
சடையன் சிராமலைவாய்க்
கொந்தார் பொழிலணி நந்தா
வனஞ்சூழ் குளிர்புனத்தே. 281

### 13. அகவல்

புனமயில் சாயல் பூங்குழல் மடந்தை
மனைவலி செல்வம் மகிழா ளாகி
ஏதிலன் ஒருவன் காதல னாக
விடுசுடர் நடுவுநின்று அடுதலின் நிழலும்
அடியகத்து ஒளிக்கும் ஆரழற் கானத்து
வெவ்வினை வேடர் துடிக்குரல் வெரீஇ
மெய்விதிர் எறியும் செவ்வித் தாகி
முள்ளிலை ஈந்தும் முளிதாள் இலவமும்
வெள்ளிலும் பரந்த வெள்ளிடை மருங்கில்
கடுங்குரல் கதநாய் நெடுந்தொடர் பிணித்துப்
பாசந் தின்ற தேய்கால் உம்பர்
மரையதன் மேய்ந்த மயிர்ப்புன் குரம்பை
விரிநரைக் கூந்தல் வெள்வாய் மறத்தியர்
விருந்தா யினள்கொல் தானே திருந்தாக்
கூற்றெனப் பெயரிய கொடுந்தொழில் ஒருவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றல் செற்ற அண்ணல் ஆரூர்ச்
செய்வளர் கமலச் சீறடிக்
கொவ்வைச் செவ்வாய்க் கியில்மொழிக் கொடியே. 282

### 14. வெண்பா

கொடியேர் நுடங்கிடையாள் கொய்தாரான் பின்னே
அடியால் நடந்தடைந்தாள் ஆக - பொடியாக
நண்ணாரூர் மூன்றெரித்த நாகஞ்சேர் திண்சிலையான்
தண்ணாரூர் சூழ்ந்த தடம் 283

### 15. கட்டளைக் கலித்துறை

தடப்பாற் புனற்சடைச் சங்கரன்
தண்மதி போல்முகத்து
மடப்பால் மடந்தை மலரணைச்
சேக்கையில் பாசம்பிரீஇ
இடப்பால் திரியில் வெருவும்
இருஞ்சுரம் சென்றனளால்
படப்பா லனவல்ல வால்தமி
யேன்தையல் பட்டனவே. 284

### 16. அகவல்

பட்டோர் பெயரும் ஆற்றலும் எழுதி
நட்ட கல்லும் மூதூர் நத்தமும்
பரல்முரம்பு அதரும் அல்லது படுமழை
வரன்முறை அறியா வல்வெயிற் கானத்துத்
தேனிவர் கோதை செல்ல மானினம்
அஞ்சில் ஓதி நோக்கிற் கழிந்து
நெஞ்செரி வுடைமையின் விலக்காது விடுக
கொங்கைக் கழிந்து குன்றிடை அடைந்த
கொங்கிவர் கோங்கமும் செலவுடன் படுக
மென்றோள் குடைந்து வெயில்நிலை நின்ற
குன்ற வேய்களும் கூற்றடைத்து ஒழிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயிருங் கடற்றிடை வைகல் ஆயிரம்
பாவையை வளர்ப்போய் நீதனி பாவையை
விலக்காது பிழைத்தனை மாதோ நலத்தகும்
அலைபுனல் ஆரூர் அமர்ந்துறை அமுதன்
கலையமர் கையன் கண்ணுதல் எந்தை
தொங்கலஞ் சடைமுடிக்கு அணிந்த
கொங்கலர் கண்ணி ஆயின குரவே. 285

## 17. வெண்பா

குரவம் கமழ்கோதைவே லோன்பின்
விரவும் கடுங்கானம் வெவ்வாய் - அரவம்
சடைக்கணிந்த சங்கரன் தார்மதனன் தன்னைக்
கடைக்கணித்த தீயிற் கடிது. 286

## 18. கட்டளைக் கலித்துறை

கடிமலர்க் கொன்றையும் திங்களும்
செங்கண் அரவும் அங்கே
முடிமல ராக்கிய முக்கணநக்
கண்மிக்க செக்கரொக்கும்
படிமலர் மேனிப் பரமன்
அடிபர வாதவர்போல்
அடிமலர் நோவ நடந்தோ
கடந்ததுஎம் அம்மனையே. 287

## 19. அகவல்

மனையுறைக் குருவி வளைவாய்ச் சேவல்
சினை முதிர் பேடைச் செவ்விநோக்கி
ஈனில் இழைக்க வேண்டி ஆனா
அன்புபொறை கூரமேன்மேல் முயங்கிக்
கண்ணுடைக் கரும்பின் நுண்தோடு கவரும்
பெருவளம் தழீஇ பீடுசால் கிடக்கை
வருபுனல் ஊரன் பார்வையாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடக்கொடி மாதர்க்கு வலையாய்த் தோன்றிப்
படிற்று வாய்மொழி பலபா ராட்டி
உள்ளத்து உள்ளது தெள்ளிதிற் கரந்து
கள்ள நோக்கமொடு கைதொழுது இறைஞ்சி
எம்மிலேயே பாண அவனேல்
அமரரும் அறியா ஆதிமூர்த்தி
குமரன் தாதை குளிர்சடை இறைவன்
அறைகழல் எந்தை ஆரூர் ஆவணத்
துறையில் தூக்கும் எழில்மென் காட்சிக்
கண்ணடி அணைய நீர்மைப்
பண்ணுடைச் சொல்லியர் தம்போ லோனே. 288

## 20. வெண்பா

பாலாய சொல்லியர்க்கே சொல்லுபோய்ப் பாண்மகனே
ஏலாஇங்கு என்னுக்கு இடுகின்றாய் - மேலாய
தேந்தண் கமழ்கொன்றைச் செஞ்சடையான் தாள் சூடும்
பூந்தண் புனலூரன் பொய். 289

## 21. கட்டளைக் கலித்துறை

பொய்யால் தொழினும் அருளும்
இறைகண்டம் போலிருண்ட
மையார் தடங்கண் மடந்தையர்
கேட்கிற்பொல் லாதுவந்துன்
கையால் அடிதொடல் செல்லல்நில்
புல்லல் கலையளையல்
ஐயா இவை நன்கு கற்றாய்
பெரிதும் அழகியதே. 290

## 22. அகவல்

அழகுடைக் கிங்கிணி அடிமிசை அரற்றத்
தொழிலுடைச் சிறுபறை பூண்டு தேர்ஈர்த்து
ஒளிகளிறு உருட்டி ஒண்பொடி ஆடிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருகளிறு அனைய பொக்கமொடு பிற்றாழ்ந்து
பூங்குழற் சிறாரொடு தூங்குநடை பயிற்றி
அக்கரை உடுத்தி ஐம்படைகட்டி
ஒக்கரை இருக்கும் ஒளிர்புன் குஞ்சிக்
குதலையங் கிளவிப் புதல்வன் தன்னை
உள்ளச் சொரிந்த வெள்ளத் தீம்பால்
உடையவாகிய தடமென் கொங்கை
வேண்டாது பிரிந்த விரிபுனல் ஊரன்
பூண்தாங்கு அகலம் புல்குவன் எனப்போய்ப்
பெருமடம் உடையை வாழி வார்சடைக்
கொடுவெண் திங்கள் கொழுநிலவு ஏய்க்கும்
சுடுபொடி யணிந்த துளங்கொளி அகலத்து
அண்ணல் ஆரூர் திண்ணிதிற் செய்த
சிறைகெழு செம்புனல் போல
நிறையொடு நீங்காய் நெஞ்சம் நீயே. 291

## 23. வெண்பா

நீ யிருந்திங்கு என்போது நெஞ்சமே நீள் இருட்கண்
ஆயிரங்கை வட்டித்து அனலாடித் - தீயரங்கத்து
ஐவாய் அரவசைத்தான் நன்பனைத் தோட்கு அன்பமைந்த
செய்வான்நல் லூரன் திறம். 292

## 24. கட்டளைக் கலித்துறை

திறமலி சின்மொழிச் செந்துவர்
வாயினர் எங்கையர்க்கே
மறவலி வேலோன் அருளுக
வார்சடையான் கடவூர்த்
துறைமலி ஆம்பல்பல் லாயிரத்
துத்தமி யேயெழினும்
நறைமலி தாமரை தன்னதென்
றேசொல்லும் நற்கயமே. 293

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25. அகவல்

கயங்கெழு கருங்கடல் முதுகு தெருவுபட
இயங்குதிமில் கடவி எறியொளி நுளையர்
நெய்ம்மின் கவரல் வேண்டிக் கைம்மிகத்
தால வட்டம் ஏய்ப்ப மீமிசை
முடிகெழு தருவலை வீசி முந்நீர்க்
குடரென வாங்கிக் கொள்ளை கொண்ட
சுரிமுகச் சங்கும் சுடர்விடு பவளமும்
எரிகதிர் நித்திலத் தொகுதியும் கூடி
விரிகதிர் நிலவும் செக்கரும் தாரகை
உருவது காட்டும் உலவாக் காட்சித்
தண்ணந் துறைவன் தடவரை அகலம்
கண்ணுறக் கண்டது முதலா ஒண்ணிறக்
காசு மாசுணம் கதிர்மதிக் குழவியைக்
கோளிழைத் திருக்கும் கொள்கை போல
மணிதிகழ் மிடற்று வானவன் மருவும்
அணிதிகழ் அகலத்து அண்ணல் ஆரூர்
ஆர்கலி விழவின் அன்னதோர்
பேரலர் சிறந்தது சிறுநல் லூரே. 294

## 26. வெண்பா

ஊரெலாம் துஞ்சி உலகெலாம் நள்ளென்று
பாரெலாம் பாட இந்தப் பாயிருட்கண் - சீருலாம்
மாந்துறைவாய் ஈசன்மணிநீர் மறைகாட்டுப்
பூந்துறைவாய் மேய்ந்துறங்கா புள். 295

## 27. கட்டளைக் கலித்துறை

புள்ளும் துயின்று பொழுதிறு
மாந்து கழுதுறங்கி
நள்ளென்ற கங்குல் இருள்வாய்ப்
பெருகிய வார்பனிநாள்
துள்ளுங் கலைக்கைச் சுடர்வண்
ணனைத் தொழு வார்மனம் போன்று
உள்ளும் உருக ஒருவர்திண்
தேர்வந்து உலாத் தருமே. 296

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28. அகவல்

உலாநீர்க் கங்கை ஒருசடை கரந்து
புலால்நீர் ஒழுகப் பொருகளிறு உரித்த
பூத நாதன் ஆதி மூர்த்தி
திருமட மலைமகட்கு ஒருகூறு கொடுத்துத்தன்
அன்பின் அமைந்தவன் ஆரூர் நன்பகல்
வலம்புரி அடுப்பா மாமுத்து அரிசி
சஞ்சலம் நிறைய ஏற்றி நலந்திகழ்
பவளச் செந்தீ மூட்டிப் பொலம்பட
இப்பியந் துடுப்பால் ஒப்பத் துழாவி
அடாஅது அட்ட அமுதம் வாய்மடுத்து
இடாஅ ஆயமோடு உண்ணும் பொழுதில்
திருந்திழைப் பணைத்தோள் தேமொழி மாதே
விருந்தின அடியேற்கு அருளுதி யோவென
முலைமுகம் நோக்கி முறுவளத்து இறைஞ்சலின்
நறைகமழ் எண்ணெய்ச் சிறுநுண் துள்ளி. 297

## 29. வெண்பா

ஆயினஅன் பாரே அழிப்பர் அனலாடி
பேயினவன் பாரோம்பும் பேரருளான் - தீயனவன்
கண்ணாளன் ஆரூர்க் கடலார் மடப்பாவை
தண்ணாரும் கொங்கைக்கே தாழ்ந்து. 298

## 30. கட்டளைக் கலித்துறை

தாழ்ந்து கிடந்த சடைமுடிச்
சங்கரன் தாள் பணியா
தாழ்ந்து கிடந்துறை வார்கிளை
போலயர் வேற்கு இரங்கிச்
சூழ்ந்து கிடந்த கரைமேல்
திரையென்னும் கையெறிந்து
வீழ்ந்து கிடந்தல றித்துயி
லாதி விரிகடலே. 299

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரமான் பெருமாள் நாயனார் அருளிய

## திருக்கைலாய ஞான உலா (8)

திருச்சிற்றம்பலம்

1. திருமாலும் நான்முகனும் தேர்ந்துணராது அன்றங்கு
அருமால் உற அழலாய் நின்ற - பெருமான்

2. பிறவாதே தோன்றினான் காணாதே காண்பான்
துறவாதே யாக்கை துறந்தான் - முறைமையால்

3. ஆழாதே ஆழ்ந்தான் அகலா அகலியான்
ஊழால் உயராதே ஓங்கினான் - சூழொளிநூல்

4. ஓதாது உணர்ந்தான் நுணுகாது நுண்ணியான்
யாதுஅணுகாது அணுகியான் - ஆதி

5. அரியாகிக் காப்பான் அயனாய்ப் படைப்பான்
அரனாய் அழிப்பவனுந் தானே - பரனாய

6. தேவர் அறியாத தோற்றத்தான் தேவரைத்தான்
மேவிய வாறே விதித்தமைத்தான் - ஓவாதே

7. எவ்வுருவில் யாரொருவர் உள்குவர் உள்ளத்துள்
அவ்வுருவாய்த் தோன்றி அருள்கொடுப்பான் - எவ்வுருவும்

8. தானேயாய் நின்றளிப்பான் தன்னிற் பிறிதுருவம்
ஏனோர்க்கும் காண்பரிய எம்பெருமான் - ஆனாத

9. சீரார் சிவலோகம் தன்னுள் சிவபுரத்தில்
ஏரார் திருக்கோயில் உள்ளிருப்ப - ஆராய்ந்து

10. செங்கண் அமரர் புறங்கடைக்கண் சென்றீண்டி
எங்கட்குக் காட்சியருள் என்றிரப்ப - அங்கொருநாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. பூமங்கை பொய்தீர் தரணி புகழ்மங்கை
நாமங்கை என்றிவர்கள் நன்கமைத்த - சேமங்கொள்

12. ஞானக் கொழுந்து நகராசன் தன் மடந்தை
தேன்மொய்த்த குஞ்சியின்மேல் சித்திரிப்ப - ஊனமில்சீர்

13. நந்தா வனமலரும் மந்தா இனித்தடஞ்சேர்
செந்தா மரைமலர்நூ றாயிரத்தால் - நொந்தா

14. வயந்தன் தொடுத்தமைத்த வாசிகை சூட்டி
நயந்திகழும் நல்லுறுப்புக் கூட்டிப் - பயன்கொள்

15. குலமகளிர் செய்த கொழுஞ்சாந்தம் கொண்டு
நலமலிய ஆகம் தழீஇக் - கலைமலிந்த

16. கற்பகம் ஈன்ற கமழ்பட் டினைஉடுத்துப்
பொற்கழல்கள் கால்மேற் பொலிவித்து - விற்பகரும்

17. சூளா மணிசேர் முடிகவித்துச் சுட்டிசேர்
வாளார் நுதற்பட்டம் மன்னுவித்துத் - தோளா

18. மணிமகர குண்டலங்கள் காதுக்கு அணிந்தாங்கு
அணிவயிரக் கண்டிகை பொன்னாண் - பணிபெரிய

19. ஆரம் அவைபூண்டு அணிதிக ழும்சன்ன
வீரம் திருமார்பில் வில்லிலக - ஏருடைய

20. எண்தோட்கும் கேயூரம் பெய்துதர பந்தனமும்
கண்டோர் மனமகிழக் கட்டுறீஇக் - கொண்டு

21. கடிசூத் திரம்புனைந்து கங்கணங்கைப் பெய்து
வடிவுடைய கோலம் புனைந்தாங்கு - அடிநிலைமேல்

22. நந்திமா காளர் கடைகழிந்த போழ்தத்து
வந்து வசுக்கள் இருக்குரைப்ப - அந்தமில்சீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. எண்ணருங் கீர்த்தி யெழுவர் இருடிகளும்
அண்ணல்மேல் ஆசிகள் தாமுணர்த்த - ஒண்ணிறத்த

24. பன்னிருவர் ஆதித்தர் பல்லாண்டு எடுத்திசைப்ப
மன்னும் மகதியன்யாழ் வாசிப்பப் - பொன்னியலும்

25. அங்கி கமழ்தூபம் ஏந்த யமன்வந்து
மங்கல வாசகத்தால் வாழ்த்துரைப்பச் - செங்கண்

26. நிருதி முதலோர் நிகற்கலன்கள் ஏந்த
வருணன் மணிக்கலசந் தாங்கத் - தெருவெலாம்

27. வாயு நனிவிளக்க மாமழை நீர்தெளிப்பத்
தூயசீர்ச் சோமன் குடையெடுப்ப - மேவியசீர்

28. ஈசானன் வந்துஅடைப்பை கைக்கொள்ள அச்சுனிகள்
வாயார்ந்த மந்திரத்தால் வாழ்த்துரைப்பத் - தூய

29. உருத்திரர்கள் தோத்திரங்கள் சொல்லக் குபேரன்
திருத்தகு மாநிதியஞ் சிந்தக் - கருத்தமைந்த

30. கங்கா நதியமுனை உள்ளுறுத்த தீர்த்தங்கள்
பொங்கு கவரி புடையிரட்டத் - தங்கிய

31. பைந்நாகம் எட்டும் சுடரெடுப்பப் பைந்தறுகண்
கைந்நாகம் எட்டும் கழல்வணங்க - மெய்ந்நாக

32. மேகம் விதானமாய் மின்னெலாம் சூழ்கொடியாய்
மேகத் உருமும் முரசறையப் - போகஞ்சேர்

33. தும்புரு நாரதர்கள் பாடத் தொடர்ந்தெங்கும்
கொம்புருவ நுண்ணிடையார் கூத்தாட - எம்பெருமான்

34. விண்ணோர் பணிய உர்ந்த விளங்கொளிசேர்
வெண்ணார் மழவிடையை மேல்கொண்டாங்கு - எண்ணார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. கருத்துடைய பாரிடங்கள் காப்பொத்துச் செய்யத்
திருக்கடைகள் ஏழ்கழிந்த போதில் - செருக்குடைய

36. சேனா பதிமயில்மேல் முன்செல்ல யானைமேல்
ஆனாப்போர் இந்திரன் பின்படர - ஆனாத

37. அன்னத்தே யேறி அயன் வலப்பால் கைபோதக்
கன்னவிலும் திண்டோள் கருடன்மேல் - மன்னிய

38. மால்இடப்பால் செல்ல மலரார் கணைஐந்து
மேலிடப்பால் மென்கருப்பு வில்இடப்பால் - ஏல்வுடைய

39. சங்கணையும் முன்கைத் தடமுலையார் வேல்எய்வான்
கொங்கணையும் பூவாளி கோத்தமைத்த - ஐங்கணையான்

40. காமன் கொடிப்படைமுன் போதக் கதக்காரி
வாமன் புரவிமேல் வந்தணைய - நாமஞ்சேர்

41. வேழ முகத்து விநாயகனை உள்ளுறுத்துச்
சூழ்வளைக்கைத் தொண்டைவாய்க் கெண்டையொண்கண் - தாழ்கூந்தல்

42. மங்கை எழுவருஞ் சூழ மடநீலி
சிங்க அடலேற்றின் மேற்செல்லத் - தங்கிய

43. விச்சா தார்இயக்கர் கின்னரர் கிம்புருடர்
அச்சா ரணர்அரக்க ரோடசுரர் - எச்சார்வும்

44. சல்லரி தாளந் தகுணிகந் தந்தளகம்
கல்லலகு கல்வடம் மொந்தை - நல்லிலயத்

45. தட்டழி சங்கம் சலஞ்சலம் தண்ணுமை
கட்டழியாப் பேரி கரதாளம் - கொட்டும்

46. குடமுழவம் கொக்கரை வீணை குழல்யாழ்
இடமாந் தடாரி படகம் - இடவிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. மத்தளர் துந்துபி வாய்ந்த முருடிவற்றால்
எத்திசை தோறும் எழுந்தியம்ப - ஒத்துடனே

48. மங்கலம் பாடுவார் வந்திறைஞ்ச மல்லரும்
கிங்கரரும் எங்குங் கிலுகிலுப்பத் - தங்கிய

49. ஆறாம் இருதுவும் யோகும் அருந்தவமும்
மாறாத முத்திரையும் மந்திரமும் - ஈறார்ந்த

50. காலங்கள் மூன்றும் கணமும் குணங்களும்
வால கிலியரும் வந்தீண்டி - மேலை

51. இமையோர் பெருமானே போற்றி யெழில்சேர்
உமையாள் மணவாளா போற்றி - எமையாளும்

52. தீயாடி போற்றி சிவனே அடிபோற்றி
ஈசனே எந்தாய் இறைபோற்றி - தூயசீர்ச்

53. சங்கரனே போற்றி சடாமகுடத் தாய்போற்றி
பொங்கரவா பொன்னங் கழல்போற்றி - அங்கொருநாள்

54. ஆய விழுப்போர் அருச்சுனன் ஆற்றற்குப்
பாசுபதம் ஈந்த பதம்போற்றி - தூய

55. மலைமேலாய் போற்றி மயானத்தாய் வானோர்
தலைமேலாய் போற்றிதாள் போற்றி - நிலைபோற்றி

56. போற்றியெனப் பூமாரி பெய்து புலன்கலங்க
நாற்றினையும் எங்கும் நலம்பெருக - ஏற்றுக்

57. கொடியும் பதாகையும் கொற்றக் குடையும்
வடிவுடைய தொங்கலும் சூழக் - கடிகமழும்

58. பூமாண் கருங்குழலார் உள்ளம் புதிதுண்பான்
வாமான ஈசன் வரும்போழ்திற் - சேமேலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழாங்கள்

59. வாமான யீசன் மறுவில்சீர் வானவர்தம்
கோமான் படைமுழக்கங் கேட்டலுமே - தூமாண்பில்

60. வானநீர் தாங்கி மறையோம்பி வான்பிறையோடு
ஊனமில் சூலம் உடையவாய் - ஈனமிலா

61. வெள்ளை யணிதலால் வேழத்து உரிபோர்த்த
வள்ளலே போலும் வடிவுடைய - ஒள்ளிய

62. மாட நடுவில் மலரார் அமளியே
கூடிய போர்க்கல மாக்குறித்துக் - கேடில்

63. சிலம்பு பறையாகச் சேயரிக்கண் அம்பா
விலங்கு கொடும்புருவம் வில்லா - நலந்திகழும்

64. கூழைபின் தாழ வளைஆர்ப்பக் கைபோந்து
கேழ்கிளரும் அல்குலாந் தேருந்திச் - சூழொளிய

65. கொங்கைமாப் பொங்கக் கொழுநர் மனங்கவர
அங்கம் பொருதசைந்த ஆயிழையார் - செங்கேழற்

66. பொற்கவசத் துள்ளால் மணிநீர் முகஞ்சேர்த்தி
நற்பெருங் கோலம் மிகப்புனைந்து - பொற்புடைய

67. பேதை முதலாகப் பேரிளம்பெண் ஈறாக
மாதரவர் சேர மகிழ்ந்தீண்டிச் - சோதிசேர்

68. சூளிகையுஞ் சூட்டுஞ் சுளிகையுஞ் சுட்டிகையும்
வாளிகையும் பொற்றோடும் மின்விலக - மாளிகையின்

69. மேலேறி நின்று தொழுவார் துயர்கொண்டு
மாலேறி நின்று மயங்குவார் - நூலேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70. தாமமே தந்து சடாதாரி நல்கானேல்
யாமமேல் எம்மை அடும்என்பார் - காமவேள்

71. ஆமென்பார் அன்றென்பார் ஐயுறுவார் கையெறிவார்
தாம்முன்னை நாணோடு சங்கிழப்பார் - பூமன்னும்

72. பொன்னரி மலையைப் பூண்பார்அப் பூண்கொண்டு
துன்னரி மாலையாச் சூடுவார் - முன்னம்

73. ஒருகண் எழுதிவிட்டு ஒன்றெழுதாது ஒடித்
தெருவம் புகுவார் திகைப்பார் - அருகிருந்த

74. கண்ணாடி மேற்பஞ்சு பெய்வார் கிளியென்று
பண்ணாடிச் சொற்பந்துக் குற்றுரைப்பார் அண்ணல்மேல்

75. கண்ணென்னும் மாசாலங் கோலிக் கருங்குழலார்
திண்ண நிறைத்தாழ் திறந்திட்டார் - ஒண்ணிறந்த

## பேதை

76. பேதைப் பருவம் பிழையாதான் வெண்மணலால்
தூதைச் சிறுசோறு அடுதொழிலாள் - தீதில்

77. இடையாலும் ஏக்கழுத்த மாட்டாள் நலஞ்சேர்
உடையாலும் உள்ளுருக்க கில்லாள் - நடையாலும்

78. கௌவைநோய் காளையரைச் செய்யாள் கதிர்முலைகள்
எவ்வநோய் செய்யும் தொழில்பூணாள் - செவ்வனேர்

79. நோக்கிலும் நோய்நோக்கம் நோக்காள் தன் செவ்வாயின்
வாக்கும் பிறர்மனத்தை வஞ்சியாள் - பூக்குழலும்

80. பாடவந் தோன்ற முடியாள் இளவேய்ந்தோள்
ஆடவர் தம்மை அயர்வுசெய்யாள் - நாடொறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

81. ஒன்றுரைத்து ஒன்றுன்னி ஒன்றுசெய் ஒன்றின்கண்
சென்ற மனத்தினளாம் சேயிழையாள் - நன்றாகத்

82. தாலி கழுத்தணிந்து சந்தனத்தால் மெய்பூசி
நீல அறுவை விரித்துடுத்துக் - கோலஞ்சேர்

83. பந்தரில் பாவைகொண் டாடும் இப்பாவைக்குத்
தந்தையார் என்றொருத்தி தான்வினவ - அந்தமில்சீர்

84. ஈசன் எரியாடி என்ன அவனையோர்
காய்சின மால்விடைமேற் கண்ணுற்றத் - தாய்சொன்ன

85. இக்கணக்கு நோக்காள் இவள்போல்வாள் காமன்நூல்
நற்கணக்கின் மேற்சிறிதே நாட்செய்தாள் - பொற்புடைய

## பெதும்பை

86. பேரொளிசேர் காட்சிப் பெதும்பைப் பிராயத்தாள்
காரொளிசேர் மஞ்ஞைக் கவின்இயலாள் - சீரொளிய

87. தாமரை ஒன்றின் இரண்டு குழையிரண்டு
காமருவி கெண்டையோர் செந்தொண்டை - தூமருவி

88. முத்த முரிவெஞ் சிலைசுட்டி செம்பவளம்
வைத்தது போலும் மதிமுகத்தாள் - ஒத்தமைந்த

89. கங்கணம் சேர்ந்திலங்கு கையாள் கதிர்மணியின்
கிங்கிணி சேர்ந்த திருந்தடியாள் - ஒண்கேழல்

90. அந்துகில் சூழ்ந்தசைந்த அல்குலாள் ஆய்பொதியில்
சந்தனந் தோய்ந்த தடந்தோளாள் - வந்து

91. திடரிட்ட திண்வரைக்கண் செய்த முலையாள்
கடல்பட்ட இன்னமுதம் அன்னாள் - மடல்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

92. மாலை வளாய குழலாள் மணம்நாறு
சேலை இளங்கிளிபோல் தூமொழியாள் - சாலவும்

93. வஞ்சனை செய்து மனங்கவரும் கண்ணுக்கு
அஞ்சனத்தை இட்டங்கு அழகாக்கி - எஞ்சா

94. மணியாரம் பூண்டொழி மெல்விரலிற் சேர்த்தி
அணியார் வளைதோள்மேல் மின்ன - மணியார்த்த

95. தூவெண் மணற்கொண்டு தோழியரும் தானுமாய்க்
காமன் உருவம் வரஎழுதிக் - காமன்

96. கருப்புச் சிலையும் மலரம்புத் தேரும்
ஒருப்பட்டு உடன்எழுதும் போழ்தில் - விருப்பூரும்

97. தேனமரும் கொன்றையந்தார்த் தீர்த்தன் சிவலோகன்
வானமால் ஏற்றின்மேல் வந்தணையத் - தானமர

98. நன்றறிவார் சொன்ன நலந்தோற்று நாண்தோற்று
நின்றறிவு தோற்று நிறைதோற்று - நன்றாகக்

99. கைவண்டுங் கண்வண்டும் ஓடக் கலைஓட
நெய்விண்ட பூங்குழலாள் நின்றொழிந்தாள் - மொய்கொண்ட

**மங்கை**

100. மங்கை யிடங்கடவா மாண்பினாள் வானிழிந்த
கங்கைச் சுழியனைய உந்தியாள் - தங்கிய

101. அங்கை கமலம் அடிகமலம் மான்நோக்கி
கொங்கை கமலம் முகங்கமலம் - பொங்கெழிலார்

102. இட்டிடையும் வஞ்சி இரும்பணைத்தோள் வேயெழிலார்
பட்டுடைய அல்குலுந் தேர்த்தட்டு - மட்டுவிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

103. கூந்தல் அறல்பவளம் செய்யவாய் அவ்வாயில்
ஏய்ந்த மணிமுறுவல் இன்முத்தம் - வாய்ந்தசீர்

104. வண்டு வளாய வளர்வா சிகைசுட்டிக்
கண்டி கழுத்திற் கவின்சேர்த்திக் - குண்டலங்கள்

105. காதுக்கு அணிந்து கனமே கலைந்திருத்தித்
தீதில் செழுங்கோலம் சித்திரித்து - மாதராள்

106. பொற்கூட்டிற் பூவையை வாங்கி அதனோடும்
சொற்கோட்டி கொண்டிருந்த ஏல்வைக்கண் - நற்கோட்டு

107. வெள்ளி விலங்கல்மேல் வீற்றிருந்த ஞாயிறுபோல்
ஒள்ளிய மால்விடையை மேல்கொண்டு - தெள்ளியநீர்

108. தாழும் சடையான் சடாமகுடம் தோன்றுதலும்
வாழுமே மம்மர் மனத்தளாய்ச் - சூழொளியான்

109. தார்நோக்கம் தன்தாரும் நோக்கும் அவனுடைய
ஏர்நோக்கும் தன்ன தெழில்நோக்கும் - பேரருளான்

110. தோள்நோக்கும் தன்தோளும் நோக்கும் அவன்மார்பின்
நீள்நோக்கம் வைத்து நெடிதுயிர்த்து - நாண்நோக்காது

111. உள்ளம் உருக ஒழியாத வேட்கையாம்
வெள்ளத் திடையழுந்தி வெய்துயிர்த்தாள் - ஒள்ளிய

## மடந்தை

112. தீந்தமிழின் தெய்வ வடிவாள் திருந்தியசீர்
வாய்ந்த மடந்தைப் பிராயத்தாள் - ஏய்ந்தசீர்

113. ஈசன் சிலையும் எழில்வான் பவளமும்
சேய்வலங்கை வேலுந் திரள்முத்தும் - பாசிலைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

114. வஞ்சியும் வேயும் வளர்தா மரைமொட்டும்
மஞ்சில்வரு மாமதிபோல் மண்டலமும் - எஞ்சாப்

115. புருவமும் செவ்வாயும் கண்ணும் எயிறும்
உருவ நுசுப்பும்மென்தோளும் - மருவினிய

116. கொங்கையும் வாண்முகமு மாக்கொண்டாள் கோலஞ்சேர்
பங்கயப் போதனைய சேவடியாள் - ஒண்கேழல்

117. வாழைத்தண் டன்ன குறங்கினாள் வாய்ந்தசீர்
ஆழித்தேர்த் தட்டனைய அல்குலாள் - ஊழித்

118. திருமதியம் மற்றொன்றாம் என்று முகத்தை
உருவுடைய நாண்மீன்சூழ்ந் தாற்போல் - பெருகொளிய

119. முத்தாரங் கண்டத்து அணிந்தாள் அணிகலங்கள்
மொய்த்தார வாரம் மிகப்பெருகி - வித்தகத்தால்

120. கள்ளும் கடாமும் கலவையுங் கைபோந்திட்டு
உள்ளும் புறமும் செறிவமைத்துத் - தெள்ளொளிய

121. காளிங்கம் சோதி கிடப்பத் தொடுத்தமைத்த
தாளிம்பத் தாமம் நுதல்சேர்த்தித் - தோளெங்கும்

122. தண்ணறுதம் சந்தனம் கொண்டு அப்பிச் சதிர்சாந்தை
வண்ணம் பெறமிசையே மட்டித்தாங்கு ஒண்ணுதலாள்

123. தன்னமர் தோழியர்கள் சூழத் தவிசேறிப்
பின்னுமோர் காமரம் யாழமைத்து - மன்னும்

124. விடவண்ணக் கண்டத்து வேதியன்மேல் இட்ட
மடல்வண்ணம் பாடும் பொழுதீண்டு - அடல்வல்ல

125. வேல்வல்லான் வில்வல்லான் மெல்லியலார்க்கு எஞ்ஞான்றும்
மால்வல்லான் ஊர்கின்ற மால்விடையின் - கோல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

126. மணியேறு கேட்டாங்கு நோக்குவாள் சால
அணியேறு தோளானைக் கண்டாங்கு - அணியார்ந்த

127. கோட்டி ஒழிய எழுந்து குழை முகத்தைக்
கோட்டி நுதல்சிவப்ப வாய்துலக்கி - நாட்டார்கள்

128. எல்லாருங் கண்டார் எனக்கடவுள் இங்காயம்
நல்லாய் படுமேல் படுமென்று - மெல்லவே

129. செல்ல லுறுஞ்சரணம் கம்பிக்கும் தன்னுறுநோய்
சொல்லலுறும் சொல்லி உடைசெறிக்கும் - நல்லாகம்

130. காணல் உறுங்கண்கள் நீர்மல்கும் காண்பார்முன்
நாணல் உறும்நெஞ்சம் ஒட்டாது - பூணாகம்

131. புல்லலுறும் அண்ணல்கை வாரானென்று இவ்வகையே
அல்லலுறும் அழுந்தும் ஆழ்துயரால் - மெல்லியலாள்

132. தன்னுருவம் பூங்கொன்றைத் தார்கொள்ளத் தான்கொன்றைப்
பொன்னுருவம் கொண்டு புலம்புற்றாள் - பின்னொருத்தி

## அரிவை

133. செங்கேழல் தாமரைபோல் சீறடியாள் தீதிலா
அங்கேழ் அரிவைப் பிராயத்தாள் - ஒண்கேழல்

134. திங்களுந் தாரகையும் வில்லுஞ் செழும்புயலும்
தங்கொளிசேர் செவ்வாயும் உண்மையால் - பொங்கொளிசேர்

135. மின்னார்வான் காட்டு முகவொளியாள் மெய்ம்மையே
தன்னாவார் இல்லாத் தகைமையாள் - எந்நாளும்

136. "இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்" பென்னும் - சொல்லாலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

137. அல்குற்கு மேகலையைச் சூழ்ந்தாள் அணிமுலைமேல்
மல்கிய சாந்தொடு பூண்புனைந்து - நல்கூர்

138. இடையிடையே உள்ளுருகக் கண்டாள் எழிலாளர்
நடைபெடை அன்னத்தை வென்றாள் - அடியினைமேல்

139. பாடகங் கொண்டு பரிசமைத்தாள் பன்மணிசேர்
சூடகம் முன்கை தொடர்வித்தாள் - கேடில்சீர்ப்

140. பொன்னரி மாலை தலைக்கணிந்து பூண்கொண்டு
மன்னுங் கழுத்தை மகிழ்வித்தாள் - பொன்னனாள்

141. இன்னிசை வீணையை வாங்கி இமையவர்தம்
அண்ணல்மேல் தானிட்ட ஆசையால் - முன்னமே

142. பாடல் தொடங்கும் பொழுதிற் பரஞ்சோதி
கேடிலா மால்விடைமேல் தோன்றுதலும் - கூடிய

143. இன்னிசையும் இப்பிறப்பும் பேணும் இருந்தமிழும்
மன்னிய வீணையுங் கைவிட்டுப் - பொன்னனையீர்

144. இன்றன்றே காண்பது எழில்நலம் கொள்ளேனேல்
நன்றன்றே பெண்மை நமக்கென்று - சென்றவன்தன்

145. ஒண்களபம் ஆடும் ஒளிவாள் முகத்திரண்டு
கண்களபம் ஆடுவபோல் கட்டுரைத்தும் - ஒண்கேழல்

146. கூந்தல் அவிழ்க்கும் முடிக்குங் கலைதிருத்தும்
காந்தம் திமிரும் முலையார்க்கும் - பூந்துகிலைச்

147. சூழும் அவிழ்க்கும் தொழும் அழும் சோர்துயருற்று
ஆழும் அழுந்தும் அயாவுயிர்க்கும் - சூழ் ஒளிய

148. அங்கை வளைதொழுது காத்தாள் கலைகாவாள்
நங்கை யிவளும் நலந்தோற்றாள் - அங்கொருத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிவை

149. ஆரா அமுதம் அவயவம் பெற்றனைய
சீரார் தெரிவைப் பிராயத்தாள் - ஓரா

150. மருளோசை இன்மழலை வாய்ச்சொலால் என்றும்
இருள்தீர் புலரியே ஒப்பாள் - அருளாலே

151. வெப்பம் இளையவர்கட்கு ஆக்குதலால் உச்சியோடு
ஒப்பமையக் கொள்ளும் உருவத்தாள் - வெப்பந்தீர்ந்து

152. அந்தளிர்போல் சேவடியும் அங்கையும் செம்மையால்
அந்திவான் காட்டும் அழகினாள் - அந்தமில்

153. சீரார் முகம்மதியம் ஆதலால் சேயிழையாள்
ஏரார் இரவின் எழில்கொண்டாள் - சீராரும்

154. கண்ணார் பயோதரமும் நுண்ணிடையும் உண்மையால்
தண்ணிளங் காரின் சவிகொண்டாள் - வண்ணஞ்சேர்

155. மாந்தளிர் மேனி முருக்கிதழ்வாய் ஆதலால்
வாய்ந்த இளவேனில் வண்மையாள் - மாந்தர்

156. அறிவுடையீர் நின்மின்கள் அல்லார்போம் என்று
பறையறைவ போலுஞ் சிலம்பு - முறைமையால்

157. சீரார் திருந்தடிமேல் சேர்த்தினாள் தேர்அல்குல்
ஓராது அகலல் உறாதென்று - சீராலே

158. அந்துகிலும் மேகலையும் சூழ்ந்தாள் அணிமுலைகள்
மைந்தர் மனங்கவரும் என்பதனால் - முந்துறவே

159. பூங்கச்சி னானில்அடையப் பூட்டுறீஇப் பொற்றொடியால்
காம்பொத்த தோளிணையைக் காப்பேவி - வாய்ந்தசீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

160. நற்கழுத்தை நல்லாரத் தான்மறைத்துக் காதுக்கு
விற்பகருங் குண்டலங்கள் மேவுவித்து - மைப்பகரும்

161. காவியங் கண்ணைக் கதந்தணிப்பாள் போலத்தன்
தாவிய அஞ்சனத்தை முன்னூட்டி - யாவரையும்

162. ஆகுலம் ஆக்கும் அழகினாள் அன்னமும்
கோகிலமும் போலுங் குணத்தினாள் - ஆகிப்

163. பலகருதிக் கட்டிக் கரியவாய்க் கோடி
அலர்சுமந்து கூழைய ஆகிக் - கலைகரந்து

164. உள்யாதும் இன்றிப் புறங்கமழ்ந்து கீழ்தாழ்ந்து
கள்ளாவி நாறுங் கருங்குழலாள் - தெள்ளொளிய

165. செங்கழுநீர்ப் பட்டுடுத்துச் செங்குங் குமம்எழுதி
அங்கழுநீர்த் தாமம் நுதல்சேர்த்திப் - பொங்கெழிலார்

166. பொற்கவற்றின் வெள்ளிப் பலகை மணிச்சூது
நற்கமைய நாட்டிப் பொரும்பொழுதில் - விற்பகிரும்

167. தோளான் நிலைபேறு தோற்றங்கே டாய்நின்ற
தாளான் சடாமகுடம் தோன்றுதலும் - விற்பகிரும்

168. நாணார் நடக்க நலத்தார்க்கு இடையில்லை
ஏணார் ஒழிக எழில்லொழிக - பேணும்

169. குலத்தார் அகன்றிடுக குற்றத்தார் வம்மின்
அலத்தீர் நினைமின் நீர் என்று - சொலற்கரிய

170. தேவாதி தேவன் சிவனாயில் தேன்கொன்றைப்
பூவாரலங்கல் அருளாது - போவானேல்

171. கண்டால் அறிவன் எனச்சொல்லிக் கைசோர்ந்து
வண்டார்பூங் கோதை வளந்தோற்றாள் - ஒண்டாய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பேரிளம்பெண்

172. பெண்ணரசாய்த் தோன்றிய பேரிளம் பெண்மையாள்
பண்ணமரும் இன்சொல் பணிமொழியாள் - மண்ணின்மேல்

173. கண்டுகேட் டுண்டு உயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே வுளவென்று - பண்டையோர்

174. கட்டுரையை மேம்படுத்தாள் கண்ணாடி மண்டலம்போல்
விட்டிலங்கு நல்லுகிர்சேர் மெல்விரலாள் கட்டரவம்

175. அஞ்சப் பரந்தகன்ற அல்குலாள் ஆய்நலத்த
வஞ்சிக் கொடிநுடங்கும் நுண்ணிடையாள் - எஞ்சாத

176. பொற்செப்பு குண்டு முகடு மணியழுத்தி
வைத்தன போல வளர்ந்தேந்தி - ஒத்துச்

177. சுணங்கும் திதலையும் சூழ்போந்து கண்டார்க்கு
அணங்கும் அமுதமுமாய்த் தோன்றி - இணங்கொத்த

178. கொங்கையாள் கோலங்கட்கு எல்லாமோர் கோலமாம்
நங்கையாள் நாகிளவேய்த் தோளினாள் - அங்கையால்

179. காந்தட் குலம்பழித்தாள் காமவேள் காதலாள்
சாந்தம் இலங்கும் அகலத்தாள் - வாய்ந்துடனே

180. ஏய்ந்து குவிந்து திரண்டு மறிந்திருபால்
தேய்ந்து துடித்த செழும்பவளம் - காய்ந்திலங்கி

181. முத்தமுந் தேனும் பொதிந்து முனிவரையும்
சித்தந் திறைகொள்ளும் செவ்வாயாள் - ஒத்து

182. வரிகிடந்து அஞ்சனம் ஆடி மணிகள்
உருவம் நடுவுடைய வாகிப் - பெருகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

183. தண்ணங் கயலுஞ் சலஞ்சலமுந் தோன்றுதலால்
வண்ணங் கடலனைய வாட்கண்ணாள் - ஒண்ணிறத்த

184. குண்டலஞ்சேர் காதினாள் கோலக் குளிர்மதிய
மண்டலமே போலும் மதிமுகத்தாள் - வண்டலம்ப

185. யோசனை நாறு குழலாள் ஒளிநுதல்மேல்
வாசிகை கொண்டு வடிவமைத்தாள் - மாசில்சீர்ப்

186. பாதாதி கேசம் பழிப்பிலாள் பாங்கமைந்த
சீதாரி கொண்டுதன் மெய்புகைத்தாள் - மாதார்ந்த

187. பண்கவருஞ் சொல்லார்பல் லாண்டேத்தப் பாயொளிசேர்
வெண்கவரி வெள்ளத் திடையிருந்து - ஒண்கேழற்

188. கண்ணவனை அல்லாது காணா செவிஅவனது
எண்ணருஞ்சீ அல்லது இசைகொள்ளா - அண்ணல்

189. கழலடி அல்லது கைதொழா அ∴தான்
றழலங்கைக் கொண்டான்மாட் டன்பென் - றெழிலுடைய

190. வெண்பா விரித்துரைக்கும் போழ்தில் விளங்கொளிசேர்
கண்பாவு நெற்றிக் கறைக்கண்டன் - விண்பால்

191. அரியரணம் செற்றாங்கு அலைபுனலும் பாம்பும்
புரிசடைமேல் வைத்த புராணன் - எரியிரவில்

192. ஆடும் இறைவன் அமரர்குழாம் தற்சூழ
மாட மறுகில் வரக்கண்டு - கேடில்சீர்

193. வண்ணச் சிலம்படி மாதரார் தாமுண்ட
கண்ணெச்சில் எம்மையே ஊட்டுவான் அண்ணலே

194. வந்தாய் வளைகவர்ந்தாய் மாலும் அருந்துயரும்
தந்தாய் இதுவோ தகவென்று - நொந்தாள்போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

195. கட்டுரைத்துக் கைசோர்ந்து அகமுருகி மெய்வெளுந்து
மட்டிவரும் பூங்கோதை மால்கொண்டாள் - கொட்டினர்

196. பண்ணாரும் இன்சொற் பணைப்பெருந்தோள் செந்துவர்வாப்
பெண்ஆர வாரம் பெரிதன்றே - விண்ஓங்கி

197. மஞ்சடையும் நீள்குடுமி வாள்நிலா வீற்றிருந்த
செஞ்சடையான் போந்த தெரு. 300

## காப்பு

பெண்ணீர்மை காமின் பெருந்தோள் இணைகாமின்
உண்ணீர்மை மேகலையும் உள்படுமின் - தெண்ணீரக்
காரேறு கொன்றையத் தார்க் காவாலி கட்டங்கன்
ஊரேறு போந்த துலா. 301

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரதேவ நாயனார் அருளிய

# கயிலை பாதிகாளத்தி பாதித் திருவந்தாதி (9)

திருச்சிற்றம்பலம்

## கயிலை

01. சொல்லும் பொருளுமே தூத்திரியும் நெய்யுமா
நல்லிடுஞ்சல் என்னுடைய நாவாகச் - சொல்லரிய
வெண்பா விளக்கா வியன்கயிலை மேலிருந்த
பெண்பாகர்கு ஏற்றினேன் பெற்று. 302

## காளத்தி

02 பெற்ற பயனிதுவே அன்றே பிறந்தியான்
கற்றவர்கள் ஏத்துஞ்சீர்க் காளத்திக் - கொற்றவர்க்குத்
தோளாகத் தாடரவம் சூழ்ந்தணிந்த அம்மானுக்கு
ஆளாகப் பெற்றேன் அடைந்து. 303

## கயிலை

03. அடைந்துய்ம்மின் அம்மானை உம்மாவி தன்னைக்
குடைந்துண்ண எண்ணிய வெங்கூற்றம் - குடைந்துநும்
கண்ணுள்ளே பார்க்கும் பொழுது கயிலாயத்து
அண்ணலே கண்டீர் அரண். 304

## காளத்தி

04. அரண் ஒருமூன்றும் ஆரழலாய் வீழ
முரணம்பு கோத்த முதல்வன் சரணமே
காணுமால் உற்றவன்தன் காளத்தி கைதொழுது
பேணுமால் உள்ளம் பெரிது. 305

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கயிலை

05. பெரியவர்கா ணீர்என் உள்ளத்தின் பெற்றி
தெரிவரிய தேவாதி தேவன் - பெரிதும்
திருத்தக்கோர் ஏத்தும் திருக்கயிலைக் கோனை
இருக்கத்தான் போந்தது இடம். 306

### காளத்தி

06. இடப்பாகம் நீள்கோட்டு இமவான் பயந்த
மடப்பாவை தன்வடிவே ஆனால் - விடப்பாற்
கருவடிசேர் கண்டத்தெம் காளத்தி ஆள்வார்க்கு
ஒருவடிவே அன்றால் உரு. 307

### கயிலை

07. உருவுபலகொண்டு உணர்வரிதாய் நிற்கும்
ஒருவன் ஒருபால் இருக்கை - மருவினிய
பூக்கையிற் கொண்டு எப்பொழுதும் புத்தேளிர் வந்திறைஞ்சு
மாக்கயிலை என்னும் மலை. 308

### காளத்தி

08. மலைவரும்போல் வானவருட் தானவரும் எல்லாம்
அலைகடல்வாய் நஞ்செழல்கண் டஞ்சி - நிலைதளரக்
கண்டமையால் நண்சாரல் காளத்தி யாள்வார்நஞ்சு
சுண்டமையால் உண்டிவ் வுலகு. 309

### கயிலை

09. உலகம் அனைத்தினுக்கும் ஒண்ணுதல்மேல் இட்ட
திலகம் எனப்பெறினும் சீசீ - இலகியசீர்
ஈசாதிருக்கோயிலை எம்பெருமான் என்றென்றே
பேசாது இருப்பார் பிறப்பு. 310

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளத்தி

10. பிறப்புடையார் கற்றோர் பெருஞ்செல்வர் மற்றும்
சிறப்புடையர் ஆனாலும் சீசீ - இறப்பில்
கடியார் நறுஞ்சோலைக் காளத்தி யாள்வார்
அடியாரைப் பேணா தவர். 311

கயிலை

11. அவரும் பிறந்தவராய்ப் போவார்கொல் ஆவி
எவரும் தொழுதேத்தும் எந்தை - சிவமன்னு
தேக்குவார் சோலைத் திருக்கயிலை ஏத்தாதே
போக்குவார் வாளா பொழுது. 312

காளத்தி

12. வாளா பொழுது கழிக்கின்றார் மானுடவர்
கேளார்போல் அந்தோ குறிபட்டார் - கீளாடை
அண்ணற்கு அணுக்கராய்க் காளத்தி யுள்நின்ற
கண்ணப்பர் ஆவார் கதை. 313

கயிலை

13. கதையிலே கேளீர் கயிலாயம் நோக்கிப்
புதையிருட்கண் மாலோடும் போகிக் - சிதையாச்சீர்த்
தீர்த்தன்பால் பாசுபதம் பெற்றுச் செருக்களத்தில்
பார்த்தன்போர் வென்றிலனோ பண்டு. 314

காளத்தி

14. பண்டு தொடங்கியும் பாவித்தும் நின்கழற்கே
தொண்டு படுவான் தொடர்வேனைக் - கண்டு கொண்டு
ஆளத் தயாவுண்டோ இல்லையோ சொல்லாயே
காளத்தி யாயுன் கருத்து. 315

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கயிலை

15. கருத்துக்குச் சேயையாய்க் காண்தக்கோர் காண
இருத்தி திருக்கயிலை என்றால் - ஒருத்தர்
அறிவான் உறுவார்க்கு அறியுமா றுண்டோ
நெறிவார் சடையாய் நிலை. 316

### காளத்தி

16. நிலையில் பிறவி நெடுஞ்சுழியிற்பட்டுத்
தலைவ தடுமாறு கின்றேன் - தொலைவின்றிப்
போந்தேறக் கைதாராய் காளத்திப் புத்தேளிர்
வேந்தேயிப் பாசத்தை விட்டு. 317

### கயிலை

17. பாசத்தை விட்டு நின் பாதத்தின் கீழேயென்
நேசத்தை வைக்க நினைகண்டாய் - பாசத்தை
நீக்குமா வல்ல கயிலாயா நீ என்னைக்
காக்குமாறு இத்தனையே காண். 318

### காளத்தி

18. காணாது அலக்கின்றார் வானோர்கள் காளத்திப்
பூணாத மார்பன்தன் பொற்பாதம் - நாணாதே
கண்டிடுவான் யானிருந்தேன் காணீர் கடல்நஞ்சை
உண்டிடுவான் தன்னை ஒருங்கு. 319

### கயிலை

19. ஒருங்கா துடனேநின்று ஓர்ஐவர் எம்மை
நெருங்காமல் நித்தம் ஒருகால் - நெருங்கிக்
கருங்கலோங் கும்பல் கயிலாயம் மேயான்
வருங்கொலோ நம்பால் மதித்து. 320

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காளத்தி

20 நம்பால் மதித்துறையும் காளத்தி நண்ணாதே
வம்பார் மலர்தூய் வணங்காதே - நம்பாநின்
சீலங்கள் ஏத்தாதே தீவினையோன் யானிருந்தேன்
காலங்கள் போன கழிந்து. 321

## கயிலை

21. கழிந்த கழிகிலாய் நெஞ்சே கழியாது
ஒழிந்தநாள் மேற்பட்டு உயர்ந்தோர் - மொழிந்தசீர்க்
கண்ணுதலான் எந்தை கயிலாய மால்வரையே
நண்ணுதலாம் நன்மை நமக்கு. 322

## காளத்தி

22. நமக்கிசைந்த வாநாமும் ஏத்தினால் நம்பர்
தமக்கழகு தாமே அறிவர் - அமைப்பொதும்பிற்
கல்லவா நீடருவிக் காளத்தி ஆள்வாரை
வல்லவா நெஞ்சமே வாழ்த்து. 323

## கயிலை

23. வாழ்த்துவாய் வாழ்த்தாது ஒழிவாய் மறுசுழி யிட்டு
ஆழ்த்துவாய் அ்.தறிவாய் நீயன்றே - யாழ்த்தகைய
வண்டார் பொழிற்கயிலை வாழ்கென்று இருப்பதே
கண்டாய் அடியேன் கடன். 324

## காளத்தி

24. கடநாகம் ஊடாடும் காளத்திக் கோனைக்
கடனாகக் கைதொழுவார்க்கு இல்லை - இடம் நாடி
இந்நாட்டிற் கேவந்திங்கு ஈண்டிற்றுகுக் கொண்டுபோய்
அந்நாட்டில் உண்டுழலு மாறு. 325

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கயிலை

25. மாறிப் பிறந்து வழியிடை ஆற்றிடை
ஏறி இழியும் இதுவல்லால் - தேறித்
திருக்கயிலை ஏத்தீரேல் சேமத்தால் யார்க்கும்
இருக்கையிலை கண்டீர் இனிது. 326

### காளத்தி

26. இனிதே பிறவி இனமரங்கள் ஏறிக்
கனிதேர் கடுவன்கள் தம்மில் - முனிவாய்ப்
பிணங்கி வருந் தண்சாரல் காளத்திபேணி
வணங்கவல்ல ராயின் மகிழ்ந்து. 327

### கயிலை

27. மகிழ்ந்துவரும் வண்கொன்னறை மேலே மனமாய்
நெகிழ்ந்து நெகிழ்ந்துள்ளே நெக்குத் - திகழ்ந்திலங்கும்
விண்ணுறங்கா ஓங்கும் வியன்கலை மேயாயென்
பெண்ணுறங்காள் என்செய்கேன் பேசு. 328

### காளத்தி

28. பேசும் பரிசறியாள் பேதை பிறர்க்கெல்லாம்
ஏசும் பரிசானாள் ஏபாவம் - மாசுனை நீர்க்
காம்பை அலைத்து ஆலிக்கும் காளத்தி என்றென்று
பூம்பயலை மெய்ம்முழுதும் போர்த்து. 329

### கயிலை

29. போர்த்த களிற்றுரியும் பூண்ட பொறியரவும்
தீர்த்த மகளிருந்த செஞ்சடையும் - மூர்த்தி
குயிலாய மென்மொழியாள் கூறாய வாறும்
கயிலாயா யான் காணக் காட்டு. 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காளத்தி

30. காட்டில் நடமாடிக் கங்காள ராகிப்போய்
நாட்டிற் பலிதிரிந்து நாடோறும் - ஓட்டுண்பார்
ஆனாலும் என்கொலோ காளத்தி யாள்வாரை
வானோர் வணங்குமா வந்து. 331

## கயிலை

31. வந்தமரர் ஏத்தும் மடைக்கூழும் வார்சடைமேல்
கொந்தவிழும் மாலை கொடுத்தார்கொல் - வந்தித்து
வாலுகுத்த வண்கயிலைக் கோனார்தம் மாமுடிமேல்
பாலுகுத்த மாணிக்குப் பண்டு. 332

## காளத்தி

32. பண்டிதுவே அன்றாயின் கேளீர் கொல் பல்சருகு
கொண்டிலிங்கத் தும்பிநூற் கூடிழைப்பக் - கண்டு
நலந்திக் கெலாம் ஏத்தும் காளத்தி நாதர்
சிலந்திக்குச் செய்த சிறப்பு. 333

## கயிலை

33. செய்த சிறப்பெண்ணில் எங்குலக்கும் சென்றடைந்து
கைதொழுவார்க்கு எங்கள் கயிலாயர் - நோய்தளவில்
காலற்காய்ந் தார்அன்றே காணீர் கழல்தொழுத
பாலற்கா அன்று பரிந்து. 334

## காளத்தி

34. பரிந்துரைப்பார் சொற்கேளாள் எம்பெருமான் பாதம்
பிரிந்திருக்க கில்லாமை பேசும் - புரிந்தமரர்
நாதாவா காளத்தி நம்பாவா என்றென்று
மாதவா வுற்ற மயல். 335

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கயிலை

35. மயலைத் தவிர்க்க நீவாராய் ஒரு மூன்று
எயிலைப் பொடியாக எய்தாய் - கயிலைப்
பருப்பதவா நின்னுடைய பாதத்தின் கீழே
இருப்பதவி உற்றான் இவள். 336

### காளத்தி

36. இவளுக்கு நல்லவாறு எண்ணுதிரேல் இன்றே
தவளப் பொடியிவள்மேல் சாத்தி - இவளுக்குக்
காட்டுமின்கள் காளத்தி காட்டிக் கமழ்கொன்றை
சூட்டுமின்கள் தீரும் துயர். 337

### கயிலை

37. துயர்க்கெலாம் கூடாய தோற்குரம்பை புக்கு
மயக்கில் வழிகாண மாட்டேன் - வியற்கொடும்போர்
ஏற்றானே வண்கயிலை எம்மானே என்கொலோ
மேற்றான் இதற்கு விளைவு. 338

### காளத்தி

38. விளையும் வினையரவின் வெப்பவிடத்தைக்
களைமினோ காளத்தி ஆள்வார் - வளைவில்
திருந்தியசீர் ஈசன் திருநாமம் என்னும்
மருந்தினை நீர் வாயிலே வைத்து. 339

### கயிலை

39. வாயிலே வைக்கும் அளவில் மருந்தாகித்
தீயபிறவிநோய் தீர்க்குமே - தூயவே
கம்பெருமா தேவியொடு மன்னு கயிலாயத்து
எம்பெருமான் ஓரஅஞ் செழுத்து. 340

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காளத்தி

40. அஞ்செழுத்தும் கண்டீர் அருமறைகள் ஆவனவும்
அஞ்செழுத்தும் கற்க அணித்தாகும் - நஞ்சவித்த
காளத்தியார் யார்க்கும் காண்டற்கு அரிதாய்ப் போய்
நீளத்தே நின்ற நெறி. 341

### கயிலை

41. நெறிவார் சடையாய் நிலையின்மை நீயொன்று
அறியாய் கொல் அந்தோ அயர்ந்தாள் - நெறியிற்
கனைத்தருவி தூங்கும் கயிலாயா நின்னை
நினைத்தருவி கண்சோர நின்று. 342

### காளத்தி

42. நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும்யாம்
என்றும் நினைந்தாலும் என் கொலோ - சென்றுதன்
தாள்வா னவர் இறைஞ்சும் தண்சாரல் காளத்தி
ஆள்வான் அருளாத வாறு. 343

### கயிலை

43. அருளாத வாறுண்டே யார்க்கேனும் ஆக
இருளார் கறைமிடற்றெம் ஈசன் - பொருளாய்ந்து
மெய்ம்மையே உன்னில் வியன்கயிலை மேயோன்வந்து
இம்மையே தீர்க்கும் இடர். 344

### காளத்தி

44. இடரீர் உமக்கோர் இடம்நாடிக் கொண்டு
நடவீரோ காலத்தால் நாங்கள் - கடல்வாய்க்
கருப்பட்டோங்கு ஒண்முகில்சேர் காளத்தி காண
ஒருப்பட்டோம் கண்டீர் உணர்ந்து. 345

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கயிலை

45. உணருங்கால் ஒன்றை உருத்தெரியக் காட்டாய்
புணருங்கால் ஆரமுதே போலும் - இணரில்
கணியவாம் சோலைக் கயிலாயம் மேயாய்
இனியவா காண்நின் இயல்பு. 346

### காளத்தி

46. நின்னியல்பை யாரே அறிவார் நினையுங்கால்
மன்னியசீர்க் காளத்தி மன்னவனே - நின்னில்
வெளிப்படுவது ஏழுலகும் மீண்டே ஒருகால்
ஒளிப்பதுவும் ஆனால் உரை. 347

### கயிலை

47. உரையும் பொருளும் உடலும் உயிரும்
விரையும் மலரும்போல் விம்மிப் - புரையின்றிச்
சென்றவாறு ஓங்கும் திருக்கயிலை எம்பெருமான்
நின்றவாறு எங்கும் நிறைந்து. 348

### காளத்தி

48. நிறைந்தெங்கும் நீயேயாய் நின்றாலும் ஒன்றின்
மறைந்தைப் புலன்காண வாராய் - சிறந்த
கணியாரும1 தண்சாரல் காளத்தி ஆள்வாய்
பணியாயால் என்முன் பரிசு. 349

### கயிலை

49. பரிசறியேன் பற்றிலேன் கற்றிலேன் முற்றும்
கரியுரியாய் பாதமே கண்டாய் - திரியும்
புரம்மாளச் செற்றவனே பொற்கயிலை மன்னும்
பரமா அடியேற்குப் பற்று. 350

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காளத்தி

50. பற்றாவான் எவ்வுயிர்க்கும் எந்தை பசுபதியே
முற்றா வெண் திங்கள் முளைசூடி - வற்றாவாம்
கங்கைசேர் செஞ்சடையான் காளத்தி யுள்நின்ற
மங்கைசேர் பாகத்து மன். 351

### கயிலை

51. மன்னா கயிலாயா மாமுத்தம் மாணிக்கம்
பொன்னார மாக்கொண்டு பூணாதே - எந்நாளும்
மின்செய்வார் செஞ்சடையாய் வெள்ளெலும்பு பூண்கின்றது
என்செய்வான் எந்தாய் இயம்பு. 352

### காளத்தி

52. இயம்பாய் மடநெஞ்சே ஏனோர்பால் என்ன
பயம்பார்த்துப் பற்றுவான் உற்றாய் - புயம்பாம்பால்
ஆர்த்தானே காளத்தி அம்மானே என்றென்றே
ஏத்தாதே வாளா இருந்து. 353

### கயிலை

53. இருந்தவா காணீர் இதுவென்ன மாயம்
அருந்தண் கயிலாயத்து அண்ணல் - வருந்திப்போய்த்
தானாளும் பிச்சை புகும்போலும் தன்னடியார்
வானாள மண்ணாள வைத்து. 354

### காளத்தி

54. வைத்த இருநிதியே என்னுடைய வாழ்முதலே
நித்திலமே காளத்தி நீள்சுடரே - மொய்த்தொளிசேர்
அக்காலத்து ஆசை அடிநாயேன் காணுங்கால்
எக்காலத்து எப்பிறவி யான். 355

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கயிலை

55. யானென்று தானென்று இரண்டில்லை என்பதனை
யானென்றும் கொண்டிருப்பன் ஆனாலும் - தேனுண்டு
அளிகள் தாம் பாடும் அகன்கயிலை மேயான்
தெளிகொடான் மாயங்கள் செய்து. 356

## காளத்தி

56. மாயங்கள் செய்தைவர் சொன்ன வழிநின்று
காயங்கொண் டாடல் கணக்கன்று - காயமே
நிற்பதன்று ஆதலால் காளத்தி நின்மலன் நீர்
கற்பதே கண்டீர் கணக்கு. 357

## கயிலை

57. கணக்கிட்டுக் கொண்டிருந்து காலனார் நம்மை
வணக்கி வலைப்படா முன்னம் - பிணக்கின்றிக்
காலத்தால் நெஞ்சே கயிலாயம் மேவியநற்
சூலத்தான் பாதம் தொழு. 358

## காளத்தி

58. தொழுவாள் பெறாளேதன் தோள்வளையும் தோற்றாள்
மழுவாளன் காளத்தி வாழ்த்தி - எழுவாள்
நறுமா மலர்க்கொன்றை நம்முன்னே நாளைப்
பெறுமாறு காணீர்என் பெண். 359

## கயிலை

59. பெண்ணின்று அயலார்முன் பேதைபிறைசூடி
கண்ணின்ற நெற்றிக் கயிலைக்கோன் - உண்ணின்ற
காமந்தான் மீதூர நைவாட்குன் கார்க்கொன்றைத்
தாமந்தாம் மற்றிவளைச் சார்ந்து. 360

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காளத்தி

60. சார்ந்தாரை எவ்விடத்தும் காப்பனவும் சார்ந்தன்பு
கூர்ந்தார்க்கு முத்தி கொடுப்பனவும் - கூர்ந்துள்ளே
மூளத் தியானிப்பார் முன்வந்து நிற்பனவும்
காளத்தி யார்தம் கழல். 361

## கயிலை

61. தங்கழல்கள் ஆர்ப்ப விளக்குச் சலன்சலனென்று
அங்கழல்கள் ஆர்ப்ப அனலேந்திப் - பொங்ககலத்து
ஆர்த்தாடு அரவம் அகன்கயிலை மேயாய்நீ
கூத்தாடல் மேவியவா கூறு. 362

## காளத்தி

62. கூறாய்நின் பொன்வாயால் கோலச் சிறுகிளியே
வேறாக வந்திருந்து மெல்லெனவே - நீல்தாவும்
மஞ்சடையும் நீள்குடுமி வாளருவிக் காளத்திச்
செஞ்சடைஎம் ஈசன் திறம். 363

## கயிலை

63. ஈசன் திறமே நினைந்துருகும் எம்மைப்போல்
மாசில் நிறைந்த மடக்குருகே - கூசி
இருத்தியால் நீயும் இருக்கயிலை மேயாற்கு
அருத்தியாய்க் காமுற்றா யாம். 364

## காளத்தி

64. காமுற்றா யாமன்றே காளத்தி யான்கழற்கே
யாமுற்ற துற்றாய் இருங்கடலே - யாமத்து
ஞாலத்து உயிரெல்லாம் கண்துஞ்சும் நள்ளிருள்கூர்
காலத்துந் துஞ்சாதுன் கண். 365

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கயிலை

65. கண்ணும் கருத்தும் கயிலாய ரேஎமக்கென்று
எண்ணி இருப்பன்யான் எப்பொழுதும் - நண்ணும்
பொறியாடு அரவசைத்த பூதப்படையார்
அறியார் கொல் நெஞ்சே யவர். 366

### காளத்தி

66. நெஞ்சே அவர்கண்டாய் நேரே நினைவாரை
அஞ்சேல் என்று ஆட்கொண்டு அருள்செய்வார் - நஞ்சேயும்
கண்டத்தார் காளத்தி ஆள்வார் கழல்கண்டீர்
அண்டத்தார் சூடும் அலர். 367

### கயிலை

67. அலரோன் நெடுமால் அமரர்கோன் மற்றும்
பலராய்ப் படைத்துக் காத்து ஆண்டு - புலர்காலத்து
ஒன்றாகி மீண்டு பலவாகி நிற்கின்றான்
குன்றாத சீர்க்கயிலைக் கோ. 368

### காளத்தி

68. கோத்த மலர்வாளி கொண்டு அநங்கன் காளத்திக்
கூத்தன்மேல் அன்று குறித்தெய்யப் - பார்த்தலுமே
பண்பொழியாக் கோபத்தீச் சுற்றுதலும் பற்றற்று
வெண்பொடியாய் வீழ்ந்திலனோ வெந்து. 369

### கயிலை

69. வெந்திறல்வேல் பார்த்ததற்கு அருள்செய்வான் வேண்டியோர்
செந்தறுகண் கேழல் திறம்புரிந்து - வந்தருளும்
கானவனாம் கோலம்யான் காணக் கயிலாய
வானவர்தங் கோமானே வா. 370

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காளத்தி

70. வாமான்தேர் வல்ல வயப்போர் விசயனைப்போல்
தாமார் உலகில் தவமுடையார் - தாம் யார்க்கும்
காண்டற்கு அரியராய்க் காளத்தி ஆள்வாரைத்
தீண்டத்தாம் பெற்றமையால் சென்று. 371

### கயிலை

71. சென்றிறைஞ்சும் வானோர்தம் சிந்தைக்கும் சேயராய்
என்றும் அடியாற்க்கு முன்னிற்பர் - நன்று
கனியவாம் சோலைக் கயிலாயம் மேயார்
இனியவா பத்தர்க்கு இவர். 372

### காளத்தி

72. இவரே முதல்தேவர் எல்லார்க்கும் மிக்கார்
இவரல்லர் என்றிருக்க வேண்டா - கவராதே
காதலித்து இன்று ஏத்துதிரேல் காளத்தி ஆள்வார் நீர்
ஆதரித்த தெய்வமே யாம். 373

### கயிலை

73. ஆமென்று நாளைஉள என்று வாழ்விலே
தாமின்று வீழ்கை தவமன்று - யாமென்றும்
இம்மாய வாழ்வினையே பேணாது இருங்கயிலை
அம்மானைச் சேர்வது அறிவு. 374

### காளத்தி

74. அறியாமலேனும் அறிந்தேனும் செய்து
செறிநின்ற தீவினைகள் எல்லாம் - நெறிநின்று
நான் முகில்சேர்காளத்தி நாதன் அடிபணிந்து
பொன்முகலி ஆடுதலும் போம். 375

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கயிலை

75. போகின்ற மாமுகிலே பொற்கயிலை வெற்பளவும்
ஏகின்று எமக்காக எம்பெருமான் - ஏகினால்
உண்ணப் படாநஞ்சம் உண்டாற்கு என் உள்ளூறுநோய்
விண்ணப்பம் செய்கண்டாய் வேறு. 376

### காளத்தி

76. வேறேயும் காக்கத் தகுவேனை மெல்லியலாள்
கூறேயும் காளத்திக் கொற்றவனே - ஏறேறும்
அன்பா அடியேற்கு அருளாது ஒழிகின்றது
என்பாவ மேயன்றோ இன்று. 377

### கயிலை

77. இன்று தொடங்கிப் பணிசெய்வேன் யானுனக்கு
என்றும் இளமதியே எம்பெருமான் - என்றுமென்
உட்காதல் உண்மை உயர்கயிலை மேயாற்குத்
திட்காதே விண்ணப்பம் செய். 378

### காளத்தி

78. செய்ய சடைமுடியென் செல்வனையான் கண்டெனது
கையறவும் உள்மெலிவும் யான்காட்டப் - பையவே
காரேறு பூஞ்சோலைக் காளத்தி ஆள்வார்தம்
பேரேறே இத்தெருவே போது. 379

### கயிலை

79. போது நெறியனவே பேசிநின் பொன்வாயால்
ஊதத் தருவன் ஒளிவண்டே - காதலால்
கண்டார் வணங்கும் கயிலாயத்து எம்பெருமான்
வண்தார் மோந்து என்குழற்கே வா. 380

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காளத்தி

80. வாவா மணிவாயால் மாவின் தளிர்கோதிக்
கூவாது இருந்த குயிற்பிள்ளாய் - ஓவாதே
பூமாம் பொழில்லுடுத்த பொன்மதில் சூழ் காளத்திக்
கோமான் வரஒருகாற் கூவு. 381

### கயிலை

81. கூவுதலும் பாற்கடலே சென்றவனைக் கூடுகஎன்று
ஏவினான் பொற்கயிலை எம்பெருமான் - மேவியசீர்
அன்பால் புலிக்காலன் பாலன்பால் ஆசையினால்
தன்பாற்பால் வேண்டுதலும் தான். 382

### காளத்தி

82. தானே உலகாள்வான் தான்கண்ட வாவழக்கம்
ஆனால்மற்று ஆரிதனை அன்றென்பார் - வானோர்
களைகண்டா னாய்நின்ற காளத்தி ஆள்வார்
வளை கொண்டார் மால்தந்தார் வந்து. 383

### கயிலை

83. வந்தோர் அரக்கனார் வண்கயிலை மால்வரையைத்
தந்தோள் வலியினையே தாம்கருதி - அந்தோ
இடந்தார் இடந்திட்டு இடார்க்கீழ் எலிபோல்
கிடந்தார் வலியெலாம் கெட்டு. 384

### காளத்தி

84. கெட்ட அரக்கரே வேதியரே கேளீர் கொல்
பட்டதுவும் ஒராது பண்டொருநாள் - ஒட்டக்
கலந்தரனார் காளத்தி யாள்வார்மேல் சென்று
சலந்தரனார் பட்டதுவும் தாம். 385

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கயிலை

85. தாம்பட்டதொன்றும் அறியார்கொல் சார்வரே
காம்புற்ற செந்நெற் கயிலைக் கோன் - பாம்புற்ற
ஆரத்தான் பத்தர்க்கு அருகணையார் காலனார்
தூரத்தே போவார் தொழுது. 386

### காளத்தி

86. தொழுது நமனுந்தன் தூதுவர்க்குச் சொல்லும்
வழுவில்சீர்க் காளத்தி மன்னன் - பழுதிலாப்
பத்தர்களைக் கண்டால் பணிந்தகலப் போமின்கண்
எத்தனையும் சேய்த்தாக என்று. 387

### கயிலை

87. வென்றைந்தும் காமாதி வேரறுத்து மெல்லவே
ஒன்ற நினைதிரேல் ஒன்றலாம் - சென்றங்கை
மானுடையான் என்னை உடையான் வடகயிலை
தானுடையான் தன்னுடைய தாள். 388

### காளத்தி

88. தாளொன்றால் பாதாளம் ஊடுருவத் தண்விசும்பில்
தாளொன்றால் அண்டங் கடந்துருவித் - தோளென்றால்
திக்கனைத்தும் போர்க்குந் திறற்காளி காளத்தி
நக்கனைத்தான் கண்ட நடம். 389

### கயிலை

89. நடமாடும் சங்கரன்தாள் நான்முகனும் காணான்
படமாடு பாம்பணையான் காணான் - விடமேவுங்
காரேறு கண்டன் கயிலாயன் தன்உருவை
யாரே அறிவார் இசைந்து. 390

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### காளத்தி

90. இசையுந்தம் கோலத்தை யான்காண வேண்டி
வசையில்சீர்க் காளத்தி மன்னன் - அசைவின்றிக்
காட்டுமேல் காட்டிக் லந்தென்னைத் தன்னோடும்
கூட்டுமேல் கூடலே கூடு. 391

### கயிலை

91. கூடியிருந்து பிறர் செய்யும் குற்றங்கள்
நாடித்தம் குற்றங்கள் நாடாதே - வாடி
வடகயிலை யேத்தாதே வாழ்ந்திடுவான் வேண்டில்
அடகு அயில ஆரமுதை விட்டு. 392

### காளத்தி

92. விட்டாவி போக உடல் கிடந்து வெந்தீயில்
பட்டாங்கு வேமாறு பார்த்திருந்தும் - ஒட்டாதாம்
கள்ளலைக்கும் பூஞ்சோலைக் காளத்தி யுள்நின்ற
வள்ளலைச் சென் றேத்த மனம். 393

### கயிலை

93. மனமுற்றும் மையலாய் மாதரார் தங்கள்
கனமுற்றும் காமத்தே வீழ்வர் - புனமுற்று
இனக்குறவர் ஏத்தும் இருங்கயிலை மேயான்
தனக்குறவு செய்கலார் தாழ்ந்து. 394

### காளத்தி

94. தாழ்ந்த சடையும் தவளத் திருநீறும்
சூழ்ந்த புலியதளும் சூழ்அரவம் - சேர்ந்து
நெருக்கிவானோர் இறைஞ்சும் காளத்தி யாள்வார்க்கு
இருக்குமா கோலங்கள் ஏற்று. 395

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கயிலை

95. ஏற்றின் மணியே அமையாதோ ஈர்ஞ்சடைமேல்
வீற்றிருந்த வெண்மதியும் வேண்டுமோ - ஆற்றருவி
கன்மேற்பட் டார்க்கும் கயிலாயத்து எம்பெருமான்
என்மேற் படைவிடுப்பாற்கு இங்கு. 396

### காளத்தி

96. ஈங்கேவா என்றருளி என்மனத்தில் எப்பொழுதும்
நீங்காமல் நீவந்து நின்றாலும் - தீங்கை
அடுகின்ற காளத்தி ஆள்வாய் நான்நல்ல
படுகின்ற வண்ணம் பணி. 397

### கயிலை

97. பணியாது முன்னிவனைப் பாவியேன் வாளா
கணியாது காலங் கழித்தேன் - அணியும்
கருமா மிடற்றெங் கயிலாயத்து எங்கள்
பெருமானது இல்லை பிழை. 398

### காளத்தி

98. பிழைப்புவாய்ப்பு ஒன்றறியேன் பித்தேறி னாற்போல்
அழைப்பதே கண்டாய் அடியேன் - அழைத்தாலும்
என்னா தரவேகொண்டு இன்பொழில்சூழ் காளத்தி
மன்னா தருவாய் வரம். 399

### கயிலை

99. வரமாவது எல்லாம் வடகயிலை மன்னும்
பரமாவுன் பாதார விந்தம் - சிரமார
ஏத்திடும்போ தாகவந்து என்மனத்தில் எப்பொழுதும்
வைத்திடு நீ வேண்டேன்யான் மற்று. 400

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காளத்தி

100. மற்றும் பலிபிதற்ற வேண்டாம் மடநெஞ்சே
கற்றைச் சடையண்ணல் காளத்தி - நெற்றிக்கண்
ஆராஅமுதின் திருநாமம் அஞ்செழுத்தும்
சோராமல் எப்பொழுதும் சொல். 401

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரதேவ நாயனார் அருளிய

## 2. திருஈங்கோய்மலை எழுபது (10)

திருச்சிற்றம்பலம்

01. அடியும் முடியும் அரியும் அயனும்
படியும் விசும்பும் பாய்ந்துஏறி - நொடியுங்கால்
இன்னமுஎன அறியா ஈங்கோயே ஓங்காரம்
அன்னதென நின்றான் மலை. 402

02. அந்தஇள மாக்குழவி ஆயம் பிரிந்ததற்குக்
கொந்தவிழ்தேன் தோய்த்துக் குறமகளிர் - சந்தின்
இலைவளைக்கை யாற்கொடுக்கும் ஈங்கோயே மேரு
மலைவளைக்கை வில்லி மலை. 403

03. அம்பவள வாய்மகளிர் அம்மனைக்குத் தம்மனையைச்
செம்பவளம் தாஎன்னச் சீர்க்குறத்தி - கொம்பின்
இறுதலையி னால்கிளைக்கும் ஈங்கோயே நம்மேல்
மறுதலைநோய் தீர்ப்பான் மலை. 404

04. அரிகரியைக் கண்டஇடத்து அச்சலிப்பாய் ஓடப்
பிரிவரிய தன்பிடியைப் பேணிக் - கரிபெரிதும்
கையெடுத்து நீட்டிக் கதஞ்சிறக்கும் ஈங்கோயே
மையடுத்த கண்டன் மலை. 405

05. அரியும் உழுவையும் ஆளியுமே ஈண்டிப்
பரியிட்டுப் பன்மலர் கொண்டு ஏறிச் - சொரிய
எரியாடி கண்டுகக்கும் ஈங்கோயே கூற்றம்
திரியாமல் செற்றான் சிலம்பு. 406

06. ஆளி தொடர் அரிதொடர ஆங்குடனே
வாளிகொடு தொடரும் மாக்குறவர் - கோளின்
இடுசிலையி னால்புடைக்கும் ஈங்கோயே நம்மேல்
கொடுவினைகள் வீட்டுவிப்பான் குன்று. 407

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. இடுதினைதின் வேழம் கடியக் குறவர்
வெடிபடு வெங்கவண்கல் ஊன்ற - நெடுநெடென
நீண்டகழை முத்துதிர்க்கும் ஈங்கோயே ஏங்குமணி
பூண்ட கழையேறி பொருப்பு. 408

08. ஈன்ற குறமகளிர்க்கு ஏழை முதுகுறத்தி
நான்றகறிக் கேறசலை நற்கிழங்கு - ஊன்றவைத்து
என் அன்னை உண்ணென்று எடுத்துரைக்கும் ஈங்கோயே
மின்னன்ன செஞ்சடையான் வெற்பு. 409

09. ஈன்ற குழவிக்கு மந்தி இறுவரைமேல்
நான்ற நறவத்தைத் தான்நணுகித் - தோன்ற
விரலால் தேன்தோய்த்தூட்டும் ஈங்கோயே நம்மேல்
வரலாம் நோய் தீர்ப்பான் மலை. 410

10. உண்டிருந்த தேனை அறுபதங்கள் ஊடிப்போய்ப்
பண்டிருந்த யாழ்முலப் பைம்பொழில்வாய்க் - கண்டிருந்த
மாமயில்கள் ஆடி மருங்குவரும் ஈங்கோயே
பூமயிலி தாதை பொருப்பு. 411

11. ஊடிப் பிடிஉறங்க ஒண்கதலி வண்கனிகள்
நாடிக்களிறு நயந்தெடுத்துக் - கூடிக்
குணமருட்டிக் கொண்டாடும் ஈங்கோயே வானோர்
குணமருட்டும் கோளரவன் குன்று. 412

12. எய்யத் தொடுத்தோன் குறத்திநோக்கு ஏற்றதெனக்
கையில் கணைகளைந்து கன்னிமான் - பையப்போ
என்கின்ற பாவனைசெய் ஈங்கோயே தூங்கெயில்கள்
சென்றென்று வென்றான் சிலம்பு. 413

13. ஏழை இளமாதே என்னொடுநீ போதென்று
கூழை முதுவேடன் கொண்டுபோய் - வேழ
இனைக்குவால் வீட்டுவிக்கும் ஈங்கோயே நந்தம்
வினைக்குவால் வீட்டுவிப்பான் வெற்பு. 414

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. ஏனம் உழுதபுழுதி இனமணியைக்
கானவர்தம் மக்கள் கனலென்னக் - கூனல்
இறுக்கங் கதிர்வெதுப்பும் ஈங்கோயே நம்மேல்
மறுக்கங்கள் தீர்ப்பான் மலை. 415

15. ஏனங்கிளைத்த இனபவள மாமணிகள்
கானல் எரிபரப்பக் கண்டஞ்சி - யானை
இனமிரிய முல்லைநகும் ஈங்கோயே நம்மேல்
வினையிரியச் செற்றுகந்தான் வெற்பு. 416

16. ஒருகணையும் கேழல்உயிர் செகுத்துக் கையில்
இருகணையும் ஆனைமேல் எய்ய - அருகணையும்
ஆளரிதான் ஓட அரிவெருவும் ஈங்கோயே
கோளரிக்குங் காண்பரியான் குன்று. 417

17. ஓங்கிப் பரந்தெழுந்த ஒள்ளிலவந் தண்போதைத்
தூங்குவதோர் கொள்ளி எனக்கடுவன் - மூங்கில்
தழையிறுத்துக் கொண்டோச்சும் ஈங்கோயே சங்கக்
குழையிறுத்த காதுடையான் குன்று. 418

18. ஓடுமுகிலை உகிரால் இறவூன்றி
மாடுபுக வான்கை மிகமடுத்து - நீடருவி
மாச்சீயம் உண்டு மனங்களிக்கும் ஈங்கோயே
கோச்சீயம் காண்பரியான் குன்று. 419

19. கண்ட கனிநுகர்ந்த மந்தி கருஞ்சுனைநீர்
உண்டு குளிர்ந்திலஎன் றூடிப்போய்க் - கொண்டல்
இறைக்கீறி வாய்மடுக்கும் ஈங்கோயே நான்கு
மறைக்கீறு கண்டான் மலை. 420

20. கருங்களிற்றின் வெண்கொம்பால் கல்லுரல்வாய் நல்லார்
பெருந்தினைவெண் பிண்டி இடிப்ப - வருங்குறவன்
கைக்கொணரும் செந்தேன் கலந்துண்ணும் ஈங்கோயே
மைக்கொணரும் கண்டன் மலை. 421

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. கனைய பலாங்கனிகள் கல்லிலையர் தொக்க
நனைய கலத்துரத்தில் ஏந்தி - மனைகள்
வரவிரும்பி ஆய்பார்க்கும் ஈங்கோயே பாங்கார்
குருவரும்பு செஞ்சடையான் குன்று. 422

22. கடக்களிறு கண்வளரக் கார்நிறவண் டார்ப்பச்
சுடர்க் குழையார் பாட்டெழவு கேட்டு - மடக்கிளிகள்
கீதம் தெரிந்துரைக்கும் ஈங்கோயே ஆல்கீழ்நால்
வேதம் தெரிந்துரைப்பான் வெற்பு. 423

23. கறுத்தமுலைச் சூற்பிடிக்குக் கார்யானை சந்தம்
இறுத்துக்கை நீட்டும் ஈங்கோயே - செறுத்த
கடதடத்த தோலுரிவைக் காப்பமையப் போர்த்த
விடமிடற்றி னான்மருவும் வெற்பு. 424

24. கங்குல் இரைதேரும் காகோ தரங்கேழல்
கொம்பி னிடைக்கிடந்த கூர்மணியைப் - பொங்கி
உருமென்று புற்றடையும் ஈங்கோயே காமன்
வெருவொன்றக் கண்சிவந்தான் வெற்பு. 425

25. கலவிக் களிறசைந்த காற்றெங்கும் காணாது
இலைகைக்கொண் டேந்திக்கால் வீச - உலவிச்சென்று
ஒண்பிடிகாற் றேற்றுகக்கும் ஈங்கோயே பாங்காய
வெண்பொடிநீற் றான்மருவும் வெற்பு. 426

26. கன்னிப் பிடிமுதுகில் கப்பருவம் உட்பருகி
அன்னைக் குடிவர லாறஞ்சிப் - பின்னரே
ஏன்தருக்கி மாதவம் செய் ஈங்கோயே நீங்காத
மான்தரித்த கையான் மலை. 427

27. கள்ள முதுமறவர் காட்டகத்து மாவேட்டை
கொள்ளென்று அழைத்த குரல்கேட்டுத் - துள்ளி
இனக்கவலை பாய்ந்தோடும் ஈங்கோயே நந்தம்
மனக்கவலை தீர்ப்பான் மலை. 428

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. கல்லைப் புனம்ஏய்ந்து கார்க்கொன்றைத் தார்போர்த்துக்
கொல்லை எழுந்த கொழும் புறவின் - முல்லையங்கள்
பல்லரும்பு மொய்த்தீனும் ஈங்கோயே மூவெயிலும்
கொல்லரும்பக் கோல்கோத்தான் குன்று. 429

29. கல்லாக் குரங்கு பளிங்கிற் கனிகாட்ட
எல்லாக் குரங்கும் உடன் ஈண்டி - வல்லே
இருந்துகிரால் கல்கிளைக்கும் ஈங்கோயே மேனிப்
பொருந்தஅராப் பூண்டான் பொருப்பு. 430

30. கண்கொண்டு அவிர்மணியின் நாப்பண் கருங்கேழல்
வெண்கோடு வீழ்ந்த வியன்சாரல் - தண்கோடு
இளம்பிறைசேர் வான்கடுக்கும் ஈங்கோயே வேதம்
விளம்பிறைசேர் வான்கடுக்கும் வெற்பு. 431

31. காந்தளம் கைத்தலங்கள் காட்டக் களிமஞ்ஞை
கூந்தல் விரித்துடனே கூத்தாடச் - சாய்ந்திரங்கி
ஏர்க்கொன்றை பொன்கொடுக்கும் ஈங்கோயே செஞ்சடைமேல்
கார்க்கொன்றை ஒன்றான் கடறு. 432

32. குறமகளிர் கூடிக் கொழுந்தினைகள் குத்தி
நறவமாக் கஞ்சகங்கள் நாடிச் - சிறுகுறவர்
கைந்நீட்டி உண்ணக் களித்துவக்கும் ஈங்கோயே
மைந்நீட்டுங் கண்டன் மலை. 433

33. கூழை முதுமந்தி கோல்கொண்டு தேன்பாய
ஏழை இளமந்தி சென்றிருந்து - வாழை
இலையால்தேன் உண்டுவக்கும் ஈங்கோயே இஞ்சி
சிலையால்தான் செற்றான் சிலம்பு. 434

34. கொல்லை இளவேங்கைக் கொத்திறுத்துக் கொண்டுசுனை
மல்லைநீர் மஞ்சனமா நாட்டிக் கொண்டு - ஒல்லை
இருங்கைக் களிறேறும் ஈங்கோயே மேல்நோய்
வருங்கைக் களைவான் மலை. 435

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. கொவ்வைக் கனிவாய்க் குறமகளிர் கூந்தல்சேர்
கவ்வைக்கடி பிடிக்கும் காதன்மையால் - செவ்வை
எறித்தமலர் கொண்டு விடும் ஈங்கோயே அன்பர்
குறித்தவரம் தான் கொடுப்பான் குன்று. 436

36. கொடுவில் சிலைவேடர் கொல்லை புகாமல்
படுகுழிகள் கல்லுதல் பார்த் தஞ்சி - நெடுநாகம்
தண்டூன்றிச் செல்லுஞ்சீர் ஈங்கோயே தாழ்சடைமேல்
வண்டூன்றும் தாரான் மலை. 437

37. கோங்கின் அரும்பழித்த கொங்கைக்குறமகளிர்
வேங்கை மணிநீழல் விளையாடி - வேங்கை
வரவதனைக் கண்டிரியும் ஈங்கோயே தீங்கு
வரவதனைக் காப்பான் மலை. 438

38. சந்தனப்பூம் பைந்தழையைச் செந்தேனில் தோய்த்தியானை
மந்த மடப்பிடியின் வாய்க்கொடுப்ப - வந்ததன்
கண்களிக்கத் தான்களிக்கும் ஈங்கோயே தேங்காதே
விண்களிக்க நஞ்சுண்டான் வெற்பு. 439

39. சந்தின் இலையதனுள் தண்பிண்டி தேன்கலந்து
கொந்தியினி துண்ணக் குறமகளிர் - மந்தி
இளமகளிர் வாய்க்கொடுத்துண் ஈங்கோயே வெற்பின்
வளமகளிர் பாகன் மலை. 440

40. சாரல் குறத்தியர்கள் தண்மருப்பால் வெண்பிண்டி
சேரத் தருக்கி மதுக்கலந்து - வீரத்
தமர்இனிதா உண்ணுஞ்சீர் ஈங்கோயே இன்பக்
குமரன்முது தாதையார் குன்று. 441

41. தாய்ஓங்கித் தாமடரும் தண்சாரல் ஒண்கானம்
வேய்ஓங்கி முத்தம் எதிர்பிதுங்கித் - தீயோங்கிக்
கண்கன்றித் தீவிளைக்கும் ஈங்கோயே செஞ்சடைமேல்
வண்கொன்றைத் தாரான் வரை. 442

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. செடிமுட்டச் சிங்கத்தின் சீற்றத்திக்கு அஞ்சிப்
பிடியட்ட மாக்களிறு பேர்ந்து - கடம்முட்டி
என்னேசீ என்னுஞ்சீர் ஈங்கோயே ஏந்தழலிற்
பொன்னேர் அனையான் பொருப்பு. 443

43. சுனைநீடு தாமரையின் தாதளைந்து சோதிப்
புனைநீடு பொன்னிறத்த வண்டு - மனைநீடி
மன்னி மணம்புணரும் ஈங்கோயே மாமதியம்
சென்னி அணிந்தான் சிலம்பு. 444

44. செந்தினையின் வெண்பிண்டி பச்சைத்தே னால்குழைத்து
வந்தவிருந் தூட்டும் மணிக்குறத்தி - பந்தியாத்
தேக்கிலைகள் இட்டுச் சிறப்புரைக்கும் ஈங்கோயே
மாக்கலைகள் வைத்தான் மலை. 445

45. தடங்குடைந்த கொங்கைக் குறமகளிர் தங்கள்
இடம்புகுந்தங்கு இன்நறவம் மாந்தி - உடன்கலந்து
மாக்குரவை ஆடி மகிழ்ந்துவரும் ஈங்கோயே
கோக்குரவை யாடிகொழும் குன்று. 446

46. தாமரையின் தாள்தகைத்த தாமரைகள் தாள்தகையத்
தாமரையில் பாய்ந்துகளும் தண்புறவில் - தாமரையின்
ஈட்டம் புலிசிதறும் ஈங்கோயே எவ்வுயிர்க்கும்
வாட்டங்கள் தீர்ப்பான் மலை. 447

47. தெள்ளகட்ட பூஞ்சுனைய தாமரையின் தேமலர்வாய்
வள்ளவட்டப் பாழி மடலேறி - வெள்ளகட்ட
காராமை கண்படுக்கும் ஈங்கோயே வெங்கூற்றைச்
சேராமல் செற்றான் சிலம்பு. 448

48. தேன்பலவின் வான்சுளைகள் செம்முகத்த பைங்குரங்கு
தாள்கொணர்ந்து மக்கள் கையிற் கொடுத்து - வான்குணங்கள்
பாராட்டி யூட்டுஞ்சீர் ஈங்கோயே பாங்கமரர்
சீராட்ட நின்றான் சிலம்பு. 449

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. தேன்மருவு பூஞ்சுனைகள் புக்குச் செழுஞ்சந்தின்
கானமர்கற் பேரழுகு கண்குளிர - மேனின்று
அருவிகள்தாம் வந்திழியும் ஈங்கோயே வானோர்
வெருவுகடல் நஞ்சுண்டான் வெற்பு. 450

50 தோகை மயிலினங்கள் சூழ்ந்து மணிவரைமேல்
ஓகை செறிஆயத் தோடாட - நாகம்
இனவளையில் புக்கொளிக்கும் ஈங்கோயே நம்மேல்
வினைவளையச் செற்றுகந்தான் வெற்பு. 451

51. நறவம் நனிமாந்தி நள்கருட்கண் ஏனம்
இறவில் இயங்குவான் பார்த்துக் - குறவர்
இறைத்துவலை தைத்திருக்கும் ஈங்கோயே நங்கை
விரைத்துவலைச் செஞ்சடையான் வெற்பு. 452

52. நாக முழைநுழைந்த நாகம்போய் நல்வனத்தில்
நாகம் விழுங்க நடுக்குற்று - நாகந்தான்
மாக்கையால் மஞ்சுரிஞ்சும் ஈங்கோயே ஓங்கியசெந்
தீக்கையால் ஏந்தி சிலம்பு. 453

53. நாகங் களிறுநுங்க நல்உழுவை தாமரையின்
ஆகம்தழுவி அசைவெய்த - மேகம்
கருவிடைக் கண்நீர்சோரும் ஈங்கோயே ஓங்கு
பொருவிடைக்க ணூர்வான் பொருப்பு. 454

54. பணவநிலைப் புற்றின் பழஞ்சோற் றமலை
கணவன் இடந்திட்டகட்டி - உணவேண்டி
எண்கங்கை ஏற்றிருக்கும் ஈங்கோயே செஞ்சடைமேல்
வண்கங்கை ஏற்றான் மலை. 455

55. பன்றி பருக்கோட்டால் பாருழுத பைம்புழுதித்
தென்றிமணிகிடப்பத் தீயென்று - கன்றிக்
கரிவெருவிக் கான்படரும் ஈங்கோயே வானோர்
மருவரியான் மன்னும் மலை. 456

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. பாறைமிசைத் தன்நிழலைக் கண்டு பகடென்று
சீறி மருப்பொசித்த செம்முகமாத் - தேறிக்கொண்டு
எல்லே பிடியென்னும் ஈங்கோயே மூவெயிலும்
வில்லே கொடுவெகுண்டான் வெற்பு. 457

57. பிடிபிரிந்த வேழம் பெருந்திசைநான் கோடிப்
படிமுகிலைப் பல்காலும் பார்த்திட்டு - இடரா
இருமருப்பைக் கைகாட்டும் ஈங்கோயே வானோர்
குருவருட்குன் றாய்நின்றான் குன்று. 458

58. பொருத கரியின் மூரிமருப்பிற் போந்து
சொரிமுகத்தைத் தூநீரென்று எண்ணிக் - கருமந்தி
முக்கிவிக்கி நக்கிருக்கும் ஈங்கோயே மூவெயிலும்
திக்குகக்கச் செற்றான் சிலம்பு. 459

59. மறவெங் களிற்றின் மருப்புகுத்த முத்தம்
குறவர் சிறார் குடங்கைக் கொண்டு - நறவம்
இளவெயில்தீ அட்டுண்ணும் ஈங்கோயே மூன்று
வளவெயில்தீ யிட்டான் மலை. 460

60. மலைதிரிந்த மாக்குறவன் மான்கொணர நோக்கிச்
சிலைநுதலி சீறிச் சிலைத்துக் - கலைபிரிய
இம்மான் கொணர்தல் இழுக்கென்னும் ஈங்கோயே
மெய்ம்மான் புணர்ந்தகையான் வெற்பு. 461

61. மரைஅதளும் ஆடு மயிலிறகும் வேய்ந்த
புரைஇதணம் பூங்கொடியார் புக்கு - நுரைசிறந்த
இன்நறவுண்டு ஆடி இசைமுரலும் ஈங்கோயே
பொன்நிறவெண் ணீற்றான் பொருப்பு. 462

62. மலையர் கிளிகடிய மற்றப் புறமே
கலைகள் வருவனகள் கண்டு - சிலையை
இருந்தெடுத்துக் கோல்தெரியும் ஈங்கோயே மாதைப்
புரிந்திடத்துக் கொண்டான் பொருப்பு. 463

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63. மத்தக் கரிமுகத்தை வாளரிகள் பீறஒளிர்
முத்தம் பனிநிகர்க்கும் மொய்ம்பிற்றால் - அத்தகைய
ஏனற்புனம்நீடும் ஈங்கோயே தேங்குபுனல்
கூனற் பிறையணிந்தான் குன்று. 464

64. மந்தி இனங்கள் மணிவரையின் உச்சிமேல்
முந்தி இருந்து முறைமுறையே - நந்தி
அளைந்தாடி ஆலிக்கும் ஈங்கோயே கூற்றம்
வளைந்தோடச் செற்றான் மலை. 465

65. மந்தி மகஇனங்கள் வண்பலவின் ஒண்சுளைக்கண்
முந்திப் பறித்த முறியதனுள் - சிந்திப்போய்த்
தேனாறு பாயும்சீர் ஈங்கோயே செஞ்சடைமேல்
வானாறு வைத்தான் மலை. 466

66. முள்ஆர்ந்த வெள்இலவம் ஏறி வெறியாது
கள்ஆர்ந்த பூப்படியும் கார்மயில்தான் - ஒள்ளார்
எரிநடுவுள் பெண்கொடியார் ஏய்க்கும்ஈங் கோயே
புரிநெடுநூல் மார்பன் பொருப்பு. 467

67. வளர்ந்த இளங்கன்னி மாங்கொம்பின் கொங்கை
அளைந்து வடுப்படுப்பான் வேண்டி - இளந்தென்றல்
எல்லிப் புகநுழையும் ஈங்கோயே தீங்கருப்பு
வில்லிக்குக் கூற்றானான் வெற்பு. 468

68. வான மதிதடவல் உற்ற இளமந்தி
கான முதுவேயின் கண்ஏறித் - தானங்கு
இருந்துயரக் கைநீட்டும் ஈங்கோயே நம்மேல்
வருந்துயரம் தீர்ப்பான் மலை. 469

69. வேய்வனத்துள் யானை தினைகவர வேறிருந்து
காய்வனத்தே வேடன் கணைவிசைப்ப - வேயணைத்து
மாப்பிடிமுன் ஓட்டும் ஈங்கோயே மறைபரவும்
பூப்பிடிபொற் றாளன் பொருப்பு. 470

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70. வழகிதழ்க் காந்தள்மேல் வண்டிருப்ப ஒண்தீ
முழுகியது என்று அஞ்சிமுது மந்தி - பழகி
எழுந்தெழுந்து கைநெரிக்கும் ஈங்கோயே திங்கள்
கொழுத்தெழுந்த செஞ்சடையான் குன்று. 471

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரதேவ நாயனார் அருளிய

# திருவலஞ்சுழி மும்மணிக்கோவை (11)

திருச்சிற்றம்பலம்

## 1. ஆசிரியப்பா

வணங்குதும் வாழி நெஞ்சே புணர்ந்துடன்
பொருகடல் முகந்து கருமுகிற் கணம்நற்
படவர வொடுங்க மின்னிக் குடவரைப்
பொழிந்து கொழித்திழி அருவிகுணகடல்
மடுக்குங் காவிரி மடந்தை வார்புனல்
உடுத்த மணிநீர் வலஞ்சுழி
அணிநீர்க் கொன்றை அண்ணலது அடியே. 472

## 2. வெண்பா

அடிப்போது தந்தலைவைத்து அவ்வடிகள் உன்னிக்
கடிப்போது கைக்கொண்டார்கண்டார் - முடிப்போதா
வாணாகஞ்சூடும் வலஞ்சுழியான் வானோரும்
காணாத செம்பொற் கழல். 473

## 3. கட்டளைக் கலித்துறை

கழல்வண்ண மும்சடைக் கற்றையும்
மற்றவர் காணகில்லார்
தழல்வண்ணம் கண்டே தளர்ந்தார்
இருவரந் தாமரையின்
நிழல்வண்ணம் பொன்வண்ணம் நீர்நிற
வண்ணம் நெடியவண்ணம்
அழல்வண்ணம் முந்நீர் வலஞ்சுழி
ஆள்கின்ற அண்ணலையே. 474

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4. ஆசிரியப்பா

அண்ணலது பெருமை கண்டனம் கண்ணுதற்
கடவுள் மன்னிய தடமல்கு வலஞ்சுழிப்
பனிப்பொருட் பயந்து பல்லவம் பழிக்கும்
திகழொளி முறுவல் தேமொழிச் செவ்வாய்த்
திருந்திருங் குழலியைக் கண்டு
வருந்திஎன் உள்ளம் வந்தவப் போதே. 475

### 5. வெண்பா

போதெலாம் பூங்கொன்றை கொண்டிருந்த பூங்கொன்றைத்
தாதெலாம் தன்மேனித் தைவருமால் - தீதில்
மறைக்கண்டன் வானோன் வலஞ்சுழியான் சென்னிப்
பிறைக்கண்டம் கண்டணைந்த பெண். 476

### 6. கட்டளைக் கலித்துறை

பெண்கொண் டிருந்து வருந்துங்கொ
லாம்பெரு மான்திருமால்
வண்கொண்ட சோலை வலஞ்சுழி
யான்மதி சூடி நெற்றிக்
கண்கொண்ட கோபம் கலந்தன
போல்மின்னிக் கார்ப்புனத்துப்
பண்கொண்டு வண்டினம் பாடநின்று
ஆர்த்தன பன்முகிலே. 477

### 7. ஆசிரியப்பா

முகிற்கணம் முழங்க முனிந்த வேழம்
எயிற்றிடை அடக்கிய வெகுளி ஆற்ற
அணிநடை மடப்பிடி அருகுவந்து அணைதரும்
சாரல் தண்பொழில் அணைந்து சோரும்
தேனுகு தண்தழை செறிதரு வனத்தில்
சருவரி வாரல்எம் பெருமநீர் மல்கு
சடைமுடி ஒருவன் மருவிய வலஞ்சுழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிதிகழ் தோற்றத்து அங்கயத்து எழுந்த
மணிநீர்க் குவளை அன்ன
அணிநீர்க் கருங்கண் ஆயிழை பொருட்டே. 478

## 8. வெண்பா

பொருள்தக்கீர் சில்பலிக்கென்று இல்புகுந்தீ ரேனும்
அருள்தக்கீர் யாதும்ஊர் என்றேன் - மருள்தக்க
மாமறையம் என்றார் வலஞ்சுழிநம் வாழ்வென்றார்
தாம்மறைந்தார் காணேன்கைச் சங்கு. 479

## 9. கட்டளைக் கலித்துறை

சங்கம் புரளத் திரைசுமந்து
ஏறுங் கழியருகே
வங்கம் மலியும் துறையிடைக்
காண்டிர் வலஞ்சுழியாறு
அங்கம் புலன்ஐந்தும் ஆகிய
நான்மறை முக்கணக்கன்
பங்கன்று இருவர்க்கு ஒருவடி
வாகிய பாவையையே. 480

## 10. அகவல்

பாவை ஆடிய துறையும் பாவை
மருவொடு வளர்ந்த அன்னமும் மருவித்
திருவடி அடியேன் தீண்டிய திறனும்
கொடியேன் உளங் கொண்ட சூழலும் கள்ளக்
கருங்கண் போன்ற காவியும் நெருங்கி
அவளே போன்றது அன்றே தவளச்
சாம்பல் அம்பொடி சாந்தெனத் தைவந்து
தேம்பல் வெண்பிறை சென்னிமிசை வைத்த
வெள்ளேற் றுழவன் வீங்குபுனல் வலஞ்சுழி
வண்டினம் பாடுஞ் சோலைக்
கண்ட அம்மஅக் கடிபொழில் தானே. 481

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 11. வெண்பா

தானேறும் ஆனேறு கைதொழேன் தன்சடைமேல்
தேனேறு கொன்றைத் திறம்பேசேன் - வானேறு
மையாரும் சோலை வலஞ்சுழியான் என்கொல்என்
கையார் வளைகவர்ந்த வாறு. 482

### 12. கட்டளைக் கலித்துறை

ஆறகற் றைச்சடைக் கொண்டொரொற்
றைப்பிறை சூடிமற்றைக்
கூறுபெண் ணாயவன் கண்ணார்
வலஞ்சுழிக் கொங்குதங்கு
நாறுதண் கொம்பரன் னீர்களின்
னேநடந் தேகடந்தார்
சீறுவெண் றிச்சிலைக் கானவர்
வாழ்கின்ற சேண் நெறியே. 483

### 13. ஆசிரியப்பா

நெறிதரு குழலி விறலியொடு புணர்ந்த
செறிதரு தமிழ்நூற் சீறியாழ்ப் பாண
பொய்கையூரன் புதுமணம் புணர்தர
மூவோம் மூன்று பயன்பெற் றனவே நீயவன்
புனைதார் மாலை பொருந்தப்பாடி
இல்லதும் உள்ளதும் சொல்லிக்கள்ள
வாசகம் வழாமல் பேச வன்மையில்
வாரைமகளிர் வான்பொருள் பெற்றனை அவரேல்
எங்கையர் கொங்கைக் குங்குமம் தழீஇ
விழையா இன்பம் பெற்றனர் யானேல்
அரனமர்ந்து உறையும் அணிநீர் வலஞ்சுழிச்
சுரும்பிவர் நறவயல் சூழ்ந்தெழு கரும்பில்
தீநீர் அன்ன வாய்நீர் சோரும்
சிலம்புகுரல் சிறுபறை பூண்ட
அலம்புகுரல் கிண்கிணிக் களிறுபெற் றனனே. 484

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. வெண்பா

தனமேறிப் பீர்பொங்கித் தன்னங்கம் வேறாய்
மனம்வேறு பட்டொழிந்தாள் மாதோ - இனமேறிப்
பாடாலம் வண்டலம்பும் பாய்நீர் வலஞ்சுழியான்
கோடாலம் கண்டணைந்த கொம்பு. 485

## 15. கட்டளைக் கலித்துறை

கொம்பார் குளிர்மறைக் காடனை
வானவர் கூடிநின்று
நம்பா எனவணங் கப்பெறு
வானை நகர்எரிய
அம்பாய்ந் தவனை வலஞ்சுழி
யானைஅண் ணாமலைமேல்
வம்பார் நறுங்கொன்றைத் தாருடை
யானை வணங்குதுமே. 486

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரதேவ நாயனார் அருளிய

## திருஎழுகூற்றிருக்கை (12)

திருச்சிற்றம்பலம்

ஓருடம்பு ஈருரு ஆயினை ஒன்றுபுரிந்து
ஒன்றி னீர்இதழ்க் கொன்றை சூடினை
மூவிலைச் சூலம் ஏந்தினை
சுடரும் சென்னி மீமிசை
இருகோட்டு ஒருமதி எழில்பெற மிலைச்சினை

ஒருகணை இருதோள் செவியுற வாங்கி
மூவெயில் நாற்றிசை முரணஅரண் செகுத்தனை
ஆற்ற முன்னெறி பயந்தனை
செறிய இரண்டும் நீக்கி
ஒன்று நினைவோர்க்கு உறுதி யாயினை

அந்நெறி ஒன்று
மனம்வைத்து இரண்டு நினைவி லோர்க்கு
முன்னெறி உலகங் காட்டினை அந்நெறி
நான்கென ஊழி தோற்றினை
சொல்லும் ஐந்தலை அரவசைத்து அசைந்தனை

நான்முகன் மேன்முகம் கபாலம் ஏந்தினை
நூல்முக முப்புரி மார்பில்
இருவர் அங்கம் ஒருங்குடன் ஏந்திய
ஒருவநின் ஆதி காணாது இருவர்
மூவுலகு உழன்று நாற்றிசை உழிதர

ஐம்பெருங் குன்றத்து அழலாய் தோன்றினை
ஆறுநின் சடையது ஐந்துநின் நிலையது
நான்குநின் வாய்மொழி மூன்றுநின் கண்ணே
இரண்டுநின் குழையே ஒன்றுநின் ஏறே
ஒன்றிய காட்சி உமையவள் நடுங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருங்களிற்று உரிவை போர்த்தனை நெருங்கி
முத்தீ நான்மறை ஐம்புலன் அடக்கிய
அறுதொழி லாளர்க்கு உறுதி பயந்தனை
எழில் இன்னரம்பு இசைத்தனை
ஆறில் அமுதம் பயந்தனை ஐந்தில்

விறலியர் கொட்டும் அழுத்த ஏந்தினை
ஆல நீழல் அன்றிருந்து அறநெறி
நால்வர் கேட்க நன்கினிது உரைத்தனை
நன்றி இல்லா முந்நீர்ச் சூர்மாக்
கொன்றங்கு இருவரை எறிந்த ஒருவன்

தாதை ஒருமிடற்று இருவடிவு ஆயினை
தரும் மூவகை உலகம் உணரக்
கூறுவை நால்வகை
இலக்கண இலக்கியம் நலத்தக மொழிந்தனை
ஐங்கணை அவனொடு காலனை அடர்த்தனை

அறுவகைச் சமயமும் நெறிமையில் வகுத்தனை
ஏழின் ஓசை இராவணன் பாடத்
தாழ்வாய் கேட்டவன் தலையளி பொருத்தினை
ஆறிய சிந்தை யாகி ஐங்கதித்
தேரொடு திசைசெல விடுத்தோன்

நாற்றோள் நலனே நந்திபிங்கு இருடியென்று
ஏற்ற பூதம் மூன்றுடன் பாட
இருகண் மொந்தை ஒருகணம் கொட்ட
மட்டுவிரி அலங்கல் மலைமகள் காண
நட்டம் ஆடிய நம்ப அதனால்

சிறியேன் சொன்ன அறிவில் வாசகம்
வறிதெனக் கொள்ளா யாகல் வேண்டும்
வெறிகமழ் கொன்றையொடு வெண்ணிலவு அணிந்து
கீதம் பாடிய அண்ணல்
பாதம் சென்னியில் பரவுவன் பணிந்தே. 487

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெண்பா**

பணிந்தேன் நின்பாதம் பரமேட்டி பால்நீறு
பணிந்துஆல வாயில் அமர்ந்தாய் - தணிந்தென்மேல்
மெய்யெரிவு தீரப்பணித்தருளு வேதியனே
ஐயுறவொன் றின்றி அமர்ந்து. *488*

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரதேவ நாயனார் அருளிய

## பெருந்தேவபாணி (13)

திருச்சிற்றம்பலம்

சூல பாணியை சுடர்தரு வடிவனை
நீல கண்டனை நெற்றியோர் கண்ணனை
பால்வெண் ணீற்றனை பரம யோகியை
காலனைக் காய்ந்த கறைமிடற் றண்ணலை
நூலணி மார்பனை நுண்ணிய கேள்வியை

கோல மேனியை கொக்கரைப் பாடலை
வேலுடைக் கையனை விண்தோய் முடியனை
ஞாலத் தீயினை நாதனைக் காய்ந்தனை
தேவ தேவனை திருமறு மார்பனை
கால மாகிய கடிகமழ் தாரனை

வேத கீதனை வெண்தலை ஏந்தியை
பாவ நாசனை பரமேச் சுவரனை
கீதம் பாடியை கிளர்பொறி அரவனை
போதணி கொன்றையெம் புண்ணிய ஒருவனை
ஆதிமூர்த்தியை அமரர்கள் தலைவனை

சாதி வானவர் தம்பெரு மான்தனை
வேத விச்சையை விடையுடை அண்ணலை
ஓத வண்ணனை உலகத்து ஒருவனை
நாத னாகிய நன்னெறிப் பொருளினை
மாலை தானெரி மயானத் ஆடியை

வேலை நஞ்சினை மிகஅமு தாக்கியை
வேத வேள்வியை விண்ணவர் தலைவனை
ஆதி மூர்த்தியை அருந்தவ முதல்வனை
ஆயிர நூறுக்கு அறிவரி யானை
பேயுருவு தந்த பிறையணி சடையனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசறு சோதியை மலைமகள் கொழுநனை
கூரிய மழுவனை கொலற்கருங் காலனைச்
சீரிய அடியாற் செற்றருள் சிவனை
பூதிப் பையனை புண்ணிய மூர்த்தியை
பீடுடை யாற்றை பிராணி தலைவனை

நீடிய நிமலனை நிறைமறைப் பொருளினை
ஈசனை இறைவனை ஈறில் பெருமையை
நேசனை நினைப்பவர் நெஞ்சத்து உள்ளனை
தாதணி மலரனை தருமனை பிரமனை
காதணி குழையனை களிற்றின் உரியனை

சூழ்சடைப் புனலனை சுந்தர விடங்கனை
தார்மலர்க் கொன்றை தயங்கு மார்பனை
வித்தக விதியனை
தீதமர் செய்கைத் திரிபுரம் எரித்தனை
பிரமன் பெருந்தலை நிறைவ தாகக்

கருமன் செந்நீர் கபாலம் நிறைத்தனை
நிறைத்த கபாலச் செந்நீர் நின்றும்
உறைத்த உருவார் ஐயனைத் தோற்றினை
தேவரும் அசுரரும் திறம்படக் கடைந்த
ஆர்வமுண் நஞ்சம் அமுத மாக்கினை

ஈரமில் நெஞ்சத்து இராவணன் தன்னை
வீரம் அழித்து விறல்வாள் கொடுத்தனை
திக்கமர் தேவரும் திருந்தாச் செய்கைத்
தக்கன் வேள்வியைத் தளரச் சாடினை
வேதமும் நீயே வேள்வியும் நீயே

நீதியும் நீயே நிமலன் நீயே
புண்ணியம் நீயே புனிதன் நீயே
பண்ணியன் நீயே பழம்பொருள் நீயே
ஊழியும் நீயே உலகமும் நீயே
வாழியும் நீயே வரதனும் நீயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவரும் நீயே தீர்த்தமும் நீயே
மூவரும் நீயே முன்னெறி நீயே
மால்வரை நீயே மறிகடல் நீயே
இன்பமும் நீயே துன்பமும் நீயே
தாயும் நீயே தந்தையும் நீயே

விண்முதற்பூதம் ஐந்தவை நீயே
புத்தியும் நீயே முத்தியும் நீயே
சொலற்கரும் தன்மைத் தொல்லோய் நீயே, அதனால்
கூடல் ஆலவாய்க் குழகன் ஆவது
அறியாது அருந்தமிழ் பழித்தனன் அடியேன்

ஈண்டிய சிறப்பின் இணையடிக் கீழ்நின்று
வேண்டும் மதுவினி வேண்டுவன் விரைந்தே. 489

திருச்சிற்றம்பலம்

**வெண்பா**

விரைந்தேன்மற்று எம்பெருமான் வேண்டியது வேண்டாது
இகழ்ந்தேன் பிழைத்தேன் அடியேன் - விரைந்தென்மேல்
சீற்றத்தைத் தீர்த்தருளும் தேவாதி தேவனே.
ஆற்றவும் செய்யும் அருள். 490

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரதேவ நாயனார் அருளிய

## கோபப் பிரசாதம் (14)

திருச்சிற்றம்பலம்

தவறுபெரி துடைத்தே தவறுபெரி துடைத்தே
வெண்திரைக் கருங்கடல் மேல்துயிர் கொள்ளும்
அண்ட வாணனுக்கு ஆழியன்று அருளியும்
உலகம் மூன்றும் ஒருங்குடன் படைத்த
மலரோன் தன்னை வான்சிரம் அரிந்தும்

கான வேடுவன் கண்பரிந்து அப்ப
வான நாடு மற்றவற்கு அருளியும்
கடிபடு பூங்கணைக் காம னார்உடல்
பொடிபட விழித்தும் பூதலத்து இசைந்த
மானுட னாகிய சண்டியை

வானவன் ஆக்கியும்
மறிகடல் உலகின் மன்னுயிர் கவரும்
கூற்றுவன் தனக்கோர் கூற்றுவ னாகியும்
கடல்படு நஞ்சம் கண்டத்து அடக்கியும்
பருவரைசிலையாப் பாந்தள் நாணாத்

திரிபுரம் எரிய ஒருகணை துரந்தும்
கற்கொண்டு எறிந்த சாக்கியன் அன்பு
தற்கொண்டு இன்னருள் தான்மிக அளித்தும்
கூற்றெனத் தோன்றியுங் கோளரி போன்றும்
தோற்றிய வாரணத்து ஈருரி போர்த்தும்

நெற்றிக் கண்ணும் நீள்புயம் நான்கும்
நற்றா நந்தீச் சுவரர்க்கு அருளியும்
அறிவின் ஓரா அரக்க னார் உடல்
நெறநெற இறுதர ஒருவிரல் ஊன்றியும்
திருவுரு வத்தொடு செங்கண் ஏறும்
அரியன திண்திறள் அசுரனுக்கு அருளியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கதிர் உரவோன் பற்கெடப் பாய்ந்து
மல்குபிருங்கு இருடிக்கு மாவரம் ஈந்தும்
தக்கன் வேள்வி தகைகெடச் சிதைத்தும்
மிக்கவரம் நந்தி மாகாளர்க்கு அருளியும்

செந்திக் கடவுள்தன் கரதலம் செற்றும்
பைந்தார் நெடும்படை பார்த்தற்கு அருளியும்
கதிர்மதி தனையோர் காற்பயன் கெடுத்தும்
நிதிபயில் குபேரற்கு நீள்நகர் ஈந்தும்
சலந்தரன் உடலந் தான்மிகத் தடிந்தும்

மறைபயில் மார்க்கண் டேயனுக்கு அருளியும்
தாருகற் கொல்லமுன் காளியைப் படைத்தும்
சீர்மலி சிலந்திக்கு இன்னரசு அளித்தும்
கார்மலி உருவக் கருடனைக் காய்ந்தும்
ஆலின் கீழிருந்து அறநெறி அருளியும்

இன்னவை பிறவும் எங்கள் ஈசன்
கோபப் பிரசாதம் கூறுங் காலைக்
கடிமலர் இருந்தோன் கார்க்கடற் கிடந்தோன்
புடமுறு சோலைப் பொன்னகர் காப்போன்
உரைப்போர் ஆகிலும் ஒண்கடல் மாநீர்

அங்கைக்கொண்டு இறைக்கும் ஆதர் போன்றுளர்
ஒடுங்காப் பெருமை உம்பர் கோனை
அடங்கா ஐம்புலத்து அறிவில் சிந்தைக்
கிருமி நாவாற் கிளத்தும் பரமே, அதாஅன்று
ஒருவகைத் தேவரும் இருவகைத் திறமும்

மூவகைக் குணமும் நால்வகை வேதமும்
ஐவகைப் பூதமும் அறுவகை இரதமும்
எழுவகை ஓசையும் எண்வகை ஞானமும்
ஒன்பதின் வகையாம் ஒண்மலர் சிறப்பும்
பத்தின் வகையும் ஆகிய பரமனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பனை நினைவோர்க்கு என்னிடை அமுதினைச்
செம்பொனை மணியினைத் தேனினைப் பாலினைத்
தஞ்சமென்று ஒழுகும் தன்னடி யார்தம்
நெஞ்சம் பிரியா நிமலனை நீடுயர்
செந்தழற் பவளச் சேணுறு வரையனை

முக்கட் செல்வனை முதல்வனை மூர்த்தியைக்
கள்ளங் கைவிட்டு உள்ளமது உருகிக்
கலந்து கசிந்துதன் கழலினை அவையே
நினைந்திட ஆங்கே தோன்றும் நிமலனைத்
தேவ தேவனைத் திகழ்சிவ லோகனைப்

பாவ நாசனைப் படரொளி உருவனை
வேயார் தோளி மெல்லியல் கூறனைத்
தாயாய் மன்னுயிர் தாங்கும் தந்தையைச்
சொல்லும் பொருளும் ஆகிய சோதியைக்
கல்லும் கடலும் ஆகிய கண்டனைத்

தோற்றம் நிலைஈ றாகிய தொன்மையை
நீற்றிடைத் திகழும் நித்தனை முத்தனை
வாக்கும் மனமும் இறந்த மறையனைப்
பூக்கமழ் சடையனைப் புண்ணிய நாதனை
இனைய தன்மையன் என்றறி அரியவன்

தனைமுன் விட்டுத் தாம்மற்று நினைப்போர்
மாமுயல் விட்டுக்
காக்கைப் பின்போம் கலவர் போலவும்
விளக்கங் கிருப்ப மின்மினி கவரும்
அளப்பரும் சிறப்பில் ஆதர் போலவும்

கச்சங் கொண்டு கடுந்தொழில் முடியாக்
கொச்சைத் தேவரைத் தேவரென்று எண்ணிப்
பிச்சரைப் போலவோர்
ஆரியப் புத்தகப் பேய்கொண்டு புலம்புற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டணை பேசுவர் மானுடம் போன்று
பெட்டினை உரைப்போர் பேதையர் நிலத்துள்
தலைமீன் தலைஎண் பலமென் றால்அதனை
அறுத்து நிறுப்போர் ஒருத்தர் இன்மையின்
மத்திர ஆகுவர் மாநெறி கிடப்பவோர்
சித்திரம் பேசுவர் தேவ ராகில்

இன்னோர்க் காய்ந்தனர் இன்னோர்க் அருளினர்
என்றறிய உலகின்
முன்னே உரைப்ப தில்லை ஆகிலும்
ஆடு போலக் கூடிநின்று அழைத்தும்
மாக்கள் போல வேட்கையீடு உண்டும்

இப்படி ஞானம் அப்படி அமைத்தும்
இன்ன தன்மையன் என்றிரு நிலத்து
முன்னே அறியா மூர்க்க மாக்களை
இன்னேகொண்டு ஏகாக் கூற்றம்
தவறுபெரிது உடைத்தே தவறுபெரிது உடைத்தே. 491

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரதேவ நாயனார் அருளிய

# கார் எட்டு (15)

திருச்சிற்றம்பலம்

01. அரவம் அரைக்கசைத்த அண்ணல் சடைபோல்
விரவி எழுந்தெங்கும் மின்னி - அரவினங்கள்
அச்சங்கொண் டோடி அணைய அடைவுற்றே
கைச்சங்கம் போல்முழங்கும் கார். 492

02. மையார் மணிமிடறு போற்கருகி மற்றவன்தன்
கையார்சிலை விலகிக் காட்டிற்றே - ஐவாய்
அழலரவம் பூண்டான் அவிர்சடை போல் மின்னிக்
கழலரவம் காண்புற்ற கார். 493

03. ஆலமர் கண்டத்து அரன்தன் மணிமிடறும்
கோலக் குழற்சடையும் கொல்லேறும் - போல
இருண்டொன்று மின்தோன்றி அம்பொனவ் வானம்
கருண்டொன்று கூடுதலிற் கார். 494

04. இருள் கொண்ட கண்டத்து இறைவன்தன் சென்னிக்
குருள்கொண்ட செஞ்சடைபோல் மின்னிச் சுருள்கொண்டு
பாம்பினங்கள் அஞ்சிப் படம்ஒடுங்க ஆர்த்ததே
காம்பினங்கள் தோளீயக் கார். 495

05. கோடரவங் கோடல் அரும்பக் குருமணிகான்று
ஆடரவம் எல்லாம் அளையடைய - நீடரவம்
பொற்பகலம் பூண்டான் புரிசடைமேல் மின்னிற்றே
கற்பகலம் காண்புற்ற கார். 496

06. பாரும் பனிவிசும்பும் பாசுபதன் பல்சடையும்
ஆரும் இருள்கீண்டு மின்விலகி - ஊரும்
அரவம் செலவஞ்சும் அஞ்சொலார் காண்பார்
கரவிந்தம் என்பார்அக் கார். 497

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. செழுந்தழல் வண்ணன் செஞ்சடைபோல் மின்னி
அழுந்தி அலர்போல் உயர - எழுந்தெங்கும்
ஆவிசோர் நெஞ்சினரை அன்பளக்க உற்றதே
காவிசேர் கண்ணாயக் கார். 498

08. காந்தள் மலரக் கமழ் கொன்றை பொன்சொரியப்
பூந்தளவம் ஆரப்புகுந்தின்றே - ஏந்தொளிசேர்
அண்டம்போல் மீதிருண்ட ஆதியான் ஆய்மணிசேர்
கண்டம்போல் மீதிருண்ட கார். 499

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரதேவ நாயனார் அருளிய

# போற்றித் திருக்கலிவெண்பா (16)

திருச்சிற்றம்பலம்

01. திருத்தங்கு மார்பின் திருமால் வரைபோல்
எருத்தத்து இலங்கியவெண் கோட்டுப் - பருத்த

02. குறுத்தாள் நெடுமூக்கில் குன்றிக்கண் நீல
நிறத்தாற் பொலிந்து நிலமேழ் - உறத்தாழ்ந்து

03. பன்றித் திருவுருவாய்க் காணாத பாதங்கள்
நின்றவா நின்ற நிலைபோற்றி - அன்றியும்

04. புண்டரிகத் துள்ளிருந்த புத்தேள் கழுகுருவாய்
அண்டரண்டம் ஊடுருவ ஆங்கோடிப் - பண்டொருநாள்

05. காணான் இழியக் கனக முடிகவித்துக்
கோணாது நின்ற குறிபோற்றி - நாணாளும்

06. பேணிக்கா லங்கள் பிரியாமை பூசித்த
மாணிக்கா அன்று மதிற்கடவூர்க் காண

07. வரத்திற் பெரிய வலிதொலைத்த காலன்
உரத்தில் உதைத்தஉதை போற்றி - கரத்தாமே

08. வெற்பன் மடப்பாவை கொங்கைமேல் குங்குமத்தின்
கற்பழியும் வண்ணங் கசிவிப்பான் - பொற்புடைய

09. வாமன் மகனாய் மலர்க்கணையொன்று ஒட்டியஅக்
காமன் அழகழித்த கண்போற்றி - தூமப்

10. படமெடுத்த வாளரவம் பார்த்தடரப் பற்றி
விடமெடுத்த வேகத்தான் மிக்குஞ் - சடலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. முடங்க வலிக்கும் முயலகன்தன் மொய்ம்பை
அடங்க மிதித்த அடி போற்றி - நடுங்கத்

12. திருமால் முதலாய தேவா சுரர்கள்
கருமால் கடல்நாகம் பற்றிக் - குருமாற

13. நீலமுண்ட நீள்முகில்போல் நெஞ்சழல வந்தெழுந்த
ஆலமுண்ட கண்டம் அதுபோற்றி - சாலமண்டிப்

14. போருகந்த வானவர்கள் புக்கொடுங்க மிக்கடர்க்கும்
தாருகன்தன் மார்பில் தனிச்சூலம் - வீரம்

15. கொடுத்தெறியும் மாகாளி கோபந் தவிர
எடுத்த நடத்தியல்பு போற்றி - தடுத்து

16. வரையெடுத்த வாளரக்கன் வாயா உதிரம்
நிரையெடுத்து நெக்குடலம் இற்றுப் - புரையெடுத்த

17. பத்தனைய பொன்முடியும் தோள்இருப தும்நெரிய
மெத்தெனவே வைத்த விரல்போற்றி - அத்தகைத்த

18. வானவர்கள் தாங்கூடி மந்திரித்த மந்திரத்தை
மேனவில ஓடி விதிர்விதிர்த்துத் - தானவருக்கு

19. ஒட்டிக் குறளை உரைத்த அயன்சிரத்தை
வெட்டிச் சிரித்த விறல்போற்றி - மட்டித்து

20. வாலுகத்தால் நல்லிலிங்க மாவகுத்து மற்றதன்மேல்
பாலுகுப்பக் கண்டு பதைத்தோடி - மேலுதைத்தங்கு

21. கோட்டியவன் தாதை இருதாள் எறிந்துயிரை
வீட்டிய சண்டிக்கு வேறாக - நாட்டின்கண்

22. பொற்கோயில் உள்ளிருத்திப் பூமாலை போனகமும்
நற்கோலம் ஈந்த நலம்போற்றி - நிற்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. வலந்தருமால் நான்முகனும் வானவரும் கூடி
அலந்தருமால் கொள்ள அடர்க்கும் - சலந்தரனைச்

24. சக்கரத்தால் ஈர்ந்தரிதன் தாமரைக்கண் சாத்துதலும்
மிக்கஅஃது ஈந்த விறல்போற்றி - அக்கணமே

25. நக்கிருந்த நாமகனை மூக்கரிந்து நால்வேதம்
தொக்கிருந்த வண்ணம் துதிசெய்ய - மிக்கிருந்த

26. அங்கைத் தலத்தே அணிமானை ஆங்கணிந்த
செங்கைத் திறத்த திறல்போற்றி - திங்களைத்

27. தேய்த்ததுவே செம்பொற் செழுஞ்சடைமேல் சேர்வித்து
வாய்த்திமையோர் தம்மைஎல்லாம் வான்சிறையில் - பாய்த்திப்

28. பிரமன் குறையிரப்பப் பின்னும் அவர்க்கு
வரம்அன்று அளித்தவலி போற்றி - புரமெரித்த

29. அன்றுய்ந்த மூவர்க்கு அமர்ந்து வரமளித்து
நின்றுய்ந்த வண்ணம் நிகழ்வித்து - நன்று

30. நடைகாவல் மிக்க அருள்கொடுத்துக் கோயில்
கடைகாவல் கொண்டவா போற்றி - விடைகாவல்

31. தானவர்கட்கு ஆற்றாது தன்னடைந்த நன்மைவிறல்
வானவர்கள் வேண்ட மயிலூரும் - கோனவனைக்

32. சேனா பதியாகச் செம்பொன் முடிகவித்து
வானாள வைத்த வரம் போற்றி - மேனாள்

33. அதிர்த்தெழுந்த அந்தகனை அண்டரண்டம் உய்யக்
கொதித்தெழுந்த சூலத்தால் கோத்துத் - துதித்தங்கு

34. அவனிருக்கும் வண்ணம் அருள்கொடுத்துஅங்கு ஆழேழ்
பவமறுத்த பாவனைகள் போற்றி - கவைமுகத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. பொற்பா கரைப்பிளந்து கூறிரண்டாப் போகட்டும்
எற்பா சறைப்போக மேல்விலகி - நிற்பால

36. மும்மதத்து வெண்கோட்டுக் கார்நிறத்துப் பைந்தறுகண்
வெம்மதத்த வேகத்தால் மிக்கோடி - விம்மி

37. அடர்த்திரைத்துப் பாயும் அடுகளிற்றைப் போக
எடுத்துரித்துப் போர்த்த இறை போற்றி - தொடுத்தமைத்த

38. நாண்மாலை கொண்டணிந்த நால்வர்க்கு அன்றுறு ஆல்நிழற்கீழ்
வாண்மாலை ஆகும் வகையருளித் - தோள்மாலை

39. விட்டிலங்கத் தக்கிணமே நோக்கி வியந்தகுணம்
எட்டிலங்க வைத்த இறைபோற்றி - ஒட்டி

40. விசையன் விசையளப்பன் வேடுருவம் ஆகி
அசைய உடல்திரியா நின்று - வசையினால்

41. பேசு பதப்பாற் பிழைபொறுத்து மற்றவற்குப்
பாசுபதம் ஈந்த பதம்போற்றி - நேசத்தால்

42. வாயிநீர் கொண்டு மகுடத் துமிழ்ந்திறைஞ்சி
ஆயசீர் போனகமா அங்கமைத்து - தூயசீர்க்

43. கண்ணிடந்த கண்ணப்பர் தம்மைமிகக் காதலித்து
விண்ணுலகம் ஈந்த விறல்போற்றி - மண்ணின்மேல்

44. காளத்தி போற்றி கயிலைமலை போற்றியென
நீளத்தி னால்நினைந்து நிற்பார்கள் - தாளத்தோடு

45. எத்திசையும் பன்முரசும் ஆர்த்திமையோர் போற்றிசைப்ப
அத்தனடி சேர்வார்கள் ஆங்கு.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரதேவ நாயனார் அருளிய

# திருமுருகாற்றுப்படை (17)

## 1. திருப்பரங்குன்றம்

உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடல்கண் டாஅங்கு
ஓஅற இமைக்கும் சேண்விளங்கு அவிர்ஒளி
உறுநர்த் தாங்கிய மதன்உடை நோன்தாள்
செறுநர்த் தேய்த்த செல்உறழ் தடக்கை

மறுஇல் கற்பின் வாள்நுதல் கணவன்
கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை
வாள்போழ் விசும்பில் வள்உறை சிதறித்
தலைப்பெயல் தலைஇய தண்நறுங் கானத்து
இருள்படப் பொதுளிய பராஅரை மராஅத்து

உருள்பூந் தண்தார் புரளும் மார்பினன்
மால்வரை நிவந்த சேண்உயர் வெற்பில்
கிண்கிணி கவைஇய ஒண்செம் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பின் பணைத்தோள்
கோபத்து அன்ன தோயாப் பூந்துகில்

பல்காசு நிரைத்த சில்காழ் அல்குல்
கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிர்இழைச்
சேண்இகந்து விளங்கும் செயிர்தீர் மேனித்
துணையோர் ஆய்ந்த இணைஈர் ஓதிச்

செங்கால் வெட்சிச் சீறிதழ் இடைஇடுபு
பைந்தாள் குவளைத் தூவிதழ் கிள்ளித்
தெய்வ உத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகம் தைஇய தேம்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவர முடித்த துகள்அறு முச்சிப்
பெருந்தண் சண்பகம் செரீஇக் கருந்தகட்டு
உளைப்பூ மருதின் ஒள்இணர் அட்டிக்
கிளைக்கவின்று எழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு
இணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக

வண்காது நிறைந்த பிண்டி ஒண்தளிர்
நுண்பூண் ஆகம் திளைப்பத் திண்காழ்
நறுங்குறடு உரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகிழ் இளமுலைக் கொட்டி விரிமலர்

வேங்கை நுண்தாது அப்பிக் காண்வர
வெள்ளில் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
கோழி ஓங்கிய வென்றுஅடு விறல்கொடி
வாழிய பெரிது என்று ஏத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடிச்

சூர்அர மகளிர் ஆடும் சோலை
மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கத்துச்
சுரும்பும் மூசாச் சுடர்ப்பூங் காந்தள்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்
பார்முதிர் பனிக்கடல் கலங்கஉள் புக்குச்

சூர்முதல் தடிந்த சுடர்இலை நெடுவேல்
உலறிய கதுப்பின் பிறழ்பல் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கின்
கழல்கண் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை அலைக்கும் காதின் பிணர்மோட்டு

உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்
குருதி ஆடிய கூர்உகிர்க் கொடுவிரல்
கண்தொட்டு உண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்தொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
வென்றுஅடு விறற்களம் பாடித்தோள் பெயரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிணம்தின் வாயள் துணங்கை தூங்க
இருபேர் உருவின் ஒருபேர் யாக்கை
அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்கக் கவிழ்இணர்
மாமுதல் தடிந்த மறுஇல் கொற்றத்து

எய்யா நல்இசைச் செவ்வேல் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்நசை வாய்ப்ப

இன்னே பெறுதிநீ முன்னிய வினையே
செருப்புகன்று எடுத்த சேண்உயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போர்அரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து

மாடமலி மறுகின் கூடல் குடவயின்
இருஞ்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கள்கமழ் நெய்தல் ஊதி எல்படக்
கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர்

அம்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்றுஅமர்ந்து உறைதலும் உரியன் அதாஅன்று.

## 2. திருச்சீரலைவாய்

வைந்நுதி பொருத வடுவாழ் வரிநுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வரப்
படுமணி இரட்டும் மருங்கில் கடுநடைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்றத்து அன்ன மாற்றரு மொய்ம்பின்
கால்கிளர்ந் தன்ன வேழம் மேல்கொண்டு
ஐவேறு உருவின் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்உறழ் இமைப்பில் சென்னிப் பொற்ப

நகைதாழ்பு துயல்வரூஉம் வகையமை பொலம்குழை
சேண்விளங்கு இயற்கை வாண்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்ப
தாவில் கொள்கைத் தம்தொழில் முடிமார்
மனநேர்பு எழுதரு வாள்நி முகனே

மாஇருள் ஞாலம் மறுஇன்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம் ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்துஇனிது ஒழுகிக்
காதலின் உவந்து வரம்கொடுத் தன்றே ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ

அந்தணர் வேள்விஓர்க் கும்மே ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏமுறு நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட் டன்றே ஒருமுகம்

குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகைஅமர்ந் தன்றே
ஆங்குஅம் மூவிரு முகனும் முறைநவின்று ஒழுகலின்
ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பில்
செம்பொறி வாங்கிய மொய்ம்பின் சுடர்விடுபு

வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்
விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது
ஒருகை உக்கம் சேர்த்தியது ஒருகை
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇயது ஒருகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்குசம் கடாவ ஒருகை இருகை
ஐயிரு வட்டமொடு எஃகுவலம் திரிப்ப ஒருகை
மார்பொடு விளங்க ஒருகை
தாரொடு பொலிய ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப ஒருகை
பாடின் படுமணி இரட்ட ஒருகை

நீல்நிற விசும்பின் மலிதுளி பொழிய ஒருகை
வான்அர மகளிர்க்கு வதுவை சூட்ட
ஆங்குஅப் பன்னிரு கையும் பாற்பட இயற்றி
அந்தரப் பல்லியம் கறங்கத் திண்காழ்
வயிர்எழுந்து இசைப்ப வால்வளை ஞரல

உரம்தலைக் கொண்ட உரும்இடி முரசமொடு
பல்பொறி மஞ்சை வெல்கொடி அகவ
விசும்பு ஆறாக விரைசெலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே; அதாஅன்று

## 3. திருஆவினன்குடி

சீரை தைஇய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்
மாசுஅற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்புஎழுந்து இயங்கும் யாக்கையர் நன்பகல்

பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்
கற்றோர் அறியா அறிவனர் கற்றோர்க்குத்
தாம்வரம்பு ஆகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினம் கடிந்த காட்சியர் இடும்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனிஇல் காட்சி முனிவர் முன்புக
புகைமுகந் தன்ன மாசில் தூவுடை
முகைவாய் அவிழ்ந்த தகைசூழ் ஆகத்துச்
செவிநேர்பு வைத்து செய்வுறு திவவின்

நல்யாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவலர் இன்னரம்பு உளர
நோயின்று இயன்ற யாக்கையர் மாவின்
அவிர்தளிர் புரையும் மேனியர் அவிர்தொறும்
பொன்னுரை கடுக்கும் திதலையர் இன்னகைப்

பருமம் தாங்கிய பணிந்தேந்து அல்குல்
மாசில் மகளிரொடு மறுவின்றி விளங்கக்
கடுவொடு ஒடுங்கிய தூம்புடை வால்எயிற்று
அழல்என உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறல்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்

புள்அணி நீள்கொடிச் செல்வனும் வெள்ஏறு
வலவயின் உயரிய பலர்புகழ் திணிதோள்
உமைஅமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூஎயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்
நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து நூறுபல்

வேள்வி முற்றிய வென்றுஅடு கொற்றத்து
ஈர்இரண்டு ஏந்திய மருப்பின் எழில்நடைத்
தாழ்பெருந் தடக்கை உயர்த்த யானை
எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்
நாற்பெரும் தெய்வத்து நன்னகர் நிலைஇய

உலகம் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவரும் தலைவ ராக
ஏமுறு ஞாலம் தன்னில் தோன்றித்
தாமரை பயந்த தாவில் ஊழி
நான்முகன் ஒருவன் சுட்டிக் காண்வரப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகலில் தோன்றும் இகலில் காட்சி
நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரோடு
ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீஇயர்
மீன்பூத் தன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந்து அன்ன செலவினர் வளியிடைத்

தீஎழுந்து அன்ன திறலினர் தீப்பட
உரும் இடித்து அன்ன குரலினர் விழுமிய
உறுகுறை மருங்கில்தம் பெறுமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்
தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்

ஆவினன்குடி அசைதலும் உரியன் அதாஅன்று.

## 4. திருஏரகம்

இருமூன்று எய்திய இயல்பினின் வழாஅது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான்கு இரட்டி இளமை நல்யாண்டு
ஆறினில் கழிப்பிய அறன்நவில் கொள்கை

மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப் பாளர் பொழுதுஅறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புல உடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து

ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாவியல் மருங்கின் நவிலப் பாடி
விரையுறு நறுமலர் ஏந்திப் பெரிதுவந்து
ஏரகத் துறைதலும் உரியன் அதாஅன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. குன்றுதோறாடல்

பைங்கொடி நறைக்காய் இடையிடுபு வேலன்
அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூ தாளம் தொடுத்த கண்ணியன்
நறுஞ்சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பின்
கொடுந்தொழில் வல்வில் கொலைஇய கானவர்
நீடமை விளைந்த தேங்கள் தேறல்

குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர
விரல்உளர்ப்பு அவிழ்ந்த வேறுபடு நறுங்கால்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை அணைத்த கூந்தல்

முடித்த குல்லை இலையுடை நறும்பூச்
செங்கால் மராஅத்த வால்இணர் இடையிடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ
மயில்கண்டு அன்ன மடநடை மகளிரொடு

செய்யன் சிவந்த ஆடையன் செவ்வரைச்
செயலைத் தண்தளிர் துயல்வரும் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் இயத்தன்
தகரன் மஞ்ஞையன் புகர்இல் சேவலங்

கொடியன் நெடியன் தொடிஅணி தோளன்
நரம்ஆர்த் தன்ன இன்குரல் தொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கில் கட்டிய நிலன்நேர்பு துகிலினன்
முழவுறழ் தடக்கையின் இயல ஏந்தி

மென்தோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்றுதோ றாடலும் நின்றதன் பண்பே அதா அன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. பழமுதிர்சோலை

சிறுதினை மலரோடு விரைஇ மறியறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்

ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறி அயர் களனும்
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்

மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்
ஆண்டலைக் கொடியொடு மண்ணி அமைவர
நெய்யோடு ஐயவி அப்பி ஐதுரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொள் உருவின் இரண்டுடன் உடீஇச்

செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் அரிசி
சில்பலிச் செய்து பல்பிரப்பு இரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்

பெரும்தண் கணவீரம் நறுந்தண் மாலை
துணையற அறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பின் நன்னகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழ்இசை அருவியொடு இன்னியம் கறங்க

உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகியம் நிறுத்து முரணினர் உட்க
முருகாற்றுப் படுத்த உருகெழு வியன்நகர்
ஆடுகளம் சிலம்பப் பாடிப் பலவுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடுவாய் வைத்துக் கொடுமணி இயக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டாண்டு உறைதலும் அறிந்த வாறே
ஆண்டாண்டு ஆயினும் ஆக காண்தக

முந்துநீ கண்டுழி முகன்அமர்ந்து ஏத்திக்
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி
நெடும்பெரும் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ

ஆல்கெழு கடவுள் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
இழையணி சிறப்பின் பழையோள் குழவி
வானோர் வணங்குவில் தானைத் தலைவ

மாலை மார்ப நூலறி புலவ
செருவில் ஒருவ பொருவிறல் மள்ள
அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொல்மலை
மங்கையர் கணவ மைந்தர் ஏறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ

குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே
அரும்பெறல் மரபின் பெரும்பெயர் முருக
நசையுநர்க்கு ஆர்த்தும் இசைபே ராள
அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய்
மண்டமர் கடந்தநின் வென்றாடு அகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேஎள்
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்
சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்மிகு பொருந குரிசில் எனப்பல
யான்அறி அளவையின் ஏத்தி ஆனாது
நின்னளந்து அறிதல் மன்னுயிர்க்கு அருமையின்
நின்னடி உள்ளி வந்தனென் நின்னொடு
புரையுநர் இல்லாப் புலமை யோய்எனக்

குறித்தது மொழியா அளவையின் குறித்துடன்
வேறுபல் உருவில் குறும்பல் கூளியர்
சாறுஅயர் களத்து வீறுபெறத் தோன்றி
அளியன் தானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெரும நின் வண்புகழ் நயந்தென

இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்
தெய்வம் சான்ற திறல்விளங்கு உருவின்
வான்தோய் நிவப்பின் தான்வந்து எய்தி
அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி

அஞ்சல் ஓம்புமதி அறிவல் நின்வரவு என
அன்புடை நன்மொழி அளைஇ விளிவின்று
இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீ ஆகித் தோன்ற விழுமிய
பெறல்அரும் பரிசில் நல்குமதி பலவுடன்

வேறுபல் துகிலின் நுடங்கி அகில்சுமந்து
ஆரம் முழுமுதல் உருட்டி வேரல்
பூவுடை அலங்குசினை புலம்பவேர் கீண்டு
விப்பொரு நெடுவரைப் பரிதியில் தொடுத்த
தண்கமழ் அலர்இறால் சிதைய நன்பல

ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமலர் உதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்பொன் மணிநிறம் கிளரப்பொன் கொழியா
வாழை முழுமுதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்

கோழி வயப்பெடை இரியக் கேழலொடு
இரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன
குரூஉமயிர் யாக்கைக் குடாவடி உளியம்
பெருங்கல் விடர்அளைச் செறியக் கருங்கோட்டு
ஆமா நல்ஏறு சிலைப்பச் சேணின்

இழும்என இழிதரும் அருவிப்
பழம்முதிர் சோலை மலைகிழ வோனே. 512

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரதேவ நாயனார் அருளிய

# திருக்கண்ணப்பதேவர் திருமறம் (18)

திருச்சிற்றம்பலம்

திருக்கண் ணப்பன் செய்தவத் திறத்து
விருப்புடைத் தம்ம விரிகடல் உலகே, பிறந்தது
தேன்ழித்து ஊனூண் கானவர் குலத்தே, திரிவது
பொருபுலி குமுறும் பொருப்பிடைக் காடே, வளர்ப்பது
செங்கண் நாயொடு தீவகம் பலவே, பயில்வது

வெந்திறற் சிலையொடு வேல்வாள் முதலிய
அந்தமில் படைக்கலம் அவையே, உறைவது
குறைதசை பயின்று குடம்பல நிரைத்துக்
கறைமலி படைக்கலம் கலந்த புல்லொடு
பீலி மேய்ந்தவை பிரிந்த வெள்ளிடை

வாலிய புலித்தோல் மறைப்ப வெள்வார்
இரவும் பகலும் இகழா முயற்றியொடு
மடைத்த தேனும் வல்நாய் விட்டும்
சிலைவிடு கணையிலும் திண்கரி கையிலும்
பலகிளை அவையொடும் பதைப்பப் படுத்துத்

தொல்லுயிர் கொல்லும் தொழிலே, வடிவே
மறப்புலி கடித்த வன்திரள் முன்கை
திறற்படை கிழித்த திண்வரை அகலம்
எயிற்றெண்கு கவர்ந்த இருந்தண் நெற்றி
அயிற்கோட் டேனம் படுத்தெழு குறங்கு

செடித்தெழு குஞ்சி செந்நிறத் துறுகண்
கடுத்தெழும் வெவ்வுரை அவ்வாய்க் கருநிறத்து
அடுபடை பிரியாக் கொடுவிரல் அதுவே, மனமே
மிகக்கொலை புரியும் வேட்டையில் உயிர்கள்
அகப்படு துயருக்கு அகனமர்ந் ததுவே இதுஅக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கானத் தலைவன் தன்மை் கண்ணுதல்
வானத் தலைவன் மலைமகள் பங்கன்
எண்ணரும் பெருமை இமையவர் இறைஞ்சும்
புண்ணிய பாதப் பொற்பார் மலரிணை
தாய்க்கண் கன்றெனச் சென்றுகண் டல்லது

வாய்க்கிடும் உண்டி வழக்கறி யானே, அதாஅன்று
கட்டழல் விரித்த கனற்கதிர் உச்சியிற்
சுட்டடி இடுந்தொறும் சுறுக்கொளும் சுரத்து
முதுமரம் நிரந்த முட்பயில் வளாகத்து
எதிரினங் கடவிய வேட்டையில் விரும்பி

எழுப்பிய விருகத் தினங்களை மறுக்குறத்
தன்நாய் கடித்திரித் திடவடிக் கணைதொடுத்து
எய்து துணித்திடும் துணித்த விடக்கினை
விறகினிற் கடைந்த வெங்கனல் காய்ச்சி
நறுவிய இறைச்சி நல்லது சுவைகண்டு

அண்ணற்கு அமிர்தென்று அதுவேறு அமைத்துத்
தண்ணறுஞ் சுனைநீர் தன்வாய்க் குடத்தால்
மஞ்சன மாக முகந்து மலரெனக்
குஞ்சியில் துவர்க்குலை செருகிக் குனிசிலை
கடுங்குரல் நாய்பின் தொடர யாவரும்

வெருக்கோ ளூற்ற வெங்கடும் பகலில்
திருக்கா ளத்தி எய்தி சிவற்கு
வழிபடக் கடவ மறையோன் முன்னம்
துகலிடைச் சுற்றியில் தூநீர் ஆட்டி

நல்லன விரைமலர் நறும்புகை விளக்கவி
சொல்லின பரிசில் சுருங்கலின் பூவும்
பட்ட மாலையும் தூக்கமும் அலங்கரித்து
அருச்சனை செய்தாங்கு அவனடி இறைஞ்சித்
திருந்த முத்திரை சிறப்பொடும் காட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரம் எண்ணி வலமிடம் வந்து
விடைகொண் டேகின பின்தொழில்
பூசனை தன்னைப் புக்கொரு காலில்
தொடுசெருப்பு அடியால் நீக்கி வாயில்
இடுபுனல் மேனியில் ஆட்டித் தன்தலைத்

தங்கிய துவர்ப்பூ ஏற்றி இறைச்சியில்
பெரிதும் போனகம் படைத்துப் பிரானைக்
கண்டுகண்டு உள்ளங் கசிந்து காதலில்
கொண்டதோர் கூத்துமுன் ஆடிக் குரைகழல்
அன்பொடும் இறுக இறைஞ்சி ஆரா

அன்பொடு கானகம் அடையும் அடைந்த
அற்றை அயலினிற் கழித்தாங்கு இரவியும்
உதித்த போழ்தத்து உள்நீர் மூழ்கி
ஆதரிக்கும் அந்தணன் வந்து
சீரார் சிவற்குத் தான்முன் செய்வதோர்

பொற்புடைப் பூசனை காணான் முடிமிசை
ஏற்றிய துவர்கண்டு ஒழியான் மறித்தும்
இவ்வாறு அருச்சனை செய்பவர் யாவர்கொல் என்று
காந்திருந்து அவன்அக் கானவன் வரவினைப்
பரந்த காட்டிடைப் பார்த்து நடுக்குற்று

வந்தவன் செய்து போயின வண்ணம்
சிந்தையிற் பொறாது சேர்விடம் புக்கு
மற்றை நாளும்அவ் வழிப்பட்டு இறைவ
உற்றது கேட்டருள் உன்தனக்கு அழகா
நாடொறும் நான்செய் பூசனை தன்னை

ஈங்கொரு வேடுவன்
நாயொடும் புகுந்து மிதித் துழக்கித்
தொடுசெருப் படியால் நீக்கி வாயில்
இடுபுனல் மேனியில் ஆட்டித் தன்தலை
தங்கிய சருகிலை உதிர்த்தோர் இறைச்சியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்திருக் கோயிலில் இட்டுப் போமது
என்றும் உன்தனக்கு இனிதே எனையுருக்
கானில் கொன்றிடும் யாவ ராலும்
விலக்குறும் குணத்தன் அல்லன் என்றும்
திருக்குறிப்பு என்றவன் சென்ற அல்லிடைக்

கனவில்ஆ தரிக்கும் அந்தணன் தனக்குச்
சீரார் திருக்கா ளத்தியுள் அப்பன்
பிறையணி இலங்கு பின்னுபுன் சடைமுடிக்
கறையணி மிடற்றுக் கனல்மழுத் தடக்கை
நெற்றி நாட்டத்து நிறைநீற் றாக

ஒற்றை மால்விடை உமையொடு மருங்கில்
திருவுருக் காட்டி அருளிப்
புரிவொடு பூசனை செய்யும்
குணிசிலை வேடன் குணம் அவை ஆவன
உரிமையிற் சிறந்தநன் மாதவன் என்றுணர்

அவன்உகந் தியங்கிய இடம்முனி வனம்அதுவே அவன்
செருப்படி யாவன விருப்புறு துவலே
எழில அவன் வாயது தூயபொற் குடமே
அதனில் தங்குநீர் கங்கையின் புனலே
புனற்கிடு மாமணி அவன்நிறைப் பல்லே

அதற்கிடு தூமலர் அவனது நாவே
உப்புனல் விடும்பொழுது உருஞ்சிய மீசைப்
புன்மயிர் குசையினும் நம்முடிக்கு இனிதே் அவன்தலை
தங்கிய சருகு இலை தருப்பையிற் பொதிந்த
அங்குலி கற்பகத் தலரே் அவன் உகந்து

இட்ட இறைச்சி எனக்குநன் மாதவர்
இட்ட நெய்பால் அவியே
இதுஎனக்கு உனக்கவன்
கலந்ததோர் அன்பு காட்டுவன் நாளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலந்திகழ் அருச்சனை செய்தாங்கு இருவென்று
இறையவன் எழுந்த ருளினன்
அருளலும் மறையவன் அறிவுற்று எழுந்து
மனமிகக் கூசி வைகறைக் குளித்துத்
தான்முன் செய்வதோர்
பொற்புடைப் பூசனை புகழ்தரச் செய்து

தோன்றா வண்ணம் இருந்தனன் ஆக இரவியும்
வான்தனி முகட்டில் வந்தழல் சிந்தக்
கடும்பகல் வேட்டையில் காதலித்து அடித்த
உடம்பொடு சிலைகணை உடைத்தோல் செருப்புத்
தொடர்ந்த நாயொடு தோன்றினன் தோன்றலும்

செல்வன் திருக்கா ளத்தியுள் அப்பன்
திருமேனியின் மூன்று கண்ணாய்
ஆங்கொரு கண்ணில் உதிரம்
ஒழியாது ஒழுக இருந்தன னாகப்
பார்த்து நடுக்குற்றுப் பதைத்து மனஞ்சுழன்று

வாய்ப்புனல் சிந்தக் கண்ணீர் அருவக்
கையில் ஊனொடு கணைசிலை சிந்த
நிலப்படப் புரண்டு நெடிதினில் தேறிச்
சிலைக்கொடும் படைகடிது எடுத்திதுப் படுத்தவர்
அடுத்தவிவ் வனத்துளர் எனத்திரிந் தாஅங்கு

இன்மை கண்டு நன்மையில்
தக்கன மருந்துகள் பிழியவும் பிழிதொறும்
நெக்கிழி குருதியைக் கண்டுநிலை தளர்ந்தென்
அத்தனுக்கு அடுத்ததென் அத்தனுக்கு அடுத்ததென் என்று
அன்பொடும் கனற்றி

இத்தனை தரிக்கிலன் இதுதனைக் கண்டஎன்
கண்தனை இடந்து கடவுள்தன் கண்ணுறு
புண்ணில் அப்பியும் காண்பன் என்றொரு கண்ணிடைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணையது மடுத்துக் கையில் வாங்கி
அணைதர அப்பினன் அப்பலுங் குருதி

நிற்பதொத்து உருப்பெறக் கண்டுநெஞ்சு உகந்து
மற்றைக் கண்ணிலும் வடிக்கணை மடுத்தனன் மடுத்தலும்
நில்லுகண் ணப்ப நில்லுகண் ணப்பஎன்
அன்புடைத் தோன்றல் நில்லுகண் ணப்பஎன்று
இன்னுரை அதனொடும் எழிற்சிவ லிங்கம்

தன்னிடைப் பிறந்த தடமலர்க் கையால்
அன்னவன் தன்கை அம்பொடும் அகப்படப் பிடித்து
அருளினன் அருளலும்
விண்மிசை வானவர்
மலர்மழை பொழிந்தனர் வளையொலி படகம்

துந்துபி கறங்கின தொல்சீர் முனிவரும்
ஏந்தினர் இன்னிசை வல்லே
சிவகதி பெற்றனன் திருக்கண் ணப்பனே. 512

### வெண்பா

தந்தையாம் தாய்தந்தை நாகனாம் தன்பிறப்புப்
பொத்தப்பி நாட்டுடுப்பூர் வேடுவனாம் - தித்திக்கும்
திண்ணப்ப னாஞ்சிறுபேர் செய்தவத்தால் காளத்திக்
கண்ணப்ப னாய்நின்றான் காண். 513

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாட தேவ நாயனார் அருளிய

# திருக்கண்ணப்பதேவர் திருமறம் (19)

திருச்சிற்றம்பலம்

பரிவின் தன்மை உருவுகொண் டனையவன்
போழ்வார் போர்த்த தாழகச் செருப்பினன்
குருதி புலராச் சுரிகை எ.ஃகம்
அரையிற் கட்டிய உடைதோற் கச்சையன்
தோல்நெடும் பையிற் குறுமயிர் திணித்து

வாரில் வீக்கிய வரிகைக் கட்டியன்
உழுவைக் கூனுகிர் கேழல்வெண் மருப்பு
மாறுபடத் தொடுத்த மாலைஉத் தரியன்
நீலப் பீலி நெற்றி சூழ்ந்த
கானக் குஞ்சிக் கவடி புல்லினன்

முடுகு நாறு குடிலை யாக்கையன்
வேங்கை வென்று வாகை சூடிய
சங்கரன் தன்னினத் தலைவன் ஓங்கிய
வில்லும் அம்பும் நல்லன தாங்கி
ஏற்றுக் கல்வனம் காற்றில் இயங்கிக்

கணையில் வீழ்த்துக் கருமா அறுத்துக்
கோலின் ஏற்றிக் கொழுந்தீக் காய்ச்சி
நாவில் வைத்த நாட்போ னகமும்
தன்தலைச் செருகிய தண்பள்ளித் தாமமும்
வாய்க்கல சத்து மஞ்சன நீரும்

கொண்டு கானப் பேருறை கண்ணுதல்
முடியிற் பூசை அடியால் நீக்கி
நீங்காக் குணத்துக்
கோசரிக்கு அன்றவன் நேசங் காட்ட
முக்கண் அப்பனுக்கு ஒருகணில் உதிரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கி ணத்திடை இழிதர அக்கணம்
அழுது விழுந்து தொழுதெழுந்து அரற்றிப்
புன்மருந் தாற்றப் போகா தென்று
தன்னை மருந்தென்று மலர்க்கண் அப்ப
ஒழிந்தது மற்றை ஒண்திரு நயனம்

பொழிந்த கண்ணீர்க் கலுழி பொங்க
அற்ற தென்று மற்றக் கண்ணையும்
பகழித் தலையால் அகழ ஆண்டகை
ஒருகை யாலும் இருகை பிடித்து
ஒல்லை நம்புண் ஒழிந்தது பாராய்

நல்லை நல்லை எனப்பெறும்
திருவேட் டுவர்தந் திருவடி கைதொழக்
கருவேட் டுழல்வினைக் காரியம் கெடுமே. 514

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபிலதேவ நாயனார் அருளிய

# மூத்த நாயனார் திருஇரட்டை மணிமாலை (20)

திருச்சிற்றம்பலம்

## வெண்பா

01. திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை. 515

## கட்டளைக் கலித்துறை

02. கைக்கும் பிணியொடு காலன்
தலைப்படும் ஏல்வையினில்
எய்க்கும் கவலைக் கிடைந்தடைந்
தேன்வெம்மை நாவளைக்கும்
பைக்கும் அரவரை யான்தந்த
பாய்மத யானைபத்துத்
திக்கும் பணிநுதற் கண்திரு
வாளன் திருவடியே. 516

## வெண்பா

03. அடியமர்ந்து கொள்வாயே நெஞ்சமே அப்பம்
இடியலோடு எள்ளுருண்டை கன்னல் - வடிசுவையில்
தாழ்வானை வாழ்வானைத் தன்னடியார் உள்ளத்தே
வாழ்வானை வாழ்த்தியே வாழ். 517

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டளைக் கலித்துறை

04. வாழைக் கனிபல வின்கனி
மாங்கனி தாஞ்சிறந்த
கூழைச் சுருள்குழை அப்பம் எள்
உண்டைஎல் லாம்துறுத்தும்
பேழைப் பெருவயிற் றோடும்
புகுந்தென் உளம்பிரியான்
வேழத் திருமுகத் துச்செக்கர்
மேனி விநாயகனே. 518

## வெண்பா

05. விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து. 519

## கட்டளைக் கலித்துறை

06. கனிய நினைவொடு நாடொறும்
காதற் படும்அடியார்க்கு
இனியன் இனியொர் இன்னாங்கு
இலவம்எவ ரும்வணங்கும்
பனிவெண் பிறை நறுங் கொன்றைச்
சடைப்பலி தேர்இயற்கை
முனிவன் சிறுவன் பெருவெங்கொல்
யானை முகத்தவனே. 520

## வெண்பா

07. யானை முகத்தான் பொருவிடையன் சேய் அழகார்
மான மணிவண்ணன் மாமருகன் - மேல்நிகழும்
வெள்ளக் குமிழி மதத்து விநாயகன் என்
உள்ளக் கருத்தின் உளன். 521

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டளைக் கலித்துறை

08. உளதள வில்லதொர் காதல்என்
நெஞ்சில்வன் நஞ்சமுண்ட
வளரிள மாமணி கண்டன் வண்
டாடுவண் கோதைபங்கத்து
இளவளர் மாமதிக் கண்ணி யெம்
மான்மகன் கைம்முகத்துக்
களகள மாமதம் சேர்களி
யானைக் கணபதியே. 522

## வெண்பா

09. கணங்கொண்ட வல்வினைகள் கண்கொண்ட நெற்றிப்
பணங்கொண்ட பாந்தள் சடைமேல் - மணங்கொண்ட
தாதகத்த தேன்முரலும் கொன்றையான் தந்தளித்த
போதகத்தின் தாள்பணியப் போம். 523

## கட்டளைக் கலித்துறை

10. போகபந் தத்தந்தம் இன்றிநிற்
பீர்புனை தார்முடிமேல்
நாகபந் தத்தந்த நாளம்
பிறையிறை யான்பயந்த
மாகபந் தத்தந்த மாமழை
போல்மதத் துக்கதப்போர்
ஏகதந் தத்துஎந்தை செந்தாள்
இணை பணிந்து ஏத்துமினே. 524

## வெண்பா

11. ஏத்தியே என்னுள்ளம் நிற்குமால் எப்பொழுதும்
மாத்தனிவெண் கோட்டு மதமுகத்துத் - தூத்தழல்போல்
செக்கர் திருமேனிச் செம்பொற் கழலங்கை
முக்கட் கடாயானை முன். 525

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டளைக் கலித்துறை

12. முன்னிளங் காலத்தி லேபற்றி
னேன்வெற்றி மீனுயர்த்த
மன்னிளங் காமன்தன் மைத்துன
னேமணி நீலகண்டத்து
என்னிளங் காய்கனி றேஇமை
யோர்சிங்க மேயுமையாள்
தன்னிளங் காதல னேசர
ணாவுன் சரணங்களே. 526

## வெண்பா

13. சரணுடை யேனென்று தலைதொட் டிருக்க
முரணுடையேன் அல்லேன் நான் முன்னம் - திரள் நெடுங்கோட்டு
அண்டத்தான் அப்புறத்தான் ஆனைமுகத் தானமரர்
பண்டத்தான் தாள்பணியாய் பண்டு. 527

## கட்டளைக் கலித்துறை

14. பண்டந்த மாதரத் தான்என்று
இனியன வேபலவும்
கொண்டந்த நாள்குறு காமைக்
குறுகுவர் கூருணர்வில்
கண்டந்த நீண்முடிக் கார்மத
வார்சடைக் கற்றை யொற்றை
வெண்தந்த வேழ முகத்தெம்
பிரானடி வேட்கையரே. 528

## வெண்பா

15. வேட்கை வினைமுடித்து மெய்யடியார்க்கு இன்பஞ்செய்
ஆட்கொண் டருளும் அரன்சேயை - வாட்கதிர் கொள்
காந்தார மார்பிற் கமழ்தார்க் கணபதியை
வேந்தா உடைத்து அமரர்விண். 529

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கட்டளைக் கலித்துறை

16. விண்ணுதல் நுங்கிய விண்ணுமண்
ணுஞ்செய் வினைப்பயனும்
பண்ணுதல் நுங்கடன் என்பர்மெய்
அன்பர்கள் பாய்மதமா
கண்ணுதல் நுங்கிய நஞ்சமுண்
டார்க்கு மாமிடற்றுப்
பெண்ணுதல் நும்பிரி யாவொரு
பாகன் பெருமகனே. 530

### வெண்பா

17. பெருங்காதல் என்னோடு பொன்னோடை நெற்றி
மருங்கார வார்செவிகள் வீசி - ஒருங்கே
திருவார்ந்த செம்முகத்துக் கார் மதங்கள் சோர
வருவான்தான் நாமம் வரும். 531

### கட்டளைக் கலித்துறை

18. வருகோட் டருபெருந் தீமையும்
காலன் தமரவர்கள்
அருகோட் டரும்அவர் ஆண்மையும்
காய்பவன் கூர்ந்தன்பு
தருகோட் டருமர பிற்பத்தர்
சித்தத் தறியணையும்
ஒருகோட் டிருசெவி முக்கட்செம்
மேனிய ஒண்களிறே. 532

### வெண்பா

19. களியானைக் கன்றைக் கணபதியைச் செம்பொன்
ஒளியானைப் பாரோர்க்கு உதவும் - அளியானைக்
கண்ணுவதும் கைத்தலங்கள் கூப்புவதும் மற்றவன்தாள்
நண்ணுவதும் நல்லார் கடன். 533

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டளைக் கலித்துறை

20. நல்லார் பழிப்பில் எழிற்செம்
பவளத்தை நாணநின்ற
பொல்லா முகத்தெங்கள் போதக
மேபுரம் மூன்றெரித்த
வில்லான் அளித்த விநாயக
னேஎன்று மெய்ம் மகிழ
வல்லார் மனத்தன்றி மாட்டாள்
இருக்க மலர்த்திருவே. 534

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபிலதேவ நாயனார் அருளிய

## சிவபெருமான் திருஇரட்டை மணிமாலை (21)

திருச்சிற்றம்பலம்

### வெண்பா

01. அந்தி மதிமுகிழான் அந்தியஞ் செந்நிறத்தான்
அந்தியே போலும் அவிர்சடையான் - அந்தியில்
தூங்கிருள்சேர் யாமமே போலும் சுடுநீற்றான்
வீங்கிருள்சேர் நீல மிடறு. 535

### கட்டளைக் கலித்துறை

02. மிடற்றாழ் கடல்நஞ்சம் வைக்கின்ற
ஞான்றுமெல் லோதிநல்லாள்
மடற்றா மரைக்கைகள் காத்தில
வேமழு வாள் அதனால்
அடற்றா தையை அன்று தாளெறிந்
தாற்கு அருள் செய்தகொள்கைக்
கடற்றாழ் வயற்செந்நெல் ஏறும்வெண்
காட்டெங் கரும்பினையே. 536

### வெண்பா

03. கருப்புச் சிலையநங்கன் கட்டழகு சுட்ட
நெருப்புத் திருநெற்றி நாட்டம் - திருச்சடையில்
திங்கள் புரையும் திரள்பொன் திருமேனி
எங்கள் இமையோர் இறைக்கு. 537

### கட்டளைக் கலித்துறை

04. இறைக்கோ குறைவில்லை உண்டிறை
யேஎழி லார்எருக்கு
நறைக்கோ மனக்கொன்றை துன்றும்
சடைமுடி நக்கர் சென்னிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறைக்கோர் பிளவும் பெறுவிளிக்
கொண்டெம் பிரானுடுக்கம்
குறைக்கோ வணமொழிந் தாற்பின்னை
ஏதும் குறைவில்லையே. 538

### வெண்பா

05. இல்லை பிறவிக் கடலேறல் இன்புறவில்
முல்லை கமழும் முதுகுன்றில் - கொல்லை
விடையானை வேதியனை வெண்மதிசேர் செம்பொற்
சடையானைச் சாராதார் தாம். 539

### கட்டளைக் கலித்துறை

06. தாமரைக் கோவும்நன் மாலும்
வணங்கத் தலையிடத்துத்
தாமரைக் கோவணத்தோடு இரந்து
உண்ணினும் சார்ந்தவர்க்குத்
தாமரைக் கோமளத் தோடுவ
காளத் தருவர் கண்டீர்
தாமரைக் கோமளக் கைத்தவ
ளப்பொடிச் சங்கரரே. 540

### வெண்பா

07. சங்குகோள் எண்ணுவரே பாவையரைத் தம் அங்கம்
பங்குபோய் நின்றாலும் பாய்கலுழிக் - கங்கை
வரியராய் போதும் வளர்சடையாய் நின்போல்
பெரியார்ஆ வாரோ பிறர். 541

### கட்டளைக் கலித்துறை

08. பிறப்பாழ் குழியிடை வீழ்ந்துநை
வேற்குநின் பேரருளின்
சிறப்பார் திருக்கை தரக்கிற்றி
யேதிரி யும்புரமூன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறப்பாய் எரியுற வான்வரை
வில்வளைத் தாய் இவாய்
மறப்பா வரியர நாணிடைக்
கோத்தகை வானவனே. 542

### வெண்பா

09. வானம் மணிமுகடா மால்வரையே தூணாக
ஆன பெரும்பார் அரங்காகக் - கானகத்தில்
அம்மா முழவதிர ஆடும் பொழுதாரூர்
எம்மானுக்கு எய்தாது இடம். 543

### கட்டளைக் கலித்துறை

10. இடப்பா கமும்உடை யாள்வரை
ஈன்இள வஞ்சியன்ன
மடப்பால் மொழியென்பார் நில்வலப்
பாகத்து மான்மழுவும்
விடப்பா சனக்கச்சும் இச்சைப்
படநீறு அணிந்துமிக்க
கடப்பார் களிற்றுரி கொண்டெங்கும்
மூடும்எங் கண்ணுதலே. 544

### வெண்பா

11. கண்ணி இளம்பிறையும் காய்சினத்த மாசுணமும்
நண்ணி இருந்தால் நலமில்லை - தண்ணலங்கல்
பூங்கொன்றை யின்தேன் பொதியும் சடைப்புனிதா
வாங்கொன்றை இன்றே மதித்தே. 545

### கட்டளைக் கலித்துறை

12. மதிமயங் கப்பொங்கு கோழிருள்
கண்டவ விண்டவர்தம்
மதிமயங் கச்செற்ற கொற்றவில்
வானவ நற்றவர்சூழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகைமங் கைத்திரு வீரட்ட
வாரிட்ட தேனுமுண்டு
கதிமயங் கச்செல்வ தேசெல்வ
மாகக் கருதுவதே. 546

### வெண்பா

13. கருதுங் கருத்துடையேன் கையுடையேன் கூப்பப்
பெரிதும் பிறதிறத்துப் பேசேன் - அரிதன்றே
யாகப் பிறையான் இனியென் அகம்புகுந்து
போகப் பெறுமோ புறம். 547

### கட்டளைக் கலித்துறை

14. புறமறை யப்புரி புன்சடை
விட்டெரி பொன்திகழும்
நிறமறை யத்திரு நீறு
துதைந்தது நீள்கடல் நஞ்சு
உறமறை யக்கொண்ட கண்டமும்
சால உறப்புடைத்தால்
அறமறை யச்சொல்லி வைத்துஜயம்
வேண்டும் அடிகளுக்கே. 548

### வெண்பா

15. அடியோமைத் தாங்கியோ ஆடை உடுத்தோ
குடியோம்ப மாநிதியங் கொண்டோ - பொடியாடு
நெற்றியூர் வாளரவு நீள்சடையாய் நின்னூரை
ஒற்றியூர் ஆக்கிற்று உரை. 549

### கட்டளைக் கலித்துறை

16. உரைவந் துறும்பதத் தேயுரை
மின்களன் றாயினிப்பால்
நாரைவந் துறும்பின்னை வந்துறுங்
காலன்நன் முத்திடறித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைவந் துறுங்கரைக் கேகலம்
வந்துறத் திண்கைவன்றாள்
வரைவந் துறுங்கடல் மாமறைக்
காட்டெம் மணியினையே. 550

### வெண்பா

17. மணியமரும் மாமாட வாய்மூரான் தன்னை
அணியமா ரோடுஅயனும் மாலும் - துணிசினத்த
செஞ்சூட்ட சேவற்கொடியானு மாய்நின்று
நஞ்சூட்ட எண்ணியவா நன்று. 551

### கட்டளைக் கலித்துறை

18. நன்றைக் குறும்இரு மற்பெரு
மூச்சுநண் ணாதமுன்னம்
குன்றைக் குறுவது கொண்டழி
யாதறி வீர்செறிமின்
கொன்றைக் குறுநறுங் கண்ணியி
னான்தன்கொய் பூங்கயிலைக்
குன்றைக் குறுகரி தேனும்உள்
ளத்திடைக் கொள்மின்களே. 552

### வெண்பா

19. கொண்ட பலிநுமக்கும் கொய்தார் குமரர்க்கும்
புண்டரிக மாதினுக்கும் போதுமே - மண்டி
உயிரிழந்தார் சேர்புறங்காட்டு ஓரிவாய் ஈர்ப்ப
மயிலிழந்த வெண்டலைவாய் வந்து. 553

### கட்டளைக் கலித்துறை

20. வந்தாறு அலைக்கும் வலஞ்சுழி
வானவ வானவர் தம்
அந்தார் மகுடத் தடுத்தபைம்
போதில் தேனுழக்கிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தா மரைச்செவ்வி காட்டும்
திருவடிக் கும்செல்லுமே
எந்தாய் அடித்தொண்டர் ஓடிப்
பிடித்திட்ட இன்மலரே. 554

### வெண்பா

21. மலர்ந்த மலர்தூவி மாமனத்தைக் கூப்பிப்
புலர்ந்தும் புலராத போதும் - கலந்திருந்து
கண்ணீர் அரும்பக் கசிவார்க்குக் காண்பெளியன்
தெண்ணீர் சடைக் கரந்ததே. 555

### கட்டளைக் கலித்துறை

22. தேவனைப் பூதப் படையனைக்
கோதைத் திருஇதழிப்
பூவனைக் காய்சினப் போர்விடை
தன்னொடும் போற்றநின்ற
மூவனை ஈருரு வாயமுக்
கண்ணனை முன்னுமறை
நாவனை நான்மற வேனிவை
நான் வல்ல ஞானங்களே. 556

### வெண்பா

23. நானும்என் நல்குரவும் நல்காதார் பல்கடையில்
கானிமார்ந்து நின்றிரப்பக் கண்டிருக்கும் - வானவர்கள்
தம்பெருமான் மூவெயிலும் வேவச் சரந்துரர்த்த
எம்பெருமான் என்னா இயல்பு. 557

### கட்டளைக் கலித்துறை

24. இயலிசை நாடக மாயெழு
வேலைக ளாய்வழுவாய்
புயலில் விண்ணொடு மண்முழு
தாய்ப்பொழு தாகிநின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலியல் மாமறைக் காடர்வெண்
காடர்வண் தில்லைமல்கு
கயலியல் கண்ணிபங் கார் அன்பர்
சித்தித்து அடங்குவரே. 558

### வெண்பா

25. அடங்காதார் ஆரொருவர் அங்கொன்றை துன்ற
மடங்காதல் என்வளை கொள்வார்த்தை - நுடங்கிடையீர்
ஊரூரன் சென்றக்கால் உண்பலிக் கென்று அங்ஙனே
ஆரூரன் செல்லுமாறு அங்கு. 559

### கட்டளைக் கலித்துறை

26. அங்கை மறித்தவ ரால்அவி
உண்ணும் அவ் வானவர்கள்
தங்கை மறித்தறி யார்தொழு
தேநிற்பர் தாழ்சடையின்
கங்கை மறித்தண வப்பண
மாசுணக் கங்கணத்தின்
செங்கை மறித்(து)இர விற்சிவன்
ஆடுந் திருநட்டமே. 560

### வெண்பா

27. நட்டம்நீ ஆடும் பொழுதத்து நல்லிலயம்
கொட்டக் குழிந்தொழிந்த வாகொல்லோ - வட்டுக்
கடுங்குன்ற மால்யானைக் காருரிவை போர்த்த
கொடுங்குன்ற பேயின் கொடிறு. 561

### கட்டளைக் கலித்துறை

28. கொடிறு முரித்தன்ன உன்தாள்
அல்வன் குருகினம் சென்று
இடறுங் கழனிப் பழனத்
தரசை எழில் இமையோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிறு மொழிந்து பருகக்
கொடுத்துப் பரவை நஞ்சம்
மிடறு தடுத்தது வும் அடி
யேங்கள் விதிவசமே. 562

### வெண்பா

29. விதிகரந்த செய்வினையேன் மென்குழற்கே வாளா
மதுகரமே எத்துக்கு வந்தாய் - நதிகரந்த
கொட்டுக்காட் டான்சடைமேல் கொன்றைக் குறுந்தெரியல்
தொட்டுக்காட் டாய் சுழல்வாய் தொக்கு. 563

### கட்டளைக் கலித்துறை

30. தொக்கு வருங்கணம் பாடத்தொல்
நீறணிந் தேநிலவும்
நக்கு வருங்கண்ணி குடிவந்
தார்நறும் புன்னை முன்னம்
அக்கு வருங்கழிக் கானலை
யாறரைக் காண அன்பு
மிக்கு வரும்அரும் போதவ
ரைக்காண வெள்குவனே. 564

### வெண்பா

31. வெள்காதே உண்பலிக்கு வெண்டலை கொண்டு ஊர்திரிந்தால்
எள்காரே வானவர்கள் எம்பெருமான் - வள்கூர்
வடதிருவீ ரட்டானத் தென்அதிகை மங்கைக்
குடதிருவீ ரட்டானங் கூறு. 565

### கட்டளைக் கலித்துறை

32. கூறு பெறுங்கண்ணி சேர்கருங்
கூந்தல்சுண் ணந்துதைந்து
நீறு பெறுந்திரு மேனி
நெருப்புப் புரைபெயருப் பொத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு பெறுஞ்சடை அங்கொன்றை
யந்தேன் துவலைசிந்த
வீறு பெறுஞ்சென்று சென்றெம்
பிரானுக்கு வெண்ணிறமே. 566

### வெண்பா

33. நிறம்பிறிதாய் உள்மெலிந்து நெஞ்சுருகி வாளா
புறம்புறமே நாள்போக்கு வாளோ - நறுந்தேன்
படுமுடியாப் பாய்நீர் பரந்தொழுகு பாண்டிக்
கொடுமுடியாய் என்றன் கொடி. 567

### கட்டளைக் கலித்துறை

34. கொடிக்குல வும்மதிற் கோவலூர்
வீரட்டக் கோளரவம்
பிடிக்கில அம்முடிப் பூணலை
யத்தொடு மால்விடையின்
இடிக்குரல் கேட்டிடி என்றிரு
கக்கடி வாளெயிற்றால்
கடிக்க லுறும்அஞ்சி நஞ்சம்
இருந்தநின் கண்டத்தையே. 568

### வெண்பா

35. கண்டம் நிறங்கறுப்பக் கவ்வைக் கருங்கடல் நஞ்சு
உண்டல் புரிந்துகந்த உத்தமற்குத் - தொண்டடைந்தார்
கூசுவரே கூற்றைக் குறுகுவரே தீக்கொடுமை
பேசுவரே மற்றொருவர் பேச்சு. 569

### கட்டளைக் கலித்துறை

36. பேய்ச்சுற்றம் வந்திசை பாடப்
பிணமிடு காட்டயலே
தீச்சுற்ற வந்துநின் றாடல்என்
னாஞ்செப்பு முப்பொழுதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோச்சுற்ற மாக்குடை வானவர்
 கோனயன் மால் முதலா
மாச்சுற்றம் வந்திறைஞ் சுந்திருப்
 பொற்சடை மன்னவனே. 570

## வெண்பா

37. மன்னும் பிறப்பறுக்கும் மாமருந்து வாளரக்கன்
துன்னும் சுடர்முடிகள் தோள்நெரியத் - தன்னைத்
திருச்சத்தி முற்றத்தான் சித்தத்துள் வைத்தான்
திருச்சத்தி முற்றத்தான் தேசு. 571

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபிலதேவ நாயனார் அருளிய

# சிவபெருமான் திருவந்தாதி (22)

திருச்சிற்றம்பலம்

01. ஒன்று முதலாக நூறளவும் ஆண்டுகள் வாழ்ந்து
ஒன்றும் மனிதர் உயிரையுண் - டொன்றும்
மதியாத கூற்றுதைத்த சேவடியான் வாய்ந்த
மதியான் இடப்பக்கம் மால். 572

02. மாலை ஒருபால் மகிழ்ந்தானை வண்கொன்றை
மாலை ஒருபால் முடியானை - மாலை
ஒளியானை உத்தமனை உண்ணாநஞ்சு உண்டற்கு
ஒளியானை ஏத்தி உளம். 573

03. உளமால் கொண்டு ஓடி ஒழியாது யாமும்
உளமாகில் ஏத்தாவாறு உண்டே - உளம் மாசற்று
அங்கமலம் இல்லா அடல் வெள்ளேறு ஊர்ந்துழலும்
அங்கமல வண்ணன் அடி. 574

04. அடியார்தம் ஆருயிருரை அட்டழிக்கும் கூற்றை
அடியால் அருவாகச் செற்றான் - அடியார்தம்
அந்தரத்தால் ஏத்தி அகங்குழைந்து மெய்யரும்பி
அந்தரத்தார் சூடும் அலர். 575

05. அலராளுங் கொன்றை அணியல் ஆரூரற்கு
அலராகி யானும் அணிவன - அலராகி
ஓதத்தான் ஓட்டினேன் ஓதுவன்யான் ஓங்கொலிநீர்
ஓதத்தான் நஞ்சுண்டான் நீர். 576

06. ஊருமது ஒற்றியூர் உண்கலனும் வெண்தலையே
ஊரும் விடையொன்று உடைதோலே - ஊரும்
படநாகம் மட்டார் பணமாலை ஈதோ
படநாகம் அட்டார் பரிசு. 577

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. பரியானை ஊராது பைங்கண் ஏறுஊரும்
பரியானைப் பாவிக்கலாகா - பரியானைக்
கட்டங்கம் ஏந்தியாக் கண்டுவாழ் நன்னெஞ்சே
கட்டங்கம் ஏந்தியாகக் கண்டு. 578

08. கண்டங் கரியன் உமைபாலும் தன்பாலும்
கண்டங்கரியன் கரிகாடன் - கண்டங்கள்
பாடியாட் பாடும் பரஞ்சோதிக்கு என்னுள்ளம்
பாடியாக் கொண்ட பதி. 579

09. பதியார் பழிதீராப் பைங்கொன்றை தாவென்
பதியான் பலநாள் இரக்கப் - பதியாய
அம்மானார் கையார் வளை கவர்ந்தார் அ∴தேகொல்
அம்மானார் கையார் அறம். 580

10. அறமானம் நோக்காது அநங்கனையும் செற்றங்கு
அறமாநஞ் சுண்ட அமுதன் - அறமான
ஓதியாள் பாகம் அமர்ந்தான் உயர்புகழே
ஓதியான் தோற்றேன் ஒளி. 581

11. ஒளியார் சுடர்மூன்றும் கண்மூன்றாக் கோடற்கு
ஒளியான் உலகெல்லாம் ஏத்தற்கு - ஒளியாய
கள்ளேற்றான் கொன்றையான் காப்பிகந்தான் நன்னெஞ்சே
கள்ளேற்றான் கொன்றை கடிது. 582

12. கடியரவர் அக்கர் கரிதாடு கோயில்
கடியரவர் கையதுமோர் சூலம் - கடியரவர்
ஆனேற்றார்க்கு ஆட்பட்ட நெஞ்சமே அஞ்சல்நீ
ஆனேற்றார்க்கு ஆட்பட்டேம் யாம். 583

13. யாமான நோக்காது அலர்கொன்றைத் தார்வேண்ட
யாமானம் கொண்டங்கு அவர்தந்தார் - யாமாவா
ஆவூரா ஊரும் அழகா அனலாடி
ஆவூரார்க்கு என்னுரைக்கோம் யான். 584

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. யானென்றங்கு அண்ணாமலையான் அகம்புகுந்து
யானென்றங்கு ஐயறிவும் குன்றுவித்து - யானென்றங்கு
ஆர்த்தானே ஆயிடினும் அம்பரன்மேல் அங்கொன்றை
ஆர்த்தானேல் உய்வது அரிது. 585

15. அரியாரும் பூம்பொழில்சூழ் ஆமாத்தூர் அம்மான்
அரியாரும் பாகத்து அமுதன் - அரியாரும்
வேங்கடத்து மேயானை மேவா உயிரெல்லாம்
வேங்கடத்து நோயால் வியந்து. 586

16. வியத்தாழி நன்னெஞ்சே மெல்லிய லார்க்கு ஆளாய்
வியத்தாசை யுள்மெலிய வேண்டா - வியந்தாய்
கண்ணுதலான் எந்தைகா பாலி கழலடிப்பூக்
கண்ணுதலாம் நம்பாற் கடன். 587

17. கடனாகும் ஊராத காரணமும் கங்கை
கடனாக நீகவர்ந்த வாறும் - கடனாகப்
பாரிடந்தான் மேவிப் பயிலும் பரஞ்சோதி
பாரிடந்தான் மேயாய் பணி. 588

18. பணியாய் மடநெஞ்சே பல்சடையான் பாதம்
பணியாத பத்தர்க்குஞ் சேயன் - பணியாய
ஆகத்தான் செய்துமேல் நம்மை அமரர்கோன்
ஆகத்தான் செய்யும் அரன். 589

19. அரன்காய நைவேற்கு அநங்கவேள் அம்பும்
அரன்காயும் அந்தியும்மற்று அந்தோ! - அரங்காய
வெள்ளில்சேர் காட்டாடி வேண்டான் களிறுண்ட
வெள்ளில் போன்று உள்ளம் வெறிது. 590

20. வெறியானை ஊர்வேந்தார் பின்செல்லும் வேட்கை
வெறியார்பூந் தாரான் விமலன் - வெறியார்தம்
அல்லல் நோய்தீர்க்கும் அருமருந்தாம் ஆரூர்க்கோன்
அல்லனோ நெஞ்சே அயன். 591

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. அயமால்ஊண் ஆடரவம் நாண்அதளது ஆடை
அயமாவது ஆனேறூர் ஆரூர் - அயமாய
என்னக்கன் தாழ்சடையன் நீற்றன் எரியாடி
என்னக்கன் றாழும் இவன். 592

22. ஆழும் இவளையும் கையகல ஆற்றேனென்று
ஆழும் இவளை அயராதே - ஆழும்
சலமுடியாய் சங்கரனே சங்கக் குழையாய்
சலமுடியாது இன்றருள்உன் தார். 593

23. தாராய தண்கொன்றை யானிரப்பத் தானிதனைத்
தாராதே சங்கம் சரிவித்தான் - தாராவல்
ஆனைமேல் வைகும் அணிவயல்ஆ ரூர்க்கோன்நல்
ஆனையும் வானோர்க்கு அரசு. 594

24. அரசுமாய் ஆள்விக்கும் ஆட்பட்டார்க்கு அம்மான்
அரசுமாம் அங்கொன்று மாலுக்கு - அரசுமான்
ஊர்தி எரித்தான் உணரும் செவிக்கின்பன்
ஊர்தி எரித்தான் உறா. 595

25. உறாவேயென் சொற்கள் ஒளிவளைநின் உள்ளத்து
உறாவேதீ உற்றனகள் எல்லாம் - உறாவேபோய்க்
நாவாலி தார்நினைந்து கைசோர்ந்து மெய்மறந்தான்
காவாலி தானின் கலை. 596

26. கலைகாமின் ஏர்காமின் கைவளையல்கள் காமின்
கலைசேர் நுதலிர்நாண் காமின் - கலையாய
பான்மதியன் பண்டரங்கன் பாரோம்பு நான்மறையன்
பால்மதியன் போந்தான் பலிக்கு. 597

27. பலிக்குத் தலையேந்திப் பாரிடங்கள் சூழப்
பலிக்கு மனைபுகுந்து பாவாய் - பலிக்குநீ
ஐயம்பெய் என்றானுக்கு ஐயம்பெய் கின்றேன்மேல்
ஐயம்பெய் தான்அநங்கன் ஆய்ந்து. 598

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. ஆயம் அழிய அலர்கொன்றைத் தார்வேண்டி
ஆயம் அழிய அயர்வேன்மேல் - ஆயன்வாய்த்
தீங்குழலும் தென்றலும் தேய்கோட்டு இளம்பிறையும்
தீங்குழலும் என்னையே தேர்ந்து. 599

29. தேரான் கதிரென்னும் செந்தழலால் வெந்தெழுபேய்த்
தேரான் கதிரென்னும் செய்பொருள் நீ - தேராதே
கூடற்கா வாலி குரைகழற்கா நன்னெஞ்சே
கூடற்கா வாலி தரக்கூர். 600

30. கூரால மேயாக் குருகோடு நைவேற்குக்
கூரார்வேற் கையார்க்காய்க் கொல்லாமே - கூரார்
பனிச்சங்காட் டார்சடைமேற் பால்மதியைப் பாம்பே
பனிச்சங்காட் டாய்கடிக்கப் பாய்ந்து. 601

31. பாயும் விடையூர்தி பாசுபதன் வந்தெனது
பாயிற் புகுதப் பணை முலைமேல் - பாயிற் அனற்
கொன்றாய் குளிர்சடையாற்கு என்நிலைமை கூறதே
கொன்றாய் இதுவே குணம். 602

32. குணக்கோடி கோடாக் குளிர்சடையான் வில்லின்
குணக்கோடிக் குன்றம்சூழ் போகிக் - குணக்கோடித்
தேரிரவில் வாரான் சிவற்கு ஆளாம் சிந்தனையே
தேரிரவில் வாழும் திறம். 603

33. திறங்காட்டும் சேயாள் சிறுகிளியைத் தான்தன்
திறங்காட்டும் தீவண்ணன் என்னும் - திறங்காட்டின்
ஊர்அரவம் ஆர்த்தானோடு என்னை உடன்கூட்டின்
ஊர் அரவம் சாலஉடைத்து. 604

34. உடையோடு காடாடி ஊர்ஐயம் உண்ணி
உடையாடை தோல்பொடி சந்துஎன்னை - உடையானை
உன்மத்தக முடிமேல் உய்த்தானை நன்னெஞ்சே
உன்மத்தக முடிமேல் உய். 605

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. உய்யாதென் ஆவி ஒளிவளையும் மேகலையும்
உய்யாது உடம்பழிக்கும் ஒண்திதலை - உய்யாம்
இறையானே ஈசனே எம்மானே நின்னை
இறையானும் காண்கிடாய் இன்று. 606

36. இன்றியாம் உற்ற இடரும் இருந்துயரும்
இன்றியாம் தீர்தும் எழில் நெஞ்சே - இன்றியாம்
காட்டாநஞ் சேற்றாஅன் காமரு வெண்காட்டான்
காட்டான்அஞ் சேற்றான் கலந்து. 607

37. காலம் பெரியார்க்கு ஆம் சிரம்காய் வில்மேரு என்னும்
கலம்பெரிய ஆல்கீழ் இருக்கை - கலம்பிரியா
மாக்கடல்நஞ் சுண்டார் கழல்தொழார்க்கு உண்டாமோ
மாக்கடனஞ் சேரும் வகை. 608

38. கையாறு அவா வெகுளி அச்சம் கழிகாமம்
கையாறு செஞ்சடையான் காப்பென்னும் - கையாறு
மற்றிரண்ட தோளானைச் சேர்நெஞ்சே சேரப்போய்
மற்றிரண்ட தோளான் மலை. 609

39. மனையாய் பலிக்கென்று வந்தான்வண் காமன்
மனையா சறச்செற்ற வானோன் - மனையாய
என்பாவாய் என்றேனுக்கு யானல்லேன் நீதிருவே
என்பாவாய் என்றான் இறை. 610

40. இறையாய வெண்சங்கு இவைதருவேன் என்னும்
இறையாகம் இன்றருளாய் என்னும் - இறையாய்
மறைக்காட்டாய் மாதவனே நின்னுருவம் இங்கே
மறைக்காட்டாய் என்னும்இம் மாது. 611

41. மாதரங்கம் தன்னரங்கஞ் சேர்த்தி வளர்சடைமேல்
மாதரங்கக் கங்கைநீர் மன்னுவித்து - மாதரங்கத்
தேரானை யூரான் சிவற்காளாம் சிந்தனையே
தேரானை யூரானைத் தேர். 612

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. தெருளிலார் என்னாவார் காவிரிவந் தேறும்
அருகில் சிராமலையெங் கோமான் - விரியுலகில்
செல்லுமதில் மூன்றெரித்தான் சேவடியே யாம்பரவிச்
செல்லும் எழில் நெஞ்சே தெளி. 613

43. தெளியாய் மடநெஞ்சே செஞ்சடையான் பாதம்
தெளியாதார் தீநெறிக்கண் செல்வர் - தெளியாய
பூவார் சடைமுடியான் பொன்னடிக்கே ஏத்துவன்நற்
பூவாய வாசம் புனைந்து. 614

44. புனைகடற்குப் பொன்கொடுக்கும் பூம்புகார் மேயான்
புனைகடுக்கை மாலைப் புராணன் புனைகடந்து
நட்டங்கம் ஆட்டயரும் நம்பன் திருநாமம்
நட்டங்க மாட்டேன் நக்கு. 615

45. நக்கரை சாளும் நடுநாளை நாரையூர்
நக்கரை வக்கரையோம் நாமென்ன - நக்குரையோம்
வண்டாழங் கொன்றையான் மால்பணித்தான் மற்றவர்க்காய்
வண்டாழங் கொண்டான் மதி. 616

46. மதியார் அடுகின்ற தென்னும்மால் கூரும்
மதியாதே வைதுரப்பார் என்னும் - மதியாதே
மாதெய்வம் ஏத்தும் மறைக்காடா ஈதேகொல்
மாதெய்வம் கொண்ட வனப்பு. 617

47. வனப்பார் நிறமும் வரிவளையும் நாணும்
வனப்பார் வளர்சடையான் கொள்ள - வனப்பாற்
கடல்திரையும் ஈரும்இக் கங்குல்வா யான்கண்
கடல்திரையும் ஈருங் கனன்று. 618

48. கனன்றாழி நன்னெஞ்சே கண்ணுதலார்க்கு ஆளாய்க்
கனன்றார் களிற்றுரிமால் காட்டக் - கனன்றோர்
உடம்பட்ட நாட்டத்தர் என்னையுந்தன் ஆளா
உடம்பட்ட நாட்டன் உரு. 619

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. உருவியலும் செம்பவளம் ஒன்னார் உடம்பில்
உருவியலும் சூலம் உடையன் - உருவியலும்
மாலேற்றான் நான்முகனும் மண்ணோடு விண்ணும்போய்
மாலேற்றாற்கு ஈதோ வடிவு. 620

50. வடிவார் அறப்பொங்கி வண்ணகச் சுந்தி
வடிவார் வடம்புனைந்தும் பொல்லா - வடிவார்மேல்
முக்கூடல் அம்மா முருகமரும் கொன்றையந்தார்
முக்கூட மாட்டா முலை. 621

51. முலைநலம்சேர் கானப்பேர் முக்கணான் என்னும்
முலைநலஞ்சேர் மொய்சடையான் என்னும் - முலைநலஞ்சேர்
மாதேவா என்று வளர்கொன்றை வாய்சோர
மாதேவா சோரல் வளை. 622

52. வளையாழி யோடகல மால்தந்தான் என்னும்
வளையாழி நன்னெஞ்சே காணில் - வளையாழி
வன்னஞ்சைக் கண்டமரர் வாய்சோர வந்தெரிந்த
வன்னஞ்சக் கண்டன் வரில். 623

53. வரிநீல வண்டலம்பு மாமறைக்காட் டங்கேழ்
வரிநீர் வலம்புரிகள் உந்தி - வரிநீர்
இடுமணல்மேல் அந்நலங்கொண்டு இன்னாநோய் செய்தான்
இடுமணல் மேல் ஈசன் எமக்கு. 624

54. அக்காரம் ஆடரவம் நாண் அறுவை தொல்பொடிசாந்து
அக்காரம் தீர்ந்தேன் அடியேற்கு - வக்காரம்
பண்டரங்கன் எந்தை படுபிணஞ்சேர் வெங்காட்டுப்
பண்டரங்கன் எங்கள் பவன். 625

55. பவனடிபார் விண்நீர் பகலோன் மதிதீப்
பவனஞ்சேர் ஆரமுதம் பெண்ணாண் - பவனஞ்சேர்
காலங்கள் ஊழி அவனே கரிகாட்டிற்
காலங்கை ஏந்தினான் காண். 626

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. காணங்கை இம்மைக் கருதிக் கவலாதே
காணங்கை யால்தொழுது நன்னெஞ்சே - காணங்கை
பாவனையாய் நின்றான் பயிலும் பரஞ்சோதி
பாவனையாய் நின்ற பதம். 627

57. பதங்க வரையுயர்ந்தான் பான்மகிழ்ந்தான் பண்டு
பதங்கள் எயிறு பறித்தான் - பதங்கையால்
அஞ்சலிகள் அன்பாலும் ஆக்குதிகாண் நெஞ்சே கூர்ந்து
அஞ்சலிகள் அன்பாலும் ஆக்கு. 628

58. ஆக்கூர் பனிவாடா ஆவிசோர்ந்து ஆழ்கின்றேன்
ஆக்கூர் அலர்தான் அழகிதா - ஆக்கூர்
மறையோம்பு மாடத்து மாமறையோ நான்கு
மறையோம்பு மாதவர்க்காய் வந்து. 629

59. வந்தியான் சீறினும் ஆழிமட நெஞ்சே
வந்தியா உள்ளத்து வைத்திராய் - வந்தியாய்
நம்பரனை யாடும் நளின்புன் சடையானை
நம்பரனை நாள்தோறும் நட்டு. 630

60. நட்டமா கின்றன வொண்சங்கம் நானவன்பால்
நட்டமா நன்னீர்மை வாடினேன் - நட்டமா
டீயான் எரியாடி எம்மான் இருங்கொன்றை
ஈயானேல் உய்வது இலம். 631

61. இலமலர்அஞ் சேவடியார் ஏகப்பெறாரே
இலமலரே யாயினும் ஆகு - இலமலரும்
ஆம்பல்சேர் செவ்வாயரக்கு ஆடாதே ஆடினேன்
ஆம்பல்சேர் வெண்தலையர்க்கு ஆள். 632

62. ஆளானம் சேர்களிறும் தேரும் அடல்மாவும்
ஆளானார் ஊரத்தான் ஏறூரும் - தாளான்பொய்
நாடகங்கள் ஆட்டயரும் நம்பன் திருநாமம்
நாடகங்கள் ஆடி நயந்து. 633

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63. நயந்தநாள் யானிரப்ப நற்சடையான் கொன்றை
நயந்தநாள் நன்னீர்மை வாட - நயந்தநாள்
அம்பகலம் செற்றான் அருளான் அநங்கவேள்
அம்பகலம் பாயும் அலர்ந்து. 634

64. அலங்காரம் ஆடரவம் என்புதோல் ஆடை
அலங்கார வண்ணற்கு அழகார் - அலங்காரம்
மெய்காட்டு வார்குழலார் என்னாவார் வெள்ளேற்றான்
மெய்காட்டும் வீடாம் விரைந்து. 635

65. விரையார் புனற்கங்கை சேர்சடையான் பொன்னார்
விரையார் பொழில் உறந்தைமேயான் - விரையாநீறு
என்பணிந்தான் ஈசன் இறையான் இறையாடி
என்பணிந்தான் ஈசன் எனக்கு. 636

66. எனக்குவளை நில்லா எழில்இழந்தேன் என்னும்
எனக்குவளை நில்லா நோய் செய்தான் - இனக்குவளைக்
கண்டத்தான் நால்வேதன் காரோணத்து எம்மானைக்
கண்டத்தான் நெஞ்சேகாக் கை. 637

67. காக்கைவளை என்பார்ப்பார்க்கு அன்பாப்பா னையாதே
காக்கைவளை யென்பார்ப்பான் ஊன்குரக்குக் - காக்கைவளை
ஆடானை ஈருரியன் ஆண்பெண் அவிர் சடையன்
ஆடானை யானது அமைவு. 638

68. அமையாமென் தோள்மெலிவித்து அம்மாமை கொண்டிங்கு
அமையாநோய் செய்தான் அணங்கே - எமையாளும்
சாமத்த கண்டன் சடைசேர் இளம்பிறையன்
சாமத்தன் இந்நோய்செய் தான். 639

69. தானக்கன் நக்கபிறையன் பிறைக்கோட்டுத்
தானக் களிற்றுரியன் தண்பழனன் - தானத்
தரையன் அரவரையன் ஆயிழைக்கும் மாற்கும்
அரையன் உடையான் அருள். 640

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70. அருள்நம்பால் செஞ்சடையன் ஆமாத்தூர் அம்மான்
அருள்நம்பால் நல்கும் அமுதன் - அருள்நம்பால்
ஓராழித் தேரான் எயிறட்ட உத்தமனை
ஓராழி நெஞ்சே உவ. 641

71. உவவா நறுமலர் கொண்டு உத்தமனை உள்கி
உவவா மனமகிழும் வேட்கை - உவவாறு
எழுமதிபோல் வாள்முகத்து ஈசனார்க்கு என்னே
எழுமதிபோல் ஈசன் இடம். 642

72. இடமால் வலமாலை வண்ணமே தம்பம்
இடமால் வலமானஞ் சேர்த்தி - இடமாய
மூளா மதிபுரையும் முன்னிலங்கு மொய்சடையான்
மூவா மதியான் முனி. 643

73. முனிவன்மால் செஞ்சடையான் முக்கணான் என்னும்
முனிவன்மால் செய்துமுன் நிற்கும் - முனிவன்மால்
போற்றார் புரம்எரித்த புண்ணியன்தன் பொன்னடிகள்
போற்றநாள் இன்று புலர்ந்து. 644

74. புலர்ந்தால்யான் ஆற்றேன் புறனுரையும் அஃதே
புலர்ந்தானூர் புன்கூரான் என்னும் - புலர்ந்தாய
மண்டளியன் அம்மான் அவர்தம் அடியார்தம்
மண்டளியன் பின்போம் மனம். 645

75. மனமாய நோய்செய்தான் வண்கொன்றை தாரான்
மனமாய உள்ளார வாரான் - மனமாயப்
பொன்மாலை சேரப் புனைந்தான் புனை தருப்பைப்
பொன்மாலை சேர்சடையான் போந்து. 646

76. போந்தார் புகவணைந்தார் பொன்னேர்ந்தார் பொன்னாமை
போந்தார் ஒழியார் புரமெரித்தார் - போந்தார்
இலங்கோல வாள்முகத்து ஈசனாற்க்கு எல்லே
இலங்கோலம் தோற்பது இனி. 647

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

77. இனியாரும் ஆளாக எண்ணுவர்கொல் எண்ணார்
இனியானஞ்சு ஊணிருக்கைக்கு உள்ளான் - இனியானைத்
தாளங்கை யாற்பாடித் தாழ்சடையான் தானுடைய
தாளங்கை யால்தொழுவார் தாம். 648

78. தாமரைசேர் நான்முகற்கும் மாற்கும் அறிவரியார்
தாமரைசேர் பாம்பர் சடாமகுடர் - தாமரைசேர்
பாணியார் தீர்ந்தளிப்பர் பாரோம்பு நான்மறையார்
பாணியார் தீர்ந்தளிப்பார் பார். 649

79. பார்கால்வான் நீர்தீப் பகலோன் பனிமதியோன்
பார்கோல மேனிப் பரனடிக்கே - பார்கோலக்
கோகரணத் தானறியக் கூறுதியே நன்னெஞ்சே
கோகரணத் தானாய கோ. 650

80. கோப்பாடி ஓடாதே நெஞ்சம் மொழிகூத்தன்
கோப்பாடிக் கோகரணங் குற்றாலம் - கோப்பாடிப்
பின்னைக்காய் நின்றார்க்கு இடம்கொடுக்கும் பேரருளான்
பின்னைக்காம் எம்பெருமான் பேர். 651

81. பேரானை ஈருரிவை போர்த்தானை ஆயிரத்தெண்
பேரானை ஈருருவம் பெற்றானைப் - பேராநஞ்சு
உண்டானை உத்தமனை உள்காதார்க்கு எஞ்ஞான்றும்
உண்டாம்நான் அல்ல உயிர். 652

82. உயிராய மூன்றொடுக்கி ஐந்தடக்கி உள்ளத்து
உயிராய ஒண்மலர்த்தாள் ஊடே - உயிரான்
பகர்மனத்தான் பாசுபதன் பாதம் பணியப்
பகர்மனமே ஆசைக்கண் பட்டு. 653

83. பட்டாரண் பட்ட ரங்கன் அம்மான் பரஞ்சோதி
பட்டார் எலும்பணியும் பாசுபதன் - பட்டார்ந்த
கோவணத்தான் கொல்லேற்றன் என்றென்று நெஞ்சமே
கோவணத்து நம்பனையே கூறு. 654

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84. கூற்றும் பொருளும்போற் காட்டியென் கோல்வளையைக்
கூற்றின் பொருள் முயன்ற குற்றாலன் - கூற்றின்
செருக்கழியச் செற்ற சிவற்கடிமை நெஞ்சே
செருக்கழியா முன்னமே செய். 655

85. செய்யான் கருமிடற்றான் செஞ்சடையான் தேன்பொழில்சூழ்
செய்யான் பழனத்தான் மூவுலகும் - செய்யாமுன்
நாட்டுணாய் நின்றானை நாடுதும்போய் நன்னெஞ்சே
நாட்டுணாய் நின்றானை நாம். 656

86. நாவாய் அகத்துளதே நாமுளமே நம்மீசன்
நாவாய்போல் நன்னெறிக்கண் உய்க்குமே - நாவாயால்
துய்க்கப்படும் பொருளைக் கூட்டுதும் மற்றவர்க்காள்
துய்க்கப் படுவதாம் சூது. 657

87. சூதொன்று உனக்கறியச் சொல்லினேன் நன்னெஞ்சே
சூதன் சொலற்கரிய சோதியான் - சூதின்
கொழுந்தேன் கமழ்சோலைக் குற்றாலம் பாடிக்
கொழுந்தே இழந்தேன் குருகு. 658

88. குருகிளவேய்த் தோள்மெலியக் கொங்கைமார் புல்கிக்
குருகிளையார்கோடு கொடாமே - குருகிளரும்
போதார் கழனிப்புகலூர் அமர்ந்துறையும்
போதாநின் பொன்முடிக்கண் போது. 659

89. போதரங்க வார்குழலார் என்னாவார் நன்னெஞ்சே
போதரங்க நீர்கரந்த புண்ணியனைப் - போதரங்கக்
கானகஞ்சேர் சோதியே கைவிளக்கா நின்றாடும்
கானகஞ்சேர் வாற்கு அடிமைகள். 660

90. கற்றான்அஞ் சாடுகா வாலி களந்தைக்கோன்
கற்றானைக் கல்லாத நாளெல்லாம் - கற்றான்
அமரர்க்கு அமரர் அரர்க்கு அடிமை பூண்டார்
அமரர்க்கு அமரர்ஆ வார். 661

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

91. ஆவா மனிதர் அறிவிலரே யாதொன்றும்
ஆவார்போற் காட்டி அழிகின்றார் - ஆஆ
பகல்நாடிப் பாடிப் படர்சடைக்குப் பல்பூப்
பகல்நாடி ஏத்தார் பகர்ந்து. 662

92. பகனாட்டம் பாட்டயரும் பாட்டோடு ஆட்டுஎல்லி
பகனாட்டம் பாழ்படுக்கும் உச்சி - பகனாட்டம்
தாங்கால் தொழுதெழுவார் தாழ்சடையார் தம்முடையது
தாங்கால் தொழுதல் தலை. 663

93. தலையாலங் காட்டிற் பலிதிரிவர் என்னும்
தலையாலங் காடர்தாம் என்னும் - தலையாய
பாகீ ரதிவளரும் பல்சடையீர் வல்விடையீர்
பாகீ ரதிவளரும் பண்பு. 664

94. பண்பாய நான்மறையான் சென்னிப் பலிதேர்ந்தான்
பண்பாய பைங்கொன்றைத் தாரருளான் - பண்பால்
திருமாலு மங்கைச் சிவற்கு அடிமை செய்வான்
திருமாலு மங்கைச் சிவன். 665

95. சிவன்மாட் டுகவெழுதும் நாணும் நகுமென்னும்
சிவன்மேய செங்குன்றூர் என்னும் - சிவன் மாட்டங்கு
ஆலிங் கனம்நினையும் ஆயிழையீர் அங்கொன்றை
யாலிங் கனம்நினையு மாறு. 666

96. ஆறாவெங் கூற்றுதைத் தானைத்தோல் போர்துகந்தங்கு
ஆறார் சடையீர்க்கு அமையாதே - ஆறாத
ஆனினத்தார் தாந்தம் அணியிழையி னார்க்கடிமை
ஆனினத்தார் தாந்தவிரிந்த தாட்டு. 667

97. ஆட்டும் அரவர் அழிந்தார் எலும்பணிவார்
ஆட்டும் இடுபலிகொண் டார்அமரர் - ஆட்டுமோர்
போரேற்றான் கொன்றையான் போந்தான் பலிக்கென்று
போரேற்றான் போந்தான் புறம். 668

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

98. புறந்தாழ் குழலார் புறனுரைஅஞ் சாதே
புறந்தாழ் புலிப்பொதுவுள் ஆடி - புறந்தாழ்பொன்
மேற்றளிக்கோன் வெண்பிறையான் வெண்சுடர்போல் மேனியான்
மேற்றளிக்கோன் என்றுரையான் மெய். 669

99. மெய்யன் பகலாத வேதியன் வெண்புரி நூல்
மெய்யன் விரும்புவார்க்கு எஞ்ஞான்றும் - வெய்ய
துணையகலா நோக்ககலா போற்றகலா நெஞ்சே
துணையிகலா கூறுவான் நூறு. 670

100. நூறாள் பயன்ஆட்டி நூறுமலர் சொரிந்து
நூறாநொடி அதனின் மிக்கதே - நூறா
உடையான் பரித்தளரி உத்தமனை வெள்ளேறு
உடையானைப் பாடலால் ஒன்று. 671

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரணதேவ நாயனார் அருளிய

# சிவபெருமான் திருவந்தாதி (23)

திருச்சிற்றம்பலம்

01. ஒன்றுரைப்பீர் போலப் பலஉரைத்திட்டு ஓயாதே
ஒன்றுரைப்பீர் ஆயின் உறுதுணையாம் - ஒன்றுரைத்துப்
பேரரவம் பூண்டு பெருந்தலையில் உண்டுழலும்
பேரரவும் பூணும் பிரான். 672

02. பிரானிடபம் மால்பெரிய மந்தாரம் வில்லும்
பிரானிடபம் பேரொலி நாணாகம் - பிரானிடபம்
பேணும் உமைபெரிய புன்சடையின் மேலமர்ந்து
பேணும் உமையிடவம் பெற்று. 673

03. பெற்றம் பிறவி பிறந்திட்டு ஒழியாதே
பெற்றம் பிறவி பிறந்தொழியின் - பெற்றம்
குழையணிந்த கோளரவக் கூற்றுதைத்தான் தன்னைக்
குழையணிந்த கோளரவ நீ. 674

04. நீயேயா ளாவாயும் நின்மலற்கு நன்னெஞ்சே
நீயேயா ளாவாயும் நீள்வாளின் - நீயே
ஏறூர் புனற்சடையா எங்கள் இடைமருதா
ஏறூர் புனற்சடையா என்று. 675

05. என்றும் மலர்தூவி ஈசன் திருநாமம்
என்றும் அலர்தூற்றி யேயிருந்தும் - என்றும்
........................................................
புகலூரரா புண்ணியனே என். 676

06. என்னே இவளுற்ற மாலென்கொல் இன்கொன்றை
என்னே இவள் ஒற்றியூரென்னும் - என்னே
தவளப் பொடியணிந்த சங்கரனே என்னும்
தவளப் பொடியானைச் சார்ந்து. 677

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. சார்ந்துரைப்பது ஒன்றுண்டு சாவாமூ வாப்பெருமை
சார்ந்துரைத்த தத்துவத்தின் உட்பொருளைச் - சார்ந்துரைத்த
ஆதியே அம்பலவா அண்டத்தை ஆட்கொள்ளும்
ஆதியேன்று என்பால் அருள். 678

08. அருள்சேரா தாரூர்த்தீ ஆறாமல் எய்தாய்
அருள்சேரா தாரூர் தீயாடி - அருள்சேரப்
பிச்சையேற் றுண்டு பிறர்கடையிற் கால்நிமிர்த்துப்
பிச்சையேற் றுண்டுழல்வாய் பேச்சு. 679

09. பேச்சுப் பெருக்குவதென் பெண்ஆண் அலியென்று
பேச்சுக் கடந்த பெருவெளியைப் - பேச்சுக்கு
உரையானை ஊனுக்கு உயிரானை ஒன்றற்கு
உரியானை நன்னெஞ்சே உற்று. 680

10. உற்றுரையாய் நன்னெஞ்சே ஓதக் கடல்வண்ணன்
உற்றுரையா வண்ணம்ஒன் றானானை - உற்றுரையா
ஆனைஉரித்தானை அப்பனை எப்பொழுதும்
ஆனைஉரித் தானை அடைந்து. 681

11. அடைந்துன் பால் அன்பாய் அணிமணி கொண்டு அர்ச்சித்து
அடைந்துன்பால்மேலு குத்த மாணிக்கு - அடைந்துன்பால்
அவ்வமுதம் ஊட்டி அணிமலரும் சூழ்ந்தன்று
அவ்வமுதம் ஆக்கினாய் காண். 682

12. காணாய் கபாலி கதிர்முடிமேல் கங்கைதனைக்
காணாய்அக் காருருவில் சேருமையைக் - காணாய்
உடைதலை கொண்டு ஊரூர் திரிவானை நச்சி
உடைதலைக் கொண்டு ஊரூர் திரி. 683

13. திரியும் புரமெரித்த சேவகனார் செவ்வே
திரியும் புரமெரியச் செய்தார் - திரியும்
அரியான் திருக்கயிலை என்னாதார் மேனி
அரியான் திருக்கயிலை யாம். 684

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. ....................................................................
ஆம்பரிசே செய்தங் கழியாக்கை - ஆம்பரிசே
ஏத்தித் திரிந்தானை எம்மானை அம்மானை
ஏத்தித் திரிந்தானை ஏத்து. 685

15. ஏத்துற்றுப் பார்த்தன் எழில்வான் அடைவான்போல்
ஏத்துற்றுப் பார்த்தன் இறைஞ்சுதலும் - ஏத்துற்றுப்
பாசுபதம் அன்றளித்த பாசூரான் பால்நீற்றான்
பாசுபதம் இன்றளியென் பால். 686

16. பாலார் புனல்வாய் சடையானுக்கு அன்பாகிப்
பாலார் புனல்பாய் சடையானாள் - பாலாடி
ஆடுவான் பைங்கண் அரவூர்வான் மேனிதீ
ஆடுவான் என்றென்றே ஆங்கு. 687

17. ஆங்குரைக்க லாம்பொன் மலர்ப்பாதம் அஃதன்றே
ஆங்குரைக்க லாம்பொன் அணிதில்லை - ஆங்குரைத்த
அம்பலத்தும் அண்டத்தும் அப்பாலு மாய்நின்ற
அம்பலத்தும் அண்டத்தும் ஆம். 688

18. மாயனை ஓர் பாகம் அமர்ந்தானை வானவரும்
மாயவரு மால்கடல் நஞ்சு உண்டானை - மாய
வருவானை மாலை ஒளியானை வானின்
உருவானை ஏத்தி உணர். 689

19. உணரா வளைகழலா உற்றுன்பாற் சங்கம்
உணரா வளைகழல ஒட்டி - உணரா
அளைந்தான் மேனி அணியாரு ரேசென்று
அளைந்தானை ஆமாறு கண்டு. 690

20. கண்திறந்து காயெரியின் வீழ்ந்து கடிதோடிக்
கண்டிறந்து காமன் பொடியாகக் - கண்டிறந்து
கானின் உகந்தாடும் கருத்தர்க்குக் காட்டினான்
கானினுகந் தாடுங் கருத்து. 691

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. கருத்துடைய ஆதி கறைமிடற்றெம் ஈசன்
கருத்துடைய கங்காள வேடன் - கருத்துடைய
ஆனேற்றான் நீற்றான் அனலாடி ஆமாத்தூர்
ஆனேற்றான் ஏற்றான் எரி. 692

22. எரியாடி ஏகம்பம் என்னாதார் மேனி
எரியாடி ஏகம்ப மாகும் - எரியாடி
ஈமத்து இருங்காடு தேரும் இறைபணிப்ப
ஈமத் திடுங்காடு தான். 693

23. தானயன் மாலாகி நின்றான் தனித்துலகில்
தானயன் மாலாய தன்மையான் - தானக்
கரைப்படுத்தான் நான்மறையைக் காய்புலித்தோ ஆடைக்
கரைப்படுத்தான் தன் பாதஞ்சேர். 694

24. சாராவார் தாமுளரேல் சங்கரன் தன்மேனிமேல்
சாராவார் கங்கை உமைநங்கை - சார்வாய்
அரவமது செஞ்சடைமேல் அக்கொன்றை ஒற்றி
அரவமது செஞ்சடையின் மேல். 695

25. மேலான தேவர் வெருவ எழுநஞ்சம்
மேலாயம் இன்றிவே றுண்பொழுதில் - மேலாய
மங்கை உமைவந் தடுத்திலளே வானாளும்
மங்கை உமைவந் தடுத்து. 696

26. அடுத்தபொன் அம்பலமே சார்வும் அதனுள்
அடுத்த திருநட்டம் அ·தே - அடுத்ததிரு
ஆனைக்கா ஆடுவதும் மேலென்பு பூண்பதுவும்
ஆனைக்கா வான்தன் அமைவு. 697

27. அமைவும் பிறப்பும் இறப்புமாம் மற்றாங்கு
அமைவும் பரமான ஆதி - அமையும்
திருவால வாய்சென்று சேராது மாக்கள்
திருவாலவாய் சென்று சேர். 698

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. சென்று செருப் புக்காலாற் செல்லமலர் நீக்கிச்
சென்றுதிருமுடிவாய் நீர்வார்த்துச் - சென்றுதன்
கண்ணிடந் தன்றுவுப்பும் கருத்தற்குக் காட்டினான்
கண்ணிடந் தன்றுப்பாமைப் பார்த்து. 699

29. பார்த்துப் பரியாதே பால்நீறு பூசாதே
பார்த்துப் பரிந்தங்கம் பூணாதே - பார்த்திட்டு
உடையானஞ் சோதாதே ஊனாரைக் கைவிட்டு
உடையானஞ் சோதாதார் ஊண். 700

30. ஊணொன்றும் இல்லை உறக்கில்லை உன்மாலின்
ஊணென்று பேசுவோர் சங்கிழந்தாள் ஊணென்றும்
விட்டானே வேள்வி துரந்தானே வெள்ளநீர்
விட்டானே புன்சடைமேல் வேறு. 701

31. வேறுரைப்பன்கேட்ட ருளும் வேதம்நான் காறங்கம்
வேறுரைத்த மேனி விரிசடையான் - வேறுரைத்த
பாதத்தாய் பைங்கண் அரவூர்வாய் பாரூரும்
பாதத்தாய் என்னும் மலர். 702

32. மலரணைந்து கொண்டு மகிழ்வாய்உன் பாத
மலரணைந்து மால்நயன மாகும் - மலரணைந்து
மன்சக் கரம்வேண்ட வாளா அளித்தனையால்
வன்சக்க ரம்பரனே வாய்த்து. 703

33. வாய்த்த அடியார் வணங்க மலரோன்மால்
வாய்த்த அடிமுடி யுங்காணார் - வாய்த்த
சலந்தரனைக் கொன்றிட்டுச் சங்கரனார் என்னோ
சலந்தரனாய் நின்றவா தாம். 704

34. தாமென்ன நாமென்ன வேறில்லை தத்துறவில்
தாமென்னை வேறாத் தனித்திருந்து - தாமென்
கழிப்பாலை சேரும் கறைமிடற்றார் என்னோ
கழிப்பாலை சேரும் கடன். 705

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. கடனாகக் கைதொழுமின் கைதொழவல் லீரேல்
கடல்நாகைக் காரோணம் மேயார் - கடநாகம்
மாளவுரித் தாடுவார் நம்மேலை வல்வினைநோய்
மாளஇரித் தாடுமால் வந்து. 706

36. வந்தார் வளைகழல்வார் வாடித் துகில் சோர்வார்
வந்தார் முலைமெலிவார் வார்குழல்கள் - வந்தார்
சுரிதருவார் ஐங்கொன்றைத் தாராரைக் கண்டு
சுரிதருவார் ஐங்கொன்றைத் தார். 707

37. தாரான் எனினும் சடைமுடியான் சங்கரனந்
தாரான் தசமுகனைத் தோள்நெரித்துத் - தாராய
நாளுங் கொடுத்தந்த வானவர்கள் தம்முன்னே
வாளுங் கொடுத்தான் மதித்து. 708

38. மதியாரும் செஞ்சடையான் வண்கொன்றைத் தாரான்
மதியாரும் மாலுடைய பாகன் - மதியாரும்
அண்ணா மலைசேரார் ஆரோடுங் கூடாகி
அண்ணா மலைசேர்வ ரால். 709

39. ஆல நிழற்கீழ் இருப்பதுவும் ஆய்வதறம்
ஆலம் அமுதுசெய்வ தாடுவதீ - ஆலந்
துறையுடையான் ஆனைஉரியுடையான் சோற்றுத்
துறையுடையான் சோராத சொல்லு. 710

40. சொல்லாயம் இன்றித் தொலைவின்றித் தூநெறிக்கண்
சொல்லாய்ப் பெருத்த சுடரொளியாய்ச் - சொல்லாய
வீரட்டத் தானை விரவார் புரம்அட்ட
வீரட்டத் தானை விரை. 711

41. விரையாரும் மத்தம் விரகாகச் சூடி
விரையாரும் வெள்ளெலும்பு பூண்டு - விரையாரும்
நஞ்சுண்ட ஆதி நலங்கழல்கள் சேராதார்
நஞ்சுண்ட வாதி நலம். 712

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. நலம்பாயும் ஆக்க நலங்கொண்டல் என்றல்
நலம்பாயும் மான்நன்கு உருவ - நலம்பாய் செய்து
ஆர்த்தார்க்கும் அண்ணாம லையா னிடந்...........
தார்த்தார்க்கும் அண்ணா மலை. 713

43. மலையார் கலையோட வாரோடக் கொங்கை
மலையார் கலைபோய்மால் ஆனாள் - மலையார்
கலையுடையான் வானின் மதியுடையான் காவாத்
தலையுடையான் என்றுதொழு தாள். 714

44. தாளார் கமல மலரோடு தண்மலரும்
தாளார வேசொரிந்து தாமிருந்து - தாளார்
சிராமலையாய் சேமத் துணையேயென் றேத்தும்
சிராமலையார் சேமத் துளார். 715

45. ஆர்துணையா ஆங்கிருப்ப தம்பலவா அஞ்சலுமை
ஆர்துணையா ஆனை உரிமுடி - ஆர்துணையாம்
பூவணத்தாய் பூதப் படையாளி பொங்கொளியாய்
பூவணத்தாய் என்னின் புகல். 716

46. புகலூர் உடையாய் பொறியரவம் பூணி
புகலூர்ப் புனற்சடையெம் பொன்னே - புகலூராய்
வெண்காடா வேலை விடமுண்டாய் வெள்ளேற்றாய்
வெண்காடா என்பேனோ நான். 717

47. நானுடைய மாடேஎன் ஞானச் சுடர்விளக்கே
நானுடைய குன்றமே நான்மறையாய் - நானுடைய
காடுடையாய் காலங்கள் ஆனாய் கனலாடும்
காடுடையாய் காலமா னாய். 718

48. ஆயன்று அமரர் அழியா வகைசெய்தாய்
ஆயன்று அமரர் அழியாமை - ஆயன்
திருத்தினான் செங்கண் விடையூர்வான் மேனி
திருத்தினான் சேதுக் கரை. 719

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. கரையேனு மாதர் கருவான சேதுக்
கரையேனு மாது கரையாம் - கரையேனும்
கோளிலியெம் மாதி குறிபரவ வல்லையே
கோளிலியெம் மாதி குறி. 720

50. குறியார் மணிமிடற்றுக் கோலஞ்சேர் ஞானக்
குறியாகி நின்ற குணமே - குறியாகும்
ஆலங்காடு எய்தா அடைவேன்மேல் ஆடவரம்
ஆலங்காடு எய்தா அடை. 721

51. அடையும் படைமழுவும் சூலமிலம் பங்கி
அடையும் இறப்பறுப்ப தானால் - அடைய
மறைக்காடு சேரும் மணாளரென்பாற் சேரா
மறைக்காடு சேர்மக்கள் தாம். 722

52. தாமேய ஆறு சமய முதற்பரமும்
தாமேய வாறு தழைக்கின்றார் - தாமேல்
தழலுருவர் சங்கரவர் பொங்கரவம் பூண்ட
தழலுருவர் சங்கரர்என் பார். 723

53. பார்மேவு கின்ற பலருருவர் பண்டரங்கர்
பார்மேவு கின்ற படுதலையர் - பார்மேல்
வலஞ்சுழியைச் சேர்வர் மலரடிகள் சேர்வார்
வலஞ்சுழியைச் சேரவாகு வார். 724

54. வாரணிந்த கொங்கை உமையாள் மணவாளா
வாரணிந்த கொன்றை மலர்சூடி - வாரணிந்த
செஞ்சடையாய் சீர்கொள் சிவலோகா சேயொளியாய்
செஞ்சடையாய் செல்ல நினை. 725

55. நினைமால் கொண்டோடி நெறியான் தேடி
நினைமாலே நெஞ்சம் நினைய - நினைமால் கொண்டு
ஊர்தேடி உம்பரபில் அம்பரமா காளாஎன்று
ஊர்தேடி என்றுரைப்பான் ஊர். 726

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. ஊர்வதுவும் ஆனேறு உடைதலையில் உண்பதுவும்
ஊர்வதுவும் மெல்லுரக மூடுவர்கொல் - ஊர்வதுவும்
ஏகம்பம் என்றும் இடைமருதை நேசித்தார்க்கு
ஏகம்ப மாய்நின்ற ஏறு. 727

57. ஏறேய வாழ்முதலே ஏகம்பா எம்பெருமான்
ஏறேறி யூரும் எரியாடி - ஏறேய
ஆதிவிடங் காகாறை அண்டத்தாய் அம்மானே
ஆதிவிடங் காவுமைநன் மாட்டு. 728

58. மாட்டும் பொருளை உருவை வருகாலம்
வாட்டும் பொருளாய் மறையானை - வாட்டும்
உருவானைச் சோதி உமைபங்கா பங்காய்
உருவான சோதி உரை. 729

59. உரையா இருப்பதுவும் உன்னையே ஊனின்
உரையாய் உயிராய்ப் பொலிந்தாய் - உரையாய்
அம்பொனே சோதி அணியாரூர் சேர்கின்ற
அம்பொனே சோதியே ஆய்ந்து. 730

60. ஆய்ந்துன்றன் பாதம் அடையவரும் என்மேல்
ஆய்ந்தென்றன் பாசமலம் அறுத் - தாய்ந்துன்தன்
பாலணையச் செய்த பரமா பரமேட்டி
பாலணையச் செய்த பரம். 731

61. பரமாய பைங்கண் சிரமேயப் பூண்ட
பரமாய பைங்கண் சிரமே - பரமாய
ஆறடைந்த செஞ்சடையாய் ஐந்தடைந்த மேனியாய்
ஆறடைந்த செஞ்சடையாய் அன்பு. 732

62. அன்பே உடைய அரனே அணையாத
அன்பே உடைய அனலாடி - அன்பே
கழுமலத்து ளாடும் கரியுரிபோர்த் தானே
கழுமலத்து ளாடும் கரி. 733

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63. கரியார்தாம் சேரும் கலைமறிகைக் கொண்டே
கரியார்தாம் சேரும் காவாலி - கரியாகி
நின்ற கழிப்பாலை சேரும் பிரான் நாமம்
நின்ற கழிப்பாலை சேர். 734

64. சேரும் பிரான்நாமம் சிந்திக்க வல்லீரேல்
சேரும் பிரான்நாமம் சிந்திக்கச் - சேரும்
மலையான் மகளை மகிழ்ந்தாரூர் நின்றான்
மலையான் மகளை மகிழ்ந்து. 735

65. மகிழ்ந்தன்பர் மாகாளம் செய்யும் மகளிர்
மகிழ்ந்தம் பரமாகி நின்றார் - மகிழ்ந்தங்கம்
ஒன்றாகி நின்ற உமைபங்கன் ஒற்றியூர்
ஒன்றாகி நின்ற உமை. 736

66. உமை கங்கை என்றிருவர் உற்ற உணர்வும்
உமை மங்கை என்றிருவர் காணார் - உமைகங்கை
கார்மிடற்றம் மேனிக் கதிர்முடியான் கண்மூன்று
கார்மிடற்றம் மேனிக்கு இனி. 737

67. இனியவா காணீர்கள் இப்பிறவி எல்லாம்
இனியவா ஆகாமை யற்றும் - இனியவாறு
ஆக்கை பலசெய்த ஆமாத்தூர் அம்மானை
ஆக்கை பலசெய்த அன்று. 738

68. அன்றமரர் உய்ய அமிர்தம் அவர்க்கருளி
அன்றவுணர்வீட அருள்செய்தோன் - அன்றவுணர்
சேராமல் நின்ற அடிகள் அடியார்க்குச்
சேராமல் நின்ற சிவம். 739

69. சிவனந்தஞ் செல்கதிக்கோர் கண்சேர்வ தாக்கும்
சிவனந்தஞ் செல்கதிக்கோர் கண்ணாம் - சிவானந்தம்
சேரும் உருவுடையீர் செங்காஅட் டங்குடிமேல்
சேரும் உருவுடையீர் செல். 740

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70. செல்லு மளவும் சிதையாமல் சிந்திமின்
செல்லும் மளவும் சிவனும்மைச் - செல்லும்
திருமீச்சூர்க்கு ஏறவே செங்கணேறு ஊரும்
திருமீச்சூர் ஈசன் திறம். 741

71. திறமென்னும் சிந்தை தெரிந்தும்மைக் காணும்
திறமென்னும் சிந்தைக்கும் ஆமே - திறமென்னும்
சித்தத்தீர் செல்வத் திருக்கடவூர் சேர்கின்ற
சித்தத்தீரே செல்லும் நீர். 742

72. நீரே எருதேறும் நின்மலனார் ஆவீரும்
நீரே நெடுவானில் நின்றீரும் - நீரே
நெருப்பாய தோற்றத்து நீளாறும் பூண்டு
நெருப்பாய தோற்றம் நிலைத்து. 743

73. நிலைத்திவ் வுலகனைத்தும் நீரேயாய் நின்றீர்
நிலைத்திவ் வுலகனைத்தும் நீரே - நிலைத்தீரக்
கானப்பேரீர்க் கங்கை சூடினீர் கங்காளீர்
கானப்பே ரீர்கங்கை யீர். 744

74. ஈரம் உடைய இளமதியம் சூடினீர்
ஈரம் உடைய சடையினீர் - ஈர
வருங்காலம் ஆயினீர் இவ்வுலகம் எல்லாம்
வருங்கால மாயினீர் வாழ்வு. 745

75. வாழ்வார் மலரணைவார் வந்த வருநாகம்
வாழ்வார் மலரணைவார் வண்கங்கை - வாழ்வாய
தீயாட வானாள்வான் வான்கழல்கள் சேராதார்
தீயாட வானாளுமாறு. 746

76. மாறாத ஆனையின்தோல் போர்த்து வளர்சடைமேல்
மாறாத நீருடைய மாகாளர் - மாறா
இடுங்கையர் சேரும் எழிலவாய் முன்னே
இடுங்கையர் சேர்வாக ஈ. 747

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

77. ஈயும் பொருளே எமக்குச் சிவலோகம்
ஈயும் பொருளே இடுகாட்டில் - நீயும்
படநாகம் பூணும் பரலோகீர் என்னீர்
படநாகம் பூணும் படி. 748

78. படியேறும் பார்த்துப் பரத்தோடும் கூட்டிப்
படியேரும் பார்த்துப் பரனெப் - படியேனைப்
பாருடையாய் பைங்கண் புலியதளாய் பால்நீற்றாய்
பாருடையாய் யானுன் பரம். 749

79. பரமாய விட்டுநின் பாதம் பணிந்தேன்
பரமாய ஆதிப் பரனே - பரமாய
நீதியே நின்மலனே நேரார் புரமூன்றும்
நீதியே செய்தாய் நினை. 750

80. நினையடைந்தேன் சித்தம் நிலையாகும் வண்ணம்
நினையடைந்தேன் சித்த நிமலா - நினையடைந்தேன்
கண்டத்தாய் காளத்தி யானே கனலாரும்
கண்டத்தாய் காவாலி கா. 751

81. காவார் பொழிற்கயிலை ஆதீ கருவேயெம்
காவாய்ப் பொலிந்த கடுவெளியே - காவாய
ஏறுடையாய் என்னை இடை மருதிலேயென்றும்
ஏறுடையாய் நீயே கரி. 752

82. கரியானும் நான்முகனு மாய்நின்ற கண்ணன்
கரியாரும் கூற்றங் கனியே - கரியாரும்
காடுடையாய் காலங்கள் ஆனாய் கனலாடும்
காடுடையாய் காலமா னாய். 753

83. ஆனாய னாய அடலேறே ஆரூர்க்கோன்
ஆனாய னாவமுத மேயானாய் - ஆனாய்
கவரெலும்போ டேந்தி கதநாகம் பூணி
கவரெலும்பு தார்கை வளை. 754

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84. வளைகொண்டாய் என்னை மடவார்கண் முன்னே
வளைகொண்டாய் மாசற்றசோதி - வளைகொண்டாய்
மாற்றார் கதவ மதிலாரூர் சேர்கின்ற
மாற்றாரூர் கின்ற மயல். 755

85. மயலான தீரும் மருந்தாகும் மற்றும்
மயலானார் ஆரூர் மயரார் - மயலான்
கண்ணியர்தம் பாகா கனியே கடிக்கொன்றைக்
கண்ணியலான் பாதமே கல். 756

86. கலைமான்கை ஏனப்பூண் காண்கயிலை மானின்
கலைமான் கறைகாண் கவாலி - கலைமானே
ஆடுவதும் பாடுவதும் காலனைப்பொன் அம்பலத்துள்
ஆடுவதும் ஆடான் அரன். 757

87. அரனே அணியாரூர் மூலட்டத் தானே
அரனே அடைந்தார்தம் பாவம் - அரனே
அயனார்தம் அங்கம் அடையாகக் கொண்டாய்
அயனாக மாக அடை. 758

88. அடையும் திசை ஈசன் திண்தோளா காசம்
அடையும் திருமேனி அண்டம் - அடையும்
திருமுடிகால் பாதாளம் ஆடைகடல் அங்கி
திருமுடிநீர் கண்கள் சுடர் மூன்று. 759

89. மூன்றரணம் எய்தானே மூலத்தனிச்சுடரே
மூன்றரண மாய்நின்ற முக்கணனே - மூன்றரண
மாய்நின்ற சோதி அணியாரூர் சேர்கின்ற
வாய்நின்ற சோதி அறம். 760

90. அறமாய்வ ரேனும் அடுகாடுசேர
அறமானார் அங்கம் அணிவர் - அறமாய
வல்வினைகள் வாரா எனமருக லாரென்ன
வல்வினைகள் வாராத வாறு. 761

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

91. ஆறுடையார் நஞ்சுடையார் ஆடும் அரவுடையார்
ஆறுடையார் காலம் அமைவுடையர் - ஆறுடைய
சித்தத்தீர் செல்வத் திருக்கயிலை சேர்கின்ற
சித்தத்தீர் எல்லார்க்கும் சேர்வு. 762

92. சேர்வும் உடையர் செழுங்கொன்றைத் தாரார்நஞ்
சேர்வும் உடையர் அரவுடையர் - சேரும்
திருச்சாய்க்காட் டாடுவரேல் செய்தக்க என்றும்
திருச்சாய்க்காட் டேநின் உருவு. 763

93. உருவு பலகொண்டு ஒருவராய் நின்றார்
உருவு பலவாம் ஒருவர் - உருவு
பலவல்ல ஒன்றல்ல பைஞ்ஞீலி மேயார்
பலவல்ல ஒன்றாப் பகர். 764

94. பகரப் பரியானை மேலூரா தானைப்
பகரப் பரிசடைமேல் வைத்த - பகரப்
பரியானைச் சேருலகம் பல்லுயிர்கள் எல்லாம்
பரியானைச் சேருலம் பண். 765

95. பண்ணாகப் பாடிப் பலிகொண்டாய் பாரேழும்
பண்ணாகச் செய்த பரஞ்சோதி - பண்ணா
எருதேறி யூர்வாய் எழில்வஞ்சி எங்கள்
எருதேறி யூர்வாய் இடம். 766

96. இடமாய எவ்வுயிர்க்கும் ஏகம்பம் மேயார்
இடமானார்க்கு ஈந்த இறைவர் - இடமாய
ஈங்கோய் மலையார் எழிலார் சிராமலையார்
ஈங்கோய் மலையார் எமை. 767

97. எமையாள வந்தார் இடரானதீர
எமையாளும் எம்மை இமையோர் - எமையாளும்
வீதிவிடங்கர்விடமது உண்டகண் டர்விடையூர்
வீதிவிடங் கர்விடையூர் தீ. 768

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

98. தீயான மேனியனே செம்பவளக் குன்றமே
தீயான சேராமற் செய்வானே - தீயான
செம்பொற் புரிசைத் திருவாரூ ராயென்னைச்
செம்பொற் சிவலோகம் சேர். 769

99. சேர்கின்ற சிந்தை சிதையாமல் செய்வானே
சேர்கின்ற சிந்தை சிதையாமல் - சேர்கின்றோம்
ஒற்றியூ ரானே உறவாரும் இல்லையினி
ஒற்றியூ ரானே உறும். 770

100. உறுமுந்த முன்னே உடையாமல் இன்னம்
உறுமுந்த முன்னே உடையாமல் - உறுமுத்தம்
ஓரைந் துரைத்துற்று உணர்வோடு இருந்தொன்றை
ஓரைந் துரைக்க வல்லார்க்கு ஒன்று. 771

101. ஒற்றைப் பரணர் உரைத்த அந் தாதிபல
ஒற்றைப் பகரில் ஒருகோடி - ஒன்றைத்
தவிராது உரைப்பார் தளரார் உலகில்
தவிரார் சிவலோ கந்தான். 772

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளம் பெருமான் அடிகள் அருளிய

# சிவபெருமான் மும்மணிக்கோவை (24)

திருச்சிற்றம்பலம்

## அகவல்

01. முதல்வன் வகுத்த மதலை மாடத்து
இடவரை ஊன்றிய கடவுட் பாண்டிற்
பள்ளிச் செம்புய லுள்விழு துறீஇப்
எறிவெளி எடுப்பினும் சிறுநடுக்குறாநின்
அடிநிழல் அளியவோ வைத்த முடிமிசை
இலங்கு வளைத் தனிபோது விரித்த
அலங்குகதிர் ஒலியல்நீ அணிந்ததென் மாறே. 773

## வெண்பா

02. மாறுதடுத்த மணிக்கங்கை திங்களின்
கீறு தடுப்பக் கிடக்குமே - நீறடுத்த
செந்தாழ் வரையின் திரள்போல் திருமேனி
எந்தாய்நின் சென்னி இடை. 774

## கட்டளைக் கலித்துறை

03. இடைதரில் யாமொன்று உணர்த்துவது
உண்டிமை யோர்சிமையத்
தடைதரு மூரிமந் தாரம்
விராய்நதி வெண்ணிலவின்
தொடைதரு துண்டங் கிடக்கினும்
தொண்டர் ஒதுக்கியிட்ட
புடைதரு புல்லெருக் குஞ்செல்லு
மோநின் புரிசடைக்கே. 775

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அகவல்

04. சடையே நீரகம் ததும்பி நெருப்புக் கலிக்கும்மே
மிடறே நஞ்சகம் துவன்றி அமிர்து பிலிற்றும்மே
வடிவே முளியெரி கவைஇத் தளிர்தயங்கும்மே
அடியே மடங்கல்மதம் சீறி மலர்பழிக்கும்மே
அ∴தான்று இனையஎன்று அறிநிலம் யாமே முனைதவத்
தலைமூன்று வகுத் தனித்தாட்
கொலையூன்று குடுமி நெடுவே லோயே. 776

### வெண்பா

05. வேலை முகடும் விசம்பகடும் கைகலந்த
காலைநீர் எங்கே கரந்தனையால் - மாலைப்
பிறைக்கீறா கண்ணுதலா பெண்பாகா ஐயோ
இறைக்கூறாய் எங்கட்கு இது. 777

### கட்டளைக் கலித்துறை

06. இதுநீர் ஒழிமின் இடைதந்
துமையிமை யத்தரசி
புதுநீர் மணத்தும் புலியத
ளேயுடை பொங்குகொங்கை
முதுநீர் கொழித்த இளமணல்
முன்றில் மென் றோட்டதிங்கள்
செதுநீர் ததும்பத் திவளந்செய்
செஞ்சடைத் தீவண்ணரே. 778

### அகவல்

07. வண்ணம் ஐஞ்சுதலை கவைஇப் பவள மால்வரை
மஞ்சுமி விலகிப் பகல்செருக் கும்மே
என்னை பழமுடைச் சிறுகலத் திடுபலி பெய்வோள்
நெஞ்சகம் பிணிக்கும் வஞ்சமோ உடைத்தே
அ∴தான்று முளையெயிற்றுக் குருளை இன்துயில் எடுப்ப
நங்குதலைச் சிறுநிலா விதிர்க்கும் கொடும்பிறைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேமுறு முதிர்சடை இறைவ
மாமுறு கொள்கை மாயமோ உடைத்தே. 779

### வெண்பா

08. உடைதலையின் கோவை ஒருவடமோ கொங்கை
புடைமலிந்த வெள்ளெருக்கம் போதோ - சடைமுடிமேல்
முன்நாள் பூத்த முகிழ்நிலவோ முக்கணா
இன்னநாள் கண்டது இவள். 780

### கட்டளைக் கலித்துறை

09. இவளப் பனிமால் இமையத்து
அணங்குகற் றைச்சடைமேல்
அவளப்புத் தேளிர் உலகிற்கு
அரசி அதுகொன்டென்னை
எவளுக்கு நீ நல்ல தியாரைமுன்
எய்திற்றெற் றேயிதுகாண்
தவளப்பொடிச்செக்கர் மேனிமுக்
கண்ணுடையச் சங்கரனே. 781

### அகவல்

10. கரதலம் நுழைத்த மரகதக் கபாடத்து
அயில் வழங்கு குடுமிக் கயிலை நாடநின்
அணங்குதுயில் எடுப்பிற் பிணங்குநிலாப் பிணையல்
யாமே கண்டதும் இலமே தாமா
மூவா எ்.கமும் முரணும்
ஓவாது பயிற்றும் உலகமால் உளதே. 782

### வெண்பா

11. உளரொளிய கங்கை ஒலிதிரைகள் மோத
வளரொளிதேய்ந்து உள்வளைந்து ஒக்கும் - கிளரொளிய
பேதைக்கருங்கண் பிணாவின் மணாளனார்
கோதைப் பிறையின் கொழுந்து. 783

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கட்டளைக் கலித்துறை

12. கொழுந்திரள் தெண்ணில வஞ்சிறின்
கூரிருள் வார்பளிங்கின்
செழுந்திரட் குன்றகஞ்
சென்றடைந் தாலொக்கும் தெவ்வர் நெஞ்சத்
தழுந்திரள் கண்டத் தவளப்
பொடிச்செக்கர் மேனிநின்றோர்
எழுந்திரட் சோதிப் பிழம்புமென்
உள்ளத்து இடங்கொண்டவே. 784

### அகவல்

13. கொண்டற் காரெயிற்றுச் செம்மருப்பு இறாலின்
புண்படு சிமையத்துப் புலவுநாறு குடுமி
வரையோன் மருக புனலாள் கொழுந
இளையோன் தாதை முதுகாட்டுப் பொருநநின்
நீறாடு பொலங்கழல் பரவ
வேறாங்கு கவர்க்குமோ வீடுதரு நெறியே. 785

### வெண்பா

14. நெறிவிரவு கொன்றை நெடும்படற்கீழ்க் கங்கை
எறிதிரைகள் ஈர்த்தெற்ற ஏறிப் - பொறிபிதிர
ஈற்றராக் கண்படுக்கும் இண்டைச் சடைச்செங்கண்
ஏற்றரால் நீரும் இடர். 786

### கட்டளைக் கலித்துறை

15. இடர்தரு தீவினைக்கு எள்கிநை
வார்க்குநின் ஈரடியின்
புடைதரு தாமரைப் போதுகொ
லாம்சரண் போழருவிப்
படர்தரு கொம்பைப் பவளவண்
ணாபரு மாதைமுயங்கு
அடைதரு செஞ்சுடர்க் கற்றையொக்
குஞ்சடை அந்தணனே. 787

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அகவல்

16. அந்த ணாளர் செந்தொடை ஒழுக்கமும்
அடலோர் பயிற்றும்நின் சுடர்மொழி ஆண்மையும்
அவுணர் நன்னாட்டு இறைவன் ஆகிக்
குறுநெடுந் தானை பரப்பித் தறுகண்
மால்விடை அடரத் தாள்நிமிர்ந் துக்க
தாய்சின அரவுநாண் பற்றி நீயோர்
நெடுவரை நெறிய வாங்கிச்
சுடுகணை எரிநிமிர்த்துத் துரந்த ஞான்றே. 788

### வெண்பா

17. ஞான்ற புனமாலை தோளலைப்ப நாண்மதியம்
ஈன்ற நிலவோடும் இவ்வருவான் - மூன்றியங்கு
மூதூர் வியன்மாடம் முன்னொருகால் துன்னருந்தீ
மீதூரக் கண்சிவந்த வேந்து. 789

### கட்டளைக் கலித்துறை

18. வேந்துக்க மாக்கடற் சூரன்முன்
னாள்பட வென்றி கொண்ட
சேந்தற்குத் தாதையில் வையம்
அளந்ததெய் வத்திகிரி
ஏந்தற்கு மைத்துனத் தோழனின்
தேன்மொழி வள்ளியென்னும்
கூந்தற் கொடிச்சிதன் மாமன்வெம்
மால்விடைக் கொற்றவனே. 790

### அகவல்

19. கொற்றத் துப்பில் ஒன்றை ஈன்ற
துணங்கையஞ் செல்வத்து அணங்குதரு முதுகாட்டுப்
பேய்முதிர் ஆயத்துப் பிணவின் கொழுநநின்
நேர்கழல் கவைஇ இலங்கிதழ்த் தாமம்
தவழ்தரு புனல்தலைப் பகுநர்
அவல மாக்கடல் அழுந்தலோ இவரே. 791

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெண்பா

20. இலர்கொலாம் என்றிளைஞர் ஏசப் பலிக்கென்று
உலகெலாம் சென்றுழல்வ ரேனும் - மலர்குலாம்
திங்கட் குறுந்தெரியல் தேவர்காட் செய்வதே
எங்கட் குறுந் தெரியின் ஈண்டு. 792

### கட்டளைக் கலித்துறை

21. ஈண்டுமுற் றத்துஒற்றை மால்விடை
ஏறியை அம்முனை நாள்
வேண்டிமுற் றத்திரிந்து எங்கும்
பெறாது வெறுங்கை வந்தார்
பூண்ட ஒற் றைச் செங்கண் ஆரமும்
கற்றைச் சடைப்புனலும்
நீண்டஒற் றைப்பிறைக் கீளும்எப்
போதும்என் நெஞ்சத்தவே. 793

### அகவல்

22. நெஞ்சிற் கொண்ட வஞ்சமோ உடைத்தே
மடவோர் விரும்புநின் விளையாட்டியல்போ
மருள்புரி கொள்கைநின் தெருளா மையோ
யாதா கியதோ எந்தை நீதியென்று
உடைதலை நெடுநிலா வெறியல்
கடைதலென் றருளிச் சூடிய பொருளே. 794

### வெண்பா

23. பொருளாக யானிரந்தால் புல்லெருக்கின் போதும்
அருளான்மற் றல்லாதார் வேண்டின் - தெருளாத
பான்மறா மான்மறிக்கைப் பைங்கண் பகட்டுரியாள்
தான்மறான் பைங்கொன்றைத் தார். 795

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கட்டளைக் கலித்துறை

24. காரிளங் கொன்றைநல் ஏறு
கடாவித் தலைமைமிக்க
ஏரிள மென்முலைப் பொன்மலை
யாட்டிக்குஎற் றேயிவனோர்
பேரிளங் கொங்கைப் பிணாவொடுங்
கூடிப் பிறைக் கொழுந்தின்
ஓரிளந் துண்டம் சுமந்து ஐயம்
வேண்டி உழிதருமே. 796

### அகவல்

25. உழிதரல் மடிந்து கழுதுகண் படுக்கும்
இடருறு முதுகாட்டுச் சீரியல் பெரும
புகர்முகத் துளைக்கை உரவோன்தாதை
நெடியோன் பாகநின் சுடர்மொழி ஆண்மை
பயிற்று நாவலர்க்கு
இடர்தரு தீவினை கெடுத்தலோ எளிதே. 797

### வெண்பா

26. எளியமென்று எள்கி இகழாது நாளும்
அளியம் ஆட் செய்தாலும் ஐயோ - தெளிவரிய
வள்கயிலை நீள்பொருப்ப வான்தோய் மதிச்சடையாய்
கொள்கையிலை எம்மாற் குறை. 798

### கட்டளைக் கலித்துறை

27. குறையாப் பலியிவை கொள்கஎன்
கோல்வளை யும்கலையும்
நிறையாக்கொண் டாயினிச் செய்வதென்
தெய்வக்கங் கைப்புனலில்
பொறையாய் ஒருகடல் நஞ்சுண்ட
கண்டா பொடியணிந்த
இறைவா இடுபிணக் காடசெம்
மேனியெம் வேதியனே. 799

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகவல்

28. வேதியர் பெரும விண்ணோர் தலைவ
ஆதி நான்முகத்து அண்ட வாண
செக்கர் நான்மறைப் புத்தேள் நாட
காய்சின மழவிடைப் பாகநின்
மூவிலை நெடுவேல் பாடுதும்
நாவலம் பெருமை நல்குவாய் எனவே. 800

## வெண்பா

29. எனவே உலகெலாம் என்றிளைஞர் ஏச
நனவே பலிதிரிதிநாளும் - சினவேங்கைக்
கார்க்கயிலை நாட களிற்றீர் உரியலாற்
போர்க்கையிலை பேசல்நீ பொய். 801

## கட்டளைக் கலித்துறை

30. பொய்நீர் உரைசெய்தீர் பொய்யோம்
பலியெனப் போனபின்னை
இந்நீள் கடைக்கென்று வந்தறி
யீர்இனிச் செய்வதென்னே
செந்நீர் வளர்சடைத் திங்கட்
பிளவொடு கங்கைவைத்த
முந்நீர் பவளத் திரட் செக்கர்
ஒக்கும் முதல்வனே. 802

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிராவடிகள் அருளிய

# மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை (25)

திருச்சிற்றம்பலம்

**நேரிசையாசிரியப்பா**

01. ஒரு நெடுங்கங்கை இருங்குறும் பைம்புகர்
மும்முகச் செந்நுதி நாலிணர் வெள்நிணக்
குடற்புலவு கமழும் அடற்கழுப் படையவன்
மதலை மாமதந் துவன்றிய கதனுடைக்
கடதடக் கபோலத்து ஓரிடமருப்பிற்
கரண்டக உதரத்து முரண்தரு குழவிதன்
சேவடி யுகளம் அல்லது
யாவையும் இலமினி இருநிலத் திடையே. 803

**வெண்பா**

02. நிலந்துளங்க மேருத் துளங்க நெடுவான்
தலந்துளங்கச் சப்பாணி கொட்டும் - கலந்துளங்கொள்
காமாரி ஈன்ற கருங்கைக் கடதடத்து
மாமாரி ஈன்ற மணி. 804

**கட்டளைக் கலித்துறை**

03. மணிசிந்து கங்கைதன் மானக்
குருளையை வாளரக்கர்
அணிசிந்த வென்றஎம் ஐயர்க்கு
இளங்கன்றை அங்கரும்பின்
துனிசிந்த வாய்ப்பெய்த போதகத்
தைத்தொடர்ந்து ஓர்பிறவிப்
பிணிசிந்து கார் முளை யைப்பிடித்
தோர்க்கில்லை பேதுறவே. 805

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அகவல்

04. பேதுறு தகையம் அல்லது தீதுறச்
செக்கர் குஞ்சிக் கருநிறத் தொக்கல் நாப்பண்
புக்கவண் இரும்பொறித் தடக்கையும்
முரணிய பெருந்தோட்
கொட்ட நாவி தேவிதன்
மட்டுகு தெரியல் அடிமணந் தனமே. 806

### வெண்பா

05. மேய கருமிடற்றர் வெள்ளெயிற்றர் திண்சேனை
ஒய மணியூசல் ஆடின்றே - பாய
மழை செவிக்காற் றுந்திய வாளமர்க்கண் எந்தை
தழை செவிக்காற் றுந்தத் தளர்ந்து. 807

### கட்டளைக் கலித்துறை

06. உந்தத் தளரா வளைத்தனம்
முன்னம்மின் ஓடை நெற்றிச்
சந்தத் தளரா ஒருதனித்
தெவ்வர்தந் தாளிரியூர்
விந்தத் தளரா மருங்கில்
கிளிபெற்ற வேழக்கன்றின்
மந்தத் தளரா மலர்ச்சர
ணங்கள் வழுத்துமின்னே. 808

### நேரிசையாசிரியப்பா

07. மின்னெடுங் கொண்டல் அந்நெடு முழக்கத்து
ஓவற விளங்கிய துளைக்கைக் கடவுளை
யாம்மாக வழுத்துவது எவனோ அவனேல்
பிறந்துஇவ் வுலகின் பெருமூ தாதை
உரந்தரு சிரம்அரிந் தவற்கே வரைந்தது
மேருச் சிமையத்து மீமிசை
வாரிச் செல்வன் மகள்மகன் மொழியே. 809

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெண்பா

08. மொழியின் மறைமுதலே முந்நயனத்து ஏறே
கழிய வருபொருளே கண்ணே - தெழிய
கலாலயனே எங்கள் கணபதியே நின்னை
அலாது ஐயனே சூழாதென் அன்பு. 810

### கட்டளைக் கலித்துறை

09. அன்பு தவச்சுற்று காரழல்
கொண்டெயில் மூன்றெரிய
வன்புத வத்துந்தை மாட்டுகின்
றாம்மதஞ் சூழ்மருப்பிற்கு
அன்பு தவக்கரத் தாளமிட்
டோடிக் கடுநடையிட்டு
இன்பு தவச்சென்று நீயன்று
காத்தது இயம்புகவே. 811

### இணைக்குறள் ஆசரியப்பா

10. கவவுமணிக் கேடகக் கங்கணக் கரவனா
அறைகழல் அவுணரொடு பொருத ஞான்றுநீள்
புழைக்கரம் உயிர்த்த அழற்பேர்ஊதை
விரைநனி கீறி மூரி
அஞ்சேறு புலர்த்தும் என்பர்
மஞ்சேறு கயிலை மலைகிழ வோயே. 812

### வெண்பா

11. மலை சூழ்ந்து இழிகின்ற மாசுணப் பொற் பாறை
தலை சூழ்ந்து தானினைப்பது ஒக்கும் - கலைசூழ்
திரண்டகங்கொள் பேரறிவன் திண்வயிற்றின் உம்பர்க்கு
அரண்டகங்கொள் காலுயிர்க்கும் கை. 813

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டளைக் கலித்துறை

12. காலது கையது கண்ணது
 தீயது கார்மதநீர்
மேலது கீழது நூலது
 வெற்பது பொற்பமைதீம்
பாலது தேனது தானது
 மென்மொழிப் பாவை முப்பூண்
வேலது வாளது நான்மறைக்கு
 ஈன்ற விடுசுடர்க்கே. 814

## நேரிசையாசிரியப்பா

13. சுடர்ப்பிழம்பு தழைத்த அழல்தனி நெடுவேல்
சேய்மூ வுலகம் வலம்வர வேயக்
கொன்றையம் படலை துன்றுசடைக்கிடந்த
ஓங்கிருந் தாதையை வளாஅய் மாங்கனி
அள்ளல் தீஞ்சுவை அருந்திய
வள்ளற்கு இங்கென் மனங்கனிந் திடுமே. 815

## வெண்பா

14. இக்கயங் கொள் மூவலயம் சூழேழ் தடவரைகள்
திக்கயங்கள் பேர்ந்தாடச் செங்கீரை - புக்கியங்கு
தேனாட வண்டாடச் செங்கீரை ஆடின்றே
வானாடன் பெற்ற வரை. 816

## கட்டளைக் கலித்துறை

15. பெற்றமெல் லோதி சிலம்பின்
 மகள்பெறப் பிச்சுகந்த
மற்றவள் பிச்சன் மயங்கன்முன்
 னோன்பின் னிணைமைமிகக்
கற்றவன் ஐயன் புறங்காட்
 டிடைநடம் ஆட்டு கந்தோ
செற்றவன் தந்தத் தவன்நம்மை
 ஆட்கொண்டு செய்தனவே. 817

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இணைக்குறள் ஆசிரியப்பா

16. செய்தரு பொலம்படை மொய்தரு பரூஉக்குருளை
வெள்ளெயிறு பொதிந்த வள்ளுகிர்த் திரள்வாய்ப்
பெருந்திரள் புழைக்கை
மண்முழை வழங்கும் திண்முரண் ஏற்றின்
பனையடர்ப் பாகன் றனதிணையடி
நெடும்பொற் சரணம் ஏத்த
இடும்பைப் பௌவம் இனிநீங் கலமே. 818

### வெண்பா

17. அலங்கல் மணிகனகம் உந்தி அருவி
விலங்கல் மிசையிழிவது ஒக்கும் - பலங்கனிகள்
உண்டளைந்த கோன்மகுடத் தொண்கடுக்கைத் தாதளைந்து
வண்டணைந்து சோரும் மதம். 819

### கட்டளைக் கலித்துறை

18. மதந்தந்த மென்மொழி மாமலை
யாட்டி மடங்கல் கொன்ற
மதந்தந்த முக்கண் ணாற்குமுன்
ஈன்றவம் மாமலைபோல்
மதந்தந்த கும்பக் குழவிமந்
தாரப்பொன் னாட்டிருந்து
மதந்தந்த செம்மலன் றோவையம்
உய்ய வளர்கின்றதே. 820

### இணைக்குறள் ஆசிரியப்பா

19. வளர்தரு கவட்டின் கிளரொளிக் கற்பகப்
பொதும்பர்த் தும்பி ஒழிகின் றோச்சம்
பாரிடைக் குறுநடைத் தோடி ஞாங்கர்
இட்ட மாங்கனி
முழுவதும் விழுங்கிய முளைப்பனைத் தடக்கை
எந்தை அல்லது மற்று யாவுள
சிந்தை செய்யும் தேவதை நமக்கே. 821

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெண்பா

20. கேளூற்றி யான்தளர ஒட்டுமே கும்புரிப்பூண்
வாளூற்ற கேயூர வாளரக்கர் - தோளூற்று
அறுத்தெறிந்து கொன்றழித்த அங்கயங்கண் மீண்டே
இறுத்தெறிந்து கொன்றழித்த ஏறு. 822

## கட்டளைக் கலித்துறை

21. ஏறு தழீஇயவெம் புத்தேள்
மருகவெங் குந்தவள
நீறு தழீஇயஎண் தோளவன்
செல்வவண் டுண்ணநெக்க
ஆறு தழீஇ கரதலத்து
ஐயநின்றன்னை அல்லால்
வேறு தழீஇத்தொழு மோவணங்
காத வியன் சிரமே. 823

## நேரிசையாசிரியப்பா

22. சிரமே விசும்புபோத உவரி இரண்டசும்பு பொழியும்மே
கரமே வரைத்திரண்முரணிய விரைத்து விழும்மே
புயமே திசைவிளிம்பு கிழியச்சென்று செறிக்கும்மே
அடியே இடுந்தொறும் இவ்வுலகம் பெரும்மே
ஆயினும் அஞ்சுடர்ப் பிழம்பு தழீஇ
நெஞ்சகத்து ஒடுங்குமோ நெடும்பணைச் சூரே. 824

## வெண்பா

23. சூர்தந்த பொற்குவட்டின் சூளிகையின் வானயிர்த்து
வார்தந்து எழுமதியம் மன்னுமே - சீர்தந்த
மாமதலை வான்மதியம் கொம்பு வயிறுதித்த
கோமதலை வாண்மதியம் கொம்பு. 825

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டினத்துப் பிள்ளையார் அருளிய

# பிரபந்தங்கள்

திருச்சிற்றம்பலம்

## வெண்பா

01. பூமேல் அயன் அறியா மோலிப் புறத்ததே
நாமே புகழ்ந்தளவை நாட்டுவோம் - பாமேவும்
ஏத்துகந்தான் தில்லை இடத்துகந்தான் அம்பலத்தே
கூத்துகந்தான் கொற்றக் குடை. 826

02. குடை கொண்டிவ் வையம் எலாங்குளிர்
வித்தெரி பொற்றிகிரிப்
படைகொண் டிகல்தெறும் பார்த்திவர்
ஆவதிற் பைம்பொற் கொன்றைத்
தொடை கொண்ட வார்சடை அம்பலத்
தான் தொண்டர்க்கு ஏவல்செய்து
கடை கொண்ட பிச்சை கொண்டு உண்டிங்கு
வாழ்தல் களிப்புடைத்தே. 827

## ஆசிரிய விருத்தம்

03. களிவந்த அமுதூறிக் கல்மனத்தை எல்லாம்
கசியும் படிசெய்து கண்டறிவார் இல்லா
வெளிவந்து அடியேன் மனம் புகுந்து என்றால்
விரிசடையும் வெண்ணீறும் செவ்வானம் என்ன
ஒளிவந்த பொன்னிறமும் தொல் நடமும் காட்டும்
உடையான் உயர்தில்லை அம்பலம்ஒன் றல்லால்
எளிவந்து இனிப்பிறர்பால் சென்றவர்க்குப் பொய்கொண்டு
இடைமடிந்த புன்மொழியால் இச்சையுரையோமே. 828

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேரிசை ஆசிரியப்பா

04. உரையின் வரையும் பொருளின் அளவும்
இருவகைப் பட்ட எல்லையும் கடந்து
தம்மை மறந்து நின்னை நினைப்பவர்
செம்மை மனத்தினும் தில்லைமன் றினும்நடம்
ஆடும் அம்பல வாண நீடு

குன்றக் கோமான் தன்திருப் பாவையை
நீல மேனி மால்திருத் தங்கையைத்
திருமணம் புணர்ந்த ஞான்று பெருமநின்
தாதவிழ் கொன்றைத் தாரும் ஏதமில்
வீர வெள்விடைக் கொடியும் போரில்

தழங்கும் தமருகப் பறையும் முழங்கொலித்
தெய்வக் கங்கை ஆறும் பொய்தீர்
விரையாக் கலியெனும் ஆணையும் நிரைநிரை
ஆயிரம் வகுத்த மாயிரு மருப்பின்
வெண்ணிறச் செங்கண் வேழமும் பண்ணியல்

வைதிகப் புரவியும் வான நாடும்
மையறு கனக மேருமால் வரையும்
செய்வயல் தில்லை யாகிய தொல்பெரும் பதியுமென்று
ஒருபதி னாயிரம் திருநெடு நாமமும்
உரிமையிற் பாடித் திருமணப் பந்தருள்

அமரர் முன்புகுந்து அறுகு சாத்திநின்
தமர்பெயர் எழுதிய வரிநெடும் புத்தகத்து
என்னையும் எழுத வேண்டுவன் நின்னருள்
ஆணை வைப்பிற் காணொணா அணுவும்
வானுற நிமிர்ந்து காட்டும்
கானில்வால் நுளம்பும் கருடன்ஆ தலினே. 829

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெண்பா

05. ஆதரித்த மாலும் அறிந்திலன் என்று அஃதறிந்தே
காதலித்த நாயேற்கும் காட்டுமே - போதகத்தோல்
கம்பலத்தான் நீள்நாக கங்கணத்தான் தென்புலியூர்
அம்பலத்தான் செம்பொன் அடி. 830

### கட்டளைக் கலித்துறை

06. அடியொன்று பாதலம் ஏழிற்கும்
அப்புறம் பட்டதிப்பால்
முடியொன்றிவ் அண்டங்கள் எல்லாம்
கடந்தது முற்றும் வெள்ளைப்
பொடியொன்று தோள்எட்டுத் திக்கின்
புறத்தன பூங்கரும்பின்
செடியொன்று தில்லைச்சிற் றம்பலத்
தான்தன் திருநடமே. 831

### ஆசிரிய விருத்தம்

07. நடமாடி ஏழுலகம் உய்யக் கொண்ட
நாயகரே நான்மறையோர் தங்களோடும்
திடமாட மதில்தில்லைக் கோயில் கொண்ட
செல்வரே! உமதருமை தேராவிட்டீர்
இடமாடி இருந்தவளும் விலக்கா விட்டால்
என்போல்வார்க்கு உடன்நிற்க இயல்வதன்று
தடமாலை முடிசாய்த்துப் பணிந்த வானோர்
தஞ்சுண்டா யங்கருதி நஞ்சுண்டீரே. 832

### நேரிசையாசிரியப்பா

08. நஞ்சுமிழ் பகுவாய் வெஞ்சின மாசுணம்
தன்முதல் முருக்க தெல்முதற் சூழ்ந்த
நீர்ச்சிறு பாம்புதன் வாய்க்கெதிர் வந்த
தேரையை வவ்வி யாங்கு யான்முன்
கருவிடை வந்த ஒருநாள் தொடங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறவா மறலி முறைபிறழ் பேழ்வாய்
அயில்தலை அன்ன எயிற்றிடைக் கிடந்தாங்கு
அருள்நனி இன்றி ஒருவயிறு ஓம்பற்குப்
பல்லுயிர் செகுத்து வல்லிதின் அருந்தி
அயர்த்தனம் இருந்தும் போலும் பெயர்ந்துநின்று

எண்தோள் வீசிக் கண்டோர் உருகத்
தொல்லெயில் உடுத்த தில்லை மூதூர்
ஆடும் அம்பலக் கூத்தனைப்
பாடுதல் பரவுதல் பணிதலோ இலமே. 833

### வெண்பா

09. இலவிதழ்வாய் வீழ்வார் இகழ்வார் அவர்தம்
கலவி கடைக்கணித்தும் காணேன் - இலகுமொளி
ஆடகஞ்சேர் அம்பலத்தே ஆளுடையார் நின்றாடும்
நாடகங்கண்டு அன்பான நான். 834

### கட்டளைக் கலித்துறை

10. நானே பிறந்த பயன்படைத்
தேன் அயன் நாரணன்எம்
கோனே எனத்தில்லை அம்பலத்
தேநின்று கூத்துகந்த
தேனே திருவுள்ள மாகியென்
தீமையெல் லாம்மறுத்துத்
தானே புகுந்தடி யேன்மனத்
தேவந்து சந்திக்கவே. 835

### ஆசிரிய சந்த விருத்தம்

11. சந்து புனைய வெதும்பி மலரணை
தங்க வெருவி இலங்கு கலையொடு
சங்கு கழல நிறைந்த அயலவர்
தஞ்சொல் நலிய மெலிந்து கிளியொடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்து கழல்கள் மறந்து தளிர்புரை
பண்டை நிறமும் இழந்து நிறையொடு
பண்பு தவிர அனங்கன் அவனொடு
நண்பு பெருக விளைந்த இனையன

நந்தி முழவு தழங்க மலைபெறு
நங்கை மகிழ அணிந்த அரவுகள்
நஞ்சு பிழிய முரன்று முயலகன்
நைந்து நரல அலைந்த பகிரதி

அந்தி மதியொடு அணிந்து திலைநகர்
அம்பொன் அணியும் அரங்கின் நடநவில்
அங்கண் அரசை அடைந்து தொழுதிவள்
அன்று முதலெ திரின்று வரையுமே. 836

### நிலை மண்டில ஆசிரியப்பா

12. வரையொன்று நிறுவி அரவொன்று பிணித்து
கடல்தடல் வாக மிடலொடும் வாங்கித்
திண்தோள் ஆண்ட தண்டா அமரர்க்கு
அமிர்துணா அளித்த முதுபெருங்கடவுள்
கடையுகஞ் சென்ற காலத்து நெடுநிலம்

ஆழிப்பரப்பில் ஆழ்வது பொறாஅது
அஞ்சேல் என்று செஞ்சேல் ஆகித்தன்
தெய்வ உதரத்துக் சிறுசெலுப் புரையில்
பௌவம் ஏழே பட்டது பௌவத்தோடு
உலகு குழைத்தொரு நாள் உண்டதும்

உலக மூன்றும் அளத்துழி ஆங்கவன்
ஈரடி நிரம்பிற்றும் இலவே நேரில்
உரைப்போர்க்கு அல்லது அவன்குறை வின்றே
இனைய னாகிய தனிமுதல் வானவன்
கேழல் திருவுரு ஆகி ஆழத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுக்கிய ஏழும் எடுத்தனன் எடுத்தெடுத்து
ஊழி ஊழி கீழுறக் கிளைத்தும்
காண்பதற்கு அரியநின் கழலும் வேண்டுபு
நிகில லோகமும் நெடுமறைத் தொகுதியும்
அகில சராசரம் அனைத்தும் உதவிய

பொன்னிறக் கடவுள் அன்ன மாகிக்
கண்டி லாதநின் கதிர்நெடு முடியும்
ஈங்கிவை கொண்டு நீங்காது விரும்பிச்
சிறிய பொதுவின் மறுவின்றி விளங்கி
ஏவருங் காண ஆடுதி அதுவெனக்கு

அதிசயம் விளைக்கும் அன்றே அதிசயம்
விளையாது மொழிந்தது எந்தை வளையாது
கல்லினும் வலித்து நல்லிதிற் செல்லாது
தான்சிறி தாயினும் உள்ளிடை நிரம்ப
வான்பொய் அச்சம் மாயா ஆசை

மிடைந்தன கிடப்ப இடம்பெறல் அருமையில்
ஐவர் கள்வர் வல்லிதிற் புகுந்து
மண்மகன் திகிரியில் எண்மடங்கு கழற்ற
ஆடுபு கிடந்த பீடில் நெஞ்சத்து
நுழைந்தனை புகுந்து தழைந்தநின் சடையும்

செய்ய வாயும் மையமர் கண்டமும்
நெற்றியில் திகழ்ந்த ஒற்றை நாட்டமும்
எடுத்த பாதமும் தடுத்தசெங் கையும்
புள்ளி ஆடையும் ஒள்ளிதின் விளங்க
நாடகம் ஆடுதி நம்ப கூடும்

வேதம் நான்கும் விழுப்பெரு முனிவரும்
ஆதி நின்திறம் ஆதலின் மொழிவது
பெரியதிற் பெரியை என்றும் அன்றே
சிறியதிற் சிறியை என்றும் அன்றே
நிறைபொருள் மறைகள் நான்கும்நின் அறைகழல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டொடும் அறிவினில் ஆர்த்து வைத்தது
மறையவர் தில்லை மன்றுகிழ வோனே. 837

### வெண்பா

13. கிழவருமாய் நோய்மூப்புக் கீழ்ப்பட்டுக் காமத்து
உழவரும் போய் ஓயுமா கண்டோம் - மொழிதெரிய
வாயினால் இப்பொழுதே மன்றில் நடமாடும்
நாயனார் என்றுரைப்போம் நாம். 838

### கட்டளைக் கலித்துறை

14. நாமத்தினால் என்தன் நாத்திருத்
தேன்மறை மாமலர்சேர்
தாமத்தினால்உன் சரண்பணி
யேன்சார்வ தென்கொடுநான்
வாமத்தி லேயொரு மானை
தரித்தொரு மானைவைத்தாய்
சேமத்தி னாலுன் திருத்தில்லை
சேர்வதோர் செந்நெறியே. 839

### ஆசிரிய சந்த விருத்தம்

15. நெறிதரு குழலை அறலென்பர்கள்
நிழலெழு மதியம் நுதலென்பர்கள்
நிலவினும் வெளிது நகையென்பர்கள்
நிறம்வரு கலசம் முலையென்பர்கள்

அறிகுவ தரிதிவ் விடையென்பர்கள்
அடியிணை கமல மலரென்பர்கள்
அவயவம் இனைய மடமங்கையர்
அழகியர்அமையும் அவரென்செய

மறிமழு வுடைய கரனென்கிலர்
மறலியை முனியும் அரனென்கிலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிபொதி சடில தரனென்கிலர்
மலைமகள் மருவு புயனென்கிலர்

செறிபொழில் நிலையென்கிலர்
திருநடம் நவிலும் இறையென்கிலர்
சிவகதி அருளும் அரசென்கிலர்
சிலர்நர குறுவர் அறிவின்றியே. 840

## நேரிசை ஆசிரியப்பா

16. அறிவில் ஒழுக்கமும் பிறிதுபடு பொய்யும்
கடும்பிணித் தொகையும் இடும்பை ஈட்டமும்
இனையன பலசரக் கேற்றி, வினையெனும்
தொல்மீ காமன் உய்ப்ப அந்நிலைக்
கருவெனும் நெடுநகர் ஒருதுறை நீத்தத்துப்

புலனெனும் கோண்மீன் அலமந்து தொடரப்
பிறப்பெனும் பெருங்கடல் உறப்புகுந்து அலைக்கும்
துயர்த்திரை உவட்டில் பெயர்ப்பிடம் அயர்த்துக்
குடும்பம் என்னும் நெடுங்கல் வீழ்த்து
நிறையெனும் கூம்பு முரிந்து குறையா

உணர்வெனும் நெடும்பாய் கீறிப் புணரும்
மாயப் பெயர்ப்படு காயச் சிறைக்கலம்
கலங்குபு கவிழா முன்னம் அலங்கல்
மதியுடன் அணிந்த பொதியவிழ் சடிலத்துப்
பையரவு அணிந்த தெய்வ நாயக

தொல்லெயில் உடுத்த தில்லை காவல
வம்பலர் தும்பை அம்பல வாணநின்
அருளெனும் நலத்தார் பூட்டித்
திருவடி நெடுங்கரை சேர்த்துமா செய்யே. 841

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெண்பா

17. செய்ய திருமேனிச் சிற்றம் பலவருக்கென்
தையல் வளைகொடுத்தல் சாலுமே - ஐயன்தேர்
சேயே வருமளவில் சிந்தாத மாத்திரமே
தாயே நமதுகையில் சங்கு. 842

### கட்டளைக் கலித்துறை

18. சங்கிடத் தானிடத் தான்தன
தாகச் சமைந்தொருத்தி
அங்கிடத் தாள்தில்லை அம்பலக்
கூத்தற்கு அவிர்சடை மேல்
கொங்கிடத் தார்மலர்க் கொன்றையென
றாயெங்கை நீயுமொரு
பங்கிடத் தான்வல்லை யேல்இல்லை
யேல்உன் பசப்பொழியே. 843

### எழுசீர் ஆசிரிய விருத்தம்

19. ஒழிந்தது எங்களுறவு என்கொ லோஎரியில்
ஒன்ன லார்கள்புரம் முன்னொர்நாள்
விழுந்தெ ரிந்துகளாக வென்றி செய்த
வில்லி தில்லைநகர் போலியார்
சுழிந்த உந்தியில் அழுந்தி மேகலை
தொடக்க நின்றவர் நடக்கநொந்து
அழிந்த சிந்தையினும் வந்த தாகிலுமொர்
சிந்தை யாயொழிவது அல்லவே. 844

### நேரிசை ஆசிரியப்பா

20. அல்லல் வாழ்க்கை வல்லிதிற் செலுத்தற்குக்
கைத்தேர் உழந்து கார்வரும் என்று
வித்து விதைத்தும் விண்பார்த்து இருந்தும்
கிளையுடன் தவிரப் பொருளுடன் கொண்டு
முளைமுதிர் பருவத்துப் பதியென வழங்கியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளா வயவர் அம்பிடை நடந்தும்
இருளூறு பவ்வத்து எந்திரங் கடாஅய்த்
துன்றுதிரைப் பரப்பிற் குன்றுபார்த்து இயங்கியும்
ஆற்றல் வேந்தர்க்குச் சோற்றுக்கடன் பூண்டும்
தாளுழந்து ஓடியும் வாளுழந்து உண்டும்

அறியா ஒருவனைச் செறிவந்து தெருட்டியும்
சொற்பல புனைந்தும் கற்றன கழறியும்
குடும்பப் பாசம் நெடுந்தொடர்ப் பூட்டி
ஐவர் ஐந்திடத்து ஈர்ப்ப நொய்தில்
பிறந்தாங்கு இறந்தும் இறந்தாங்கு பிறந்தும்

கணத்திடைத் தோன்றிக் கணத்திடைக் கரக்கும்
கொப்புட் செய்கை ஒப்பின் மின்போல்
உலப்பில் யோனிக் கலக்கத்து மயங்கியும்
நெய்யெரி வளர்த்துப் பெய்முகிற் பெயல்தரும்
தெய்வ வேதியர் தில்லை மூதூர்

ஆடகப் பொதுவில் நாடகம் நவிற்றும்
கடவுட் கண்ணுதல் நடம்முயன் றெடுத்த
பாதப் போதும் பாய்புலிப் பட்டும்
மீதியாத்து அசைத்த வெள்ளெயிற்று அரவும்
சேயுயர் அகலத்து ஆயிரம் குடுமி

மணிகிடந்து இமைக்கும் ஒருபேர் ஆரமும்
அருள்பொதிந்து அலர்ந்த திருவாய் மலரும்
நெற்றியில் திகழ்ந்த ஒற்றை நாட்டமும்
கங்கை வழங்கும் திங்கள் வேணியும்
கண்ணிடைப் பொறித்து மனத்திடை அழுத்தியாங்கு

உள்மகிழ்ந்து உரைக்க உறுதவம் செய்தனள்
நான்முகன் பதத்தின் மேல்நிகழ் பதந்தான்
உறுதற்(கு) அரியதும் உண்டோ
பெறுதற்(கு) அரியதோர் பேறுபெற் றேற்கே. 845

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெண்பா

21. பெற்றோர் பிடிக்கப் பிழைத்துச் செவிலியர்கள்
சுற்றோட ஓடித் தொழாநிற்கும் - ஒற்றைக்கைம்
மாமறுகச் சீறியசிற் றம்பலத்தான் மான்தேர்போம்
கோமறுகிற் பேதை குழாம். 846

### கட்டளைக் கலித்துறை

22. பேதையெங் கேயினித் தேறியுய்
வாள்பிர மன்தனக்குத்
தாதைதன் தாதையென் றேத்தும்
பிரான்தண் புலிசைப் பிரான்
கோதையந் தாமத்தண் கொன்றை
கொடான்இன்று கொல்ல எண்ணி
ஊதையும் காரும் துளியொடும்
கூடி உலாவியே. 847

### ஆசிரிய சந்த விருத்தம்

23. உலவு சலதி வாழ்விடம்
அமரர் தொழவு ணாவென
நுகரும் ஒருவர் ஊழியின்
இறுதி ஒருவர் ஆழிய
புலவு கமழ்க ரோடிகை
உடைய புனிதர் பூசுரர்
புலிசை யலர்செய் போதணி
பொழிலின் நிழலின் வாழ்வதோர்
கலவ மயில னார்கருள்
கரிய குழலி னார்குயில்
கருது மொழியி னார்கடை
நெடிய விழியினார் இதழ்
இலவில் அழகி யாரிடை
கொடியின் வடிவி னார்வடி
எழுதும் அருமை யாரெனது
இதயமுழுதும் ஆள்வரே. 848

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைக்குறளாசிரியப்பா

24. ஆளெனப் புதிதின்வந்து அடைந்திலம் அத்தநின்
தாளின் ஏவல் தலையின் இயற்றி
வழிவழி வந்த மரபினம் மொழிவதுன்
ஐந்தெழுத்து அவைஎம் சிந்தையிற் கிடத்தி
நனவே போல நாடொறும் பழகிக்

கனவிலும் நவிற்றும் காதலேம் வினைகெடக்
கேட்பது நின்பெருங் கீர்த்தி மீட்பது
நின்னெறி அல்லாப் புன்னெறி படர்ந்த
மதியில் நெஞ்சத்தை வரைந்து நிதியென
அருத்திசெய் திடுவது உருத்திர சாதனம்

காலையும் மாலையும் கால்பெயர்த் திடுவதுன்
ஆலயம் வலம்வரு தற்கே சால்பினில்
கைகொடு குயிற்றுவது ஐய நின்னது
கோயில் பல்பிணி குறித்தே ஒயாது
உருகி நின்னினைந்து அருவி சோரக்

கண்ணிற் காண்பதெவ் வுலகினும் காண்பனவெல்லாம்
நீயேயாகி நின்றதோர் நிலயே நாயேன்
தலைகொடு சார்வதுன் சரண்வழி அல்லால்
அலைகடல் பிறழினும் அடாதே அதனால்
பொய்த்தவ வேடர் கைத்தகப் படுத்தற்கு

வஞ்சச் சொல்லின் வார்வலை போக்கிச்
சமயப் படுகுழி சமைத்தாங்கு அமைவயின்
மானுட மாக்களை வலியப் புகுத்தும்
ஆனா விரதத்து அகப்படுத்து ஆழ்ந்து
வளைவுணர்வு எனக்கு வருமோ உளர்தரு

நுரையும் திரையும் நொப்புறு கொட்பும்
வரையில் சீகர வாரியும் குரைகடல்
பெருத்தும் சிறுத்தும் பிறங்குவ தோன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணில வாகி இருங்கடல் அடங்கும்
தன்மை போலச் சராசரம் அனைத்தும்

நின்னிசைத்தோன்றி நின்னிடை அடங்கும்நீ
ஒன்றினும் தோன்றாய் ஒன்றினும் அடங்காய்
வானோர்க் கரியாய் மறைகளுக்கு எட்டாய்
நான்மறை யாளர் நடுவுபுக் கடங்கிச்
செம்பொன் தில்லை மூதூர்

அம்பலத் தாடும் உம்பர்நா யகனே. 849

**வெண்பா**

25. நாயனைய என்னைப் பொருட்படுத்தி நன்களித்துத்
தாயனைய னாய் அருளும் தம்பிரான் - தூயவிரை
மென்துழாய் மாலொடயன் தேட வியன்தில்லை
மன்றுளே ஆடும் மணி. 850

**கட்டளைக் கலித்துறை**

26. மணிவாய் முகிழ்ப்பத் திருமுகம்
வேர்ப்பஅம் மன்றுக் கெல்லாம்
அணியாய் அருள்நடம் ஆடும்
பிரானை அடைந்துருகிப்
பணியாய் புலன்வழி போம் நெஞ்ச
மேயினிப் பையப் பையப்
பணியாய்க் கடைவழி சாதியெல்
லோரும் பிணம் என்னவே. 851

**ஆசிரிய விருத்தம்**

27. என்னாம் இனிமட வரலாய் செய்குவது
இமையாய் வண்டுகள் மலர்கிண்டித்
தென்னா எனமுரல் பொழில்சூழ் தில்லையுள்
அரனார் திருமுடி அணிதாமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னால் அல்லது தீராது என்னிடர்
தகையாது உயிர்கரு முகிலேறி
மின்னா நின்றது துளிவா டையும்வர
வீசா நின்றது பேசாயே. 852

## இணைக்குறள் ஆசிரியப்பா

28. பேசு வாழி பேசு வாழி
ஆசையொடு மயங்கி மாசுறு மனமே
பேசு வாழி பேசுவாழி
கண்டன மறையும் உண்டன மலமாம்
பூசின மாசாம் புணர்ந்தன பிரியும்

நிறைந்தன குறையும் உயர்ந்தன பணியும்
பிறந்தன இறக்கும் பெரியன சிறுக்கும்
ஒன்றொன்று ஒருவழி நில்லா அன்றியும்
செல்வமொடு பிறந்தோர் தேசொடு திகழ்ந்தோர்
கல்வியிற் சிறந்தோர் கடுந்திறல் மிகுந்தோர்

கொடையிற் பொலிந்தோர் படையிற் பயின்றோர்
குலத்தின் உயர்ந்தோர் நலத்தினின் வந்தோர்
எனையர் எங் குலத்தினர் இறந்தோர் ஏனையவர்
பேரும் நின்றில போலும் தேரின்
நீயும் அ∴து அறிதி யன்றே மாயப்

பேய்த்தேர் போன்றும் நீப்பரும் உறக்கத்துக்
கனவே போன்றும் நனவுப்பெயர் பெற்ற
மாய வாழ்க்கையை மதித்துக் காயத்தைக்
கல்லினும் வலிதாக் கருதிப் பொல்லாத்
தன்மையர் இழிவு சார்ந்தனை நீயும்

நன்மையில் திரிந்த புன்மையை யாதலின்
அழுக்குடைப் புலன்வழி இழுக்கத்தின் ஒழுகி
வளைவாய்த் தூண்டிலின் உள்ளிரை விழுங்கும்
பன்மீன் போலவும்
மின்னுபு விளக்கத்து விட்டில் போலவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசையாம் பரிசத் தியானை போலவும்
ஓசையின் விளிந்த புள்ளுப் போலவும்
வீசிய மணத்தின் வண்டு போலவும்
உறுவ துணராச் செறுவுழிச் சேர்ந்தனை
நுண்ணூல் நூற்றுத் தன்னகப் படுக்கும்

அறிவில் கீடத்து நுந்துழி போல
ஆசைச் சங்கிலிப் பாசத் தொடர்ப்பட்டு
இடர்கெழு மனத்தினோடு இயற்றுவது அறியாது
குடர்கெழு சிறையறைக் குறங்குபு கிடத்தி
கறவை நினைந்த கன்றென இரங்கி

மறவா மனத்து மாசறும் அடியார்க்கு
அருள்சுரந்து அளிக்கும் அற்புதக் கூத்தனை
மறையவர் தில்லை மன்றுள் ஆடும்
இறையவன் என்கிலை என்நினைந் தனையே. 853

### வெண்பா

29. நினையார் மெலியார் நிறையழியார் வாளாப்
புனைவார்க்குக் கொன்றை பொதுவோ - அனைவீரும்
மெச்சியே காண வியன்தில்லை யானருளென்
பிச்சியே நாளைப் பெறும். 854

### கட்டளைக் கலித்துறை

30. பெறுகின்ற எண்ணிலி தாயரும்
பேறுறும் யானுமென்னை
உறுகின்ற துன்பங்கள் ஆயிர
கோடியும் ஒய்வொடுஞ்சென்று
இறுகின்ற நாள்களும் ஆகிக்
கிடந்த இடுக்க ணெல்லாம்
அறுகின் றனதில்லை யாளுடை
யான்செம்பொன் அம்பலத்தே. 855

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்சீர் ஆசிரிய விருத்தம்

31. அம்பலவர் அங்கணர் அடைந்தவர் தமக்கே
அன்புடையர் என்னுமிதென் ஆனையை யுரித்துக்
கம்பலமு வந்தருளு வீர்மதனன் வேவக்
கண்டருளு வீர்பெரிய காதலறி யாதே
வம்பலர் நிறைந்து வசை பேசவொரு மாடே
வாடையுயிர் ஈரமணி மாமையும் இழந்தென்
கொம்பல மருந்தகைமை கண்டுதக வின்றிக்
கொன்றையரு ளீர்கொடியீர் என்றருளு வீரே. 856

## இணைக்குறள் ஆசிரியப்பா

32. அருளு வாழி அருளு வாழி
புரிசடைக் கடவுள் அருளு வாழி
தோன்றுழித் தோன்றி நிலைதவக் கறங்கும்
புற்புதச் செவ்வியின் மக்கள் யாக்கைக்கு
நினைப்பினுங் கடிதே இளமை நீக்கம்

அதனினுங் கடிதே மூப்பின் தொடர்ச்சி
அதனினுங் கடிதே கதுமென மரணம்
வாணாள் பருகி உடம்பை வறிதாக்கி
நாணாள் பயின்ற நல்காக் கூற்றம்
இனைய தன்மையது இதுவே இதனை

எனதெனக் கருதி இதற்கென்று தொடங்கிச்
செய்தன சிலவே செய்வன சிலவே
செய்யா நிற்பன சிலவே அவற்றிடை
நன்றென்ப சிலவே தீதென்ப சிலவே
ஒன்றினும் படாதன சிலவே யென்றிவை

கணத்திடை நினைந்து களிப்பவும் கலுழ்பவும்
கணக்கில் கோடித் தொகுதி அவைதாம்
ஒன்றொன்று உணர்வுழி வருமோ அனைத்தும்
ஒன்றா உணர்வுழி வருமோ அனைத்தும்
தெளிவுழித் தேறல் செல்லேம் அளிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்தின் செய்கை மற்றிதுவே நீயே
அரியை சாலவெம் பெரும தெரிவுறில்
உண்டாய்த் தோன்றுவ யாவையும் நீயே
கண்டனை அவைநினைக் காணா அதுதான்
நின்வயின் மறைத்தோ யல்லை யுன்னை

மாயாய் மன்னினை நீயே வாழி
மன்னியும் சிறுமையிற் கரந்தோய் அல்லை
பெருமையிற் பெரியோய் பெயர்த்தும் நீயே
பெருகியும் சேணிடை நின்றோய் அல்லை
தேர்வோர்க்குத் தம்மினும் அணியை நீயே

நண்ணியும் இடையொன்றின் மறைந்தோ யல்லை
இடையிட்டு நின்னை மறைப்பதும் இல்லை
மறைப்பினும் அதுவும்
நீயே யாகி நின்றதோர் நிலையே அஃதான்று
நினைப்புருங் காட்சி எம்நிலை யிதுவே

நினைப்புறுங் காட்சி எம்நிலை யதுவே
இனிநனி இரப்பதொன்று உடையம் மனமருண்டு
புன்மையின் நினைத்துப் புலன்வழி படரினும்
நின்வயின் நினைந்தேம் ஆகுதல் நின்வயின்
நினைக்குமா நினைக்கப் பெறுதல் அனைத்தொன்றும்

நீயே அருளல் வேண்டும் வேய்முதிர்
கயிலை புல்லென எறிவிசும்பு வறிதாக
இம்பர் உய்ய அம்பலம் பொலியத்
திருவளர் தில்லை மூதூர்
அருநடங் குயிற்றும் ஆதிவா னவனே. 857

### வெண்பா

33. வானோர் பணிய மணியா சனத்திருக்கும்
ஆனாத செல்வத்து அரசன்றே - மால்நாகம்
பந்திப்பார் நின்றாடும் பைம் பொன்னின் அம்பலத்தே
வந்திப்பார் வேண்டாத வாழ்வு. 858

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டளைக் கலித்துறை

34. வாழ்வாக வும்தங்கள் வைப்பாக
வும்மறை யோர்வணங்க
ஆள்வாய் திருத்தில்லை அம்பலத்
தாய்உன்னை அன்றி யொன்றைத்
தாழ்வார் அறியார் சடுலநஞ்
சுண்டிலை யாகிலன்றே
மாள்வார் சிலரையன் றோதெய்வ
மாக வணங்குவதே. 859

## ஆசிரிய விருத்தம்

35. வணங்குமிடை யீர்வறிது வல்லியிடை யாள்மேல்
மாரசர மாரிபொழி யப்பெறு மனத்தோடு
உணங்கியிவள் தானுமெலி யப்பெறும் இடர்க்கே
ஊதையெரி தூவியுல வப்பெறு மடுத்தே
பிணங்கியா வோடுசடை ஆடநட மாடும்
பித்தெரென வும்இதயம் இத்தனையும் ஓர்ர்
அணங்குவெறி யாடுமறி யாடுமது வீரும்
மையலையும் அல்லலையும் அல்லதறி யீரே. 860

## நேரிசை ஆசிரியப்பா

36. ஈரவே ரித்தார் வழங்கு சடிலத்துக்
குதிகொள் கங்கை மதியின்மீது அசைய
வண்டியங்கு வரைப்பின் எண்தோள் செல்வ
ஒருபால் தோடும் ஒருபால் குழையும்
இருபாற் பட்ட மேனி எந்தை

ஒல்லொலிப் பழனத் தில்லை மூதூர்
ஆடகப் பொதுவில் நாடகம் நவிற்றும்
இமையா நாட்டத்து ஒருபெருங் கடவுள்
வானவர் வணங்கும் தாதை யானே
மதுமழை பொழியும் புதுமந் தாரத்துத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனியங்கு ஒருசிறைக் கானகத்து இயற்றிய
தெய்வ மண்டபத்து ஐவகை அமளிச்
சிங்கம் சுமப்ப ஏறி மங்கையர்
இமையா நாட்டத்து அமையா நோக்கம்
தம்மார்பு பருகச் செம்மாந் திருக்கும்

ஆனாச் செல்வத்து வானோர் இன்பம்
அதுவே எய்தினும் எய்துக கதுமெனத்
தெறுசொ லாளர் உறுசினந் திருகி
எற்றியும் ஈர்த்தும் குற்றம் கொளீஇ
ஈர்ந்தும் போழ்ந்தும் எற்றுபு குடைந்தும்

வார்ந்தும் குறைந்தும் மதநாய்க்கு ஈந்தும்
செக்குரல் பெய்தும் தீநீர் வாக்கியும்
புழுக்குடை அழுவத்து அழுக்கியல் சேற்றுப்
பன்னெடுங் காலம் அழுத்தி இன்னா
வரையில் தண்டத்து மாறாக் கடுந்துயர்

நிரயஞ் சேரினும் சேர்க உரையிடை
ஏனோர் என்னை ஆனாது விரும்பி
நல்லன் எனினும் என்க அவரே
அல்லன் எனினும் என்க நில்லாத்
திருவொடு திளைத்துப் பெருவளஞ் சிதையாது

இன்பத்து அழுந்தினும் அழுந்துக அல்லாத்
துன்பந் துதையினும் துதைக முன்பின்
இளமையொடு பழகிக் கழிமூப்புக் குறுகாது
என்றும் இருக்கினும் இருக்க அன்றி
இன்றே இறக்கினும் இறக்க ஒன்றினும்

வேண்டலும் இலனே வெறுத்தலும் இலனே
ஆண்டகைக் குரிசில்நின் அடியரொடும் குழுமித்
தெய்வக் கூத்துநின் செய்ய பாதமும்
அடையவும் அணுகவும் பெற்ற
கிடையாச் செல்வம் கிடைத்த லானே. 861

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெண்பா

37. ஆனேறே போந்தால் அழிவுண்டே அன்புடைய
நானேதான் வாழ்ந்திடினும் நன்றன்றே - வானோங்கு
வாமாண் பொழில்றில்லை மன்றைப் பொலிவித்த
கோமானை இத்தெருவே கொண்டு. 862

### கட்டளைக் கலித்துறை

38. கொண்டல்வண் ணத்தவன் நான்முகன்
இந்திரன் கோமகுடத்
தண்டர்மிண் டித்தொழும் அம்பலக்
கூத்தனுக்கு அன்புசெய்யா
மிண்டர்மிண் டித்திரி வாரெனக்கு
என்னினி நானனவன் தன்
தொண்டர் தொண்டர்க்குத் தொழும்பாய்த்
திரியத் தொடங்கினனே. 863

### ஆசிரிய சந்த விருத்தம்

39. தொடர நரைத்தங்க முன்புள வாயின
தொழில்கள் மறுத்தொன்றும் ஒன்றி யிடாதொரு
களிவு தலைக்கொண்டு புன்புலை வாரிகள்
துளையொழு கக்கண்டு சிந்தனை ஓய்வொடு

நடைகெட முற்கொண்ட பெண்டிர் பொறாவொரு
நடலை நமக்கென்று வந்தன பேசிட
நலியிரு மற்குஅஞ்சி உண்டி வேறாவிழு
நரக உடற்கன்பு கொண்டலை வேன்இனி

மிடலொடி யப்பண்டி லங்கையர் கோனொரு
விரலின் அமுக்கொண்டு பண்பல பாடிய
விரகு செவிக்கொண்டு முன்புள தாகிய
வெகுளி தவிர்த்தன்று பொன்றி யிடாவகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடமருள் வைக்குஞ் செழுஞ்சுடர் ஊறிய
தெளியமு தத்தின் கொழுஞ்சுவை நீடிய
திலைநிக ரிற்செம்பொன் அம்பல மேவிய
சிவனை நினைக்குந் தவஞ்சது ராவதே. 864

## நேரிசை ஆசிரியப்பா

40. சதுர்முகன் தந்தைக்குக் கதிர்விடு கடவுள்
ஆழி கொடுத்த பேரருள் போற்றி
முயற்சியொடு பணிந்த இயக்கர்கோ னுக்கு
மாநிதி இரண்டும் ஆனாப் பெருவளத்து
அளகை ஒன்றும் தளர்வின்றி நிறுவிய

செல்வங் கொடுத்த செல்வம் போற்றி
தாள்நிழல் அடைந்த மாணிக் காக
நாண்முறை பிறழாது கோண்முறை வலித்துப்
பதைத்துவருங் கூற்றைப் படிமிசைத் தெறிக்க
உதைத்துயிர் அளித்த உதவி போற்றி

குலைகுலை குலைந்த நிலையாத் தேவர்
படுபேர் அவலம் இடையின்றி விலக்கிக்
கடல்விடம் அருந்தின கருணை போற்றி
தவிராச் சீற்றத்து அவுணர் மூவெயில்
ஒல்லனல் கொளுவி ஒருநொடிப் பொடிபட

வில்லொன்று வளைத்த வீரம் போற்றி
பூமென் கரும்பொடு பொடிபட நிலத்துக்
காமனைப் பார்த்த கண்ணுதல் போற்றி
தெய்வ யாளி கைமுயன்று கிழித்தெனக்
கரியொன்று உரித்த பெருவிறல் போற்றி

பண்டு பெரும்போர்ப் பார்த்தனுக்கு ஆகக்
கொண்டு நடந்த கோலம் போற்றி
விரற்பதம் ஒன்றில் வெள்ளிமலை எடுத்த
அரக்கனை நெரித்த ஆண்மை போற்றி
விலங்கல் விண்டு விழுந்தென முன்னாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலந்தரன் தடிந்த தண்டம் போற்றி
தாதையை எறிந்த வேதியச் சிறுவற்குப்
பரிகலங் கொடுத்த திருவுளம் போற்றி
நின்முதல் வழிபடத் தன்மகன் தடிந்த
தொண்டர் மனையில் உண்டல் போற்றி

வெண்ணெய் உண்ண எண்ணுபு வந்து
நந்தா விளக்கை நுந்துபு பெயர்த்த
தாவுபுல் எலிக்கு மூவுல காள
நொய்தினில் அளித்த கைவளம் போற்றி
பொங்குளை அமல்வாய்ப் புகைவிழி ஒருதனிச்

சிங்கங் கொன்ற சேவகம் போற்றி
வரிமிடற்று எறுழ்வலி மணியுகு பகுவாய்
உரகம் பூண்ட ஒப்பனை போற்றி
கங்கையும் கடுக்கையும் கலந்துழி ஒருபால்
திங்கள் சூடிய செஞ்சடை போற்றி

கடவுள் இருவர் அடியும் முடியும்
காண்டல் வேண்டக் கனற்பிழம்பாகி
நீண்டு நின்ற நீளம் போற்றி
ஆலம் பில்குநின் சூலம் போற்றி
கூறுதற்கு அரியநின் ஏறு போற்றி

ஏகல் வெற்பன் மகிழும் மகட்கு இடப்
பாகங் கொடுத்த பண்பு போற்றி
தில்லை மாநகர் போற்றி தில்லையுட்
செம்பொன் அம்பலம் போற்றி அம்பலத்து
ஆடும் நாடகம் போற்றி என்றாங்கு

என்றும் போற்றினும் என்தனக்கு இறைவ
ஆற்றல் இல்லை ஆயினும்
போற்றி போற்றிநின் பொலம்பூ அடிக்கே. 865

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டினத்துப் பிள்ளையார் அருளிய

# திருக்கழுமல மும்மணிக்கோவை (27)

திருச்சிற்றம்பலம்

## இணைக்குறள் ஆசிரியப்பா

01. திருவளர் பவளப் பெருவரை மணந்த
மரகத வல்லி போல ஒருகூறு
இமையச் செல்வி பிரியாது விளங்கப்
பாய்திரைப் பரவை மீமிசை முகிழ்த்த
அலைகதிர்ப் பரிதி ஆயிரந் தொகுத்த

வரன்முறை திரியாது மலர்மிசை இருந்தெனக்
கதிர்விடு நின்முகங் காண்தொறும் காண்தொறும்
முதிரா இளமுலை முற்றாக் கொழுந்தின்
திருமுகத் தாமரை செவ்வியின் மலரநின்
தையல் வாணுதல் தெய்வச் சிறுபிறை

இளநிலாக் காண்தொறும் ஒளியொடும் புணர்ந்தநின்
செவ்வாய்க் குமுதம் செவ்வி செய்யநின்
செங்கைக் கமலம் மங்கை வனமுலை
அமிர்த கலசம் அமைவின் ஏந்த
மலைமகள் தனாது நயனக் குவளைநின்

பொலிவினொடு மலர மறையோர்
கழுமல நெறிநின்று பொலிய
நாகர் நாடு மீமிசை மிதந்து
மீமிசை உலகங் கீழ்முதல் தாழ்ந்திங்கு
ஒன்றா வந்த குன்றா வெள்ளத்து

உலகம்மூன் றுக்கும் களைகண் ஆகி
முதலில் காலம் இனிதுவீற் றிருந்துழித்
தாதையொடு வந்த வேதியச் சிறுவன்
தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த
அன்னா யோஎன்று அழைப்பமுன் னின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான போனகத்து அருள்அட்டிக் குழைத்த
ஆனாத் திரளை அவன்வயின் அருள
அந்தணன் முனிந்து தந்தார் யாரென
அவனைக் காட்டுவன் அப்ப வானார்
தோஒ டுயை செவியன் என்றும்

பீஇ டுடைய பெம்மான் என்றும்
கையில் சுட்டிக்காட்ட
ஐயநீ வெளிப்பட் டருளினை ஆங்கே. 866

### வெண்பா

02. அருளின் கடலடியேன் அன்பென்னும் ஆறு
பொருளின் திரள்புகலி நாதன் - இருள்புகுதும்
கண்டத்தான் என்பாரைக் காதலித்துக் கைதொழுவார்
அண்டத்தார் நாமார் அதற்கு. 867

### கட்டளைக் கலித்துறை

03. ஆரணம் நான்கிற்கும் அப்பால்
அவனறி யத்துணிந்த
நாரணன் நான்முக னுக்குஅரி
யான்நடு வாய்நிறைந்த
பூரணன் எந்தை புகலிப்
பிரான்பொழில் அத்தனைக்கும்
காரணன் அந்தக் கரணங்
கடந்த கருப்பொருளே. 868

### இணைக்குறள் ஆசிரியப்பா

04. கருமுதல் தொடங்கிப் பெருநாள் எல்லாம்
காமம் வெகுளி கழிபெரும் பொய்யெனும்
தூய்மையில் குப்பை தொலைவின்றிக் கிடந்ததை
அரிதின் இகழ்ந்து போக்கிப் பொருதிறன்
மையிருள் திறத்து மதனுடை அடுசினத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐவகைக் கடாவும் யாப்பவிழ்த்து அகற்றி
அன்புகொடு மெழுகி அருள்விளக் கேற்றித்
துன்ப இருளைத் துரந்து முன்புறம்
மெய்யெனும் விதானம் விரித்து நொய்ய
கீழ்மையில் தொடர்ந்து கிடந்தஎன் சிந்தைப்

பாழறை உனக்குப் பள்ளியறை யாக்கிச்
சிந்தைத் தாமரைச் செழுமலர்ப் பூந்தவிசு
எந்தைநீ இருக்க இட்டனன் இந்த
நெடுநில வளாகமும் அடுகதிர் வானமும்
அடையப் பரந்த ஆதிவெள் ளத்து

நுரையெனச் சிதறி இருசுடர் மிதப்ப
வரைபறித்து இயங்கும் மாருதம் கடுப்ப
மாலும் பிரமனும் முதலிய வானவர்
காலம் இதுவெனக் கலங்கா நின்றுழி
மற்றவர் உய்யப் பற்றிய புணையாய்

மிகநனி மிதந்த புகலி நாயக
அருள்நனி சுரக்கும் பிரளய விடங்கநின்
செல்வச் சிலம்பு மெல்லென மிழற்ற
அமையாக் காட்சி இமையக்
கொழுந்தையும் உடனே கொண்டிங்கு

எழுந்தரு ளத்தகும் எம்பெரு மானே. 869

## வெண்பா

05. மானும் மழுவும் திருமிடற்றில் வாழுமிருள்
தானும் பிறையும் தரித்திருக்கும் - வானவர்க்கு
வெள்ளத்தே தோன்றிக் கழுமலத்தே வீற்றிருந்தென்
உள்ளத்தே நின்ற ஒளி. 870

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டளைக் கலித்துறை

06. ஒளிவந்த வாபொய் மனத்திருள்
நீங்களன் உள்ளவெள்ளத்து
எளிவந்த வாவந்து தித்தித்த
வாசித்தி யாததொரு
களிவந்த வாஅன்பு கைவந்த
வாகடை சாரமையத்து
எளிவந்த வாநங் கழுமல
வாணர்தம் இன்னருளே. 871

## இணைக்குறள் ஆசிரியப்பா

07. அருள்பழுத் தளித்த கருணை வான்கனி
ஆரா இன்பத் தீராக் காதல்
அடியவர்க்கு அமிர்த வாரி நெடுநிலை
மாடக் கோபுரத்து ஆடகக் குடுமி
மழைவயிறு கிழிக்கும் கழுமல வாணநின்

வழுவாக் காட்சி முதிரா இளமுலைப்
பாவையுடன் இருந்த பரம யோகி
யானொன்று உணர்த்துவன் எந்தை மேனாள்
அகில லோகமும் அனந்த யோனியும்
நிகிலமும் தோன்றநீ நினைந்தநாள் தொடங்கி

எனைப்பல யோனியும் நினைப்பரும் பேதத்து
யாரும் யாவையும் எனக்குத் தனித்தனித்
தாய ராகியும் தந்தைய ராகியும்
வந்தி லாதவர் இல்லை யானவர்
தந்தையர் ஆகியும் தாயர் ஆகியும்

வந்தி ராததும் இல்லை முந்து
பிறவா நிலனும் இல்லை அவ்வயின்
இறவா நிலனும் இல்லை பிறிதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைத் தின்னா உயிர்களும் இல்லை யான்அவை
தம்மைத் தின்னா(து) ஒழிந்ததும் இல்லை அனைத்தே

காலமும் சென்றது யான்இதன் மேலினி
இளைக்குமா றிலனே நாயேன்
நந்தாச் சோதிநின் அஞ்செழுத்து நவிலும்
தந்திரம் பயின்றதும் இலனே தந்திரம்
பயின்றவர்ப் பயின்றதும் இலனே ஆயினும்

இயன்றதோர் பொழுதின் இட்டது மலராச்
சொன்னது மந்திர மாக என்னையும்
இடர்ப்பிறப்பு இறப்பெனும் இரண்டின்
கடற்ப டாவகை காத்தல் நின்கடனே. 872

### வெண்பா

08. கடலான காமத்தே கால் தாழ்வார் துன்பம்
அடலாம் உபாயம் அறியார் - உடலாம்
முழுமலத்தை ஓர்கிலார் முக்கட் பெருமான்
கழுமலத்தைக் கைதொழா தார். 873

### கட்டளைக் கலித்துறை

09. தொழுவாள் இவள்வளை தோற்பாள்
இவளிடர்க் கேயலர் கொண்டு
எழுவாய் எழுகின்ற தென்செய
வோஎன் மனத்திருந்தும்
கழுவா மணியைக் கழுமல
வாணனைக் கையிற்கொண்ட
மழுவா ளனைக்கண்டு வந்தென்
றால் ஓர் வசையில்லையே. 874

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேரிசை ஆசிரியப்பா

10\. வசையில் காட்சி இசைநனி விளங்க
முன்னாள் நிகழ்ந்த பன்னீ ருகந்து
வேறுவேறு பெயரின் ஊறின்று இயன்ற
மையறு சிறப்பின் தெய்வத் தன்மைப்
புகலி நாயக இகல்விடைப் பாக

அமைநாண் மென்தோள் உமையாள் கொழுந
குன்று குனிவித்து வன்தோள் அவுணர்
மூவெயில் எரித்த சேவகத் தேவ
இளநிலா முகிழ்க்கும் வளர்சடைக் கடவுள்நின்
நெற்றியில் சிறந்த ஒற்றை நாட்டத்துக்

காமனை விழித்த மாமுது தலைவ
வானவர் அறியா ஆதி யானே
கல்லா மனத்துப் புல்லறிவு தொடர
மறந்து நோக்கும் வெறுந்தண் நாட்டத்துக்
காண்தொறும் காண்தொறும் எல்லாம் யாண்டை

ஆயினும் பிறவும் என்னதும் பிறரதும்
ஆவன பலவும் அழிவன பலவும்
போவதும் வருவதும் நிகழ்வதும் ஆகித்
தெண்ணீர் ஞாலத்துத் திரண்ட மணலினும்
எண்ணில் கோடி எனைப்பல வாகி

இல்லன உளவாய் உள்ளன காணாப்
பன்னாள் இருள்வயின் பட்டேன் அன்னதும்
அன்னது ஆதலின் அடுக்கும் அதென்னெனின்
கட்புலன் தெரியாது கொட்புறும் ஒருவற்குக்
குழிவழி யாகி வழிகுழி யாகி

ஒழிவின்று ஒன்றின் ஒன்றுதடு மாற
வந்தாற் போல வந்தது எந்தைநின்
திருவருள் நாட்டம் கருணையின் பெறலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவையும் எனக்குப் பொய்யெனத் தோன்றி
மேவரும் நீயே மெய்யெனத் தோன்றினை

ஓவியப் புலவன் சாயல்பெற எழுதிய
சிற்ப விகற்பம் எல்லாம் ஒன்றித்
தவிராது தடவினர் தமக்குச்
சுவராய்த் தோன்றுங் துணிவுபோன் றனவே. 875

### வெண்பா

11. எனவே எழுந்திருந்தாள் என்செய்வாள் இன்னம்
சினவேறு காட்டுதிரேல் தீரும் - இனவேகப்
பாம்புகலி யால்நிமிரும் பன்னாச் சடைமுடிநம்
பூம்புகலி யான் இதழிப் போது. 876

### கட்டளைக் கலித்துறை

12. போதும் பெறாவிடில் பச்சிலை
உண்டு புனலுண்டெங்கும்
ஏதும் பெறாவிடில் நெஞ்சுண்டன்
றேயினை யாகச்செப்பும்
சூதும் பெறாமுலை பங்கர்தென்
தோணி புரேசர்வண்டின்
தாதும் பெறாத அடித்தா
மரைசென்று சார்வதற்கே. 877

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டினத்துப் பிள்ளையார் அருளிய

# திருவிடைமருதூர் மும்மணிக்கோவை (28)

திருச்சிற்றம்பலம்

## இணைக்குறள் ஆசிரியப்பா

01. தெய்வத் தாமரைச் செவ்வியின் மலர்ந்து
வாடாப் புதுமலர்த் தோடெனச் சிவந்து
சிலம்பும் கழலும் அலம்பப் புனைந்து
கூற்றின் ஆற்றல் மாற்றிப் போற்றாது
வலம்புரி நெடுமால் ஏனமாகி நிலம்புக்கு

ஆற்றலின் அகழத் தோற்றாது நிமிர்ந்து
பத்தி அடியவர் பச்சிலை இடினும்
முத்தி கொடுத்து முன்னின்று அருளித்
நிகழ்ந்துளது ஒருபால் திருவடி அகஞ்சேந்து
மறுவில் கற்பகத் துறுதளிர் வாங்கி

நெய்யில் தோய்த்த செவ்வித் தாகி
நூபுரம் கிடப்பினும் நொந்து தேவர்
மடவரல் மகளிர் வணங்குபு வீழ்த்த
சின்னப் பன்மலர் தீண்டிடச் சிவந்து
பஞ்சியும் அனிச்சமும் எஞ்ச எஞ்சாத்

திருவொடும் பொலியும் ஒருபால் திருவடி
நீலப் புள்ளி வாளுகிர் வேங்கைத்
தோலின் கலிங்கம் மேல்விரித்து அசைத்து
நச்செயிற்று அரவக் கச்சையாப் புறத்துப்
பொலிந்துளது ஒருபால் திருவிடை இலங்கொளி

அரத்த ஆடை விரித்து மீதுறீஇ
இரங்குமணி மேகலை ஒருங்குடன் சாத்திய
மருங்கிற் றாகும் ஒருபால் திருவிடை
செங்கண் அரவும் பைங்கண் ஆமையும்
கேழற் கோடும் வீழ்திரள் அக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுடங்கு நூலும் இடங்கொண்டு புனைந்து
தவளநீறு அணிந்ததோர் பவளவெற் பென்ன
ஒளியுடன் திகழும் ஒருபால் ஆகம்
வாரும் வடமும் ஏர்பெறப் புனைந்து
செஞ்சாந்து அணிந்து குங்குமம் எழுதிப்

பொற்றா மரையின் முற்றா முகிழென
உலகேழ் ஈன்றும் நிலையில் தளரா
முலையுடன் பொலியும் ஒருபால் ஆகம்
அயில்வாய் அரவம் வயின்வயின் அணிந்து
மூவிலை வேலும் பூவாய் மழுவும்

தமருகப் பறையும் அமர்தரத் தாங்கிச்
சிறந்துளது ஒருபால் திருக்கரம் செறிந்த
சூடகம் விளங்கிய ஆடகக் கழங்குடன்
நொம்மென் பந்தும் அம்மென் கிள்ளையும்
தரித்தே திகழும் ஒருபால் திருக்கரம்

இரவியும் எரியும் விரவிய வெம்மையின்
ஒருபால் விளங்கும் திருநெடு நாட்டம்
நவ்வி மானின் செவ்வித் தாகிப்
பாலிற் கிடந்த நீலம் போன்று
குண்டுநீர்க் குவளையிற் குளிர்ந்து நிறம்பயின்று

எம்மனோர்க்கு அடுத்த வெம்மைநோய்க்கு இரங்கி
உலகேழ் புரக்கும் ஒருபால் நாட்டம்
நொச்சிப் பூவும் பச்சை மத்தமும்
கொன்றைப் போதும் மென்துணர்த் தும்பையும்
கங்கை யாறும் பைங்கண் தலையும்

அரவும் மதியமும் விரவத் தொடுத்துச்
சூடா மாலை சூடிப் பீடுகெழு
நெருப்பில் திரித்தனைய உருக்கிளர் சடிலமொடு
நான்முகம் கரந்த பால்நிற அன்னம்
காணா வண்ணம் கருத்தையும் கடந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேண்இகந்து உளதே ஒருபால் திருமுடி பேணிய
கடவுட் கற்பின் மடவரல் மகளிர்
கற்பக வனத்துப் பொற்பூ வாங்கிக்
கைவைத்துப் புனைந்த தெய்வமாலை
நீலக் குழல்மிசை வளைஇமேல் நிவந்து

வண்டுந் தேனுங் கிண்டுபு திளைப்பத்
திருவொடு பொலியும் ஒருபால் திருமுடி
இனையவண் ணத்து நினைவருங் காட்சி
இருவயின் உருவும் ஒருவயிற் றாகி
வலப்பால் நாட்டம் இடப்பால் நோக்க

வாணுதல் பாகம் நாணுதல் செய்ய
வலப்பால் திருக்கரம் இடப்பால் வனமுலை
தைவந்து வருட மெய்ம்மயிர் பொடித்தாங்கு
உலகம் ஏழும் பன்முறை ஈன்று
மருதிடம் கொண்ட ஒருதனிக் கடவுள்நின்

திருவடி பரவுதும் யாமே நெடுநாள்
இறந்தும் பிறந்தும் இளைத்தனம் மறந்தும்
சிறைக்கருப் பாசயம் சேரா
மறித்தும் புகாஅ வாழ்வுபெற்ற பொருட்டே. 878

## வெண்பா

02. பொருளும் குலனும் புகழும் திறனும்
அருளும் அறிவும் அனைத்தும் - ஒருவர்
கருதாஎன் பார்க்கும் கறைமிடற்றாய் தொல்லை
மருதாஎன் பார்க்கு வரும். 879

## கட்டளைக் கலித்துறை

03. வருந்தேன் இறந்தும் பிறந்தும்
மயக்கும் புலன்வழி போய்ப்
பொருந்தேன் நரகிற் புகுகின்றி
லேன்புகழ் மாமருதிற்
பெருந்தேன் முகந்துகொண் டுண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறிதொன்றில் ஆசையின்றி
இருந்தேன் இனிச்சென்று இரவேன்
ஒருவரை யாதொன்றுமே.

### நேரிசை ஆசிரியப்பா

04. ஒன்றினோடு ஒன்று சென்றுமுகில் தடவி
ஆடுகொடி நுடங்கும் பீடுகெழு மாளிகை
தெய்வக் கம்மியர் கைம் முயன்று வகுத்த
ஓவநூற் செம்மைப் பூவியல் வீதிக்
குயிலென மொழியும் மயிலியல் ஆய்த்து

மான்மற விழிக்கும் ஆனாச் செல்வத்து
இடைமருது இடங்கொண்டு இருந்த எந்தை
சுடர்மழு வலங்கொண் டிருந்த தோன்றல்
ஆரணந் தொடாராப் பூரண புராண
நாரணன் அறியாக் காரணக் கடவுள்

சோதிச் சுடரொளி ஆதித் தனிப்பொருள்
ஏக நாயக யோக நாயக
யானொன்று உணர்த்துவது உளதே யான்முன்
நனந்தலை உலகத்து அனந்த யோனியில்
பிறந்துழிப் பிறவாது கறங்கெனச் சுழன்றுழித்

தோற்றும் பொழுதின் ஈற்றுத் துன்பத்து
யாயுறு துயரமும் யானுறு துயரமும்
இறக்கும் பொழுதின் அறப்பெருந் துன்பமும்
நீயலது அறிகுநர் யாரே அதனால்
யான்இனிப் பிறத்தல் ஆற்றேன் அ்ஃதான்று

உறப்பவம் துடைத்தல் நிற்பிடித்தல்லது
பிறிதொரு நெறியின் இல்லைஅந் நெறிக்கு
வேண்டலும் வெறுத்தலுமாண் டொன்றிற் படரா
உள்ளமொன்றுஉடைமை வேண்டும்அஃதன்றி
ஐம்புலன் ஏவல் ஆணைவழி நின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானலது ஒன்றைத் தானென நினையும்
இதுஎனது உள்ளம் ஆதலின் இதுகொடு
நின்னை நினைப்பது எங்ஙனம் முன்னம்
கற்புணை யாகக் கடல்நீர் நீந்தினர்
எற்பிறர் உளரோ இறைவ கற்பம்

கடத்தல்யான் பெறவும் வேண்டும் கடத்தற்கு
நினைத்தல்யான் பெறவும் வேண்டும் நினைத்தற்கு
நெஞ்சுநெறி நிற்கவும் வேண்டும் நஞ்சுபொதி
உரைஎயிற்(று) உரகம் பூண்ட
கறைகெழு மிடற்றெங் கண்ணுத லோயே. 881

## வெண்பா

05. கண்ணென்றும் நந்தமக்கோர் காப்பென்றும் கற்றிருக்கும்
எண்ணென்றும் மூலஎழுத்தென்றும் - மொண்ணை
மருதவப்பா என்றும் உனை வாழ்த்திலரேல் மற்றும்
கருத அப்பால் உண்டோ கதி. 882

## கட்டளைக் கலித்துறை

06. கதியா வதுபிறிது யாதொன்றும்
இல்லை களேவரத்தின்
பொதியா வதுசுமந் தால்விழப்
போமிது போனபின்னர்
விதியாம் எனச்சிலர் நோவதல்
லால்இதை வேண்டுநர் யார்
மதியா வதுமரு தன்கழ
லேசென்று வாழ்த்துவதே. 883

## நேரிசை ஆசிரியப்பா

07. வாழ்ந்தனம் என்று தாழ்ந்தவர்க்கு உதவாது
தன்னுயிர்க்கு இரங்கி மன்னுயிர்க்கு இரங்காது
உண்டிப் பொருட்டால் கண்டன வெ.்.கி
அவியடு நர்க்குச் சுவைபகர்ந்து ஏவி
ஆராஉண்டி அயின்றன ராகித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூராக் குழியைத் தூர்த்துப் பாரா
விழுப்பமும் குலனும் ஒழுக்கமும் கல்வியும்
தன்னிற் சிறந்த நன்மூ தாளரைக்
கூஉய்முன் னின்றுதன் ஏவல் கேட்கும்
சிறாஅர்த் தொகுதியின் உறாஅப் பேசியும்

பொய்யொடு புன்மைதன் புல்லர்க்குப் புகன்றும்
மெய்யும் மானமும் மேன்மையும் ஓரீஇத்
தன்னைத் தேறி முன்னையோர் கொடுத்த
தன்மனைக் கிழத்தி யாகிய அந்நிலைச்
சாவுழிச் சாஅந் தகைமையன் ஆயினும்

மேவுழி மேவல் செல்லாது காவலொடு
கொண்டோள் ஒருத்தி உண்டிவேட் டிருப்ப
எள்ளுக்கு எண்ணெய் போலத் தள்ளாது
பொருளின் அளவைக்குப் போகம்விற் றுண்ணும்
அருளில் மடந்தையர் ஆகந் தோய்ந்தும்

ஆற்றல்செல் லாது வேற்றோர் மனைவயின்
கற்புடை மடந்தையர் பொற்புநனி கேட்டுப்
பிழைவழி பாராது நுழைவழி நோக்கியும்
நச்சி வந்த நல்கூர் மாந்தர்தம்
விச்சையிற் படைத்த வெவ்வேறு காட்சியின்

அகமலர்ந்து ஈவார் போல முகமலர்ந்து
இனிது மொழிந்தாங்கு உதவுதல் இன்றி
நாளும் நாளும் நாள்பல குறித்தவர்
தாளின் ஆற்றலும் தவிர்த்துக் கேள்இகழ்ந்து
இகழும் பரமும் இல்லை என்று

பயமின்று ஒழுகிப் பட்டிமை பயிற்றி
மின்னின் அனையதன் செல்வத்தை விரும்பித்
தன்னையும் ஒருவ ராக உன்னும்
ஏனையோர் வாழும் வாழ்க்கையும் நனைமலர்ந்து
யோசனை கமழும் உற்பல வாவியிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசடைப் பரப்பிற் பால்நிற அன்னம்
பார்ப்புடன் வெருவப் பகுவாய் வாளைகள்
போர்த்தொழில் புரியும் பொருகா விரியும்
மருதமும் சூழ்ந்த மருத வாண
சுருதியும் தொடராச் சுருதி நாயக

பத்தருக்கு எய்ப்பினில் வைப்பென உதவும்
முத்தித் தாள மூவா முதல்வநின்
திருவடி பிடித்து வெருவரல் விட்டு
மக்களும் மனைவியும் ஒக்கலும் திருவும்
பொருளென நினையாது உன்அரு ளினைநினைந்து

இந்திரச் செல்வமும் எட்டுச் சித்தியும்
வந்துழி வந்துழி மறுத்தனர் ஒதுங்கிச்
சின்னச் சீரை துன்னல் கோவணம்
அறுதற் கீளொடு பெறுவது புனைந்து
சிதவ லோடுஒன்று உதவுழி எடுத்தாங்கு

இடுவோர் உளரெனின் நிலையினின்று அயின்று
படுதரைப் பாயலிற் பள்ளி மேவி
ஓவாத் தகவெனும் அரிவையைத் தழீஇ
மகவெனப் பல்லுயிர் அனைத்தையும் ஒக்கப்
பார்க்கும்நின்

செல்வக் கடவுள் தொண்டர் வாழ்வும்
பற்றிப் பார்க்கின் உற்ற நாயேற்குக்
குளப்படி நீரும் அளப்பருந் தன்மைப்
பிரளய சலதியும் இருவகைப் பொருளும்
ஒப்பினும் ஒவ்வாத் துப்பிற்று ஆதலின்

நின்சீர் அடியார் தஞ்சீர் அடியார்க்கு
அடிமை பூண்டு நெடுநாட் பழகி
முடலை யாக்கையொடு புடைபட்டு ஒழுகியவர்
காற்றலை ஏவலென் நாய்த்தலை ஏற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டது காணின் அல்லதொன்று
உண்டோ மற்றெனக்கு உள்ளது பிறிதே. 884

### வெண்பா

08. பிறிந்தேன் நரகம் பிறவாத வண்ணம்
அறிந்தேன் அநங்கவேள் அம்பிற் - செறிந்த
பொருதவட்ட வில்பிழைத்துப் போந்தேன் புராணன்
மருதவட்டம் தன்னுளே வந்து. 885

### கட்டளைக் கலித்துறை

09. வந்திக்கண் டாய்அடி யாரைக்கண்
டால்மற வாதுநெஞ்சே
சிந்திக்கண் டாய்அரன் செம்பொற்
கழல்திரு மாமருதைச்
சந்திக்கண் டாயில்லை யாயின்
நமன்தமர் தாங்கொடுபோய்
உந்திக்கண் டாய்நிர யத்துன்னை
வீழ்த்தி உழக்குவரே. 886

### இணைக்குறள் ஆசிரியப்பா

10. உழப்பின் வாரா உறுதிகள் உளவோ
கழப்பின் வாராக் கையுற வுளவோ அதனால்
நெஞ்சப் புனத்து வஞ்சக் கட்டையை
வேரற அகழ்ந்து போக்கித் தூர்வைசெய்து
அன்பென் பாத்தி கோலி முன்புற

மெய்யெனும் எருவை விரித் தாங்கு ஐயமில்
பத்தித் தனிவித் திட்டு நித்தலும்
ஆர்வத் தெண்ணீர் பாய்ச்சி நேர்நின்று
தடுக்குநர்க்கு அடங்காது இடுக்கண் செய்யும்
பட்டி அஞ்சினுக்கு அஞ்சியுட் சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்த வேலி கோலி வாய்ந்தபின்
ஞானப் பெருமுளை நந்தாது முளைத்துக்
கருணை இளந்தளிர் காட்ட அருகாக்
காமக் குரோதக் களையறக் களைந்து
சேமப் படுத்துழிச் செம்மையின் ஓங்கி

மெய்ம்மயிர்ப் புளகம் முகிழ்த்திட்டு அம்மெனக்
கண்ணீர் அரும்பிக் கடிமலர் மலர்ந்து புண்ணிய
அஞ்செழுத்து அருங்காய் தோன்றி நஞ்சுபொதி
காள கண்டமும் கண்ணொரு மூன்றும்
தோளொரு நான்கும் சுடர்முகம் ஐந்தும்

பவளநிறம் பெற்றுத் தவளநீறு பூசி
அறுசுவை அதனினும் உறுசுவை உடைத்தாய்க்
காணினும் கேட்பினும் கருதினுங் களிதரும்
சேணுயர் மருத மாணிக்கத் தீங்கனி
பையப் பையப் பழுத்துக் கைவர

எம்ம னோர்கள் இனிதின் அருந்திச்
செம்மாந் திருப்பச் சிலர்இதின் வாராது
மனமெனும் புனத்தை வறும்பா ழாக்கிக்
காமக் காடு மூடித் தீமைசெய்
ஐம்புல வேடர் ஆறலைத்து ஒழுக

இன்பப் பேய்த்தேர் எட்டாது ஓடக்
கல்லா உணர்வெனும் புல்வாய் அலமர
இச்சைவித்து உகுத்துழி யானெனப் பெயரிய
நச்சு மாமரம் நனிமிக முளைத்துப்
பொய்யென் கவடுகள் போக்கிச் செய்யும்

பாவப் ப.்.றழை பரப்பிப் பூவெனக்
கொடுமை அரும்பிக் கடுமை மலர்ந்து
துன்பப் பல்காய் தூக்கிப் பின்பு
மரணம் பழுத்து நரகிடை வீழ்ந்து
தமக்கும் பிறர்க்கும் உதவாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமைப்பிற் கழியும் இயற்கையோர் உடைத்தே. 887

### வெண்பா

11. உடைமணியின் ஓசைக்கு ஒதுங்கி அரவம்
படம்ஒடுங்கப் பையவே சென்றங்கு - உடைமருதர்
ஐயம்புகுவது அணியிழையார் மேல்அநங்கன்
கையம் புகவேண்டிக் காண். 888

### கட்டளைக் கலித்துறை

12. காணீர் கதியொன்றும் கல்லீர்
எழுத்தஞ்சும் வல்லவண்ணம்
பேணீர் திருப்பணி பேசீர்
அவன்புகழ் ஆசைப்பட்டுப்
பூணீர் உருத்திர சாதனம்
நீறெங்கும் பூசுகிலீர்
வீணீர் எளிதோ மருதப்
பிரான்கழல் மேவுதற்கே. 889

### இணைக்குறளாசிரியப்பா

13. மேவிய புன்மயிர்த் தொகையோ அம்மயிர்
பாவிய தோலின் பரப்போ தோலிடைப்
புகவிட்டுப் பொதிந்த புண்ணோ புண்ணிடை
ஊறும் உதிரப் புனலோ கூறுசெய்து
இடையிடை நிற்கும் எலும்போ எலும்பிடை

முடைகெழு மூளை விழுதோ வழுவழுத்து
உள்ளிடை ஒழுகும் வழும்போ மெள்ளநின்று
ஊரும் புழுவின் ஒழுங்கோ நீரிடை
வைத்த மலத்தின் குவையோ வைத்துக்
கட்டிய நரம்பின் கயிறோ உடம்பிற்குள்

பிரியாது ஒறுக்கும் பிணியோ தெரியாது
இன்னது யானென்று அறியேன் என்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும் தேடினன் யாதினும் காணேன் முன்னம்
வரைத்தனி வில்லாற் புரத்தைஅழல் ஊட்டிக்
கண்படை யாகக் காமனை ஒருநாள்

நுண்பொடி யாக நோக்கி அண்டத்து
வீயா அமரர் வீயவந்து எழுந்த
தீவாய் நஞ்சைத் திருவமு தாக்கி
இருவர் தேடி வெருவர நிமிர்ந்து
பாலனுக் காகக் காலனைக் காய்ந்து

சந்தன சரள சண்பக வகுள
நந்தன வனத்திடை ஞாயிறு வழங்காது
நவமணி முகிழ்த்த புதுவெயில் எறிப்ப
எண்ணருங் கோடி இருடிகணங் கட்குப்
புண்ணியம் புரக்கும் பொன்னி சூழ்ந்த

திருவிடை மருத பொருவிடைப் பாக
மங்கை பங்க கங்கை நாயகநின்
தெய்வத் திருவருள் கைவந்து கிடைத்தலின்
மாயப் படலம் கீறித் தூய
ஞான நாட்டம் பெற்றபின் யானும்

நின்பெருந் தன்மையும் கண்டேன் காண்டலும்
என்னையும் கண்டேன் பிறரையுங் கண்டேன்
நின்னிலை அனைத்தையும் கண்டேன் என்னே
நின்னைக் காணா மாந்தர்
தன்னையும் காணாத் தன்மை யோரே. 890

### வெண்பா

14. ஓராதே அஞ்செழுத்தும் உன்னாதே பச்சிலையும்
நேராதே நீரும் நிரப்பாதே - யாராயோ
எண்ணுவார் உள்ளத்து இடைமருதர் பொற்பாதம்
நண்ணுவாம் என்னுமது நாம். 891

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கட்டளைக் கலித்துறை

15. நாமே இடையுள்ள வாறறி
வாம்இனி நாங்கள் சொல்ல
லாமே மருதன் மருத
வனத்தன்னம் அன்னவரைப்
பூமேல் அணிந்து பிழைக்கச்செய்
தார்ஒரு பொட்டுமிட்டார்
தாமே தளர்பவ ரைப்பாரம்
ஏற்றுதல் தக்கதன்றே. 892

### நேரிசை ஆசிரியப்பா

16. அன்றினர் புரங்கள் அழலிடை அவியக்
குன்றுவளைத் தெய்த குன்றாக் கொற்றத்து
நுண்பொடி அணிந்த எண்தோள் செல்வ
கயிலைநடந் தனைய உயர்நிலை நோன்தாள்
பிறைசெறிந் தன்ன இருகோட்டு ஒருதிமில்

பால்நிறச் செங்கண் மால்விடைப் பாக
சிமையச் செங்கோட்டு இமையச் செல்வன்
மணியெனப் பெற்ற அணியியல் அன்னம்
வெள்ளைச் சிறுநகைக் கிள்ளைப் பிள்ளை
குயிலெனப் பேசும் மயிலிளம் பேடை

கதிரொளி நீலம் கமலத்து மலர்ந்தன
மதரரி நெடுங்கண் மானின் கன்று
வருமுலை தாங்கும் திருமார்பு வல்லி
வையம் ஏழும் பன்முறை ஈன்ற
ஐய திருவயிற்று அம்மைப் பிராட்டி

மறப்பரும் செய்கை அறப்பெருஞ் செல்வி
எமையா ளுடைய உமையாள் நங்கை
கடவுட் கற்பின் மடவரல் கொழுந
பவள மால்வரைப் பணைக்கைபோந் தனைய
தழைசெவி எண்தோள் தலைவன் தந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவலர் குடுமிச் சேவலம் பதாகை
மலைதுளை படுத்தகொலைகெழு கூர்வேல்
அமரர்த் தாங்கும் குமரன் தாதை
பொருதிடங் கொண்ட பொன்னி புரக்கும்
மருதிடங் கொண்ட மருத வாண

நின்னது குற்றம் உளதோ நின்னினைந்து
எண்ணரும் கோடி இடர்ப்பகை கடந்து
கண்ணுறு சீற்றத்துக் காலனை வதையா
இறப்பையும் பிறப்பையும் இகந்து சிறப்பொடு
தேவர் ஆவின் கன்றெனத் திரியாப்

பாவிகள் தமதே பாவம் யாதெனின்
முறியாப் புழுக்கல் முப்பழங் கலந்த
அறுசுவை அடிசில் அட்டினிது இருப்பப்
புசியா தொருவன் பசியால் வருந்துதல்
அயினியின் குற்றம் அன்று வெயிலின்வைத்து

ஆற்றிய தெண்ணீர் நாற்றமிட் டிருப்ப
மடாஅ ஒருவன் விடாஅ வேட்கை
தெண்ணீர்க் குற்றம் அன்று கண்ணகன்று
தேன்துளி சிதறிப் பூந்துணர் துறுமி
வாலுகங் கிடந்த சோலை கிடப்ப

வெள்ளிடை வெயிலிற் புள்ளிவெயர் பொடிப்ப
அடிபெயர்த்து இடுவான் ஒருவன்
நெடிது வருந்துதல் நிழல்தீங்கு அன்றே. 893

### வெண்பா

17. அன்றென்றும் ஆமென்றும் ஆறு சமயங்கள்
ஒன்றொன்றோடு ஒவ்வா து உரைத்தாலும் - என்றும்
ஒருதனையே நோக்குவார் உள்ளத்திருக்கும்
மருதனையே நோக்கி வரும். 894

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டளைக் கலித்துறை

18. நோக்கிற்றுக் காமன் உடல்பொடி
யாக நுதிவிரலால்
தாக்கிற்று அரக்கன் தலைகீழ்ப்
படத்தன் சுடர்வடிவாள்
ஒக்கிற்றுத் தக்கன் தலைஉருண்
டோடச் சலந்தரனைப்
போக்கிற்று உயர்பொன்னி சூழ்மரு
தாளுடைப்புண்ணியமே. 895

## நேரிசை ஆசிரியப்பா

19. புண்ணிய புராதன புதுப்பூங் கொன்றைக்
கண்ணி வேய்ந்த கைலை நாயக
காள கண்ட கந்தனைப் பயந்த
வாளரி நெடுங்கண் மலையாள் கொழுந
பூத நாத பொருவிடைப் பாக

வேதகீத விண்ணோர் தலைவ
முத்தி நாயக மூவா முதல்வ
பத்தியாகிப் பணைத்தமெய் யன்பொடு
நொச்சி யாயினும் கரந்தை யாயினும்
பச்சிலை இட்டுப் பரவுந் தொண்டர்

கருவிடைப் புகாமல் காத்தருள் புரியும்
திருவிடை மருத திரிபு ராந்தக
மலர்தலை உலகத்துப் பலபல மாக்கள்
மக்களை மனைவியை ஒக்கலை ஒரீஇ
மனையும் பிறவுந் துறந்து நினைவரும்

காடும் மலையும் புக்குக் கோடையிற்
கைம்மேல் நிமிர்த்துக் காலொன்று முடக்கி
ஐவகை நெருப்பின் அழுவத்து நின்று
மாரி நாளிலும் வார்பனி நாளிலும்
நீரிடை மூழ்கி நெடிது கிடந்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடையைப் புனைந்தும் தலையைப் பறித்தும்
உடையைத் துறந்தும் உண்ணாது உழன்றும்
காயும் கிழங்கும் காற்றுதிர் சருகும்
வாயுவும் நீரும் வந்தன அருத்தியும்
களரிலும் கல்லிலும் கண்படை கொண்டும்

தளர்வுறும் யாக்கையைத் தளர்வித்து ஆங்கவர்
அம்மை முத்தி அடைவதற் காகத்
தம்மைத்தாமே சாலவும் ஒறுப்பர்
ஈங்கிவை செய்யாது யாங்கள் எல்லாம்
பழுதின்று உயர்ந்த எழுநிலை மாடத்தும்

செழுந்தாது உதிர்ந்த நந்தன வனத்தும்
தென்றல் இயங்கும் முன்றில் அகத்தும்
தண்டாச் சித்திர மண்டப மருங்கிலும்
பூவிரி தரங்க வாரிக் கரையிலும்
மயிற்பெடை ஆலக் குயிற்றிய குன்றிலும்

வேண்டுழி வேண்டுழி ஆண்டாண்டு இட்ட
மருப்பின் இயன்ற வாளரி சுமந்த
விருப்புறு கட்டில் மீமிசைப் படுத்த
ஐவகை அமளி அணைமேல் பொங்கத்
தண்மலர் கமழும் வெண்மடி விரித்துப்

பட்டினுட் பெய்த பதநுண் பஞ்சின்
நெட்டணை யருகாக் கொட்டைகள் பரப்பிப்
பாயல் மீது பரிபுரம் மிழற்றச்
சாயல்அன் னத்தின் தளர்நடை பயிற்றிப்
பொன்தோ ரணத்தைச் சுற்றிய துகிலென

அம்மென் குறங்கின் நொம்மென் கலிங்கம்
கண்ணும் மனமும் கவற்றப் பண்வர
இரங்குமணி மேகலை மருங்கிற் கிடப்ப
ஆடரவு அல்குல் அரும்பெறல் நுசுப்பு
வாட வீங்கிய வனமுலை கதிர்ப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணியியல் கமுகை அலங்கரித் ததுபோல்
மணியியல் ஆரங் கதிர்விரித்து ஒளிர்தர
மணிவளை தாங்கிய அணிகெழு மென்தோள்
வரித்த சாந்தின்மிசை விரித்துமீது இட்ட
உத்தரீ யப்பட்டு ஒருபால் ஒளிர்தர

வள்ளை வாட்டிய ஒள்ளிரு காதொடு
பவளத் தருகாத் தரளம் நிரைத்தாங்கு
ஒழுகி நீண்ட குமிழொன்று பதித்துக்
காலன் மேலும் காம பாணமும்
ஆல காலமும் அனைத்தும் இட்டு அமைத்த

இரண்டு நாட்டமும் புரண்டுகடை மிளிர்தர
மதியென மாசறு வதனம் விளங்கப்
புதுவிரை அலங்கல் குழன்மிசைப் பொலியும்
அஞ்சொல் மடந்தையர் ஆகந் தோய்ந்தும்
சின்னம் பரப்பிய பொன்னின் கலத்தில்

அறுசுவை அடிசில் வறிதினிது அருந்தாது
ஆடினர்க்கு என்றும் பாடினர்க்கு என்றும்
வாடினர்க்கு என்றும் வரையாது கொடுத்தும்
பூசுவன பூசியும் புனைவன புனைந்தும்
தூசு நல்லன தொடையிற் சேர்த்தியும்

ஐந்து புலன்களும் ஆர ஆர்த்தும்
மைந்தரும் ஒக்கலும் மனமகிழ்ந்து
இவ்வகை இருந்தோம் ஆயினும் அவ்வகை
மந்திர எழுத்தைந்தும் வாயிடை மறவாது
சிந்தை நின்வழி செலுத்தலின் அந்த

முத்தியும் இழந்திலம் முதல்வ அத்திறம்
நின்னது பெருமை அன்றோ என்னெனின்
வல்லான் ஒருவன் கைம்முயன்று எறியினும்
மாட்டா ஒருவன் வாளா எறியினும்
நிலத்தின் வழாஅக் கல்லேபோல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலத்தின் வழார்நின் நாமம்நவின் றோரே. 896

### வெண்பா

நாமம் நவிற் றாய்மனனே நாரியர்கள் தோள்தோய்த்து
காமம் நவிற்றிக் கழிந்தொழியல் - ஆமோ
பொருதவனத் தானைஉரி போர்த்தருளும் எங்கள்
மருதவனத் தானை வளைந்து. 897

### கட்டளைக் கலித்துறை

வளையார் பசியின் வருந்தார்
பிணியின் மதனன் அம்புக்
கிளையார் தனங்கண் டிரங்கிநில்
லார்இப் பிறப்பினில் வந்து
அளையார் நரகினுக்கு என்கட
வார்பொன் அலர்ந்தகொன்றைத்
தளையார் இடைமரு தன்னடி
யார்அடி சார்ந்தவரே. 898

### நேரிசை ஆசிரியப்பா

அடிசார்ந் தவர்க்கு முடியா இன்பம்
நிறையக் கொடுப்பினும் குறையாச் செல்வம்
மூலமும் நடுவும் முடிவும் இகந்து
காலம் மூன்றையும் கடந்த கடவுள்
உளக்கணுக்கு அல்லாது ஊன்கணுக்கு ஒளித்துத்

துளக்கற நிமிர்ந்த சோதித் தனிச்சுடர்
எறுப்புத் துளையின் இருசெவிக்கு எட்டாது
உறுப்பினின்று எழுதரும் உள்ளத்து ஓசை
வைத்த நாவின் வழிமறுத்து அகத்தே
தித்தித்து ஊறும் தெய்வத் தேறல்

துண்டத் துளையிற் பண்டை வழியன்றி
அறிவில் நாறும் நறிய நாற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய தன்மையும் எய்தாது எவற்றையும்
தானே யாகி நின்ற தற்பர
தோற்றுவது எல்லாம் தன்னிடைத் தோற்றித்

தோற்றம் பிறிதில் தோற்றாச் சுடர்முளை
விரிசடை மீமிசை வெண்மதி கிடப்பினும்
இருள்புரை கண்டத்து ஏக நாயக
சுருதியும் இருவரும் தொடர்ந்துநின்று அலமர
மருதிடம் கொண்ட மருதமா ணிக்க

உமையாள் கொழுந ஒருமூன் றாகிய
இமையா நாட்டத்து என்தனி நாயக
அடியேன் உறுகுறை முனியாது கேண்மதி
நின்னடி பணியாக் கல்மனக் கயவரொடு
நெடுநாள் பழகிய கொடுவினை ஈர்ப்பக்

கருப்பா சயமெனும் இருட்சிறை அறையில்
குடரென் சங்கிலி பூண்டு தொடர்ப்பட்டுக்
கூட்டுச்சிறைப் புழுவின் ஈட்டுமலத்து அழுந்தி
உடனே வருந்தி நெடுநாட் கிடந்து
பல்பிணிப் பெயர்பெற்று அல்லற் படுத்தும்

தண்ட லாளர் மிண்டிவந்து அலைப்ப
உதர நெருப்பிற் பதைபதை பதைத்தும்
வாதமத் திகையின் மோதமொத் துண்டும்
கிடத்தல் நிற்றல் நடத்தல் செல்லாது
இடங்குறை வாயிலின் முடங்கி இருந்துழிப்

பாவப் பகுதியில் இட்டுக் காவற்
கொடியோர் ஐவரை ஏவி நெடிய
ஆசைத் தளையில் என்னையும் உடலையும்
பாசப் படுத்திப் பையென விட்டபின்
யானும் போந்து தீதினுக்கு உழன்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியோர்ப் பிழைத்தும் பிறர்பொருள் வெளவியும்
பரியாது ஒழிந்தும் பல்லுயிர் செகுத்தும்
வேற்றோர் மனைவியர் தோற்றம் புகழ்ந்தும்
பொய்பல கூறியும் புல்லினம் புல்லியும்
ஐவரும் கடுப்ப அவாவது கூட்டி

ஈண்டின கொண்டும் மீண்டு வந்துழி
இட்டுழி இடாது பட்டுழிப் படாஅது
இந்நாள் இடுக்கண் எய்திப் பன்னாள்
வாடுபு கிடப்பேன் வீடுநெறி காணேன்
நின்னை அடைந்த அடியார் அடியார்க்கு

என்னையும் அடிமை யாகக் கொண்டே
இட்டபச் சிலைகொண்டு ஒட்டி அறிவித்து
இச்சிறை பிழைப்பித்து இனிச்சிறை புகாமல்
காத்தருள் செய்ய வேண்டும்
தீத்திரண் டன்ன செஞ்சடை யோனே. 899

### வெண்பா

23. சடைமேல் ஒருத்தி சமைந்திருப்ப மேனிப்
புடைமேல் ஒருத்தி பொலிய - இடையே போய்ச்
சங்கே கலையே மருதற்குத் தான்கொடுப்பது
எங்கே இருக்க இவள். 900

### கட்டளைக் கலித்துறை

24. இருக்கும் மருதினுக்கு உள்ளிமை
யோர்களும் நான்மறையும்
நெருக்கு நெருக்கத்து நீளகத்
துச்சென்று மீள வொட்டாத்
திருக்கு மறுத்தைவர் தீமையும்
தீர்த்துச் செவ் வேமனத்தை
ஒருக்கும் ஒருக்கத்தின் உள்ளே
முளைக்கின்ற ஒண் சுடரே. 901

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேரிசை ஆசிரியப்பா

25. சுடர்விடு சூலப் படையினை என்றும்
விடை உகந்து ஏறிய விமல என்றும்
உண்ணா நஞ்சம் உண்டனை என்றும்
கண்ணாற் காமனைக் காய்ந்தனை என்றும்
திரிபுரம் எரித்த சேவக என்றும்

கரியுரி போர்த்த கடவுள் என்றும்
உரகம் பூண்ட உரவோய் என்றும்
சிரகஞ் செந்தழல் ஏந்தினை என்றும்
வலந்தரு காலனை வதைத்தனை என்றும்
சலந்தரன் உடலம் தடிந்தனை என்றும்

அயன்சிரம் ஒருநாள் அரிந்தனை என்றும்
வியந்தவாள் அரக்கனை மிதித்தனை என்றும்
தக்கன் வேள்வி தகர்த்தனை என்றும்
உக்கிரப் புலியுரி உடுத்தனை என்றும்
ஏனமும் அன்னமும் எட்டாது இளைப்ப

வானம் கீழ்ப்பட வளர்ந்தனை என்றும்
செழுநீர் ஞாலம் செகுத்துயிர் உண்ணும்
அழல்விழிக் குறளை அழுக்கினை என்றும்
இனையன இனையன எண்ணில் கோடி
நினைவருங் கீர்த்தி நின்வயின் புகழ்தல்

துளக்குறு சிந்தையேன் சொல்லள வாதலின்
அளப்பரும் பெருமைநின் அளவிலது ஆயினும்
என்றன் வாயிற் புன்மொழி கொண்டு
நின்னை நோக்குவன் ஆதலின் என்னை
இடுக்கண் களையா அல்லற் படுத்தா

எழுநிலை மாடத்துச் செழுமுகில் உறங்க
அடித்துத் தட்டி எழுப்புவ போல
நுண்துகில் பதாகை கொண்டுகொண்டு உகைப்பத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயிலின் நீங்கிப் பயிலும் வீதித்
திருமருது அமர்ந்த தெய்வச் செழுஞ்சுடர்

அருள்சுரந்து அளிக்கும் அற்புதக் கூத்த
கல்லால் எறிந்த பொல்லாப் புத்தன்
நின்னினைந்து எறிந்த அதனால்
அன்னவன் தனக்கும் அருள்பிழைத் தின்றே. 902

## வெண்பா

26. இன்றிருந்து நாளை இறக்கும் தொழிலுடைய
புன்தலைய மாக்கள் புகழ்வரோ - வென்றிமழு
வாளுடையான் தெய்வ மருதுடையான் நாயேனை
ஆளுடையான் செம்பொன் அடி. 903

## கட்டளைக் கலித்துறை

27. அடியா யிரம் தொழில் ஆயின
ஆயிரம் ஆயிரம் பேர்
முடியா யிரம்கண்கள் மூவா
யிரம்முற்றும் நீறணிந்த
தொடியா யிரங்கொண்ட தோள்இரண்
டாயிரம் என்று நெஞ்சே
படியாய் இராப்பகல் தென்மரு
தாளியைப் பற்றிக் கொண்டே. 904

## நேரிசை ஆசிரியப்பா

28. கொண்டலின் இருண்ட கண்டத்து எண்தோள்
செவ்வான் உருவிற் பையரவு ஆர்த்த
சிறுபறை கிடந்த நெறிதரு புன்சடை
மூவா முதல்வ முக்கட் செல்வ
தேவ தேவ திருவிடை மருத

மாசறு சிறப்பின் வானவர் ஆடும்
பூசத் தீர்த்தம் புரக்கும் பொன்னி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயிரா வணத்துறை ஆடும் அப்ப
கயிலாய வாண கெளரி நாயக
நின்னை வணங்கி பொன்னடி புகழ்ந்து

பெரும்பதம் பிழையா வரம்பல பெற்றோர்
இமையா நெடுங்கண் உமையாள் நங்கையும்
மழைக்கட் கடத்துப் புழைக்கைப் பிள்ளையும்
அமரர்த் தாங்கும் குமர வேளும்
கரிசங்கு ஏந்திய திருநெடு மாலும்

வான்முறை படைத்த நான்முகத்து ஒருவனும்
தாருகற் செற்ற வீரக் கன்னியும்
பூவின் கிழத்தியும் நாவின் மடந்தையும்
பீடுயர் தோற்றத்துக் கோடி உருத்திரரும்
ஆனாப் பெருந்திறல் வானோர் தலைவனும்

செயிர்தீர் நாற்கோட்டு அயிரா வதமும்
வாம்பரி அருக்கர் தாம்பன் னிருவரும்
சந்திரன் ஒருவனும் செந்தீக் கடவுளும்
நிருதியும் எயமனும் சுருதிகள் நான்கும்
வருணனும் வாயுவும் இருநிதிக் கிழவனும்

எட்டு நாகமும் அட்ட வசுக்களும்
மூன்று கோடி ஆன்ற முனிவரும்
வசிட்டனும் கபிலனும் அகத்தியன் தானும்
தும்புரு நாரதர் என்றிரு திறத்தரும்
வித்தகப் பாடல் முத்திறத்து அடியரும்

திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்
அத்தகு செல்வத்து அவமதித் தருளிய
சித்த மார்சிவ வாக்கிய தேவரும்
வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடும் பன்னரி ஊளைகேட்டு அரனைப்
பாடின என்று படாம்பல அளித்தும்
குவளைப் புனலில் தவளை அரற்ற
ஈசன் தன்னை ஏத்தின என்று
காசும் பொன்னும் கலந்து தூவியும்

வழிபடும் ஒருவன் மஞ்சனத்து இயற்றிய
செழுவிதை எள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலும் அவனிப் பிறப்புக் கென்ன
இடித்துக் கொண்டவன் எச்சிலை நுகர்ந்தும்
மருத வட்டத்து ஒருதனிக் கிடந்த

தலையைக் கண்டு தலையுற வணங்கி
உம்மைப் போல எம்இத் தலையும்
கிடக்கல் வேண்மென்று அடுத்தடுத்து இரந்தும்
கோயில் முற்றத்து மீமிசைக் கிடப்ப
வாய்த்தது என்றுநாய்க் கட்டம் எடுத்தும்

காம்பவிழ்த்து உதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட்கு எல்லாம் விதானம் அமைத்தும்
விரும்பின கொடுக்கை பரம்பரற்கு என்று
புரிகுழல் தேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய அன்பின் வரகுண தேவரும்

இனைய தன்மையர் எண்ணிறந் தோரே
அனையவர் நிற்க யானும் ஒருவன்
பத்தி என்பதோர் பாடும் இன்றிச்
சுத்த னாயினும் தோன்றாக் கடையேன் நின்னை
இறைஞ்சிலன் ஆயினும் ஏத்திலன் ஆயினும்

வருந்திலன் ஆயினும் வாழ்த்திலன் ஆயினும்
கருதி யிருப்பன் கண்டாய் பெரும
நின்னுலகு அனைத்தினும் நன்மை தீமை
ஆனவை நின்செயல் ஆதலின்
நானே அமையும் நலமில் வழிக்கே. 905

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெண்பா

29. வழிபிழைத்து நாமெல்லாம் வந்தவா செய்து
பழிபிழைத்த பாவங்கள் எல்லாம் - பொழில்சூழ்
மருதிடத்தான் என்றொருகால் வாய் கூப்ப வேண்டா
கருதிடத்தாம் நில்லா கரந்து. 906

## கட்டளைக் கலித்துறை

30. கரத்தினில் மாலவன் கண்கொண்டு
நின்கழல் போற்ற நல்ல
வரத்தினை ஈயும் மருதவப்
பாமதி ஒன்றும் இல்லேன்
சிரத்தினு மாயென்றன் சிந்தையு
ளாகிவெண் காடனென்னும்
தரத்தினும் ஆயது நின்னடி
யாம் தெய்வத் தாமரையே. 907

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டினத்துப் பிள்ளையார் அருளிய

# திருஏகம்பமுடையார் திருவந்தாதி (29)

திருச்சிற்றம்பலம்

## கட்டளைக் கலித்துறை

01. மெய்த்தொண்டர் செல்லும் நெறியறி
யேன்மிக நற்பணி செய்
கைத்தொண்டர் தம்மிலும் நற்றொண்டு
உவந்திலன் உண்பதற்கே
பொய்த் தொண்டு பேசிப் புறம்புற
மேஉன்னைப் போற்றுகின்ற
இத்தொண்ட னேன்பணி கொள்ளுதி
யோகச்சி ஏகம்பனே. 908

02. ஏகம்ப னேஎன்னை ஆள்பவ
னேஇமை யோர்க்கிரங்கிப்
போகம்பன் னாளும் கொடுக்கின்ற
நாயக பொங்கும் ஐவாய்
நாகம்பொன் ஆரம் எனப்பொலி
வுற்றுநல் நீறணியும்
ஆகம்பொன் மாமலை ஒப்பவ
னேயென்பன் ஆதரித்தே. 909

03. தரித்தேன் மனத்துள் திகழ்தரு
நாமம் தடம் பொழில்வாய்
வரித்தேன் முரல்கச்சி ஏகம்ப
னேயென்றன் வல்வினையை
அரித்தேன் உனைப்பணி யாதவர்
ஏழைமை கண்டவரைச்
சிரித்தேன் உனக்கடி யாரடி
பூணத் தெளிந்தனனே. 910

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. தெளிதரு கின்றது சென்றென்
மனம்நின் திருவடிவம்
அளிதரு நின்னருட்கு ஐயம்
இனியில்லை அந்திச்செக்கர்
ஒளிதரு மேனிஎம் ஏகம்ப
னேஎன்று உகந்தவர்தாள்
தளிதரு தூளிஎன் றன்தலை
மேல்வைத்த தன்மை பெற்றே. 911

05. பெற்றுகந் தேன்என்றும் அர்ச்சனை
செய்யப் பெருகு நின்சீர்
கற்றுகந் தேன்என் கருத்தினி
தாக்கச்சி ஏகம்பத்தின்
பற்றுகந் தேறும் உகந்தவ
னேபட நாகக்கச்சின்
கற்றுகந் தேர்விடை மேல்வரு
வாய்நின் துணையடியே. 912

06. அடிநின்ற சூழல் அகோசரம்
மாலுக்கு அயற்கு அலரின்
முடிநின்ற சூழ்முடி காண்பரி
தாயிற்றுக் கார் முகிலின்
இடிநின்ற சூழ்குரல் ஏறுடை
ஏகம்ப யாம்எங்ஙனே
வடிநின்ற சூலப் படையுடை
யாயை வணங்குவதே. 913

07. வணக்கம் தலைநின் திருவடிக்
கேசெய்யும் மையல் கொண்டோர்
இணக்கன்றி மற்றோர் இணக்கறி
வோம் அல்லம் வல்லரவின்
குணக்குன்ற வில்லி குளிர்கச்சி
ஏகம்பம் பாடின் அல்லால்
கணக்கன்று மற்றொரு தேவரைப்
பாடும் கவிநலமே. 914

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. நலந்தர நான்என்று சொல்லுவன்
கேண்மின்நல் வீர்கள் அன்பு
கலந்தர னார்கச்சி ஏகம்பம்
கண்டு கனல் திகிரி
சலந்தரன் ஆகம் ஒழிக்க வைத்
தாய் தக்கன் வேள்வி யெல்லாம்
நிலந்தர மாகச்செய் தாயென்று
பூசித்து நின்மின்களே. 915

09. மின்கள்என் றார்சடை கொண்டல்என்
றார்கண்டம் மேனி வண்ணம்
பொன்கள்என் றார்வெளிப் பாடுதம்
பொன்அடி பூண்டுகொண்ட
என்கள்என் றாலும் பிரிந்தறி
யார்கச்சி ஏகம்பத்தான்
தன்கள்என் றார்உல கெல்லாம்
நிலைபெற்ற தன்மைகளே. 916

10. தன்மையிற் குன்றாத் தவத்தோர்
இமையவர் தாம் வணங்கும்
வன்மையிற் குன்றா மதிற்கச்சி
ஏகம்பர் வண்கயிலைப்
பொன்மயிற் சாயலும் சேயரிக்
கண்ணும் புரிகுழலும்
மென்மையிற் சாயும் மருங்குலும்
காதல் விளைத்தனவே. 917

11. தனமிட் டுமைதழு வத்தழும்
புற்றவர் தம் அடியார்
மனம்விட் டகலா மதிற்கச்சி
ஏகம்பர் வான்கயிலைச்
சினம்விட் டகலாக் களிறு
வினாவியோர் சேயனையார்
புனம்விட் டகலார் பகலாம்
பொழுதும்நம் பூங்கொடியே. 918

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. பூங்கொத் திருந்தழை யார்பொழில்
கச்சிஏ கம்பர்பொற்பார்
கோங்கத் திருந்த குடுமிக்
கயிலைஎம் பொன்னொருத்தி
பாங்கொத் திருந்தனை ஆரணங்
கேபடர் கல்லருவி
ஆங்கத் திருந்திழை ஆடிவந்
தாற்கண்டு அடிவருந்தே. 919

13. வருத்தம் தருமெய்யும் கையில்
தழையும் வன் மாவினவும்
கருத்தந் தரிக்கு நடக்கவின்று
ஐய கழல் நினையத்
திருத்தந் தருளும் திகழ்கச்சி
ஏகம்பர் சீர்கயிலைத்
துருத்தந் திருப்பதன் றிப்புனங்
காக்கும் தொழில் எமக்கே. 920

14. எம்மையும் எமைப் பணிகொள்ளும்
கம்பர் எழிற்கயிலை
உம்மையும் மானிடம் இப்புனத்
தேவிற்று வந்தமைந்தர்
தம்மையும் மானையும் சிந்தையை
நோக்கங் கவர்வ என்றோ
அம்மையும் அம்மலர்க் கண்ணும்
பெரியீர் அருளுமினே. 921

15. அருளைத் தருகம்பர் அம்பொற்
கயிலையுள் எம்மையாம்
பிருளைக் கரிமறிக் கும்மிவர்
ஐயர் உறுத்தியெய்ய
வெருளக் கலைகணை தன்னொடும்
போயின வில்லிமைக்கு
மருளைத் தருசொல்லி எங்கோ
விளையுண்டுஇவ் வையகத்தே. 922

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. வையார் மழுப்படை ஏகம்பர்
ஈங்கோய் மலைப்புனத்துள
ஐயார் வருகலை ஏனம்
கரிதொடர் வேட்டை யெல்லாம்
பொய்யான ஐயர் மனத்தவெம்
பூங்கொடி கொங்கைபொறாப்
பையார் அரவிடை ஆயிற்று
வந்து பரிணமித்தே. 923

17. பருமுத் துதிர்த்திடும் சீர்மத்த
யானை நுதல்பகுத்திட்டு
உருமொத்த திண்குரல் சீயம்
திரிநெறி ஓங்கு வைவாய்ப்
பொருமுத் தலைவேய் படைக்கம்பர்
பூங்கயி லைப்புனத்துள்
தருமுத் தனநகை தன்நசை
யால்வெற்ப சார்வரிதே. 924

18. அரிதன் திருக்கண் இடநிரம்
பாயிரம் போதணிய
அரிதன் திருவடிக்கு அர்ச்சித்த
கண்ணுக்கு அருளுகம்பர்
அரிதன் திருக்கங் குலியால்
அழிந்த கயிலையயல் லிங்கு
அரிதென்று இப்பதுஎம் பால்வெற்ப
எம்ஐயர்க்கு அஞ்சுதுமே. 925

19. அஞ்சரத் தான் பொடி யாய்விழத்
தீவிழித்து அன்பு செய்வோர்
நெஞ்சரத் தாழ்வுகந் தோர்கச்சி
ஏகம்பர் நீள்கயிலைக்
குஞ்சரத் தாழ்வரை வீழநுங்
கொம்புய்யக் கும்பமூழ்கும்
வெஞ்சரத் தாரன வோவல்ல
வோஇவ் வியன்முரசே. 926

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. சேய்தந் தகைமை உமைகண
வன்திரு ஏகம்பத்தான்
தாய்தந்தை யாயுயிர் காப்போன்
கயிலைத் தயங்கிருள்வாய்
வேய்தந்த தோளிநம் ஊச
லொடும் விரை வேங்கை தன்னைப்
பாய்தந்து பூசலுண் டாங்கொண்டது
ஓசைப் பகடுவந்தே. 927

21. வந்தும்மணம் பெறின் பொன்னனை
யீர்மன்னும் ஏகம்பர்தம்
முந்தும் அருவிக் கயிலை
மலையுயர் தேனிழிச்சித்
தந்தும் மலர் கொய்தும் தண்தினை
மேயுங் கிளி கடிந்தும்
சிந்தும் புகர்மலை கைச்சுமிச்
சாரல் திரிகுவனே. 928

22. திரியப் புரமெய்த ஏகம்ப
னார்திக முங்கயிலைக்
கிரியக் குறவர் பருவத்
திடுதர ளம்வினையோம்
விரியச் சுருள்முத லானும்
அடைந்தோம் விரைவிரைந்து
பிரியக் கதிர்முத்தின் நீர்பெற்ற
தென்னங்குப் பேசுமினே. 929

23. பேசுக யாவரு மைக்கணி
யாரென்று பித்தரெங்கும்
பூசுகை யார்திரு நீற்றெழில்
ஏகம்பர் பொற்கயிலைத்
தேசுகை யார்சிலை வெற்பர்
பிரியும் பரிசிலர்அக்
கூசுகை யாதும்இல் லாக்குவை
வேங்கைப் பெயர் நும்மையே. 930

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. பெயரா நலத்தொழில் ஏகம்ப
னார்பிறை தோய் கயிலைப்
பெயரா திருக்கப் பெறுகிளி
காள்புன மேபிரிவின்
துயரால் வருந்தி மனமும்இங்கு
ஓடித் தொழுது சென்றது
அயரா துரையும்வெற் பற்குஅடி
யேற்கும் விடைதமினே. 931

25. தம்மைப் பிறவிக் கடல்கடப்
பிப்பவர் தாம் வணங்கும்
மும்மைத் திருக்கண் முகத்தெழில்
ஏகம்பர் மொய் கயிலை
அம்மைக் கருங்கண்ணி தன்னொடுஇன்
பம்தரும் தண்புனமே
எம்மைக் கவலை செயச்சொல்லி
யோவல்லி எய்தியதே. 932

26. இயங்கும் திரிபுரம் எய்தஏ
கம்பர் எழிற்கயிலைத்
தயங்கு மலர்ப் பொழில் காள்தையல்
ஆடரு வித்தடங்காள்
முயங்கு மணியறை காள்மொழி
யீர்ஒழி யாதுநெஞ்சம்
மயங்கும் பரிசுபொன் னார்சென்ற
சூழல் வகுத்தெமக்கே. 933

28. வகுப்பார் இவர்போல் மணத்துக்கு
நாள்மணந் தன்னொடின்பம்
மிகுப்பார்கள் ஆருயிர் ஒன்றாம்
இருவரை விள்ளக்கள்வாய்
நெகுப்பால் மலர்கொண்டு நின்றார்
கிடக்க நிலாவுகம்பர்
தொகுப்பால் மணிசிந் தருவிக்
கயிலைஇச் சூழ்புனத்தே. 934

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. புனங்குழை யாதென்று மென்தினை
கொய்ததும் போகலுற்ற
கனங்குழையாள் தற்பிரிய
நமக்குறும் கையறவால்
மனங்குழை யாவரும் கண்களி
பண்பல பாடுந்தொண்டர்
இனங்குழை யாத்தொழும் ஏகம்பர்
இக்கயி லாயத்துள்ளே. 935

30. உள்ளம் பெரியரல் லாச்சிறு
மானுடர் உற்றசெல்வம்
கள்ளம் பெரிய சிறுமனத்
தார்க்கன்றிக் கங்கையென்னும்
வெள்ளம் பெரிய சடைத்தெரு
ஏகம்பர் விண்ணரணம்
தள்ளம்பு எரிகொண் டமைத்தார்
அடியவர் சார்வதன்றே. 936

31. அன்றும் பகையடர்க் கும்பரி
மாவும் மதவருவிக்
குன்றும் பதாதியும் தேரும்
குலவிக் குடைநிழற்கீழ்
நின்றும் பொலியினும் கம்பர்நன்
னீறு நுதற்கிலரேல்
என்றும் அரசும் முரசும்
பொலியா இருநிலத்தே. 937

32. நிலத்திமை யோரில் தலையாய்ப்
பிறந்து மறையொடு அங்கம்
வலந்திமை போதும் பிரியா
எரிவளர்த் தாலும் வெற்பன்
குலத்துமை யோர்பங்கர் கச்சியுள்
ஏகம்பம் கூடித்தொழும்
நலத்தமை யாதவர் வேட்டுவர்
தம்மின் நடுப்படையே. 938

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. படையால் உயிர்கொன்று நின்று
பசுக்களைப் போலச் செல்லும்
நடையால் அறிவின்றி நட்பிடைப்
பொய்த்துக் குலங்களினும்
கடையாய்ப் பிறக்கினும் கச்சியுள்
ஏகம்பத்து எங்களையாள்
உடையான் கழற்குஅன்ப ரேல்அவர்
யாவர்க்கும் உத்தமரே. 939

34. உத்தங்க யானை உரியார்
விரலால் அரக்கன் சென்னி
பத்தும்கை யான இருபதும்
சோர்தர வைத்திலயம்
ஒத்துங்கை யாலவன் பாடக்
கயிலையின் ஊடுகைவாள்
எத்துங்கை யான்என்று உகந்தளித்
தார்கச்சி ஏகம்பரே. 940

35. அம்பரம் காலனல் நீர்நிலம்
திங்கள் அருக்கன் அணு
அம்பரம் கொள்வதோர் வேழத்
துரியவன் தன்னுருவாம்
எம்பரன் கச்சியுள் ஏகம்பத்
தானிடை யாதடைவான்
நம்பரன் தன்னடி யார்அறி
வார்கட்கு நற்றுணையே. 941

36. துணைத்தா மரையடி யும்பவ
ளத்திரள் நன்குறங்கும்
பணைத்தோள் அகலமும் கண்டத்து
நீலமும் அண்டத்துமின்
பிணைத்தா லனசடை யும்திரு
முக்கணும் பெண்ணொர் பக்கத்து
அணைத்தார் எழிற்கம்பர் எங்கள்
பிரானார்க்கு அழகியவே. 942

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. அழகழி விற்பெரி தாகிய
ஏகம்பர் அத்தர் கொற்றம்
பழகறி விற்பெரி யோர்தமைப்
பற்றலர் பற்றும் அன்பின்
குழகறி வேற்பினுள் ஒன்றறி
யார் அறி யாமை தெய்வம்
கிழகெறி யப்பட்டு உலந்தார்
உலகிற் கிடந்தனரே. 943

38. கிடக்கும் ஒருபால் இரைக்கின்ற
பாம்பொரு பால்மதியம்
தொடக்குண்டு இலங்கும் மலங்கும்
திரைக்கங்கை சூடுங்கொன்றை
வடக்குண்டு கட்டத் தலைமாலை
வாளால் மலைந்த வெம்போர்
கடக்கும் விடைத்திரு ஏகம்பர்
கற்றைச் சடைமுடியே. 944

39. கற்றைப் பவளச் சடைவலம்
பூக்கமழ் கொன்றையந்தார்
முற்றுற் றிலாமதி யின்கொழுந்
தேகம்பர் மொய்குழலாம்
மற்றைத் திசையின் மணிப்பொற்
கொழுந்தத் தரங்கழுநீர்
தெற்றிப் பொலிகின்ற சூட்டழ
காகித் திகழ்தருமே. 945

40. தரும் அருள் தன்மை வலப்பால்
கமலக்கண் நெற்றியின்மேல்
திருமலர்க் காண்பிள விற்றிக
ழுந்தழல் செல்வக்கம்பர்
கருமலர்க் கண்இடப் பாலது
நீலம் கனிமதத்து
வருநுதற் பொட்டணங் குக்குயர்ந்து
ஓங்கும் மலர்க்குழலே. 946

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. மலர்ந்த படத்துச்சி ஐந்தினும்
செஞ்சுடர் மாமணிவிட்டு
அலர்ந்த மணிக்குண் டலம்வலக்
காதினில் ஆடிவரும்
நலந்திரு நீல்வயி ரம்வெயிற்
பாய நகுமணிகள்
கலந்தசெம் பொன்மக ரக்குழை
ஏகம்பர் காதிடமே. 947

42. காதலைக் கும்வலத் தோள்பவ
ளக்குன்றம் அங்குயர்ந்து
போதலைக் கும்பனிப் பொன்மலை
நீற்றின் பொலியகலம்
தாதலைக் கும்குழல் சேர்பணைத்
தோள்நறுஞ் சாந்தணிந்து
சூதலைக் கும்முலை மார்பிடம்
ஏகம்பர் சுந்தரமே. 948

43. தரம்பொற் பழியும் உலகட்டி
எய்த்துத் தரந்தளரா
உரம்பொற் புடைய திருவயி
றாம்வலம் உம்பர்மும்மைப்
புரம்பொற் பழித்தகம் பர்க்குத்
தரத்திடு பூண்முலையும்
நிரம்பப் பொறாது தளரிள
வஞ்சியும் நேர்வுடைத்தே. 949

44. உடைப்புலி ஆடையின் மேலுர
கக்கச்சு வீக்கி முஞ்சி
வடத்தெரு கோவணத் தோன்றும்
அரைவலம் மற்றையல்குல்
தொடக்குறு காஞ்சித் தொடுத்த
அரசிலை தூநுண்துகில்
அடல்பொலி ஏறுடை ஏகம்பம்
மேய அடிகளுக்கே. 950

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45. அடிவலப் பாலது செந்நா
மரையொத்து அதிர்கழல் சூழ்ந்து
இடிகுரல் கூற்றின் எருத்திற
வைத்தது இளந்தளிரின்
அடியிடப் பாலது பஞ்சுற
அஞ்சும் சிலம்பணிந்து
வடிவுடைத் தார்கச்சி ஏகம்பம்
மேய வரதருக்கே. 951

46. தருக்கவற் றான்மிக்க முப்புரம்
எய்தயன் தன்தலையை
நெருக்கவற் றோட மழுவாள்
விசைத்தது நெற்கனென்றும்
பருக்கவற் றாங்கச்சி ஏகம்பர்
அத்தர்தம் பாம்புகளின்
திருக்கவற் றால்இட்டு அருளும்
கடகத் திருக்கரமே. 952

47. கரத்தத் தமருகத்து ஓசை
கடுத்தண்ட மீபிளப்ப
அரத்தத்த பாதம் நெரித்திட்டு
அவனி தலம் நெரியத்
தரத்தத் திசைகளுக்கு அப்புறம்
போர்ப்பச் சடைவிரித்து
வரத்தைத் தருகம்பர் ஆடுவர்
எல்லியும் மாநடமே. 953

48. நடனம் பிரான்உகந்து உய்யக்கண்
டானென்று நான்மறையோர்
உடன்வந்து மூவா யிரவர்
இறைஞ்சி நிறைந்த உண்மைக்
கடனன்றி மற்றறி யாத்தில்லை
அம்பலம் காளத்தியாம்
இடம்எம் பிரான்கச்சி ஏகம்பம்
மேயாற்கு இனியனவே. 954

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. இனியவர் இன்னார் அவரையொப்
பார்பிறர் என்ன ஒண்ணாத்
தனியவர் தையல் உடனாம்
உருவர் அறம்பணித்த
முனியவர் ஏறும் உகந்தமுக்
கண்ணவர் சண்டியன்புக்கு
இனியவர் காய்மழு வாட்படை
யார்கச்சி ஏகம்பரே. 955

50. பரவித் தனைநினை யக்கச்சி
ஏகம்பர் பண்ணும் மையல்
வரவித் தனையுள்ளது எங்களிந்
தேன்முன் அவர் மகனார்
புரவித் தனையடிக் கக்கொடி
தாய்விடி யாஇரவில்
அரவித் தனையும் கொண் டார்மட
வார்முன்றில் ஆட்டிடவே. 956

51. இடவம் கறுக்கெனப் பாயுமுஞ்
சென்னி நகுதலைகண்டு
இடஅஞ் சுவர்மட வார்இரி
கின்றனர் ஏகம்பத்தீர்
படம்அஞ்சு வாயது நாகம்
இரைக்கும் அதனுக்குமுற்
படஅஞ் சுவர்எங்ங னேபலி
வந்திடும் பாங்குகளே. 957

52. பாங்குடை கோள்புலி யின்அதள்
கொண்டீர்நும் பாரிடங்கள்
தாங்குடை கொள்ளப் பலிகொள்ள
வந்தீர் தடக்கமலம்
பூங்குடை கொள்ளப் புனற்கச்சி
ஏகம்பம் கோயில் கொண்டீர்
ஈங்கிடை கொள்ளக் கலைகொள்ள
வந்தீர் இடைக்குமின்றே. 958

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. இடைக்குமின் தோற்கும் இணைமுலை
யாயமுதி யார்கள் தஞ்சொல்
கடைக்கண்நன் றாம்கச்சி ஏகம்பர்
ஐயங் கொளக்கடவும்
விடைக்குமுன் தோற்றநில் லேநின்
றினியிந்த மொய்குழலார்
கிடைக்குமுன் தோற்றநஞ்சு அங்கிது
வோதங் கிறித்துவமே. 959

54. கிறிபல பேசிச் சதிரால்
நடந்து விடங்குபடக்
குறிபல பாடிக் குளிர்கச்சி
ஏகம்பர் ஐயங் கொள்ள
நெறிபல வார்குழ லார்மெலி
வுற்ற நெடுந்தெருவில்
செறிபல வெள்வளை போயின
தாயர்கள் தேடுவரே. 960

55. தடுற் றிலகள்ள நோக்கம்
தெரிந்தில சொற்கள்முடி
கூடுற் றிலகுழல் கொங்கை
பொடித்தில கூறுமிவள்
மாடுற் றிலமணி யின்மட
அல்குலும் மற்றிவள் பால்
நாடுற் றிலஎழில் ஏகம்ப
னார்க்கு உள்ளம் நல்கிடத்தே. 961

56. நல்கும் புகழ்க்கட வூர்தன்
மறையவன் உய்யநண்ணிக்
கொல்கின்ற கூற்றைக் குமைத்தவெங்
கூற்றம் குளிர்திரைகள்
மல்கும் திருமறைக் காட்டமிர்து
என்றும் மலைமகள்தான்
புல்கும் பொழிற்கச்சி ஏகம்பம்
மேவிய பொன்மலையே. 962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

57. மலையத்து அகத்தியன் அர்ச்சிக்க
மன்னி வடகயிலை
நிலையத்து அமரர் தொழஇருந்
தான்நெடு மேருஎன்னும்
சிலையத்தன் பைம்பொன் மதில்திரு
ஏகம்பத் தான்திகழ்நீர்
அலையத் தடம்பொன்னி சூழ்திரு
ஐயாற்று அருமணியே. 963

58. மணியார் அருவித் தடம்இம்
யங்குடக் கொல்லிகல்லின்
திணியார் அருவியின் ஆர்த்த
சிராமலை ஐவனங்கள்
அணியார் அருவி கவர்கிளி
ஓப்புமின் சாரல் விந்தம்
பணிவார் அருவினை தீர்க்குமே
கம்பர் பருப்பதமே. 964

59. பருப்பதம் கார்தவழ் மந்தரம்
இந்திர நீலம் வெள்ளை
மருப்பதங் கார்கருங் குன்றியங்
கும்பரங் குன்றம் வில்லார்
நெருப்பதங் காகுதி நாறும்
மகேந்திரம் என்றிவற்றில்
இருப்பதங் காஉகந் தான்கச்சி
ஏகம்பத்து எம்இறையே. 965

60. இறைத்தார் புரம்எய்த வில்லிமை
நல்லிம வான்மகட்கு
மறைத்தார் கருங்குன்றம் வெண்குன்றம்
செங்குன்ற மன்னற்குன்றம்
நிறைத்தார் நெடுங்குன்றம் நீள்கழுக்
குன்றம்என் தீவினைகள்
குறைத்தார் முதுகுன்றம் ஏகம்பர்
குன்றென்று கூறுமினே. 966

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61. கூறுமின் தொண்டர்குற் றாலம்நெய்த்
தானம் துருத்தி யம்பேர்
தேறுமின் வேள்விக் குடிதிருத்
தோணி புரம்பழனம்
ஆறுமின் போல்சடை வைத்தவன்
ஆரூர் இடைமருதென்று
ஏறுமின் நீரெம் பிரான்கச்சி
ஏகம்பம் முன்நினைந்தே. 967

62. நினைவார்க்கு அருளும் பிரான்திருச்
சோற்றுத் துறை நியமம்
புனைவார் சடையோன் புகலூர்
புறம்பயம் பூவணம்நீர்ப்
பனைவார் பொழில்திரு வெண்காடு
பாச்சில் அதிகையென்று
நினைவார் தருநெஞ்சி னீர்கச்சி
ஏகம்பம் நண்ணுமினே. 968

63. நண்ணிப் பரவும் திருவா
வடுதுறை நல்லம்நல்லூர்
மண்ணில் பொலிகடம் பூர்கடம்
பந்துறை மன்னுபுன்கூர்
எண்ணற் கரிய பராய்த்துறை
ஏர்கொள் எதிர்கொள் பாடி
கண்ணிப் பிறைச்சடை யோன்கச்சி
ஏகம்பம் காண்மின் சென்றே. 969

64. சென்றேறி விண்ணுறும் அண்ணா
மலைதிகழ் வல்லம்மென்பூ
வின்தேறல் பாய்திரு மாற்பேறு
பாசூர் எழில் அழுந்தூர்
வன்தே ரவன்திரு விற்பெரும்
பேறு மதில் ஒற்றியூர்
நின்றேர் தருகச்சி ஏகம்பம்
மேயார் நிலாவியவே. 970

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65. நிலாவு புகழ்த்திரு வோத்தூர்
திருஆமாத் தூர்நிறைநீர்
கலாவு சடையோன் புலிவலம்
வில்லலம் கொச்சைத் தொண்டர்
குலாவு திருப்பனங் காடுநன்
மாகறல் கூற்றம் வந்தால்
அலாயென்று அடியார்க்கு அருள்புரி
ஏகம்பர் ஆலயமே. 971

66. ஆலையங் கார்கரு காவைகச்
சூர்திருக் காரிகரை
வேலையங் கேறு திருவான்மி
யூர்திரு ஊறல்மிக்க
சோலையங் கார்திருப் போந்தைமுக்
கோணம் தொடர்கடுக்கை
மாலையன் வாழ்திரு ஆலங்காடு
ஏகம்பம் வாழ்த்துமினே. 972

67. வாழப் பெரிதெமக்கு இன்னருள்
செய்யும் மலர்க்கழலோர்
தாழச் சடைத்திரு ஏகம்பர்
தம்மைத் தொழாதவர் போய்
வாழப் பரற்சுரம் ஆற்றா
தளிரடி பூங்குழல்எம்
ஏழைக்கு இடையிறுக் குங்குய
பாரம் இயக்குறினே. 973

68. உறுகின்ற வெவ்அழல் அக்கடம்
இக்கொடிக்கு உன்பின்வரப்
பெறுகின்ற வண்மையி னால்ஐய
பேரருள் ஏகம்பனார்
துறுகின்ற மென்மலர்த் தண்பொழில்
கச்சியைச் சூழ்ந்திளையோர்
குறுகின்ற பூங்குவ ளைக்குறுந்
தண்பணை என்று கொளே. 974

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

69. கொள்ளுங் கடுங்கதி ரிற்கள்ளி
தீச்சில வேயுலறி
விள்ளும் வெடிபடும் பாலையென்
பாவை விடலைபின்னே
தெள்ளும் புனற்கச்சி யுள்திரு
ஏகம்பர் சேவடியை
உள்ளும் அதுமறந் தாரெனப்
போவது உரைப்பரிதே. 975

70. பரிப்பருந் திண்மைப் படையது
கானர் எனிற்சிறகு
விரிப்பருந்துக்கிரை ஆக்கும்வெய்
யேன்அஞ்சல் செஞ்சடைமேல்
தரிப்பருந் திண்கங்கை யார்திரு
வேகம்பம் அன்ன பொன்னே
வரிப்பருந் திண்சிலை யேயும
ராயின் மறைகுவனே. 976

71. வனவரித் திண்புலி யின்னதள்
ஏகம்ப மன்னருளே
எனவரு பொன்னணங் கென்னணங்
கிற்கென் எழிற்கழங்கும்
தனவரிப் பந்தும் கொடுத்தெனைப்
புல்லியும் இற்பிரிந்தே
இனவரிக் கல்லதர் செல்வதெங்
கேஒல்கும் ஏழை நெஞ்சே. 977

72. நெஞ்சார் தரஇன்பம் செய்கழல்
ஏகம்பர் கச்சியன்னாள்
பஞ்சார் அடிவைத்த பாங்கிவை
ஆங்கவள் பெற்றெடுத்த
வெஞ்சார் வொழியத்தன் பின்செல
முன்செல் வெடுவெடென்ற
அஞ்சா அடுதிறல் காளைதன்
போக்கிவை அந்தத்திலே. 978

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

73. இலவவெங் கானுனை யல்லால்
தொழஞ்சரண் ஏகம்பனார்
நிலவும்சுட ரொளி வெய்யவ
னேதண் மலர்மிதித்துச்
செலவும் பருக்கை குளிரத்
தளிரடி செல்சுரத்துன்
உலவும் கதிர்தணி வித்தருள்
செய்யுன் உறுதுணைக்கே. 979

74. துணையொத்த கோவையும் போலெழில்
பேதையும் தோன்றலுமுன்
இணையொத்த கொங்கையொடு ஏயொத்த
காதலொடு ஏகினரே
அணையத்தர் ஏறொத்த காளையைக்
கண்டனம் மற்றவரேல்
பிணையொத்த நோக்குடைப் பெண்ணிவள்
தன்னொடும் பேசுமினே. 980

75. மின்னலிக் கும்வணக் கத்திடை
யாளையும் மீளியையும்
நென்னலிப் பாக்கைவந் தெய்தின
ரேல்எம் மனையிற் கண்டீர்
பின்னரியப் போக்கருங் குன்று
கடந்தவர் இன்றுகம்பர்
மன்னரி தேர்ந்து தொழுங்கச்சி
நாட்டிடை வைகுவரே. 981

76. உவரச்சொல் வேடுடைக் காடுகந்
தாடிய ஏகம்பனார்
அவரக்கன் போன விமானத்தை
ஆயிரம் உண்மை சுற்றும்
துவரச் சிகரச் சிவாலயம்
சூலம் துலங்குவிண்மேல்
கவரக் கொடிதிளைக் கும்கச்சி
காணினும் கார்மயிலே. 982

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

77. கார்மிக்க கண்டத்து எழில்திரு
ஏகம்பர் கச்சியின்வாய்
ஏர்மிக்க சேற்றெழில் நெல்நடு
வோர்ஒலி பொன்மலைபோல்
போர்மிக்க செந்நெல் குவிப்போர்
ஒலிகருப் பாலையொலி
நீர்மிக்க மாக்கட லின்ஒலி
யேஒக்கும் நேரிழையே. 983

78. நேர்த்தமை யாமை விறற்கொடு
வேடர் நெடுஞ்சுரத்தைப்
பார்த்தமை யால்இமை தீந்தகண்
பொன்னே பகட்டுரிவை
போர்த்தமை யாலுடை நோக்கரும்
கம்பர்கச் சிப்பொழிலுள்
சேர்த்தமை யால்இமைப் போதணி
சீதம் சிறந்தனவே. 984

79. சிறைவண்டு பாடும் கமலம்
கிடங்கிவை செம்பழுக்காய்
நிறைகொண்ட பாளைக் கமுகின்
பொழிலிவை தீங்கனியின்
பொறைகொண்ட வாழைப் பொதும்புவை
புன்சடை ஏகம்பனார்
நறைகொண்ட பூங்கச்சி நாடெங்கும்
இவ்வண்ணம் நன்னுதலே. 985

80. நன்னுத லார்கருங் கண்ணும் செவ்
வாயும்இவ் வாறெனப் போய்
மன்னித ழார்திரு நீலமும்
ஆம்பலும் பூப்பவள்ளை
என்னவெ லாம்ஒப்புக் காதென்று
வீறிடும் ஏகம்பனார்
பொன்னுத லார்விழி யார்கச்சி
நாட்டுளிப் பொய்கையுளே. 986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

81. உள்வார் குளிர நெருங்கிக்
கருங்கிடங் கிட்ட நன்னீர்
வள்வா ளைகளொடு செங்கயல்
மேய்கின்ற எங்களையாட்
கொள்வார் பிறவி கொடாதஏ
கம்பர் குளிர் குவளை
கள்வார் தருகச்சி நாட்டெழில்
ஏரிக் களப்பரப்பே. 987

82. பரப்பார் விசும்பிற் படிந்த
கருமுகில் அன்ன நன்னீர்
தரப்பா சிகள்மிகு பண்பொடு
சேம்படர் தண்பணைவாய்ச்
சுரப்பார் எருமை மலர்தின்னத்
துன்னக ராஒருத்தல்
பொரப்பார் பொலிநுத லாய்செல்வக்
கம்பர்தம் பூங்கச்சியே. 988

83. கச்சார் முலைமலை மங்கை கண்
ணாரஎண் ணான்கு அறமும்
வைச்சார் மகிழ்திரு ஏகம்பர்
தேவி மகிழ விண்ணோர்
விச்சா தரர்தொழு கின்ற
விமானமும் தன்ம மறா
அச்சா லையும்பரப் பாங்கணி
மாடங்கள் ஓங்கினவே. 989

84. ஓங்கின ஊரகம் உள்ளகம்
உம்பர் உருகிடமாம்
பாங்கினில் நின்றது அரியுறை
பாடகம் தெவ்வரிய
வாங்கின வாட்கண்ணி மற்றவர்
மைத்தனி வான்கவிகள்
தாங்கின நாட்டிருந் தாளது
தன்மனை ஆயிழையே. 990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

85. இழையார் அரவணி ஏகம்பர்
நெற்றி விழியின் வந்த
பிழையா அருள்நம் பிராட்டியது
இன்ன பிறங்கலுன்னும்
நுழையா வருதிரி சூலத்தள்
நோக்கரும் • பொன்கடுக்கைத்
தழையார் பொழிலிது பொன்னே
நமக்குத் தளர்வில்லையே. 991

86. தளரா மிகுவெள்ளம் கண்டுமை
ஓடித் தழைத்தழுவக்
கிளையார் வளைக்கை வடுப்படும்
ஈங்கோர் கிறிபடுத்தார்
வளமாப் பொழில்திரு ஏகம்பம்
மற்றிது வந்திறைஞ்சி
உளரா வதுபடைத் தோம்மட
வாய்இவ் வுலகத்துள்ளே. 992

87. உலவிய மின்வடம் வீசி
உருமதிர் வுள்முழங்கி
வலவிய மாமதம் பாய்முகில்
யானைகள் வானில் வந்தால்
கலவிய வார்குழல் பின்னரென்
பாரிர் எனநினைந்து
நிலவிய ஏகம்பர் கோயிற்
கொடியன்ன நீர்மையனே. 993

88. நீரென்னி லும்அழுங் கண்முகில்
காள்நெஞ்சம் அஞ்சலையென்று
ஆரென்னிலும்தம ராயுரைப்
பார்அம ராவதிக்கு
நேரென்னி லும்தகும் கச்சியுள்
ஏகம்பர் நீள்மதில்வாய்ச்
சேரென்னி லும்தங்கும் வாட்கண்ணி
தான்அன்பர் தேர்வரவே. 994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

89. வரங்கொண்டு இமையோர் நலங்கொள்ளும்
ஏகம்பர் கச்சியன்னாய்
பரங்கொங்கை தூவன்மின் நீர்முத்தம்
அன்பர்தம் தேரின் முன்னே
தரங்கொண்டு பூக்கொண்டு கொன்றைபொன்
னாகத்தண் காந்தட் கொத்தின்
கரங்கொண்டு பொற்சுண்ணம் ஏந்தவும்
போந்தன கார்முகிலே. 995

90. கார்முகம் ஆரவண் கைக்கொண்ட
கம்பர் கழல்தொழுது
போர்முக மாப்பகை வெல்லச்சென்
றார்நினை யார்புணரி
நீர்முக மாக இருண்டு
சுரந்தது நேரிழைநாம்
ஆர்முக மாக வினைக்கடல்
நீந்தும் அயர்வுயிர்ப்பே. 996

91. உயிராயின அன்பர் தேர்வரக்
கேட்டுமுன் வாட்டமுற்ற
பயிரார் புயல்பெற்ற தென்னநம்
பல்வளை பான்மைகளாம்
தயிரார்பால் நெய்யொடும் ஆடிய
ஏகம்பர் தம்மருள்போல்
கையிரா வளையமுந் தக்கச்சு
இறுத்தன கார் மயிலே. 997

92. கார்விடை வண்ணத்தன் அன்றேழ்
தழுவினும் இன்றுதனிப்
போர்விடை பெற்றெதிர் மாண்டார்
என அண்டர் போதவிட்டார்
தார்விடை ஏகம்பர் கச்சிப்
புறவிடைத் தம்பொன்நன்பூண்
மார்விடை வைகல் பெறுவார்
தழுவ மழவிடையே. 998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

93. விடைபாய் கொடுமையெண் ணாதுமே
லாங்கன்னி வேல்கருங் காளையர்
கடைபாய் மனத்திளங் காளையர்
புல்கொலி கம்பர் கச்சி
மடைபாய் வயலிள முல்லையின்
மான்கன்றொடு ஆன்கன்றினம்
கடைபாய் தொறும்பதி மன்றில்
கடல்போல் கலந்தெழுமே. 999

94. எழுமலர்த் தண்பொழில் ஏகம்பர்
கச்சி இருங்கடல் வாய்க்
கொழுமணப் புன்னைத் துணர்மணற்
குன்றில் பரதர் கொம்பே
செழுமலர்ச் சேலல்ல வாளல்ல
வேலல்ல நீலமல்ல
முழுமலர்க் கூர்அம்பின் ஓரிரண்
டாலும் முகத்தனவே. 1000

95. முகம்பாகம் பண்டமும் பாகமென்று
ஓதிய மூதுரையை
உகம்பார்த் திரேல்என் நலமுயர்
ஏகம்பர் கச்சிமுன்நீர்
அகம்பாக ஆர்வின் அளவில்லை
என்னின் பவளச்செவ்வாய்
நகம்பால் பொழில்பெற்ற நாமுற்ற
வர்கொள்க நன்மயலே. 1001

96. மயக்கத்த நல்லிருள் கொல்லும்
சுறவோடு எறிமகரம்
இயக்கத்து இடுகழி ஓதம்
கழிகிளர் அக்கழித்தார்
துயக்கத் தவர்க்குஅரு ளாக்கம்பர்
கச்சிக் கடலர்பொன்னூல்
முயக்கத் தகல்வு பொறாள்கொண்க
நீர்வரும் ஊர்க்கு அஞ்சுமே. 1002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

97. மேயிரை வைகக் குருகுண
ராமது உண்டு புன்னை
மீயிரை வண்டோ தமர்புக்
கடிய விரிகடல் வாய்ப்
பாயிரை நாகம் கொண்டோன் தொழும்
கம்பர்கச் சிப்பவ்வ நீர்
தூயிரை கானல்மற்று ஆரறி
வார்நந் துறைவர் பொய்யே. 1003

98. பொய்வரு நெஞ்சினர் வஞ்சனை
யாரையும் போகவிடா
மெய்வரும் பேரருள் ஏகம்பர்
கச்சி விரையின வாய்க்
கைவரும் புள்ளொடு சங்கினம்
ஆர்ப்பநம் சேர்ப்பர் திண்தேர்
அவ்வரு தாமங் கள்இனம்வந்து
ஆர்ப்ப அணைகின்றதே. 1004

99. இன்றுசெய் வோம்இத னில்திரு
ஏகம்பர்க்கு எத்தனையும்
நன்று செய்வோம்பணி நாளையென்று
உள்ளிநெஞ் சேயுடலில்
சென்றுசெ யாரை விடும்துணை
நாளும் விடாது அடிமை
நின்றுசெய் வாரவர் தங்களின்
நீள்நெறி காட்டுவரே. 1005

100. காட்டிவைத் தார்தம்மை யாம்கடிப்
பூப்பெய்யக் காதல்வெள்ளம்
ஈட்டிவைத் தார்தொழும் ஏகம்பர்
ஏதும் இலாத எம்மைப்
பூட்டிவைத் தார்தமக் கன்பது
பெற்றுப் பதிற்றுப்பத்துப்
பாட்டிவைத் தார்பர வித்தொழு
வாம்அவர் பாதங்களே. 1006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

101. பாதம் பரவியோர் பித்துப்
பிதற்றினும் பல்பணியும்
ஏதம் புகுதா வகையருள்
ஏகம்பர் ஏத்தெனவே
போதம் பொருளால் பொலியாத
புன்சொல் பனுவல்களும்
வேதம் பொலியும் பொருளாம்
எனக்கொள்வர் மெய்த்தொண்டரே. 1007

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டினத்துப் பிள்ளையார் அருளிய

# திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது (30)

திருச்சிற்றம்பலம்

## ஆசிரியப்பா

01. இருநில மடந்தை இயல்பினின் உடுத்த
பொருகடல் மேகலை முகமெனப் பொலிந்த
ஒற்றி மாறகர் உடையோய் உருவின்
பெற்றிஒன் றாகப் பெற்றோர் யாரே
மின்னின் பிறக்கம் துன்னும்நின் சடையே.

மன்னிய அண்டம்நின் சென்னியின் வடிவே.
பாவகன் பரிதி பனிமதி தன்னொடு
மூவகைச் சுடரும்நின் நுதல்நேர் நாட்டம்
தண்ணொளி ஆரந் தாரா கணமே
விண்ணவர் முதலா வேறோர் இடமாக்

கொண்டுறை விசும்பே கோலநின் ஆகம்
எண்திசை திண்தோள் இருங்கடல் உடையே.
அணியுடை அல்குல் அவனிமண் டலமே.
மணிமுடிப் பாந்தள்நின் தாளிணை வழக்கே
ஒழியாது ஓடிய மாருதம் உயிர்ப்பே.

வழுவா ஓசை முழுதும்நின் வாய்மொழி
வானவர் முதலா மன்னுயிர் பரந்த
ஊனமில் ஞானத் தொகுதிநின் உணர்வே.
நெருங்கிய உலகினில் நீர்மையும் நிற்றலும்
சுருங்கலும் விரிதலும் தோற்றநின் தொழிலே.

அமைத்தலும் அழித்தலும் ஆங்கதன் பெயர்ச்சியும்
இமைத்தலும் விழித்தலும் ஆகும்நின் இயல்பே.
என்றிவை முதலாம் இயல்புடை வடிவினோடு
ஒன்றிய துப்புரு இருவகை ஆகி
முத்திறக் குணத்து நால்வகைப் பிறவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்திறத்து ஐம்பொறி அறுவகைச் சமயமோடு
ஏழுல காகி எண்வகை மூர்த்தியோடு
ஊழியோடு ஊழி எண்ணிறந் தோங்கி
எவ்வகை அளவினிற் கூடிநின்று
அவ்வகைப் பொருளும்நீ ஆகிய இடத்தே. 1008

02. இடத்துறை மாதரோடு ஈருடம்பு என்றும்
நடத்தினை நள்ளிருள் நவிற்றினை என்றும்
புலியதள் என்பொடு புனைந்தோய் என்றும்
பலிதிரி வாழ்க்கை பயின்றோய் என்றும்
அருவமும் உருவமும் ஆனாய் என்றும்

திருவமர் மாலொடு திசைமுகன் என்றும்
உளனே என்றும் இலனே என்றும்
தளரான் என்றும் தளர்வோன் என்றும்
ஆதி என்றும் அசோகினன் என்றும்
போதியிற் பொலிந்த புராணன் என்றும்

இன்னவை முதலாத் தாமறி அளவையின்
மன்னிய நூலின் பன்மையுள் மயங்கிப்
பிணங்கு மாந்தர் பெற்றிமை நோக்கி
அணங்கிய அவ்அவர்க்கு அவ்வவை ஆகி அடையப்
பற்றிய பளிங்கு போலும்

ஒற்றி மாநகர் உடையோய் உருவே. 1009

03. உருவாம் உலகுக்கு ஒருவன் ஆகிய
பெரியோய் வடிவிற் பிறிதிங்கு இன்மையின்
எப்பொரு ளாயினும் இங்குள தாமெனின்
அப்பொருள் உனக்கே அவயவம் ஆதலின்
முன்னிய மூவெயில் முழங்கெரி ஊட்டித்

தொன்னீர் வையகம் துயர்கெடச் சூழ்ந்ததும்
வேள்வி மூர்த்திதன் தலையினை விடுத்ததும்
நீள்விசும் பாளிதன் தோளினை நெரித்ததும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்கிய மறையோற்கு ஒருமுகம் ஒழித்ததும்
பூங்கணை வேளைப் பொடிபட விழித்ததும்

திறல்கெட அரக்கனைத் திருவிரல் உறுத்ததும்
குறைபடக் கூற்றினைக் குறிப்பினில் அடர்த்ததும்
என்றிவை முதலா ஆள்வினை எல்லாம்
நின்றுழிச் செறிந்த நின்செய லாதலின்
உலவாத் தொல்புகழ் ஒற்றி யா

பகர்வோர் நினக்குவே றின்மை கண்டவர்
நிகழ்ச்சியின் நிகழில் அல்லது
புகழ்ச்சியிற் படுப்பரோ பொருளுணர்ந் தோரே. 1010

04. பொருள்உணர்ந்து ஓங்கிய பூமகன் முதலா
இருள்துணை யாக்கையில் இயங்கு மன்னுயிர்
உருவினும் உணர்வினும் உயர்வினும் பணியினும்
திருவினும் திறலினும் செய்தொழில் வகையினும்
வெவ்வே றாகி வினையொடும் பிரியாது

ஒவ்வாப் பன்மையுள் மற்றவர் ஒழுக்கம்
மன்னிய வேலையுள் வான்திரை போல
நின்னிடை எழுந்து நின்னிடை ஆகியும்
பெருகியும் சுருங்கியும் பெயர்ந்தும் தோன்றியும்
விரவியும் வேறாய் நின்றனை விளக்கம்

ஓவாத் தொல்புகழ் ஒற்றி யூர
மூவா மேனி முதல்வ நின்னருள்
பெற்றவர் அறியின் அல்லது
மற்றவர் அறிவரோ நின்னிடை மயக்கே. 1011

05. மயக்கமில் சொல்நீ யாயினும் மற்றவை
துய்க்க நின்திறம் அறியாச் சூழலும்
உறைவிடம் உள்ளம் ஆயினும் மற்றது
கறைபட ஆங்கே கரந்த கள்ளமும்
செய்வினை உலகினில் செய்வோய் எனினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வினைப் பயன்நீ அணுகா அணிமையும்
இனத்திடை இன்பம் வேண்டிநிற் பணிவோர்
மனத்திடை வாரி ஆகிய வனப்பும்
அன்பின் அடைந்தவர்க்கு அணிமையும் நாடொறும்
என்பினை உருக்கும் இயற்கைய ஆதலின்

கண்டவர் தமக்கே ஊனுடல் அழிதல்
உண்டென உணர்ந்தனம் ஒற்றி யூர
மன்னிய பெரும்புகழ் மாதவத்
துன்னிய செஞ்சடைத் தூமதி யோயே. 1012

06. தூமதி சடைமிசைச் சூடுதல் தூநெறி
ஆமதி யான்என அமைத்த வாறே
அறனுரு வாகிய ஆனேறு ஏறுதல்
இறைவன் யானென இயற்று மாறே
அதவள் அவனென நின்றமை யார்க்கும்

பொதுநிலை யானென உணர்த்திய பொருளே
முக்கணன் என்பது முத்தீ வேள்வியில்
தொக்கது என்னிடை என்பதோர் சுருக்கே
வேத மான்மறி ஏந்துதல் மற்றதன்
நாதன் நான்என நவிற்று மாறே

மூவிலை ஒருதாள் சூலம் ஏந்துதல்
மூவரும் யான்என மொழிந்த வாறே
எண்வகை மூர்த்தி என்பதிவ் வுலகினில்
உண்மை யான்என உணர்த்திய வாறே
நிலம்நீர் தீவளி உயர்வான் என்றும்

உலவாத் தொல்புகழ் உடையோய் என்றும்
பொருளும் நற்பூதப் படையோய் என்றும்
தெருளநின்று உலகினில் தெருட்டு மாறே
ஈங்கிவை முதலா வண்ணமும் வடிவும்
ஓங்குநின் பெருமை உணர்த்தவும் உணராத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கொலி மாந்தர் தம்மிடைப் பிறந்த
சொற்பொருள் வன்மையிற் சுழலும் மாந்தர்க்கு
ஆதி யாகிய அறுதொழி லாளர்
ஓதல் ஓவா ஒற்றி யூர
சிறுவர்தம் செய்கையிற் படுத்து

முறுவலித்து இருத்திநீ முகப்படும் அளவே. 1013

07. அளவினில் இறந்த பெருமையை ஆயினும்
எனதுளம் அகலாது ஒடுங்கிநின்று உளையே
மெய்யினை இறந்த மெய்யினை ஆயினும்
வையகம் முழுதும்நின் வடிவெனப் படுமே
கைவலத்து இலைநீ எனினும் காத்தல்

செய்வோர் வேண்டும் சிறப்பொழி யாயே
சொல்லிய வகையால் துணையலை யாயினும்
நல்லுயிர்க் கூட்ட நாயகன் நீயே
எங்கும் உள்ளோய் எனினும் வஞ்சனை
தங்கிய அவரைச் சாராய் நீயே அஃதான்று

பிறவாப் பிறவியை பெருகாப் பெருமையைத்
துறவாத் துறவியைத் தொடராத் தொடர்ச்சியை
நுகரா நுகர்ச்சியை நுணுகா நுணுக்கினை
அகலா அகற்சியை அணுகா அணிமையை
செய்யாச் செய்கையை சிறவாச் சிறப்பினை

வெய்யை தணியை விழுமியை நொய்யை
செய்யை பசியை வெளியை கரியை
ஆக்குதி அழித்தி ஆன பல்பொருள்
நீக்குதி தொகுத்தி நீங்குதி அடைதி
ஏனைய வாகிய எண்ணில் பல்குணம்

நினைதொறும் மயக்கும் நீர்மைய ஆதலின்
ஓங்குகடல் உடுத்த ஒற்றி யூர
ஈங்கிது மொழிவார் யாஅர் தாஅம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னிலை சுருங்கின் அல்லது
நின்னியல் அறிவோர் யார்இரு நிலத்தே. 1014

08. நிலத்திடைப் பொறையாய் அவாவினில் நீண்டு
சொலத்தகு பெருமைத் தூரா ஆக்கை
மெய்வளி ஐயொடு பித்தொன் றாக
ஐவகை நெடுங்காற்(று) ஆங்குடன் அடிப்ப
நரையெனும் நுரையே நாடொறும் வெளுப்ப

திரையுடைத் தோலே செழுந்திரை யாகக்
கூடிய குருதி நீரினுள் நிறைந்து
மூடிய இருமல் ஓசையின் முழங்கிச்
சுடுபசி வெகுளிச் சுறவினம் எறியக்
குடரெனும் அரவக் கூட்டம்வந் தொலிப்ப

ஊன்தடி எலும்பின் உள்திடல் அடைந்து
தோன்றிய பல்பிணிப் பின்னகம் சுழலக்
கால்கையின் நரம்பே கண்ட மாக
மேதகு நிணமே மெய்ச்சா லாக
முழக்குடைத் துளையே முகங்க ளாக

வழுக்குடை மூக்காறு ஓதம்வந்து ஒலிப்ப
இப்பரிசு இயற்றிய உடலிருங் கடலுள்
துப்புரவு என்னும் சுழித்தலைப் பட்டுழி
ஆவா என்றுநின் அருளினைப் பெற்றவர்
நாவா யாகிய நாதநின் பாதம்

முந்திச் சென்று முறைமையின் வணங்கிச்
சிந்தைக் கூம்பினைச் செவ்விதின் நிறுத்தி
உருகிய ஆர்வப் பாய்விரித்து ஆர்த்துப்
பெருகிய நிறையெனும் கயிற்றிடைப் பிணித்துத்
துன்னிய சுற்றத் தொடர்க்கயிறு அறுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னிய ஒருமைப் பொறியினை முறுக்கிக்
காமப் பாரெனும் கடுவெளி அற்ற
தூமச் சோதிச் சுடர்குறி நிறுத்திச்
சுருங்கா உணர்ச்சித் துடுப்பினைத் துழாவி
நெருங்கா அளவின் நீள்கரை ஏற்ற

வாங்க யாத்திரை போக்குதி போலும்
ஓங்குகடல் உடுத்த ஒற்றியூ ரோயே. 1015

09. ஒற்றி யூர உலவா நின்குணம்
பற்றி யாரப் பரவுதல் பொருட்டா
என்னிடைப் பிறந்த இன்னாப் புன்மொழி
நின்னிடை அணுகா நீர்மைய ஆதலின்
ஆவலித்து அழுதலின் அகன்ற அம்மனை

கேவலம் சேய்மையிற் கேளாள் ஆயினும்
பிரித்தற்கு அரிய பெற்றிய தாகிக்
குறைவினில் ஆர்த்தும் குழவியது இயல்பினை
அறியாது எண்ணில் ஊழி பிறவியின்
மயங்கிக் கண்ணிலர் கண்பெற் றாங்கே

தாய்தலைப் படநின் தாளிணை வணக்கம்
வாய்தலை அறியா மயக்குறும் வினையேன்
மல்கிய இன்பத் தோடுடன் கூடிய
எல்லையில் அவாவினில் இயற்றிய வாகக்
கட்டிய நீயே அவிழ்க்கின் அல்லது

எட்டனை யாயினும் யான்அவிழ்க் கறியேன்
துன்னிடை இருளெனும் தூற்றிடை ஒதுங்கி
வெள்ளிடை காண விருப்புறு வினையேன்
தந்தையும் தாயும் சாதியும் அறிவும்நம்
சிந்தையும் திருவும் செல்கதித் திறனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பமும் துறவும் தூய்மையும் அறிவும்
இன்பமும் புகழும் இவைபல பிறவும்
சுவையொளி ஊறுஓசை நாற்றம் தோற்றம்
என்றிவை முதலா விளங்குவ எல்லாம்
ஒன்றநின் அடிக்கே ஒருங்குடன் வைத்து

நின்றனன் தமியேன் நின்னடி யல்லது
சார்வுமற்று இன்மையின் தளர்ந்தோர் காட்சிச்
சேர்விடம் அதனைத் திறப்பட நாடி
எய்துதற்கு அரியோய் யான்இனிச்
செய்வதும் அறிவனோ தெரியுங் காலே. 1016

10. காலற் சீறிய கழலோய் போற்றி
மூலத் தொகுதி முதல்வா போற்றி
ஒற்றி மாநகர் உடையோய் போற்றி
முற்றும் ஆகிய முதல்வ போற்றி
அணைதொறும் சிறக்கும் அமிர்தே போற்றி

இணைபிறி தில்லா ஈச போற்றி
ஆர்வம் செய்பவர்க்கு அணியோய் போற்றி
தீர்வில் இன்சுவைத் தேனே போற்றி
வஞ்சனை மாந்தரை மறந்தோய் போற்றி
நஞ்சினை அமிர்தாய் நயந்தோய் போற்றி

விரிகடல் வையக வித்தே போற்றி
புரிவுடை வனமாய்ப் புணர்ந்தோய் போற்றி
காண முன்பொருள் கருத்துறை செம்மைக்
காணி யாகிய அரனே போற்றி
வெம்மை தண்மையென்று இவைகுணம் உடைமையின்

பெண்ணோடு ஆணெனும் பெயரோய் போற்றி
மேவிய அவர்தமை வீட்டினிற் படுக்கும்
தீப மாகிய சிவனே போற்றி
மாலோய் போற்றி மறையோய் போற்றி
மேலோய் போற்றி வேதிய போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திர போற்றி தழலோய் போற்றி
இந்திர போற்றி இறைவ போற்றி
அமரா போற்றி அழகா போற்றி
குமரா போற்றி கூத்தா போற்றி
பொருளே போற்றி போற்றி என்றுனை

நாத்தழும்பு இருக்க நவிற்றின் அல்லது
ஏத்துதற்கு உரியோர் யார்இரு நிலத்தே. 1017

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பியாண்டார் நம்பிகள் அருளிய

# திருநாரையூர் விநாயகர் திருஇரட்டை மணிமாலை (31)

திருச்சிற்றம்பலம்

## வெண்பா

01. என்னை நினைந்தடிமை கொண்டுடன் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான் - புன்னை
விரசுமகிழ் சோலை வியன்நாரை யூர்முக்கன்
அரசுமகிழ் அத்திமுகத் தான். 1018

## கட்டளைக் கலித்துறை

02. முகத்தாற் கரியன்என் றாலும்
தனையே முயன்றவர்க்கு
மிகத்தான் வெளியன்என் றேமெய்ம்மை
உன்னும் விரும்படியார்
அகத்தான் திகழ்திரு நாரையூர்
அம்மான் பயந்த எம்மான்
உகத்தா னவன்தன் உடலம்
பிளந்த ஒரு கொம்பனே. 1019

## வெண்பா

03. கொம்பனைய வள்ளி கொழுநன் குறுகாமே
வம்பனைய மாங்கனியை நாரையூர் - நம்பனையே
தன்னவலம் செய்துகொளும் தாழ்தடக்கை யாய்என்நோய்
பின்னவலம் செய்வதெனோ பேசு. 1020

## கட்டளைக் கலித்துறை

04. பேசத் தகாதெனப் பேயெரு
தும்பெருச் சாளியும் என்று
ஏசத் தரும்படி ஏறுவ
தேயிமை யாதமுக்கண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூசத் தகுந்தொழில் நுங்கையும்
நுந்தையும் நீயும் இந்தத்
தேசத் தவர்தொழு தாரைப்
பதியுள் சிவக்களிறே. 1021

## வெண்பா

05. களிறு முகத்தவனாய்க் காயம் செந்தீயின்
ஒளிறும் உருக்கொண்ட தென்னே - அளறுதொறும்
பின்நாரை யூர்அரல் ஆரும் பெரும்படுகர்
மன்நாரை யூரான் மகன். 1022

## கட்டளைக் கலித்துறை

06. மகத்தினில் வானவர் பல்கண்
சிரம்தோள் நெரித்தருளும்
சுகத்தினில் நீள்பொழில் நாரைப்
பதியுட் சுரன்மகற்கு
முகத்தது கையந்தக் கையது
மூக்கந்த மூக்கதனின்
அகத்தது வாய்அந்த வாயது
போலும் அடு மருப்பே. 1023

## வெண்பா

07. மருப்பையொடு கைக்கொண்டு நாரையூர் மன்னும்
பொருப்பையடி போற்றத் துணிந்தால் - நெருப்பை
அருந்தஎண்ணு கின்றஎறும் பன்றே அவரை
வருந்தஎண்ணு கின்ற மலம். 1024

## கட்டளைக் கலித்துறை

08. மலஞ்செய்த வல்வினை நோக்கி
உலகை வலம் வரும்அப்
புலஞ்செய்த காட்சிக் குமரற்கு
முன்னே புரிசடைமேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலஞ்செய்த நாரைப் பதியரன்
தன்னைக் கனிதரவே
வலஞ்செய்து கொண்ட மதக்களி
றேயுன்னை வாழ்த்துவனே. 1025

## வெண்பா

09. வனஞ்சாய வல்வினைநோய் நீக்கி வனசத்
தனஞ்சாய லைத்தருவான் அன்றோ - இனஞ்சாயத்
தேரையூர் நம்பர்மகன் திண்தோள் நெரித்தருளும்
நாரையூர் நம்பர்மக னாம். 1026

## கட்டளைக் கலித்துறை

10. நாரணன் முன்பணிந்து ஏத்தநின்று
எல்லை நடாவிய அத்
தேரண வும்திரு நாரையூர்
மன்னு சிவன் மகனே
காரண னேஎம் கணபதி
யேநற் கரிவதனா
ஆரண நுண்பொரு ளேயென்
பவர்க்கில்லை அல்லல்களே. 1027

## வெண்பா

11. அல்லல் களைந்தான்தன் அம்பொன் உலகத்தின்
எல்லை புகுவிப்பான் ஈண்டுழவர் - நெல்லல்களை
செங்கழுநீர்கட்கும் திருநாரை யூர்ச்சிவன்சேய்
கொங்கெழுதார் ஐங்கரத்த கோ. 1028

## கட்டளைக் கலித்துறை

12. கோவிற் கொடிய நமன்தமர்
கூடா வகை விடுவன்
காவில் திகழ்திரு நாரைப்
பதியிற் கரும்பனைக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேவற்கரிய இருமதத்து
ஒற்றை மருப்பின் முக்கண்
ஏவிற் புருவத்து இமையவள்
தான்பெற்ற யானையையே. 1029

## வெண்பா

13. யானேத் தியவெண்பா என்னை நினைந்தடிமை
தானே சனார்த்தனற்கு நல்கினான் - தேனே
தொடுத்தபொழில் நாரையூர்ச் சூலம் வலனேந்தி
எடுத்த மதமுகத்த ஏறு. 1030

## கட்டளைக் கலித்துறை

14. ஏறிய சீர்வீ ரணக்குடி
ஏந்திழைக் கும்இருந்தேன்
நாறிய பூந்தார்க் குமரற்கும்
முன்னினை நண்ணலரைச்
சீறிய வெம்பனைச் சிங்கத்தி
னுக்குஇளை யானைவிண்ணோர்
வேறியல் பால்தொழு நாரைப்
பதியுள் விநாயகனே. 1031

## வெண்பா

15. கனமதில்சூழ் நாரையூர் மேவிக் கசிந்தார்
மனமருவி னான்பயந்த வாய்ந்த - சினமருவு
கூசாரம் பூண்டமுகக் குஞ்சரக்கன்று என்றார்க்கு
மாசார மோசொல்லு வான். 1032

## கட்டளைக் கலித்துறை

16. வானிற் பிறந்த மதிதவ
ழும்பொழில் மாட்டளிசூழ்
தேனிற் பிறந்த மலர்த்திரு
நாரைப் பதிதிகழும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோனிற் பிறந்த கணபதி
தன்னைக் குலமலையின்
மானிற் பிறந்த களிறென்று
உரைப்பார்இவ் வையகத்தே. 1033

### வெண்பா

17. வையகத்தோர் ஏத்த மதில்நாரை யூர்மகிழ்ந்து
பொய்யகத்தார் உள்ளம்புகலொழிந்து - கையகத்தோர்
மாங்கனிதன் கொம்பண்டம் பாசமழு மல்குவித்தான்
ஆங்கனிநஞ் சிந்தைஅமர் வான். 1034

### கட்டளைக் கலித்துறை

18. அமரா அமரர் தொழுஞ்சரண்
நாரைப்பதி அமர்ந்த
குமரா குமரர்க்கு முன்னவ
னேகொடித் தேர் அவுணர்
தமராசு அறுத்தவன் தன்னுழைத்
தோன்றின னே எனநின்று
அமரா மனத்தவர் ஆழ்நர
கத்தில் அழுந்துவரே. 1035

### வெண்பா

19. அவமதியாது உள்ளமே அல்லற நல்ல
தவமதியால் ஏத்திச் சதுர்த்தோம் - நவமதியாம்
கொம்பன் விநாயகன் கொங் கார்பொழில்சூழ் நாரையூர்
நம்பன் சிறுவன்சீர் நாம். 1036

### கட்டளைக் கலித்துறை

20. நாந்தன மாமனம் ஏத்துகண்
டாய் என்றும் நாண்மலரால்
தாந்தனமாக இருந்தனன்
நரைப் பதிதன்னுளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்ந்தன னேஐந்து செங்கைய
னேநின் திரண் மருப்பை
ஏந்தின னேஎன்னை ஆண்டவ
னேஎனக்கு என்ஐயனே. 1037

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பியாண்டார் நம்பிகள் அருளிய

# கோயில் திருப்பண்ணியர் விருத்தம் (32)

திருச்சிற்றம்பலம்

## கட்டளைக் கலித்துறை

01. நெஞ்சந் திருவடிக் கீழ் வைத்து
நீள்மலர்க் கண்பனிப்ப
வஞ்சம் கடிந்துன்னை வந்தித்தி
லேன்அன்று வானர் உய்ய
நஞ்சம் கருந்து பெருந்தகை
யேநல்ல தில்லைநின்ற
அஞ்செம் பவளவண் ணா அருட்கு
யானினி யார்என்பரே. 1038

02. என்பும் தழுவிய ஊனும்
நெகஅக மேஎழுந்த
அன்பின் வழிவந்த ஆரமிர்
தேஅடி யேன் உரைத்த
வன்புன் மொழிகள் பொறுத்திகொ
லாம்வளர் தில்லை தன்னுள்
மின்புன் மிளிர்சடை வீசிநின்
றாடிய விண்ணவனே. 1039

03. அவநெறிக் கேவிழப் புக்கஇந்
நான்அழுந் தாமை வாங்கித்
தவநெறிக் கேஇட்ட தத்துவ
னேஅத் தவப்பயனாம்
சிவநெறிக் கேஎன்னை உய்ப்பவ
னேசென னந்தொறுஞ்செய்
பவமறுத் தாள்வதற் கோதில்லை
நட்டம் பயில்கின்றதே. 1040

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. பயில்கின் றிலேன்நின் திறத்திரு
நாமம் பனிமலர்த்தார்
முயல்கின் றிலேன்நின் திருவடிக்
கேஅப்ப முன்னுதில்லை
இயல்கின்ற நாடகச் சிற்றம்
பலத்துள்ளந் தாய்இங்ஙனே
அயர்கின்ற நான்எங்ங னேபெறு
மாறுநின் ஆரருளே. 1041

05. அருதிக்கு விம்மி நிவந்ததோ
வெள்ளிக் குவடதஞ்சு
பருதிக் குழவி உமிழ்கின்ற
தேஒக்கும் பற்றுவிட்டோர்
கருதித் தொழுகழற் பாதமும்
கைத்தலம் நான்கும் மெய்த்த
கருதிப் பதம்முழங் குந்தில்லை
மேய சுடரினுக்கே. 1042

06. சுடலைப் பொடியும் படுதலை
மாலையும் சூழ்ந்த என்பும்
மடலைப் பொலிமலர் மாலைமென்
தோள்மேல் மயிர்க்கயிறும்
அடலைப்போலி அயில் மூவிலை
வேலும் அணிகொள் தில்லை
விடலைக்கென் ஆனைக்கு அழகிது
வேத வினோதத்தையே. 1043

07. வேதமுதல்வன் தலையும்
தலையாய வேள்வி தன்னுள்
நாதன் அவன் எச்சன் நற்றலை
யும்தக்க னார்தலையும்
காதிய தில்லைச் சிற்றம்பலத்
தான்கழல் சூழ்ந்து நின்று
மாதவர் என்னோ மறைமொழி
யாலே வழுத்துவதே. 1044

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. வழுத்திய சீர்திரு மால்உலகு
உண்டவன் பாம்பு தன்னின்
கழுத்தரு கேதுயின் றானுக்குஅப்
பாந்தளைக் கங்கணமாய்ச்
செழுந்திரள் நீர்த்திருச் சிற்றம்
பலத்தான் திருக்கையிட
அழுத்திய கல்லொத்தனன் ஆயன்
ஆகிய மாயவனே. 1045

09. மாயவன் முந்நீர்த் துயின்றவன்
அன்று மருதிடையே
போயவன் காணாத பூங்கழல்
நல்ல புலத்தினர் நெஞ்
சேயவன் சிற்றம் பலத்துள்நின்
றாடுங் கழல்எவர்க்கும்
தாயவன் தன்பொற் கழல்என்
தலைமறை நன்னிழலே. 1046

10. நிழல்படு பூண்நெடு மால் அயன்
காணாமை நீண்டவரே
தழல்படு பொன்னகல் ஏந்தித்
தமருகந் தாடித்தமைத்
தொழில்பட வீசிக் கரமெறி
நீர்த்தில்லை அம்பலத்தே
குழல்படு சொல்வழி ஆடுவர்
யாவர்க்கும் கூத்தினையே. 1047

11. கூத்தனென் றுந்தில்லை வாணன்என்
றும்குழு மிட்டிமையோர்
ஏத்தனென் றுஞ்செவி மாட்டிசை
யாதே இடுகணங்கை
மூத்தவன் பெண்டீர் குணலையிட்
டாலும் முகில்நிறைந்த
சாத்தன்என் றாலும் வருமோ
இவளுக்குத் தண்எனவே. 1048

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. தண்ணார் புனல்தில்லைச் சிற்றம்
பலந்தன்னில் மன்னிநின்ற
விண்ணாள னைக்கண்ட நாள்விருப்
பாயென் உடல் முழுவதும்
கண்ணாங் கிலோதொழக் கையாங்
கிலோதிரு நாமங்கள் கற்று
எண்ணாம் பரிசெங்கும் வாயாங்கி
லோ எனக்கு இப்பிறப்பே. 1049

13. பிறவியிற் பெற்ற பயனொன்று
கண்டிலம் பேரொலி நீர்
நறவியல் பூம்பொழில் தில்லையுள்
நாடகம் ஆடுகின்ற
துறவியல் சோதியைச் சுந்தரக்
கூத்தனைத் தொன்டர்தொண்டர்
உறவியல் வாற்கண்கள் கண்டுகண்டு
இன்பத்தை உண்டிடவே. 1050

14. உண்டேன் அவரருள் ஆரமிர்
தத்தினை உண்டலமே
கண்டேன் எடுத்த கழலும்
கனலும் கவித்த கையும்
ஒண்டேன் மொழியினை நோக்கிய
நோக்கும் ஒளிநகையும்
வண்டேன் மலர்த்தில்லை அம்பலத்து
ஆடும் மணியினையே. 1051

15. மணியொப் பனதிரு மால்மிகு
டத்து மலர்க்கமலத்து
அணியொப் பனஅவன் தன்முடி
மேல்அடி யேன் இடர்க்குத்
துணியச் சமைத்தநல் லீர்வாள்
அனையன சூழ்பொழில்கள்
திணியத் திகழ்தில்லை அம்பலத்
தான்தன் திருந்தடியே. 1052

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. அடியிட்ட கண்ணினுக் கோஅவன்
அன்பினுக் கோஅவுணர்
செடியிட்ட வான்துயர் சேர்வதற்
கோதில்லை அம்பலத்தை
முடியிட்ட கொன்றைநன் முக்கட்
பிரான் அன்று மூவுலகும்
அடியிட்ட கண்ணனுக்கு ஈந்தது
வாய்ந்த அரும்படையே. 1053

17. படைபடு கண்ணிதன் பங்கதென்
தில்லைப் பரம்பரவல்
விடைபடு கேதுக விண்ணப்பம்
கேள்என் விதிவசத்தால்
கடைபடு சாதி பிறக்கினும்
நீவைத்து அருளுகண்டாய்
புடைபடு கிங்கிணித் தாட்செய்ய
பாதம்என் னுள்புகவே. 1054

18. புகவுகிர் வாளெயிற் றால்நிலம்
கீண்டு பொறி கலங்கி
மிகவுகு மாற்குஅரும் பாதத்த
னேல்வியன் தில்லை தன்னுள்
நகவு குலாமதிக் கண்ணியற்
கங்கணன் என்றல் நன்றும்
தகவு கொலாம்தக வன்று
கொலாம் என்று சங்கிப்பனே. 1055

19. சங்கோர் கரத்தன் மகன் தக்கன்
தானவர் நான்முகத்தோன்
செங்கோல இந்திரன் தோள்தலை
ஊர்வேள்வி சீர்உடலம்
அங்கோல வெவ்வழ லாயிட்டு
அழிந்தெரிந்து அற்றனவால்
எங்கோன் எழில்தில்லைக் கூத்தன்
கடைக்கண் சிவந்திடவே. 1056

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. ஏவுசெய் மேருத் தடக்கை
எழில்தில்லை அம்பலத்து
மேவுசெய் மேனிப் பிரான் அன்றி
அங்கணர் மிக்குளரே
காவுசெய் காளத்திக் கண்ணுதல்
வேண்டும் வரங்கொடுத்துத்
தேவுசெய் வான்வாய்ப் புனலாட்
டியதிறல் வேண்டுவனே. 1057

21. வேடன்என் றாள்வில் விசயற்கு
வெங்கணை அன்றளித்த
கோடன்என் றாள்குழைக் காதன்என்
றால்இடக் காதில் இட்ட
தோடன்என் றாள்தொகு சீர்த்தில்லை
அம்பலத்து ஆடுகின்ற
சேடன்என் றால்மங்கை அங்கைச்
சரிவளை சிந்தினவே. 1058

22. சிந்திக் கவும் உரையாடவும்
செம்மல ராற்கழல்கள்
வந்திக் கவும்மனம் வாய்கரம்
என்னும் வழிகள் பெற்றும்
சந்திக் கிலர்சிலர் தெண்ணவர்தண்
ணர் தில்லை அம்பலத்துள்
அந்திக் கமர்திரு மேனிஎம்
மான்தன் அருள்பெறவே 1059

23. அருள்தரு சீர்தில்லை அம்பலத்
தான்தன் அருளின் அன்றிப்
பொருள்தரு வானத்து அரசாத
வின்புழு வாதல் நன்றாம்
சுருள்தரு செஞ்சடை யோன்அரு
ளேல்துற விக்கு நன்றாம்
இருள்தரு கீழேழ் நரகத்து
வீழும் இருஞ்சிறையே. 1060

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. சிறைப்புள வாம்புனல் சூழ்வயல்
தில்லைச் சிற்றம்பலத்துப்
பிறைப்பிள வார்சடை யோன்திரு
நாமங்களே பிதற்ற
மிறைப்புள வாகிவெண் ணீறணிந்து
ஓடேந்தும் வித்தகர்தம்
உறைப்புள வோஅயன் மாலினோடு
உம்பர்தம் நாயகற்கே. 1061

25. அகழ்சூழ் மதில்தில்லை அம்பலக்
கூத்த அடியம்இட்ட
முகிழ்சூழ் இலையும் முகைகளும்
ஏயுங்கொல் கற்பகத்தின்
திகழ்சூழ் மலர்மழை தூவித்
திறம்பயில் சிந்தையராய்ப்
புகழ்சூழ் இமையர் போற்றித்
தொழும்நின் பூங்கழற்கே. 1062

26. பூந்தண் பொழில்சூழ் புலியூர்ப்
பொலிசெம்பொன் அம்பலத்து
வேந்தன் தனக்கன்றி ஆட்செய்வ
தென்னே விரிதுணிமேல்
ஆந்தண் பழைய அவிழைஅன்
பாகிய பண்டைப் பறைச்
சேந்தன் கொடுக்க அதுவும்
திருஅமிர்த்து ஆகியதே. 1063

27. ஆகங் கனகனைக் கீறிய
கோளரிக்கு அஞ்சிவிண்ணோர்
பாகங் கனகுழை யாய்அரு
ளாயெனத் தில்லைப்பிரான்
வேகந் தருஞ்சிம்புள் விட்டரி
வெங்கதஞ் செற்றிலனேல்
மோகங் கலந்தன்று உலந்ததன்
றோ இந்த மூவுலகே. 1064

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. மூவுல கத்தவர் ஏத்தித்
தொழுதில்லை முக்கட்பிராற்கு
ஏவு தொழில்செய்யப் பெற்றவர்
யாரெனில் ஏர்விடையாய்த்
தாவு தொழிற்பட்டு எடுத்தனன்
மால் அயன் சாரதியா
மேவிர தத்தொடு பூண்டதொன்
மாமிக்க வேதங்களே. 1065

29. வேதகச் சிந்தை விரும்பிய
வன்தில்லை அம்பலத்து
மேதகக் கோயில்கொண் டோன்செய
வன்வீ ரணக்குடிவாய்ப்ப
போதகப் போர்வைப் பொறிவாள
அரவரைப் பொங்குசினச்
சாதகப் பெண்பிளை தன்னயன்
தந்த தலைமகனே. 1066

30. தலையவன் பின்னவன் தாய்தந்தை
இந்தத் தராதலத்து
நிலையவம் நீக்கு தொழில்புரிந்
தோன்நடு வாகிநின்ற
கொலையவன் சூலப் படையவன்
ஆலத்தெழு கொழுந்தின்
இலையவன் காண்டற்கு அருந்தில்லை
அம்பலத் துள்இறையே. 1067

31. இறையும் தெளிகிலர் கண்டும்
எழில்தில்லை அம்பலத்துள்
அறையும் புனற்சென்னி யோன்அரு
ளால்அன்று அடுகரிமேல்
நிறையும் புகழ்த்திரு வாரூ
ரனும்நிறை தார்பரிமேல்
நறையும் கமழ் தொங்கல் வில்லவ
னும் புக்க நல்வழியே. 1068

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. நல்வழி நின்றார் பகைநன்று
நொய்யம் உறவிலென்னும்
சொல்வழி கண்டனம் யாம்தொகு
சீர்த்தில்லை அம்பலத்து
வில்வழி தானவர் ஊர்எரித்
தோன்வியன் சாக்கியனார்
கல்வழி நேர்நின்று அளித்தனன்
காண்க சிவகதியே. 1069

33. கதியே அடியவர் எய்பினியில்
வைப்பாக் கருதிவைத்த
நிதியே நிமிர்புன் சடைஅமிர்
தேநின்னை என்னுள் வைத்த
மதியே வளர்தில்லை அம்பலத்
தாய் மகிழ் மாமலையாள்
பதியே பொறுத்தரு ளாய்கொடி
யேன் செய்த பல்பிழையே. 1070

34. பிழையா யினவே பெருக்கிநின்
பெய்கழற்கு அன்புதன்னில்
நுழையாத சிந்தையி னேனையும்
மந்தா கினித்து வலை
முழையார் தருதலை மாலை
முடித்த முழுமுதலே
புழையார் கரியுரித் தோய்தில்லை
நாத பொறுத்தருளே. 1071

35. பொறுத்தில னேனும்பன் னஞ்சினைப்
பொங்கெரி வெங்கதத்தைச்
செறுத்தில னேனும்தந் தில்லைப்
பிரான்அத் திரிபுரங்கள்
கறுத்தில னேனுங் கமலத்
தயன்கதிர் மாமுடியை
அறுத்தில னேனும் அமரருக்கு
என்கொல் அடுப்பனவே. 1072

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. அடுக்கிய சீலைய ராய்அகல்
ஏந்தித் தசைஎலும்பில்
ஒடுங்கிய மேனியோடு ஊண்இரப்
பார்ஒன் இரணியனை
நடுக்கிய மாநகர சிங்கனைச்
சிம்புள தாய்நரல
இடுக்கிய பாதன்தன் தில்லை
தொழாவிட்ட ஏழையரே. 1073

37. ஏழையென் புன்மை கருதாது
இடையறா அன்பெனுக்கு
வாழிநின் பாதமலர்க்கே
மருவ அருளுகண்டாய்
மாழைமென் நோக்கிதன் பங்க
வளர்தில்லை அம்பலத்துப்
போழிளந் திங்கள் சடைமுடி
மேல்வைத்த புண்ணியனே. 1074

38. புண்ணியனே என்று போற்றி
செயாது புலன்வழியே
நண்ணிய னேற்குஇனி யாதுகொ
லாம்புகல் என்னுள்வந்திட்டு
அண்ணிய னேதில்லை அம்பல
வாஅவர் திங்கள் வைத்த
கண்ணிய னேசெய்ய காமன்
வெளுப்பக் கறுத்தவனே. 1075

39. கறுத்தகண் டாஅண்ட வாணா
வருபுனற் கங்கைசடை
செறுத்தசிந் தாமணி யேதில்லை
யாய்என்னைத் தீவினைகள்
ஒறுத்தல்கண் டால்சிரி யாரோ
பிறர்என் உறுதுயரை
அறுத்தல்செய் யாவிடின் ஆர்க்கோ
வருஞ்சொல் அரும்பழியே. 1076

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. பழித்தக் கவும்இக ழான்தில்லை
யான்பண்டு வேட்டுவனும்
பழித்திட்டு இறைச்சி கலையன்
அளித்த விருக்குழங்கள்
மொழித்தக்க சீர்அதி பத்தன்
படுத்திட்ட மீன்முழுவதும்
இழித்தக்க என்னாது அமிர்துசெய்
தான்என்று இயம்புவரே. 1077

41. வரந்தரு மாறுஇதன் மேலும்உண்
டோவயல் தில்லை தன்னுள்
புரந்தரன் மால்தொழ நின்ற
பிரான்புலைப் பொய்ம்மையிலே
நிரந்தரமாய் நின்ற என்னையும்
மெய்மையின் தன்னடியார்
தரந்தரு வான்செல்வத் தாழ்த்தினன்
பேசருந் தன்மை இதே. 1078

42. தன்தாள் தரித்தார் இயாவர்க்கும்
மீளா வழிதருவான்
குன்றா மதில்தில்லை மூதூர்க்
கொடிமேல் விடைஉடையோன்
மன்றா அம்பின்னும் மற்றவன்
பாதம் வணங்கி அங்கே
ஒன்றார் இரண்டில் விழுவர்அந்
தோசில ஊமர்களே. 1079

43. களைகண் இலாமையும் தன்பொற்
கழல்துணை யாம் தன்னையும்
துளைகள் நிலாம்முகக் கைக்கரிப்
போர்வைக் கரம் நினையான்
தளைகள் நிலாமலர்க் கொன்றையன்
தண்புலி யூரது என்றேன்
வளைகள் நிலாமை வணங்கும்
அநங்கன் வரிசிலையே. 1080

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. வரித்தடந் திண்சிலை மன்மதன்
ஆதலும் ஆழிவட்டம்
தரித்தவன் தன்மகன் என்பதோர்
பொற்பும் தவநெறிகள்
தெரித்தவன் தில்லையுள் சிற்றம்
பலவன் திருப்புருவம்
நெரித்தலும் கண்டது வெண்பொடி
யேயன்றி நின்றலவே. 1081

45. நின்றில வேவிச யன்னொடும்
சிந்தை களிப்புறநீள்
தென்தில்லை மாநடம் ஆடும்
பிரான்தன் திருமலைமேல்
தனதலை யால்நடந் தேறிச்
சரங்கொண்டு இழிந்ததென்பர்
கன்றினை யேவிள மேலெறிந்து
ஆர்த்த கரியவனே. 1082

46. கருப்புரு வத்திரு வார்த்தைகள்
கேட்டலும் கண்பனியேன்
விருப்புரு வத்தினொடு உள்ளம்
உருகேன் விதிர்விதிரேன்
இருப்புரு வச்சிந்தை என்னைவந்து
ஆண்டதும் எவ்வணமோ
பொருப்புரு வப்புரி சைத்தில்லை
ஆடல் புரிந்தவனே. 1083

47. புரிந்தஅன் பின்றியும் பொய்மையி
லேயும் திசை வழியே
விரிந்தகங் கைமலர் சென்னியில்
கூப்பில் வியநமனார்
பரிந்தவன் ஊர்புகால் இல்லை
பதிமூன்று எரியஅம்பு
தெரிந்தஎங் கோன்தன் திரையார்
புனல்வயல் சேண்தில்லையே. 1084

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. சேண்தில்லை மாநகர்த் திப்பியக்
கூத்தனைக் கண்டும் அன்பு
பூண்டிலை நின்னை மறந்திலை
ஆங்கவன் பூங்கழற்கே
மாண்டிலை இன்னம் புலன்வழி
யே வந்து வாழ்ந்திடுவான்
மீண்டனை என்னைஎன் செய்திட
வோசிந்தை நீ விளம்பே. 1085

49. விளவைத் தளர்வித்த விண்டுவும்
தாமரை மேல் அயனும்
அளவிற்கு அறியா வகைநின்ற
அன்றும் அடுக்கல் பெற்ற
தளர்விற் றிருநகை யாளும்நின்
பாகங்கொல தண்புலியூர்க்
களவிற் கனிபுரை யுங்கண்ட
வார்சடைக் கங்கையனே. 1086

50. கங்கை இடம்வலம் பூவலம்
குண்டலம் தோடிடப்பால்
தங்கும் கரம்வலம் வெம்மழு
வீயிடம் பாந்தள் வலம்
சங்கம் இடம் வலம் தோலிடம்
ஆடை வலம் அக்கிடம்
அங்கஞ் சரிஅம் பலவன்
வலங்காண் இடம் அணங்கே. 1087

51. அணங்கா டகக்குன்ற மாதற
வாட்டிய வாலமர்ந்தாட்கு
இணங்கா யவன் தில்லை எல்லை
மதித்தலம் என்புருகா
வணங்கா வழுத்தா விழாவெழும்
பாவைத் தவாமதர்த்த
குணங்காண் இவள்என்ன என்றுகொ
லாம் வந்து கூடுவதே. 1088

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52. கூடுவது அம்பலக் கூத்தன்
அடியார் குழுவுதொறும்
தேடுவது ஆங்கவன் ஆக்கம் அச்
செவ்வழி அவ்வழியே
ஓடுவது உள்ளத்து இருத்துவது
ஒண்சுடரைப் பிறவி
வீடுவதாக நினையவல்
லோர்செய்யும் வித்தகமே. 1089

53. வித்தகச் செஞ்சடை வெண்மதிக்
கார்நிறக் கண்டத் தெண்தோள்
மத்தகக் கைம்மலைப் போர்வை
மதில்தில்லை மன்னனைத்தும்
சித்தகக் கோயில் இருந்தும்
திறத்தா கமிகர்க்கல்லால்
புத்தகப் பேய்களுக்கு எங்கித்த
தோஅரன் பொன்னடியே. 1090

54. பொன்னம் பலத்துறை புண்ணியன்
என்பர் புயல்மறந்த
கன்னம்மை தீரப் புனிற்றுக்
கலிக்காமற்கு அன்றுபுன்கூர்
மன்னு மழை பொழிந்து ஈரறு
வேலிகொண்டு ஆங்கவற்கே
பின்னும் மழைதவிர்த்து ஈரறு
வேலிகொள் பிஞ்ஞகனே. 1091

55. நேசன்அல் லேன்நினை யேன்வினை
தீர்க்கும் திருவடிக்கீழ்
வாசநன் மாமல ரிட்டுஇறைஞ்
சேன்என்தன் வாயதனால்
தேசன்என் னானைபொன் னார்திருச்
சிற்றம் பலம் நிலவும்
ஈசன்என் னேன்பிறப்பு என்னாய்க்
கழியுங்கொல் என்தனக்கே. 1092

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. தனந்தலை சக்கரம் வானத்
தலைமை குபேரன் தக்கன்
வனந்தலை ஏறடர்த் தோன்வா
சவன்ஊயிர் பல்லுடல் ஊர்
சினந்தலை காலன் பகல்காமன்
தானவர் தில்லைவிண்ணோர்
இனந்தலை வன்அரு ளால்முனி
வால்பெற்று இகந்தவரே. 1093

57. அவமதித்து ஆழ்நர கத்தில்
இடப்படும் ஆதர்களும்
தவமதித்து ஒப்பிலா என்னவிண்
ஆளும் தகைமையரும்
நவநிதித் தில்லையும் சிற்றம்
பலத்து நடம்பயிலும்
சிவநிதிக் கேநினை யாரும்
நினைந்திட்ட செல்வருமே. 1094

58. வருவா சகத்தினில் முற்றுணர்ந்
தோனைவண் தில்லைமன்னைத்
திருவாத வூர்ச்சிவ பாத்தியன்
செய்திருச் சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவைகண்
டேயுமற் றப்பொருளைத்
தெருளாத வுள்ளத் தவர்கவி
பாடிச் சிரிப்பிப்பரே. 1095

59. சிரித்திட்ட செம்பவளத்தின்
திரளும் செழுஞ்சடைமேல்
விரித்திட்ட பைங்கதிர்த் திங்களும்
வெங்கதப் பாந்தளும்தீத்
தரித்திட்ட அங்கையும் சங்கச்
சுருளும்என் நெஞ்சினுள்ளே
தெரிந்திட்ட வாதில்லைச் சிற்றம்
பலத்துத் திருநடனே. 1096

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60. நடஞ்செய்சிற் றம்பலத் தான்முனிவு
என்செயும் காமன் அன்று
கொடுஞ்சினத் தீவிழித் தாற்குக்
குளிர்ந்தனன் விற்கொடும்பூண்
விடுஞ்சினத் தானவர் வெந்திலர்
வெய்தென வெங்கதத்தை
ஒடுங்கிய காலன்அந் நாள்நின்று
உதையுணா வீட்டனனே. 1097

61. விட்டங்கு ஒளிமணிப் பூண்திகழ்
வன்மதன் மெய்யுரைக்கில்
இட்டங் கரியநல் லான்அல்லன்
அம்பலத்து எம்பரன்மேல்
கட்டங் கியகணை எய்தலும்
தன்னைப்பொன் னார்முடிமேல்
புட்டங்கி னான்மக னாமென்று
பார்க்கப் பொடிந்தனனே. 1098

62. பொடியேர் தருமே னியனாகிப்
பூசல் புகவடிக்கே
கடிசேர் கணைகுளிப் பக்கண்டு
கோயிற் கருவியில்லா
வடியே படஅமை யுங்கணை
என்ற வரகுணன்தன்
முடியே தருகழல் அம்பலத்து
ஆடிதன் மொய்கழலே. 1099

63. கழலும் பசுபாச ராம்இமை
யோர்தங் கழல்பணிந்திட்டு
அழலும் இருக்கும் தருக்குடை
யோரிடப் பால்வலப்பால்
தழலும் தமருக மும்பிடித்து
ஆடிசிற் றம்பலத்தைக்
கழலும் ஒருகால் இருகால்
வரவல்ல தோன்றல்களே. 1100

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

64. தோன்றலை வெண்மதி தாங்கியைத்
துள்ளிய மாலயற்குத்
தான்தலை பாதங்கள் சாரெரி
யோன்தன்னைச் சார்ந்தவர்குத்
தேன்தலை யான்பால் அதுகலந்
தால் அன்ன சீரனைச்சீர்
வான்தலை நாதனைக் காண்பதென்
றோதில்லை மன்றிடையே. 1101

65. மன்றங் கமர்திருச் சிற்றம்
பாலவ வடவனத்து
மின்றங் கிடைக்குந்தி நாடக
மாடக்கொல் வெண்டரங்கம்
துன்றங் கிளர்கங்கை யாளைச்
சுடுசினத் தீயரவக்
கன்றங் கடைசடை மேலடை
யாவிட்ட கைதவமே. 1102

66. தவனைத் தவத்தவர்க்கு அன்பனைத்
தன்னடி யெற்குதவும்
சிவனைச் சிவக்கத் திரிபுரத்
தைச்சிவந் தானைச் செய்ய
அவனைத் தவளத் திருநீ
றனைப்பெரு நீர்கரந்த
பவனைப் பணியுமின் நும் பண்டை
வல்வினை பற்றறவே. 1103

67. பற்றற முப்புரம் வெந்தது
பைம்பொழில் தில்லை தன்னுள்
செற்றரு மாமணிக் கோயிலின்
நின்றது தேவர்கணம்
சுற்றரு நின்புகழ் ஏத்தித்
திரிவது சூழ்சடை போய்
புற்றரவு ஆட்டித் திரியும்
அதுவொரு புல்லனவே. 1104

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

68. புல்லரி வின்மற்றைத் தேவரும்
பூம்புலி யூருள்நின்ற
அல்லெறி மாமதிக் கண்ணிய
னைப்போல் அருளுவரே
கல்லெறிந் தானும்தன் வாய்நீர்
கதிர்முடி மேலுகுத்த
நல்லறி வாளனும் மீளா
வழிசென்று நண்ணினரே. 1105

69. நண்ணிய தீவினை நாசஞ்
செலுத்தி நமனுலகத்து
எண்ணினை நீக்கி இமையோர்
உலகத்து இருக்கலுற்றீர்
பெண்ணினொர் பாகத்தான் சிற்றம்
பலத்துப் பெருநடனைக்
கண்ணினை யார் தரக்கண்டுகை
யாரத் தொழுமின்களே. 1106

70. கைச்செல்வம் எய்திட லாமென்று
பின்சென்று கண்குழித்தல்
பொய்ச்செல்வர் செய்திடும் புன்மைகட்
கேஎன்றும் பொன்றில் இல்லா
அச்செல்வம் எய்திட வேண்டுதி
யேல்தில்லை அம்பலத்துள்
இச்செல்வன் பாதம் கருதிரந்
தேன்உன்னை என் நெஞ்சமே. 1107

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பியாண்டார் நம்பிகள் அருளிய

# திருத்தொண்டர் திருவந்தாதி (33)

திருச்சிற்றம்பலம்

## இறைவணக்கம்

பொன்னி வடகரை சேர்நாரை
யூரில் புகழைக்கைமுக
மன்னன் அறுபத்து மூவர்
பதிதேம் மரபுசெயல்
பன்னஅத் தொண்டத் தொகைவகை
பல்கும்அந் தாதிதனைச்
சொன்ன மறைக்குல நம்பிபொற்
பாதத்துணை துணையே. 1108

## தில்லைவாழ் அந்தணர்

01. செப்பத் தகுபுகழ்த் தில்லைப்
பதியிற் செழுமறையோர்
ஒப்பப் புவனங்கள் மூன்றினும்
உம்பரின் ஊர்எரித்த
அப்பர்க்கு அமுதத் திருநடர்க்கு
அந்திப் பிறையணிந்த
துப்பர்க்கு உரிமைத் தொழில்புரி
வோர்தமைச் சொல்லுதுமே. 1109

## திருநீலகண்ட நாயனார்

02. சொல்லச் சிவன்திரு வாணைதன்
தூமொழி தோள்நசையை
ஒல்லைத் துறந்துரு மூத்ததற்
பின்உமை கோன்அருளால்
வில்லைப் புரைநுத லாளோடு
இளமைபெற்று இன்பமிக்கான்
தில்லைத் திருநீல கண்டக்
குயவனாம் செய்தவனே. 1110

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இயற்பகை நாயனார்

03. செய்தவர் வேண்டியது யாதும்
கொடுப்பச் சிவன்தவனாய்க்
கைதவம் பேசிநின் காதலி
யைத்தரு கென்றலுமே
மைதிகழ் கண்ணியை ஈந்தவன்
வாய்ந்த பெரும்புகழ்வந்து
எய்திய காவிரிப் பூம்பட்
டினத்துள் இயற்பகையே 1111

### இளையான்குடி மாற நாயனார்

04. இயலா விடைச்சென்ற மாதவற்கு
இன்னமு தாவிதைத்த
வயலார் முளைவித்து வாரி
மனைஅலக் கால்வறுத்துச்
செயலார் பயிர்விழுத் தீங்கறி
ஆக்கும் அவன் செழுநீர்க்
கயலார் இளையான் குடியுடை
மாறன்எங் கற்பகமே. 1112

### மெய்ப்பொருள் நாயனார்

05. கற்றநன் மெய்த்தவன் போல்ஒரு
பொய்த்தவன் காய்சினத்தால்
செற்றவன் தன்னை அவனைச்
செறப்புக லும்திருவாய்
மற்றவன் தத்தா நமரே
எனச்சொல்லி வான்உலகம்
பெற்றவன் சேதிபன் மெய்ப்பொரு
ளாம்என்று பேசுவரே. 1113

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விறன்மிண்ட நாயனார்

06. பேசும் பொருமையவ் ஆரூ
ரனையும் பிரானவனாம்
ஈசன்தனையும் புறகுதட்
டென்றவன் ஈசனுக்கே
நேசன் எனக்கும் பிரான்மனைக்
கேபுக நீடுதென்றல்
வீசும் பொழில்திருச் செங்குன்றம்
மேய விறன்மிண்டேனே. 1114

### அமர்நீதி நாயனார்

07. மிண்டும் பொழில்பழை யாறை
அமர்நீதி வெண்பொடியின்
முண்டம் தரித்த பிராற்குநல்
லூரின்முன் கோவணம்நேர்
கொண்டிங்கு அருளென்று தன்பெருஞ்
செல்வமும் தன்னையும் தன்
துண்ட மதிநுத லாளையும்
ஈந்த தொழிலினனே. 1115

### சுந்தரமூர்த்தி நாயனார்

08. தொழுதும் வணங்கியும் மாலயன்
தேடரும் சோதி சென்றாங்கு
எழுதும் தமிழ்ப்பழ ஆவணம்
காட்டி எனக்குன்குடி
முழுதும் அடிமைவந்து ஆட்செய்
எனப்பெற்ற வன்முரல்தேன்
ஒழுகு மலரினற் றார்எம்பி
ரானநம்பி யாரூரனே. 1116

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எறிபத்த நாயனார்

09. ஊர்மதில் மூன்றட்ட வுத்தமற்கு
என்றோர் உயர்தவத்தோன்
தார்மலர் கொய்யா வருபவன்
தண்டின் மலர்பறித்த
ஊர்மலை மேற்கொள்ளும் பாகர்
உடல்துணி யாக்குமவன்
ஏர்மலி மாமதில் சூழ்கரு
வூரில் எறிபத்தனே. 1117

### ஏனாதிநாத நாயனார்

10. பத்தனை ஏனாதி நாதனைப்
பார்நீடு எயினை தன்னுள்
அத்தனைத் தன்னோடு அமர்மலைந்
தான்நெற்றி நீறுகண்டு
கைத்தனி வாள்வீடு ஒழிந்தவன்
கண்டிப்ப நின்றருளும்
நித்தனைக் ஈழல் குலதீபன்
என்பர்இந் நீணிலத்தே. 1118

### கண்ணப்ப நாயனார்

11. நிலத்தில் திகழ்திருக் காளத்தி
யார்திரு நெற்றியின்மேல்
நலத்தில் பொழிதரு கண்ணிற்
குருதிகண் டுள்நடுங்கி
வலத்தில் கடுங்கணை யால்தன்
மலர்க்கண் இடந்தப் பினான்
குலத்தில் கிராதன்நம் கண்ணப்ப
னாம்என்று கூறுவரே. 1119

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### குங்குலியக்கலய நாயனார்

12. ஏய்ந்த கயிறுதன் கண்டத்திற்
பூட்டி எழிற்பனந்தாள்
சாய்ந்த சிவன்நிலைத் தான்என்பர்
காதலி தாலிகொடுத்து
ஆய்ந்தநற் குங்குலி யங்கொண்டு
அனற்புகை காலனைமுன்
காய்ந்த அரற்குஇட்ட தென்கட
வூரில் கலயனையே. 1120

### மானக் கஞ்சாற நாயனார்

13. கலச முலைக்கன்னி காதற்
புதல்வி கமழ்குழலை
நலசெய் தவத்தன் பஞ்ச
வடிக்கிலை நல்கெனலும்
அலசும் எனக்கரு தாதவன்
கூந்தல் அரிந்தளித்தான்
மலைசெய் மதிற்கஞ்சை மானக்கஞ்
சாறன் எனும் வள்ளலே. 1121

### அரிவாட்டாய நாயனார்

14. வள்ளற் பிராற்குஅமு தேந்தி
வருவோன் உகலும் இங்கே
வெள்ளச் சடையாய் அமுதுசெய்
யாவிடில் என்தலையைத்
தள்ளத் தகுமென்று வாட்பூட்
டியதடங் கையினன் காண்
அள்ளற் பழனக் கணமங்
கலத்துஅரி வாட்டாயனே. 1122

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆனாய நாயனார்

15. தாயவன் யாவுக்கும் தாழ்சடை
மேல்தனித் திங்கள் வைத்த
தூயவன் பாதம் தொடர்ந்து தொல்
சீர்துளை யால்பரவும்
வேயவன் மேல்மழ நாட்டு
விரிபுனல் மங்கலக்கோன்
ஆயவன் ஆனாயன் என்னை
உவந்தாண்டு அருளினனே. 1123

### சுந்தரமூர்த்தி நாயனார்

16. அருள்துறை அத்தற்கு அடிமைப்பட்
டேன்இனி அல்லன் என்னும்
பொருத்துறை யாவதென் னேஎன்ன
வல்லவன் பூங்குவளை
இருள்துறை நீர்வயல் நாவற்
பதிக்கும் பிரான் அடைந்தோர்
மருள்துறை நீக்கிநல் வான்வழி
காட்டிட வல்லவனே. 1124

### மூர்த்தி நாயனார்

17. அவுந்திரி குண்டுஅமண் ஆவதின்
மாள்வனென்று அன்றாலவாய்ச்
சிவன்திரு மேனிக்குச் செஞ்சந்
தன்மாச் செழுமுழங்கை
உவந்தொளிர் பாறையில் தேய்த்துலகு
ஆண்டஒண் மூர்த்தி தன்னூர்
நிவந்தபொன் மாட மதுரா
புரியென்னும் நீள்பதியே. 1125

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருக நாயனார்

18. பதிகம் திகழ்தரு பஞ்சாக்
கரம்பயில் நாவினன் சீர்
மதியம் சடையால் கலர்தொட்டு
அணிபவன் யான்மகிழ்ந்து
துதியம் கழற்சண்பை நாதற்குத்
தோழன்வன் தொண்டன் அம்பொன்
அதிகம் பெறும்புகலூர்முரு
கன்எனும் அந்தணனே. 1126

## உருத்திர பசுபதி நாயனார்

19. அந்தாழ் புனல்தன்னில் அல்லும்
பகலும் நின்று ஆதரத்தால்
உந்தாத அன்பொடு உருத்திரஞ்
சொல்லிக் கருத்தமைந்த
பைந்தார் உருத்திர பசுபதி
தன்னற் பதிவயற்கே
நந்தார் திருத்தலை யூர்என்று
உரைப்பர்இந் நானிலத்தே. 1127

## திருநாளைப்போவார் நாயனார் (நந்தனார்)

20. நாவார் புகழ்த்தில்லை அம்பலத்
தான்அருள் பெற்றுநாளைப்
போவான் அவனாம் புறத்திருத்
தொண்டன்தன் புன்புலைபோய்
மூவா யிரவர்கை கூப்ப
முனியா அவன்பதிதான்
மாவார் பொழில்திகழ் ஆதனூர்
என்பர்இம் மண்டலத்தே. 1128

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்குறிப்புத் தொண்டர் நாயனார்

21. மண்டும் புனற்சடை யான்தமர்
தூசெற்றி வாட்டும் வகை
விண்டு மழைமுகில் வீடா
தொழியின்யான் வீவன்என்னா
முண்டம் படர்பாறை முட்டும்
எழிலார் திருக்குறிப்புத்
தொண்டன் குலஞ்கச்சி ஏகா
லியர்தங்கள் தொல்குலமே. 1129

## சண்டேசுர நாயனார்

22. குலமே றியசேய்ஞ லூரி
குரிசில் குரைகடல்சூழ்
தலமே றியவிறல் சண்டிகண்
டீர்தந்தை தாள்இரண்டும்
வலமே றியமழு வால்எறிந்து
ஈசன் மணிமுடிவேல்
நலமே றியபால் சொரிந்தலர்
சூட்டியே நன்னிதியே. 1130

## சுந்தரமூர்த்தி நாயனார்

23. நிதியார் துருத்திதென் வேள்விக்
குடியாய் நினைமறந்த
மதியேற்கு அறிகுறி வைத்த
புகர்பின்னை மாற்றிடென்று
துதியா அருள்சொன்ன வாறறி
வாரிடைப் பெற்றவன்காண்
நதியார் புனல்வயல் நாவலர்
கோன்என்னும் நற்றவனே. 1131

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாவுக்கரசு நாயனார்

24. நற்றவன் நல்லூர்ச் சிவன்திருப்
பாதன்தன் சென்னிவைக்கப்
பெற்றவன் மற்றிப் பிறப்பற
வீரட்டர் பெய்கழற்றாள்
உற்றவன் உற்ற விடம்அடை
யார்இட ஒள்ளமுதாத்
துற்றவன் ஆமூரில் நாவுக்
கரசெனும் தூமணியே. 1132

## திருநாவுக்கரசர்

25. மணியினை மாமறைக் காட்டு
மருந்தினை வண்மொழியால்
திணியன நீள்கத வந்திறப்
பித்தன தெண்கடலிற்
பிணியன கன்மிதப் பித்தன
சைவப் பெருநெறிக்கே
அணியென நாவுக் கரையர்
பிரான்தன் அருந்தமிழே. 1133

## குலச்சிறை நாயனார்

26. அருந்தமிழ் ஆகரன் வாதில்
அமணைக் கழுநுதிமேல்
இருந்தமிழ் நாட்டிடை ஏற்றுவித்
தோன்எழிற் சங்கம்வைத்த
பெருந்தமிழ் மீனவன் தன்அதி
காரி பிரசம் மல்கு
குருந்தவிழ் சாரல் மணமேற்
குடிமன் குலச்சிறையே. 1134

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருமிழலைக் குறும்ப நாயனார்

27. சிறைநன் புனல்திரு நாவலூர்
ஆளி செழுங்கயிலைக்கு
இறைநன் கழல்நாளை எய்தும்
இவனருள் போற்ற இன்றே
பிறைநன் முடியன் அடியடை
வேன்என்று உடல்பிரிந்தான்
நறைநன் மலர்த்தார் மிழலைக்
குறும்பன் எனும் நம்பியே. 1135

## காரைக்கால் அம்மையார்

28. நம்பன் திருமலை நான்மிதி
யேன்என்று தாள்இரண்டும்
உம்பர் மிசைத்தலை யால்நடந்து
ஏற உமைநகலும்
செம்பொன் உருவன்என் அம்மை
எனப்பெற் றவன்செழுந்தேன்
கொம்பின் உருகாரைக் காலினின்
மேய குலதனமே. 1136

## அப்பூதி அடிகள் நாயனார்

29. தனமா வதுதிரு நாவுக்கு
அரசின் சரணம் என்னா
மனமார் புனற்பந்தர் வாழ்த்தி வைத்து
ஆங்கவன் வண்தமிழ்க்கே
இனமாத் தனது பெயரிடப்
பெற்றவன் எங்கள் பிரான்
அன்னமார் வயல்திங்கள் ஊரினில்
வேதியன் அப்பூதியே. 1137

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநீலநக்க நாயனார்

30. பூதிப் புயத்தர் புயத்தில்
சிலந்தி புகலும் அஞ்சி
ஊதித் துமிந்த மனைவியை
நீப்பஉப் பாலவெல்லாம்
பேதித்து எழுந்தன காணென்று
பிஞ்ஞகன் காட்டுமவன்
நீதித்திகழ்சாத்தை நீலநக்
கன்எனும் வேதியனே. 1138

## நமிநந்தியடிகள் நாயனார்

31. வேத மறிக்கரத் தாரூர்
அரற்கு விளக்கு நெய்யைத்
தீது செறி அமண் கையர்அட்
டாவிடத்து எண்புனலால்
ஏத முறுக அருகரென்று
அன்று விளக்கெரித்தான்
நாதன் எழில்ஏமப் பேறூர்
அதிபன் நமிநந்தியே. 1139

## சுந்தரமூர்த்தி நாயனார்

32. நந்திக்கும் நம்பெரு மாற்குநல்
ஆரூரில் நாயகற்குப்
பந்திப் பரியன செந்தமிழ்
பாடிப் படர்புனலிற்
சிந்திப் பரியன சேவடி
பெற்றவன் சேவடியே
வந்திப் பவன்பெயர் வன்தொண்டன்
என்பர்இவ் வையகத்தே. 1140

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

33. வையம் மகிழயாம் வாழ
அமணர் வலிதொலைய
ஐயன் பிரம புரத்தாற்கு
அம்மென் குதலைச் செவ்வாய்
பைய மிழற்றும் பருவத்துப்
பாடப் பருப்பதத்தின்
தையல் அருள்பெற் றனன்என்பர்
ஞானசம் பந்தனையே. 1141

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

34. பந்தார் விரலியர் வேள்செங்கட்
சோழன் முருகன் நல்ல
சந்தார் அகலத்து நீலநக்
கன்பெயர் தான்மொழிந்து
கொந்தார் சடையர் பதிகத்தில்
இட்டடியேன் கொடுக்க
அந்தாதி கொண்ட பிரான் அருட்
காழியர் கொற்றவனே. 1142

## ஏயர்கோன் கலிக்காம நாயனார்

35. கொற்றத்திறல் எந்தை தந்தைதன்
தந்தைஎங் கூட்ட மெல்லாம்
தெற்றச் சடையாய் நினதடி
யேம்திகழ் வன்தொண்டனே
மாற்றிப் பிணிதவிர்ப் பான்என்று
உடைவாள் உருவி அந்நோய்
செற்றுத் தவிர்க்கலிக் காமன்
குடிஏயர் சீர்க்குடியே. 1143

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமூல நாயனார்

36. குடிமன்னு சாத்தனூர்க் கோக்குலம்
மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன்
தன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி
யேபர விட்டென் உச்சி
அடிமன்ன வைத்த பிரான்மூலன்
ஆகின்ற அங்கணனே. 1144

## தண்டியடிகள் நாயனார்

37. கண்ணார் மணிஒன்றும் இன்றிக்
கயிறு பிடித்தரற்குத்
தண்ணார் புனல்தடம் தொட்டலும்
தன்னை நகும் அமணர்
கண்ணாங்கு இழப்ப அமணர்
கலக்கங்கண்டு அம்மலர்க்கண்
விண்ணா யகனிடைப் பெற்றவன்
ஆரூர் விறல்தண்டியே. 1145

## மூர்க்க நாயனார்

38. தண்டலை சூழ்திரு வேற்காட்டூர்
மன்னன் தருகவற்றால்
கொண்டவல் லாயம்வன் சூதரை
வென்றுமுன் கொண்டபொருள்
முண்டநன் னீற்றன் அடியவற்கு
ஈபவன் மூர்க்கனென்பார்
நண்டலை நீரொண் குடந்தையில்
மேவுநற் சூதனையே. 1146

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சோமசிமாற நாயனார்

39. சூதப்பொழில் அம்பர் அந்தணன்
சோமாசி மாறன்என்பான்
வேதப்பொருள் அஞ் செழுத்தும்
விளம்பியல் லால்மொழியான்
நீதிப் பரன்மன்னு நித்த
நியமன் பரவையென்னும்
மாதுக்குக் காந்தன்வன் தொண்டன்
தனக்கு மகிழ்த்துணையே. 1147

### சுந்தரமூர்த்தி நாயனார்

40. துணையும் அளவும்இல் லாதவன்
தன்னரு ளேதுணையாக்
கணையும் கதிர்நெடு வேலும்
கறுத்த கயலிணையும்
பிணையும் நிகர்த்த சங்கிலி
பேரமைத் தோள் இரண்டும்
அணையும் அவன்திரு ஆரூரன்
ஆகின்ற அற்புதனே. 1148

### சாக்கிய நாயனார்

41. தகடன ஆடையன் சாக்கியன்
மாக்கற் றடவரையன்
மகடனந் தாக்குக் குழைந்ததிண்
தோளர்வண் கம்பர் செம்பொன்
திகழ்தரு மேனியிற் செங்கல்
எறிந்து சிவபுரத்துப்
புகழ்தரப் புக்கவன் ஊர்சங்க
மங்கை புவனியிலே. 1149

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்புலி நாயனார்

42. புவனியிற் பூதியும் சாதன
மும்பொலி வார்ந்துவந்த
தவநிய மற்குச் சிறப்புச் செய்
தத்துவ காரணனாம்
அவனியில் கீர்த்தித்தென் னாக்கூர்
அதிபன் அருமறையோன்
சிவனிய மந்தலை நின்றதொல்
சீர்நஞ் சிறப்புலியே. 1150

## சிறுத்தொண்ட நாயனார்

43. புலியின் அதளுடைப் புண்ணியற்கு
இன்னமு தாத்தனதோர்
ஒலியின் சதங்கைக் குதலைப்
புதல்வன் உடல்துணித்துக்
கலியின் வலிகெடுத்து ஓங்கும்
புகழ்ச்சிறுத் தொண்டன் கண்டீர்
மலியும் பொழில் ஒண்செங்காட்டம்
குடியவர் மன்னவனே. 1151

## சேரமான் பெருமாள் நாயனார்

44. மன்னர் பிரான்எதிர் வண்ணான்
உடல்உவர் ஊறிநீறார்
தன்னர் பிரான்தமர் போல
வருதலும் தான்வணங்க
என்னர் பிரான்அடி வண்ணான்
எனஅடிச் சேரன்என்னும்
தென்னர் பிரான்கழ றிற்றறி
வான்எனும் சேரலனே. 1152

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சேரமான் பெருமாள் நாயனார்

45. சேரற்குத் தென்னா வலர்பெரு
மாற்குச் சிவன் அளித்த
வீரக்கடகரி முன்புதன்
பந்தி இவுளிவைத்த
வீரற்கு வென்றிக் கருப்புவில்
வீரனை வெற்றி கொண்ட
சூரற்கு எனதுள்ளம் நன்றுசெய்
தாய்இன்று தொண்டுபட்டே. 1153

### கணநாத நாயனார்

46. தொண்டரையாக்கி அவரவர்க்கு
ஏற்ற தொழில்கள் செய்வித்து
அண்டர்தங்கோன்அக் கணத்துக்கு
நாயகம் பெற்றவன் காண்
கொண்டல்கொண் டேறிய மின்னுக்குத்
கோல மடல்கள்தொறும்
கண்டல்வெண் சோறளிக் குங்கடல்
காழிக் கணநாதனே. 1154

### கூற்றுவ நாயனார்

47. நாதன் திருவடி யேமுடி
யாகக் கவிழ்த்து நல்ல
போதங் கருத்திற் பொறித்தமை
யால்அது கைகொடுப்ப
ஓதந் தழுவிய ஞாலம்எல்
லாமொரு கோலின்வைத்தான்
கோதை நெடுவேற் களப்பாளன்
ஆகிய கூற்றுவனே. 1155

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சுந்தரமூர்த்தி நாயனார்

48. கூற்றுக்கு எவனோ புகல்திரு
ஆரூரன் பொன்முடிமேல்
ஏற்றுத் தொடையலும் இன்அடைக்
காயும் இடுதருமக்
கோற்றொத்து கூனனும் கூன்போய்க்
குருடனும் கண்பெற்றமை
சாற்றித் திரியும் பழமொழி
யாம்இத் தரணியிலே. 1156

### பொய்யடிமை இல்லாத புலவர்

49. தரணியிற் பொய்யம்மை இலாத்தமிழ்ச்
சங்க மதிற்கபிலர்
பரணர்நக் கீரர் முதல்நாற்பத்
தொன்பது பல்புலவோர்
அருள்நமக்கு ஈயும் திருஆல
வாய்அரன் சேவடிக்கே
பொருளமைத்து இன்பக் கவிபல
பாடும் புலவர்களே. 1157

### புகழ்ச்சோழ நாயனார்

50. புலமன் னியமன்னைச் சிங்கள
நாடு பொடி படுத்த
குலமன் னியபுகழ்க் கோகன
நாதன் குலமுதலோன்
நலமன் னியபுகழ்ச் சோழனது
என்பர் நகுசுடர்வாள்
வலமன் னியஎறி பத்தனுக்கு
ஈந்ததோர் வண்புகழே. 1158

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நரசிங்க முனையரைய நாயனார்

51. புகழும் படிஎம் பரமே
தவர்க்குநற் பொன்னிடுவோன்
இகழும் படியோர் தவன்மட
வார்புனை கோலமெங்கும்
நிகழும் படிகண் டவனுக்கு
இரட்டிபொன் இட்டவன்நின்
திகழு முடிதர சிங்க
முனையர சன்திறமே. 1159

## அதிபத்த நாயனார்

52. திறம்அமர் மீன்படுக் கும்பொழுது
ஆங்கொரு மீன்சிவற்கு என்று
உறவமர் மாதுடற் கேவிடு
வோன்ஒரு நாட்கனக
நிறமமர் மீன்பட நின்மலற்கு
என்றுவிட் டோன்கமலம்
புறமமர் நாகை அதிபத்த
னாகிய பொய்யிலியே. 1160

## கலிக்கம்ப நாயனார்

53. பொய்யைக் கடிந்துநம் புண்ணியர்க்கு
ஆட்பட்டுத் தன் அடியான்
சைவத் திருவுரு வாய்வரத்
தான் அவன் தாள்கழுவ
வையத் தவர்முன்பு வெள்கிநீர்
வாரா விடமனைவி
கையைத் தடிந்தவன் பெண்ணா
கடத்துக் கலிக்கம்பனே. 1161

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலிய நாயனார்

54. கம்பக் கரிக்கும் சிலந்திக்கும்
நல்கிய கண்ணுதலோன்
உம்பர்க்கு நாதர்க்கு ஒளிவிளக்கு
ஏற்றற்கு உடல்இலனாய்க்
கும்பத் தயிலம்விற் றுஞ்செக்
குழன்றும்கொள் கூலியினால்
நம்பற்கு எரித்த கலிஒற்றி
மாநகர்ச் சக்கிரியே. 1162

## சத்தி நாயனார்

55. கிரிவில் லவர்தம் அடியரைத்
தன்முன்பு கீழ்மை சொன்ன
திருவில் லவரைஅந் நாவரி
வோன்திருந் தாரைவெல்லும்
வரிவில் லவன்வயற் செங்கழு
நீரின் மருவுதென்றல்
தெருவில் விரைகம ழுந்தேன்
வரிஞ்சைத் திகழ்சத்தியே. 1163

## ஐயடிகள் காடவர் கோன் நாயனார்

56. சத்தித் தடக்கைக் குமரன்நல்
தாதைதன் தானம் எல்லாம்
முத்திப் பதம்ஓரார் வெண்பா
மொழிந்து முடியரசா
மத்திற்கு மும்மைநன் றானால்
காய்ஜயம் ஏற்றலென்னும்
பத்திக் கடல்ஐ யடிகளா
கின்றநம் பல்லவனே. 1164

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சுந்தரமூர்த்தி நாயனார்

57. பல்லவை செங்கதி ரோனைப்
பறித்தவன் பாதம் புகழ்
சொல்லவன் தென்புக லூர்அரன்
பால்துய்ய செம்பொன்கொள்ள
வல்லவன் நாட்டியத் தான்குடி
மாணிக்க வண்ணனுக்கு
நல்லவன் தன்பதி நாவலூர்
ஆகின்ற நன்னகரே. 1165

### கணம்புல்ல நாயனார்

58. நன்னக ராய இருக்குவே
ளூர்தனில் நல்குரவாய்ப்
பொன்னக ராயநற் றில்லை
புகுந்து புலீச்சரத்து
மன்னவராய கரர்க்குநற்
புல்லால் விளக்கெரித்தான்
கன்னவில் தோள்எந்தை தந்தை
பிரான்எம் கணம்புல்லனே. 1166

### காரி நாயனார்

59. புல்லன வாகா வகைஉல
கத்துப் புணர்ந்தனவும்
சொல்லின வும்நய மாக்கிச்
சுடர்பொற் குவடுதனி
வில்லினை வாழ்த்தி விளங்கும்
கயிலைபுக் கான்என்பரால்
கல்லன மாமதில் சூழ்கட
வூரினிற் காரியையே. 1167

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நெடுமாற நாயனார்

60. கார்த்தண் முகில்கைக் கடற்காழி
யர்பெரு மாற்கெதிரா
ஆர்த்த அமணர் அழிந்தது
கண்டுமற் றாங்கவரைக்
கூர்த்த கழுவின் நுதிவைத்த
பஞ்சவன் எனறுரைக்கும்
வார்த்தை யதுபண்டு நெல்வேலி
யில்வென்ற மாறனுக்கே. 1168

### வாயிலார் நாயனார்

61. மாறா அருளரன் தன்னை
மனஆ லயத்திருத்தி
ஆறா அறிவாம் ஒளிவிளக்கு
ஏற்றி அகமலர்வாம்
வீறா மலரளித்து அன்பெனும்
மெய்யமிர் தம்கொடுத்தான்
வீறார் மயிலையுள் வாயிலான்
என்று விளம்புவரே. 1169

### முனையடுவார் நாயனார்

62. என்று விளம்புவா நீடூர்
அதிபன் முனையாடுவோன்
என்றும் அமருள் அழிந்தவர்க்
காக்கூலி ஏற்றெறிந்து
வென்று பெருஞ்செல்வம் எல்லாம்
கனகநன் மேருவென்னும்
குன்று வளைத்த சிலையான்
தமர்க்குக் கொடுத்தனனே. 1170

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சுந்தரமூர்த்தி நாயனார்

63. கொடுத்தான் முதலைகொள் பிள்ளைக்கு
உயிர் அன்று புக்கொளியூர்த்
தொடுத்தான் மதுர கவிஅவி
நாசியை வேடர் சுற்றம்
படுத்தான் திருமுரு கன்பூண்
டியினில் பராபரத்தேன்
மடுத்தான் அவனென்பர் வன்தொண்டன்
ஆகின்ற மாதவனே. 1171

### கழற்சிங்க நாயனார்

64. மாதவத் தோர்தங்கள் வைப்பினுக்கு
ஆரூர் மணிக்குவைத்த
போதினைத் தான்மோந்த தேவிதன்
மூக்கை அரியப் பொற்கை
காதிவைத் தன்றோ அரிவதென்று
ஆங்கவள் கைதடிந்தான்
நாதமொய்த் தார்வண்டு கிண்டுபைங்
கோதைக் கழற்சிங்கனே. 1172

### இடங்கழி நாயனார்

65. சிங்கத்து உருவனைச் செற்றவன்
சிற்றம் பலமுகடு
கொங்கிற் கனகம் அணிந்தஆ
தித்தன் குலமுதலோன்
திங்கட் சடையர் தமரதென்
செல்வம் எனப்பறைபோக்கு
எங்கட்கு இறைவன் இருக்குவே
ளூர்மன் இடங்கழியே. 1173

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செருத்துணை நாயனார்

66. சுழிநீள் கடல்நஞ்சு அயின்றார்க்கு
இருந்த கடிமலரை
மொழிநீள் புகழ்கழற் சிங்கன்தன்
தேவிமுன் மோத்தலுமே
எழில்நீள் குமிழ்மலர் மூக்கரிந்
தானென்று இயம்புவரால்
செழுநீர் மருகல்நன் னாட்டமர்
தஞ்சைச் செருத்துணையே. 1174

## புகழ்த்துணை நாயனார்

67. செருவிலி புத்தூர் புகழ்த்துணை
வையம் சிறுவிலைத்தா
உருவலி கெட்டுண வின்றி
உமைகோனை மஞ்சனம் செய்
தருவதோர் போதுகை சோர்ந்து
கலசம் விழத்தரியாது
அருவரை வில்லி அருளும்
நிதியது பெற்றனனே. 1175

## கோட்புலி நாயனார்

68. பெற்றம் உயர்த்தோன் விரையாக்
கலியிழைத் தோர்தமது
சுற்றம் அறுக்கும் தொழில்திரு
நாட்டியத் தான்குடிக் கோன்
குற்றம் அறுக்குநங் கோட்புலி
நாவற் குரிசில்அருள்
பெற்ற அருட்கடல் என்றுலகு
ஏத்தும் பெருந்தகையே. 1176

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சுந்தரமூர்த்தி நாயனார்

69. தகுமகள் பேசினோன் வீயவே
நூல்போன சங்கலிபால்
புகுமணக் காதலி னால்ஒற்றி
யூர்உறை புண்ணியன்தன்
மிகுமலர்ப் பாதம் பணிந்தரு
ளால்இவ் வியனுலகம்
நகுவழக் கேநன்மை யாப்புணர்ந்
தான்நாவ லூர் அரசே. 1177

### பத்தராய்ப் பணிவார்கள்

70. அரசினை ஆரூர் அமரர்
பிரானை அடிபிணிந்திட்டு
உரைசெய்த வாய்தடு மாறி
உரோம புளகம்வந்து
கரசர ணாதி அவயவம்
கம்பித்துக் கண்ணருவி
சொரிதரும் அங்கத்தி னோர்பத்தர்
என்று தொகுத்துவரே. 1178

### பரமனையே பாடுவார்

71. தொகுத்த வடமொழி தென்மொழி
யாதொன்று தோன்றியதே
மிகுத்த இயலிசை வல்ல
வகையில்விண் தோயும் நெற்றி
வகுத்த மதில்தில்லை அம்பலத்
தான்மலர்ப் பாதங்கள்மேல்
உகுத்த மனத்தொடும் பாடவல்
லோர்என்ப உத்தமரே. 1179

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்

72. உத்தமத் தானத்து அறம்பொருள்
இன்பம் ஓடியெறிந்து
வித்தகத் தானத்து ஒருவழிக்
கொண்டு விளங்கச் சென்னி
மத்தம்வைத் தான்திருப் பாத
கமல மலரிணைக் கீழ்ச்
சித்தம்வைத் தார்என்பர் வீடுபேறு
எய்திய செல்வர்களே. 1180

### திருவாரூர்ப் பிறந்தார்கள்

73. செல்வம் திகழ்திரு வாரூர்
மதில்வட்டத் துட்பிறந்தார்
செல்வன் திருக்கணத் துள்ளவ
ரேஅத னால்திகழச்
செல்வம் பெருகுதென் ஆரூர்ப்
பிறந்தவர் சேவடியே
செல்வ நெறியுறு வார்க்கு அணித்
தாய செழுநெறியே. 1181

### முப்போதும் திருமேனி தீண்டுவார்

74. நெறிவார் சடையரைத் தீண்டிமுப்
போதும்நீடு ஆகமத்தின்
அறிவால் வணங்கிஅர்ச் சிப்பவர்
நம்மையும் ஆண்டமரர்க்கு
இறையாய்முக் கண்ணும்எண் தோளும்
தரித்து ஈறில் செல்வத்தோடும்
உறைவார் சிவபெரு மாற்குஉறை
வாய உலகினிலே. 1182

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முழுநீறு பூசிய முனிவர்

75. உலகு கலங்கினும் ஊழி
திரியினும் உள்ளொருகால்
விலகுதல் இல்லா விதியது
பெற்றநல் வித்தகர்காண்
அலகில் பெருங்குணத்து ஆரூர்
அமர்ந்த அரனடிக்கீழ்
இலகுவெண் ணீறுதம் மேனிக்கு
அணியும் இறைவர்களே. 1183

## அப்பாலும் அடிச்சார்ந்தார்

76. வருக்கம் அடைத்துநன் னாவலூர்
மன்னவன் வண்தமிழால்
பெருக்கு மதுரத் தொகையில்
பிறைசூடி பெய்கழற்கே
ஒருக்கு மனத்தொடப் பாலடிச்
சார்ந்தவர் என்றுலகில்
தெரிக்கு மவர்சிவன் பல்கணத்
தோர்நஞ் செழுந்தவரே. 1184

## சுந்தரமூர்த்தி நாயனார்

77. செழுநீர் வயல்முது குன்றினில்
செந்தமிழ் பாடிவெய்ய
மழுநீள் தடக்கையன் ஈந்தபொன்
ஆங்குக்கொள் ளாதுவந்தப்
பொழிநீ டருதிரு வாரூரில்
வாசியும் பொன்னுங்கொண்டோன்
கெழுநீள் புகழ்த்திரு ஆரூரன்
என்று நாம் கேட்பதுவே. 1185

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூசலார் நாயனார்

78. பதுமநற் போதன்ன பாதத்து
அரற்கொரு கோயிலையாம்
கதுமெனச் செய்குவது என்றுகொ
லாம் என்று கண்துயிலாது
அதுமனத் தேஎல்லி தோறும்
நினைந்தருள் பெற்றதென்பர்
புதுமணத் தென்றல் உலாம்நின்ற
ஊர்தனில் பூசலையே. 1186

## மங்கையர்க்கு அரசியார்

79. பூசல் அயில்தென்ன னார்க்கு அன
லாகப் பொறாமையினால்
வாச மலர்க்குழல் பாண்டிமா
தேவியாம் மானிகண்டீர்
தேசம் விளங்கத் தமிழா
கரர்க்குஅறி வித்துஅவரால்
நாசம் விளைத்தாள் அருகந்
தருக்குத்தென் னாட்டகத்தே. 1187

## நெச நாயனார்

80. நாட்டம்இட்டு அன்றுஅரி வந்திப்ப
வெல்படை நல்கினர்தந்
தாட்டரிக் கப்பெற்ற வன்எண்பர்
சைவத் தவர் அரையில்
கூட்டும்அக் கப்படங் கோவணம்
நெய்து கொடுத்து நன்மை
ஈட்டும்அக் காம்பீலிச் சாலிய
நேசனை இம்மையிலே. 1188

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கோச்செங்கட் சோழ நாயனார்

81. மைவைத்த கண்டன் நெறியன்றி
மற்றோர் நெறிகருதாத்
தெய்வக்குடிச்சோழன் முன்பு
சிலந்தியாய்ப் பந்தர் செய்து
சைவத் துருவெய்தி வந்து
தரணிநீ டாலயங்கள்
செய்வித்த வன்திருக் கோச்செங்க
ணான்எனும் செம்பியனே. 1189

### கோச்செங்கட் சோழன்

82. செம்பொன் அணிந்துசிற் றம்பலத்
தைச்சிவ லோகம் எய்தி
நம்பன்கழற்கீழ் இருந்தோன்
குலமுதல் என்பர் நல்ல
வம்பு மலர்த்தில்லை ஈசனைச்
சூழ மறைவளர்த்தான்
நிம்ப நறுந்தொங்கல் கோச்செங்க
ணான் என்னும் நித்தனையே. 1190

### திருநீலகண்ட யாழ்ப்பாணர்

83. தனையொப் பரும்எருக் கத்தம்
புலியூர்த் தரும்புகழோன்
நினையொப் பருந்திரு நீலகண்
டப்பெரும் பாணனைநீள்
சினையொப் பலர்பொழிற் சண்பையர்
கோன்செந் தமிழோடிசை
புனையப் பரன் அருள் பெற்றவன்
என்பர்இப் பூதலத்தே. 1191

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சடையனார்

84. தலம்விளங் குந்திரு நாவலூர்
தன்னில் சடையன் என்னும்
குலம்விளங் கும்புக ழோனை
உரைப்பர் குவலயத்தில்
நலம்விளங் கும்படி நாம்விளங்
கும்படி நற்றவத்தின்
பலம்விளங் கும்படி ஆரு
ரனைமுன் பயந்தமையே. 1192

## இசை ஞானியார்

85. பயந்தாள் கறுவுடைச் செங்கண்வெள்
ளைப்பொள்ளல் நீள்பனைக்கைக்
கயந்தான் உகைத்தற் காளையை
என்றும் கபாலங் கைக்கொண்டு
அயந்தான் புகும்அரண் ஆரூர்ப்
புனித அரன்திருத்தாள்
நயத்தாள் தனதுள்ளத்து என்னும்
உரைப்பது ஞானியையே. 1193

## சுந்தரமூர்த்தி நாயனார்

86. ஞானஆ ரூரைச் சேரரை
அல்லது நாம் அறியோம்
மானவ ஆக்கை யொடும்புக்கு
அவரை வளரொளிப்பூண்
வானவ ராலும் மருவற்கு
அரிய வடகயிலைக்
கோனவன் கோயிற் பெருந்தவத்
தோர்தங்கள் கூட்டத்திலே. 1194

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தொண்டத் தொகையிலுள்ள தொகை அடியார்கள், தனியடியார்கள்

87. கூட்டம்ஒன் பானொடு அறுபத்து
மூன்று தனிப்பெயரா
ஈட்டும் பெருந்தவத்தோர் எழு
பத்திரண் டாம்வினையை
வாட்டும் தவத்திருத் தொண்டத்
தொகைபதி னொன்றின்வகைப்
பாட்டும் திகழ்தரு நாவலூ
ராளி பணித்தனனே. 1195

## திருத்தொண்டத் தொகைப் பதிகக் கவிகளின் முதற்குறிப்பு

88. பணித்தநல் தொண்டத் தொகைமுதல்
தில்லை இலைமலிந்த
அணிதிகழ் மும்மை திருநின்ற
வம்பறா வார்கொண்டசீர்
இணைத்தநற் பொய்யடி மைகறைக்
கண்டன் கடல்சூழ்ந்த பின்
மணித்திகழ் சொற்பத்தர் மன்னிய
சீர்மறை நாவனொடே. 1196

## நூற்பயன்

89. ஓடிடும் பஞ்சேந் திரியம்
ஒடுக்கிஎன் ஊழ்வினைகள்
வாடிடும் வண்ணம்நின்று எத்தவம்
செய்தனன் வானின் உள்ளோர்
சூடிடும் சீர்த்திருப் பாதத்தார்
தொண்டத் தொகையின் உள்ள
சேடர்தம் செல்வப் பெரும்புகழ்
அந்தாதி செப்பிடவே. 1197

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பியாண்டார் நம்பிகள் அருளிச் செய்த

# ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி (34)

திருச்சிற்றம்பலம்

## கட்டளைக் கலித்துறை

01. பார்மண் டலத்தினில் பன்னிரு
பேரோடு மன்னிநின்ற
நீர்மண் டலப்படப் பைப்பிர
மாபுரம் நீறணிந்த
கார்மண் டலக்கண்டத் தெண்தடந்
தோளன் கருணைபெற்ற
தார்மண் டலமணி சம்பந்தன்
மேவிய தண்பதியே. 1198

02. பதிகப் பெருவழி காட்டிப்
பருப்பதக் கோன்பயந்த
மதியத் திருநுதல் பங்கன்
அருள்பெற வைத்தளங்கள்
நிதியைப் பிரமா புரநகர்
மன்னனை என்னுடைய
கதியைக் கருதவல் லோர்அம
ராவதி காப்பவரே. 1199

03. காப்பியல் காழிக் கவுணியர்
தீபற்கென் காரணமா
பாப்பழி வாரா வகைஇருப்
பேன்என்ன மாரன்என்னே
பூப்பயில் வாளிகள் அஞ்சும்என்
நெஞ்சரங் கப்புகுந்த
ஏப்பியல் வார்சிலை கால்வளை
யாநிற்கும் கண்டிரவே. 1200

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. இரவும் பகலும்நின் பாதத்
தலர்என் வழி முழுதும்
பரவும் பரிசே அருளுகண்
டாய் இந்தப் பாரகத்தே
விரவும் பரமத கோளரி
யேகுட வெள்வளைகள்
தரளம் சொரியும் கடல்புடை
சூழ்ந்த தராய் மன்னனே. 1201

05. மன்னிய மோகச் சுவைஒளி
ஊறோசை நாற்றமென்றிப்
பன்னிய ஐந்தின் பதங்கடந்
தோர்க்குந் தொடர்வரிய
பொன்னியல் பாடகக் கிங்கிணிப்
பாதநிழல் புகுவோர்
துன்னிய காவமர் சண்பையர்
நாதற்குத் தொண்டர்களே. 1202

06. தொண்டினஞ் சூழச் சுரிகுழ
லார்தம் மனந்தொடர
வண்டினம் சூழ வருமிவன்
போலும் மயில் உகுத்த
கண்டினம் சூழ்ந்த வளைபிரம்
போர்கழு வாஉடலம்
விண்டினம் சூழக் கழுவின
ஆக்கிய வித்தகனே. 1203

07. வித்தகம் பேசிநம் வேணுத்
தலைவன் வாள்நிகர்த்து
முத்தகங் காட்டு முறுவல்நல்
லாதம் மனம் அணைய
உய்த்தகம் போந்திருந் துள்ளவும்
இல்லா தனவுமுறு
புத்தகம் போலும் முதுபுலைப்
பாணன் புணர்கின்றதே. 1204

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. புணர்ந்தநன் மேகச் சிறுநுண்
துளியிற் சிறகொதுக்கி
உணர்ந்தனர்போல இருந்தனை
யால்உல கம்பரகம்
குணந்திகழ் ஞானசம் பந்தன்
கொடிமதிற் கொச்சையின்வாய்
மணந்தவர் போயின ரோசொல்லு
வாழி மடக் குருகே. 1205

09. குருந்தலர் முல்லையங் கோவலர்
ஏற்றின் கொலைமருப்பால்
அருந்திறல் ஆகத்து உழுதசெஞ்
சேற்றரு காசனிதன்
பெருந்திற மாமதிற் சண்பை
நகரன்ன பேரமைத்தோள்
திருந்திழை ஆர்வம் .........
.............. முரசே. 1206

10. முரசங் கரையமுன் தோரணம்
நீட முழுநிதியின்
பரிசங் கொணர்வான் அமைகின்
றனர்பலர் பார்த்தினிநீ
அரிசங் கணைதலென் னாமுன்
கருதரு காசனிதன்
சுரிசங் கணைவயல் தந்த
நகரன்ன தூமொழிக்கே. 1207

11. மொழிவது சைவ சிகாமணி
மூரித் தடவரைத் தோள்
தொழுவது மற்றவன் தூமலர்ப்
பாதங்கள் தாமங்கமழ்ந்து
எழுவது கூந்தலம் பூந்தா
மரைஇனி யாதுகொலோ
மொழிவது சேரி முரிப்புதை
மாதர் முறுவலித்தே. 1208

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. வலிகெழு குண்டர்க்கு வைகைக்
கரைஅன்று வான் கொடுத்த
கலிகெழு திண்தோள் கவுணியர்
தீபன் கடல் உடுத்த
ஒலிதரு நீர்வைய கத்தை
உறையிட்டது ஒத்துதிரும்
மலிதரு வார்பனி யாம்மட
மாதினை வாட்டுவதே. 1209

13. வாட்டுவார் தத்தம் துயரைவன்
கேழலின் பின்பு சென்ற
வேட்டுவர் கோலத்து வேதத்
தலைவனை மெல்விரலால்
தோட்டியல் காதன் இவனென்று
தாதைக்குச் சூழ்விசும்பிற்
காட்டிய கன்றின் கழற்றிற
மானவை கற்றவரே. 1210

14. அவர்சென்று அணுகுவார் மீள்வதிங்கு
அன்னை அருகர்தம்மைத்
தவர்கின்ற தண்டமிழ்ச் சைவ
சிகாமணி சண்பை யென்னப்
பவர்கின்ற நீள்கொடிக் கோபுரம்
பல்கதி ரோன்பரியைக்
கவர்கின்ற சூலத்தொடு நின்று
தோன்றும் கடிநகரே. 1211

15. நகரங் கெடப்பண்டு திண்தேர்
மிசைநின்று நான்மறைகள்
பகரங் கழலவ னைப்பதி
னாறா யிரம்பதிகம்
மகரங் கிளர்கடல் வையந்
துயர்கெட வாய்மொழிந்த
நிகரங் கிலிகிலிக் காழிப்
பிரான்என்பர் நீள்நிலத்தே. 1212

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. நிலமே றியமருப் பின்திரு
மாலும் நிலம் படைத்த
குலமே றியமலர்க் கோகன
தத்தய னுங்கொழிக்கும்
சலமே றியமுடி தாள்கண்
புலர்தந்தை காண அன்று
நலமே றியபுகழ்ச் சம்பந்தன்
காட்டிய நாதனையே. 1213

17. நாதன் நனிபள்ளி சூழ்நகர்
கானக மாக்கிய ∴தே
போதின் மலிவய லாக்கிய
கோன்அமர் பொற்புகலி
ஓதநெடுங்கடல் வாருங்
கயலோ விலைக்குளது
காதின் அளவும் மிளிர்கய
லோசொல்லு காரிகையே. 1214

18. கைம்மையி னால்நின் கழல்பர
வாதுகண் டார்க்கு இவனோர்
வன்மைய னேஎன்னும் வண்ணம்
நடித்து விழுப்பொருளொடு
இம்மையில் யான்எய்தும் இன்பம்
கருதித் திரிதருமத்
தன்மையி னேற்கும் அருளுதி
யோசொல்லு சம்பந்தனே. 1215

19. பந்தார் அணிவிரல் பங்கயக்
கொங்கைப் பவளச் செவ்வாய்க்
கொந்தார் நறுங்குழல் கோமள
வல்லியைக் கூறருஞ்சீர்
நந்தா விளக்கினைக் கண்டது
நானெப் பொழுதும் முன்னும்
சந்தா ரகலத் தருகா
சனிதன் தடவரையே. 1216

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. வரைகொண்ட மாமதில் சண்பைத்
தலைவனை வாழ்த்தலர்போல்
நிரைகொண்டு வானோர் கடைந்ததில்
நஞ்ச நிகழக்கொலாம்
நுரை கொண்டு மொய்பரத் துள்ளம்
சுழல நொந்தோர் இரவும்
திரைகொண்டு அலமரும் இவ்அகன்
ஞாலம் செறிகடலே. 1217

21. கடலன்ன பொய்ம்மைகள் செய்யினும்
வெய்ய கடுநரகத்
திடநமன் ஏவுதற்கு எவ்விடத்
தான்இருஞ் செந்தமிழால்
திடமன்னு மாமதில் சண்பைத்
தலைவன் செந் தாமரையின்
வடமன்னு நீண்முடி யான் அடிப்
போதவை வாழ்த்தினமே. 1218

22. வாழ்த்துவது எம்பர மேயாகும்
அந்தத்து வையமுந்தீர்
ஆழ்த்திய காலத்தும் ஆழா
ததுஅரன் சேவடியே
ஏத்திய ஞானசம் ந்தற்கு
இடம்இசைத் தும்பிகொம்பர்க்
காத்திகழ் கேதகம் போதகம்
ஈனும் கழுமலமே. 1219

23. மலர்பயில் வாட்கண்ணி கேள்கண்ணி
நீண்முடி வண்கமலப்
பலர்பயில் கீர்த்திக் கவுணியர்
தீபன் பகைவர் என்னத்
தலைபயில் பூம்புனங் கொய்திடு
மேகணி யார்புலம்ப
அலர்பயி லாமுன் பறித்தன
மாசில் அரும்பினையே. 1220

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. அரும்பின் அன்பில்லை அர்ச்சனை
இல்லை அரன் நெறியே
விரும்பின மாந்தர்க்கு மெய்ப்பணி
செய்கிலம் பொய்க்கு அமைந்த
இரும்பன உள்ளத்தி னேற்குளங்ங
னேவந்து நேர்பட்டதால்
கரும்பன நீள்வயல் சூழ்காழி
நாதன் கழலடியே. 1221

25. அடியால் அலர்மிதித் தாலஅரத்
தம்பில்கு அமிர்தமின்றிக்
கொடியா னொடும்பின் நடந்ததெவ்
வாறு அலர் கோகனதக்
கடியார் நறுங்கண்ணி ஞானசம்
பந்தன் கருதலர்போல்
வெடியா விடுவெம் பரற்கறு
நாறு வியன்கரத்தே. 1222

26. சுரபுரத் தார்தம் துயருக்கு
இரங்கிச் சுரர்கள் தங்கள்
பரபுரத் தார்தந் துயர்கண்
டருளும் பரமன்மன்னும்
அரபுரத் தானடி எய்துவன்
என்பது அவனடிசேர்
சிரபுரத் தானடி யார்அடி
யேன் என்னும் திண்ணனவே. 1223

27. திண்ணன வார்சென்ற நாட்டிடை
இல்லைகொல் தீந்தமிழோர்
கண்ணென ஓங்கும் கவுணியர்
தீபன்கை போல்பொழிந்து
விண்ணின வாய்முல்லை மெல்லரும்பு
ஈனமற் றியாம்மெலிய
எண்ணின நாள்வழு வாநிறைத்து
ஓடி எழுமுகிலே. 1224

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. எழுவாள் மதியால் வெதுப்புண்டு
அலமந்து எழுந்து விம்மித்
தொழுவாள் தனக்கின் றருளும்
கொலாம்தொழு நீரவைகைக்
குழுவாய் எதிர்ந்த வுறிக்கைப்
பறிதலைக் குண்டர் தங்கள்
கழுவா வுடலம் கழுவின
வாக்கிய கற்பகமே. 1225

29. கற்பா நறவ மணிகொழித்து
உந்து மலைச்சிலம்பா
நற்பா மொழியெழில் ஞானசம்
பந்தன் புறவமன்ன
விற்பா நுதலிதன் மென்முலை
யின்னிளம் செவ்விகண்டிட்டு
இற்பா விடும்வண்ணம் எண்ணுகின்
றாள்அம்ம என் அனையே. 1226

30. எம்அனை யாய்எந்தை யாய்என்னை
யாண்டுஎன் துயர்தவிர்த்த
செம்மலர் நீள்முடி ஞானசம்
பந்தன் புறவம் அன்னீர்
வெம்முனை வேலென்ன என்ன
மிளிர்ந்து வெளுத்தரி போன்று
உம்மன வோஅல்ல வோவந்தென்
உள்ளத்து ஒளிர்வனவே. 1227

31. ஒளிறு மணிப்பணி நாட்டும்
உலகத்தும் உம்பருள்ளும்
வெளிற படச்சில நிற்பதுண்
டேமிண்டி மீன்உகளும்
அளறு வயற்சண்பை நாதன்
அமுதப் பதிகமென்னும்
களிறு விடப்புகு மேல்தொண்டர்
பாடும் கவிதைகளே. 1228

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. கவிக்குத் தருவன கண்ணுக்கு
இனியன கேட்கில் இன்பம்
செவிக்குத் தருவன சிந்தைக்கு
உரியன பைந்தரளம்
நவிக்கண் சிறுமியர் முற்றில்
முகந்துதம் சிற்றில் தொறும்
குவிக்கத் திரைபரக் குங்கொச்சை
நாதன் குரைகழலே. 1229

33. கழல்கின்ற ஐங்கணை அந்தியும்
அன்றிலும் கால்பரப்பிட்டு
அழல்கின்ற தென்றலும் வந்திங்கு
அடர்ப்பஅன்று ஆயிழைக்காச்
சுழல்கின்ற நஞ்சந் தணித்தவன்
தன்னைத் தொடர்ந்துபின் போய்
உழல்கின்ற நெஞ்சம்இங் கென்னோ
இனியின்று உறுகின்றதே. 1230

34. உறுகின்ற அன்பினோடு ஒத்திய
தாளமும் உள்ளுருகிப்
பெறுகின்ற இன்பும் பிறைநுதல்
முண்டமும் கண்டவரைத்
தெறுகின்ற வாறென்ன செய்தவ
மோவந்தென் சிந்தையுள்ளே
துறுகின்ற பாதன் கழுமலம்
போலும் துடியிடைக்கே. 1231

35. இடையும் எழுதாது ஒழியலும்
ஆம்என வண்டுகளின்
புடையும் எழுதிலும் பூங்குழல்
ஒக்கும்அப் பொன்னனையாள்
நடையும் நகையும் தமிழா
கரன்தன் புகலி நற்றேன்
அடையும் மொழியும் எழுதிடின்
சால அதிசயமே. 1232

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. மேனாட் டமரர் தொழஇருப்
பாரும் வினைப் பயன்கள்
தானாட் டருநர கில்தளர்
வாருந் தமிழர்தங்கள்
கோனாட் டருகர் குழாம்வென்ற
கொச்சையர் கோன்கமலப்
பூநாட் டடிபணிந் தாரும்அல்
லாத புலையருமே. 1233

37. புலையடித் தொண்டனைப் பூசுர
னாக்கிப் பொருகயற்கண்
மலைமடப் பாவைக்கு மாநட
மாடு மணியை என்றன்
தலையிடைப் பாதனைக் கற்றாங்கு
உரைத்தசம் பந்தன்என்னா
முலையிடைப் பொன்கொண்டு சங்கிழந்
தாள்என்தன் மொய்குழலே. 1234

38. குழலிய லின்கவி ஞானசம்
பந்தன் இரைகழல்போல்
கழலியல் பாதம் பணிந்தேன்
உனையும் கதிரவனே
தழலியல் வெம்மை தணித்தருள்
நீதணி யாதவெம்மை
அழலியல் கான்நடத் தாள்வினை
யேன்பெற்ற ஆரணங்கே. 1235

39. அணங்கமர் யாழ்முரித்து ஆண்பனை
பெண்பனை ஆக்கி அமண்
கணங்கழு வேற்றிக் கடுவிடந்
தீர்த்துக் கதவடைத்துப்
பிணங்கலை நீர்எதிர் ஓடஞ்
செலுத்தின வெண்பிறையோடு
இணங்கிய மாடச் சிரபுரத்
தான்தன் இருந்தமிழே. 1236

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. இருந்தண் புகலிகோ லக்கா
எழில்ஆ வடுதுறை நீர்
பொருந்தும் அரத்துறை போனகம்
தாளம்நன் பொன்சிவிகை
அருந்திட வொத்தமுத் தீச்செய
ஏற அரன் அளித்த
பெருந்தகை சீரினை எம்பர
மோநின்று பேசுவதே. 1237

41. பேசும் தகையதன் றேயின்று
மன்றும் தழிழ்விரகன்
தேசம் முழுவதும் மழைமறந்து
ஊண்கெடச் செந்தழற்கை
ஈசன்திருவரு ளால்எழில்
வீழி மிழலையின்வாய்க்
காசின் மழைபொழிந் தான்என்றிஞ்
ஞாலம் கவின்பெறவே. 1238

42. பெறுவது நிச்சயம் அஞ்சல்நெஞ்
சேபிர மாபுரத்து
மறுவறு பொற்கழல் ஞானசம்
பந்தனை வாழ்த்துதலால்
வெளியுறு கொன்றை மறியுறு
செங்கை விடையெடுத்த
பொறியுறு பொற்கொடி எம்பெரு
மானமர் பொன்னுலகே. 1239

43. பொன்னார் மதில்சூழ் புகலிக்கு
அரசை அருகர்தங்கள்
தென்னாட் டரண்அட்ட சிங்கத்
தினைஎம் சிவன்இவன் என்று
அந்நாள் குதலைத் திருவாய்
மொழிகள் அருளிச் செய்த
என்னானை யைப்பணி வார்க்கில்லை
காண்க யமாலயமே. 1240

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. மாலையொப் பாகும் பிறைமுன்பு
நின்று மணிகுறுங்கி
வேலையைப் பாடணைந் தாங்கெழில்
மன்மதன் வில்குனிந்த
கோலைஎப் போதும் பிடிப்பன்
வடுப்படு கொக்கினஞ்சூழ்
சோலையைக் காழித் தலைவன்
மலரின்று சூடிடினே. 1241

45. சூடுநல் தார்த்தமி ழாகரன்
தன்பொற் சுடர்வரைத்தோள்
கூடுதற்கு ஏசற்ற கொம்பினை
நீயும் கொடும்பகை நின்று
ஆடுதற் கேயத்த னைக்குனை
யேநின்னை ஆடரவம்
வாடிடக் காரும் மறுவும்
படுகின்ற வாண்மதியே. 1242

46. மதிக்க தருநுதல் மாதொடும்
எங்கள் மலையில்வைகித்
துதிக்கத் தகுசண்பை நாதன்
சுருதி கடந்துழவோர்
மதிக்கக் கமலம் முகிழ்த்ததண்
தேனுண்டு மிண்டி வரால்
குதிக்கக் குருகிரி யுங்கொச்சை
நாடு குறுகுமினே. 1243

47. குறுமனம் முள்கல வாத்தமி
ழாகரன் கொச்சையன்ன
நறுமலர் மென்குழ லாய்அஞ்சல்
எம்மூர் நகுமதிசென்று
உறுமனை ஒண்சுவர் ஓவியக்
கிள்ளைக்கு நும்பதியில்
சிறுமிகள் சென்றிருந்து அங்கையை
நீட்டுவர் சேயிழையே. 1244

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. இழைவளர் ஆகத்து ஞானசம்
பந்தன் இருஞ்சுருதிக்
கழைவளர் குன்று கடத்தலும்
காண்பீர் கடைசியர்நீள்
முழைவளர் நண்டு படத்தடஞ்
சாலிமுத்துக் கிளைக்கும்
மழைவளர் நீள்குடு மிப்பொழில்
சூழ்ந்த வளவயலே. 1245

49. வயலார் மருகில் பதிதன்னில்
வாளர வாற்கடியுண்டு
அயலா விழுந்த அவனுக்கு
இரங்கி அறிவழிந்த
கயலார் கருங்கண்ணி தன்துயர்
தீர்த்த கருணை வெள்ளப்
புயலார் தருகையி னான் என்னத்
தோன்றிடும் புண்ணியமே. 1246

50. புண்ணிய நாடு புகுவதற்
காகப் புலனடக்கி
எண்ணிய செய்தொழில் நிற்பதெல்
லாரும்இன் றியான் எனக்கு
நண்ணிய செய்தொழில் ஞானசம்
பந்தனை நந்தமர்நீர்க்
கண்ணியன் மாடக் கழுமலத்
தானைக் கருதுவதே. 1247

51. கருதத் தவஅருள் ஈந்தருள்
ஞானசம் பந்தன் சண்பை
இரதக் கிளிமொழி மாதே
கலங்கல் இவர்உடலம்
பொருதக் கழுநிரை யாக்குவன்
நுந்தமர் போர்ப் படையேல்
மருதச் சினையில் பொதும்பருள்
ஏறி மறைகுவனே. 1248

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52. மறைமுழங் குங்குழ லார்கழி
காட்ட வயற்கடைஞர்
பறைமுழங் கும்புக லித்தமி
ழாகரன் பற்றலர்போல்
துறைமுழங் குங்கரி சீறி
மடங்கல் சுடர்ப்பளிங்கின்
அறைமுழங் கும்வழி நீவரின்
சால அரும்பழியே. 1249

53. பழிக்கே தகுகின்ற தின்றிப்
பிறைபல் கதிர்விழுந்த
வழிக்கே திகழ்தரு செக்கரைக்
கொச்சை வயவரென்னும்
மொழிக்கே விரும்பி முளரிக்கு
அலமரும் ஓவியர்தம்
கிழிக்கே தரும்உரு வத்திவள்
வாடிடக் கீள்கின்றதே. 1250

54. கீளரிக் குன்றத்து அரவம்
உமிழ்ந்த கிளர் மணியின்
வாளரிக் கும்வகை மாண்டனர்
என்பர் வயற்புகலித்
தாளரிக் கும்மரி யான்அருள்
பெற்ற பரசமய
கோளரிக் குந்நிக ராத்தமிழ்
நாட்டுள்ள குண்டர்களே. 1251

55. குண்டகழ் சூழ்தரு கொச்சைத்
தலைவன்தன் குன்றகஞ்சேர்
வண்டக மென்மலர் வல்லியன்
னீர்வரி விற்புருவக்
கண்டகவாளி படப்புடை
வீழ்செங் கலங்கலொடும்
புண்டகக் கேழல் புகுந்ததுண்
டோநுங்கள் பூம்புனத்தே. 1252

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. புனத்தெழு கைமதக் குன்றம
தாயங்கொர் புன்கலையாய்
வனத்தெழு சந்தனப் பைந்தழை
யாய்வந்து வந்தடியேன்
மனத்தெழு பொற்கழல் ஞானசம்
பந்தன்வண் கொச்சையன்னாள்
கனத்தெழு கொங்கைக ளாய்அல்கு
லாய்த்திவர் கட்டுரையே. 1253

57. கட்டது வேகொண்டு கள்ளுண்டு
நுங்கைக ளாற்சுணங்கை
இட்டது வேயன்றி எட்டனைத்
தான் இவள் உள்ளுறு நோய்
விட்டது வேயன்றி வெங்குரு
நாதன்தன் பங்கயத்தின்
மட்டவிழ் தார்கொண்டு சூட்டுமின்
பேதை மகிழ்வுறவே. 1254

58. உறவும் பொருளும்ஒண் போகமும்
கல்வியும் கல்வியுற்ற
துறவும் துறவிப் பயனும்
எனக்குச் சுழிந்தபுனல்
புறவும் பொழிலும் பொழில்சூழ்
பொதும்பும் ததும்பவண்டின்
நறவும் பொழில்எழிற் காழியர்
கோன்திரு நாமங்களே. 1255

59. நாமுகந்து ஏத்திய ஞானசம்
பந்தனை நண்ணலர்போல்
ஏமுக வெஞ்சரஞ் சிந்திவல்
இஞ்சி இடிபடுக்கத்
தீமுகந் தோன்றிகள் தோன்றத்
தளவ முகை அரும்பக்
காமுகும் பூமுகம் காட்டிநின்று
ஆர்த்தன காரினமே. 1256

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60. காரங் கணைபொழிற் காழிக்
கவுணியர் தீபன்நல்லூர்ச்
சீரங் கணைநற் பெருமணந்
தன்னிற் சிவபுரத்து
வாரங்கணை கொங்கை மாதொடும்
புக்குறும் போதுவந்தார்
ஆரங்கு ஒழிந்தனர் பெற்றதல்
லால்அவ் அரும்பதமே. 1257

61. அரும்பதம் ஆக்கும் அடியரொடு
அஞ்சலித் தார்க்கரிய
பெரும்பதம் எய்தலுற் றீர்வந்து
இறைஞ்சுமின் பேரரவம்
வரும்பத நான்மறைக் காழித்
தலைவன் மலர்க்கமலத்
தரும்பத ஞானசம் பந்தனென்
னானைதன் தாளிணையே. 1258

62. தாளின் சரணம் தருஞ்சண்பை
நாதன் தரியலர் போல்
கீளின் மலங்க விலங்கே
புகுந்திடும் கெண்டைகளும்
வாளுந் தொகையை மதர்த்திரு
காதின் அளவும் வந்து
மீளுங் கருங்கண்ணி மின்புரி
யாவைத்த மென்னகையே. 1259

63. நகுகின்ற முல்லைநண் ணார்எரி
கண்டத் தவர்கவர்ந்த
மிகுகின்ற நன்னிதி காட்டின
கொன்றை விரவலர்ஊர்
புகுகின்ற தீயெனப் பூத்தன
தோன்றிப் புறவன்கைத்
தகுகின்ற கோடல்கள் அன்பரின்று
எய்துவர் கார் மயிலே. 1260

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

64. மயிலேந் தியவள்ளல் தன்னை
அளிப்ப மதிபுணர்ந்த
எயிலேந் தியசண்பை நாதன்
உலகத் தெதிர்பவர் யார்
குயிலேந் தியபொழிற் கொங்கேந்
தியகொம்பின் அம்புதழீஇ
அயிலேந் தியமலர் கண்டுள
னாய்வந்த அண்ணலுக்கே. 1261

65. அண்ணல் மணிவளைத் தோள்அரு
காசனி சண்பையன்ன
பெண்ணின் அமிர்த்தநல் லாள்குழல்
நாற்றம் பெடையொடும்பூஞ்
சுண்ணம் துதைந்தவண் டேகண்ட
துண்டுகொல் தூங்கொலிநீர்த்
தண்ணம் பொழில்எழிற் காசினி
பூத்தமென் தாதுகளே. 1262

66. தாதுகல் தோய்த்தநஞ் சன்னாசி
யார்சட லம்படுத்துத்
தூதையிற் சிக்கங் கரஞ்சேர்ந்து
வளா துலுக்குகின்றீர்
போதியில் புத்தர்கள் வம்மின்
புகலியர் கோனன்னநாட்
காதியிட் டேற்றுங் கழுத்திறம்
பாடிக் களித்திடவே. 1263

67. களியுறு தேன்தார்க் கவுணியர்
தீபன் கருதலர்போல்
வெளியுறு ஞாலம் பகல்இழந்
தால்விரை யார்கமலத்து
அளியுறு மென்மலர்த் தாதளைந்து
ஆழி அமைப்பவரும்
துளியுறு வாடையி தாம்மட
மானைத் துவள்விப்பதே. 1264

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

68. தேறும் புனல்தில்லைச் சிற்றம்
பலத்துச் சிறந்துவந்துள்
ஊறும் அமிர்தைப் பருகிட்டு
எழுவதொர் உட்களிப்புக்
கூறும் வழிமொழி தந்தெனை
வாழ்வித்தவன் கொழுந்தேன்
நாறும் அலங்கல் தமிழா
கரனென்னும் நன்னிதியே. 1265

69. நிதியுறு வார்அறன் இன்பம்வீடு
எய்துவர் என்னவேதம்
துதியுறு நீள்வயற் காழியர்
கோனைத் தொழாரின்நைய
நதியுறு நீர்தெளித்து அஞ்சல்
என அண்ணல் அன்றோஎன
மதியுறு வாணுதல் பாதம்
பணிந்தனள் மன்னனையே. 1266

70. மன்னங் கனைசெந் தமிழா
கரன்வெற்பில் வந்தொருவர்
அன்னங்கள் அஞ்சன்மின் என்றடர்
வேழத் திடைவிலங்கிப்
பொன்னங் கலைசா வகைஎடுத்
தாற்குஇவள் பூண்அழுந்தி
இன்னந் தழும்புள வாம்பெரும்
பாலும் அவ் ஏந்தலுக்கே. 1267

71. ஏந்தும் உலகுறு வீர்எழில்
நிலநக் கற்கும் இன்பப்
பூந்தன் புகலூர் முருகற்கும்
தோழனைப் போகமார்பைக்
காந்துங் கனலிற் குளிர்படுத்
துக்கடற் கூடலின்வாய்
வேந்தின் துயர்தவிர்த் தானைஎப்
போதும் விரும்புமினே. 1268

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

72. விரும்பும் புதல்வனை மெய்யரிந்து
ஆக்கிய இன்னமிர்தம்
அரும்பும் புனற்சடை யாய்உண்
டருள்என்று அடிபணிந்த
இரும்பின் சுடர்களிற் றான்சிறுத்
தொண்டனை ஏத்துதிரேல்
கரும்பின் மலர்தமி ழாகரன்
பாதத் தொடர்வெளிதே. 1269

73. எளிவந்த வாஎழிற் பூவரை
ஞாண்மணித் தார்தழங்கத்
துளிவந்த கண்பிசைந்து ஏங்கலும்
எங்கள் அரன்துணையாம்
கிளிவந்த சொல்லிபொற் கிண்ணத்தின்
ஞான அமிர்தளித்த
அளிவந்த பூங்குஞ்சி யின்சொற்
சிறுக்கன்றன் ஆர் அருளே. 1270

74. அருளும் தமிழா கரன்நின்
அலங்கல்தந்து என்பெயரச்
சருளுங் குழலியற்கு ஈந்திலை
யேமுன்பு தூங்குகரத்து
உருளும் களிற்றினொடு ஒட்டரு
வானை அருளியன்றே
மருளின் மொழிமட வாள்பெயர்
என்கண் வருவிப்பதே. 1271

75. வருவர் உருவின் வழிவழி
வைத்த வனமருந்தும்
திருவார் இருந்த செழுநகர்ச்
செவ்வித் திருவடிக்காள்
தருவான் தமிழா கரன்கரம்
போற்சலம் வீசக்கண்டு
வெருவா வணங்கொண்டல் கள்மிண்டி
வானத்து மின்னியவே. 1272

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

76. மின்னார்குடுமி நெடுவேற்
பகங்கொங்கில் வீழ்பனி நோய்
தன்னார் வழிகெட்டு அழிந்தமை
சொல்லுவார் காண் இறையே
மன்னார் பரிசனத் தார்மேற்
புகலும் எவர்க்கும் மிக்க
நன்னா வலர்பெரு மான்அரு
காசினி நல்கிடவே. 1273

77. நல்கென்று அடியின் இணைபணி
யார்சண்பை நம்பெருமான்
பல்கும் பெரும்புகழ் பாடகில்
லார்சிலர் பாழ்க்கு இறைத்திட்டு
ஒல்கும் உடம்பின ராய்வழி
தேடிட்டு இடறிமுட்டிப்
பில்கும் இடம்அறி யார்கெடு
வார்உறு பேய்த்தனமே. 1274

78. தனமே தருபுகழ்ச் சைவ
சிகாமணி தன்அருள்போல்
மனமே புகுந்த மடக்கொடி
யேமலர் மேல்இருந்த
அனமே அமிர்தக் குமுதச் செவ்
வாய்உங்கள் ஆயமென்னும்
இனமே பொலியவண் டாடும்எழிற்
சோலையுள் எய்துகவே. 1275

79. உகட்டித்து மோட்டு வராலினம்
மேதி முலைஉரிஞ்ச
அகட்டிற் சொரிபால் தடம்நிறை
கொச்சை வயத்தரசைத்
தகட்டில் திகழ்மணிப் பூண்தமி
ழாகரன் தன்னையல்லால்
பகட்டில் பொலியினும் வேண்டேன்
ஒருவரைப் பாடுதலே. 1276

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

80. பாடிய செந்தமி ழாற்பழங்
காசு பரிசில்பெற்ற
நீடிய சீர்திரு ஞானசம்
பந்தன் நிறைபுகழான்
நாடிய பூந்திரு நாவுக்
கரசோடு எழில்மிழலைக்
கூடிய கூட்டத்தி னால்உள
தாயத்துஇக் குவலயமே. 1277

81. வலையத் திணிதோள் மிசைமழ
வேற்றி மனைப்புறத்து
நிலைஎத் தனைபொழு தோகண்டத்து
ஊரனை நீதிகெட்டார்
குலையக் கழுவின் குழுக்கண்ட
வன்திகழ் கொச்சையன்ன
சிலையொத்த வாள்நுதல் முன்போல்
மலர்க திருக்கண்களே. 1278

82. கண்ணோர் திருநுத லோன்கோலக்
காவில் கரநொடியால்
பண்ணார் தரப்பாடு சண்பையர்
கோன்பாணி நொந்திடுமென்று
எண்ணா எழுத்தஞ்சும் இட்டபொன்
தாளங்கள் ஈயக்கண்டும்
மண்ணார் சிலர்சண்பை நாதனை
யேத்தார் வருந்துவதே. 1279

83. வருந்துங் கொலாங்கழல் மண்மிசை
ஏகிடின் என்று மென்தார்த்
திருந்தும் புகழ்சண்பை ஞானசம்
பந்தற்குச் சீர்மணிகள்
பொருந்துஞ் சிவிகை கொடுத்தனன்
காண்புண ரித்திகழ் நஞ்சு
அருந்தும் பிரான்நம் அரத்துறை
மேய அரும்பொருளே. 1280

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84. பொருளென என்னைத்தன் பொற்கழல்
காட்டிப் புகுந்தெனக்கிங்கு
அருளிய சீர்தரு ஞானசம்
பந்தன் அருளிலர்போல்
வெருளின மானின்மென் நோக்கியை
விட்டு விழுநிதியின்
திரளினை ஆதரித் தான்என்று
சாலஎன் சிந்தனைக்கே. 1281

85. சிந்தையைத் தேனைத் திருவா
வடுதுறை யுள்திகழும்
எந்தையைப் பாடல் இசைத்துத்
தொலையா நிதியம் எய்தித்
தந்தையைத் தீத்தொழில் மூட்டிய
கோன் சரண் சார்விலரேல்
நிந்தையைப் பெற்றொழி யாதுஇரந்
தேகரம் நீட்டுவரே. 1282

86. நீட்டுவர் ஓதத்தொடு ஏறிய
சங்கம் நெகுமுளரித்
தோட்டுவெண் முத்தம் சொரிசண்பை
நாதன் தொழாதவரில்
வேட்டுவர் வேட்டதண் ணீரினுக்கு
உண்ணீர் உணக்குழித்த
காட்டுவர் ஊறல் பருகும்
கொலாம்எம் கணங்குழையே. 1283

87. குழைக்கின்ற கொன்றை பொன் போல
மலரநுங் கூட்ட மெல்லாம்
அழைக்கின்ற கொண்டல் இயம்புன்
னிலையகன் றார்வரவு
பிழைக்கின் றதுகொல்என் றஞ்சிஒண்
சண்பைப் பிரான்புறவத்து
இழைக்கின்ற கூடல் முடியஎண்
ணாத இளங்கொடிக்கே. 1284

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

88. கொடித்தேர் அவுணர் குழாம் அனல்
ஊட்டிய குன்றவில்லி
அடித்தேர் கருத்தின் அருகா
சனியை அணியிழையார்
முடித்தேர் கமலம் கவர்வான்
முரியுரு வச்சிலையால்
வடித்தேர் நயனக் கணையினை
கோத்து வளைத்தனரே. 1285

89. வளைபடு தண்கடல் கொச்சை
வயவன் மலர்க்கழற்கே
வளைபடு நீண்முடி வார்புன
லூரன்தன் நீரிலங்கு
வளைபடு கண்ணியர் தம்பொதுத்
தம்பலம் நாறும் இந்த
வளைபடு கிங்கிணிக் கால்மைந்தன்
வாயின் மணிமுத்தமே. 1286

90. முத்தன்ன வெண்ணகை யார்மயல்
மாற்றி முறைவழுவாது
எத்தனை காலம்நின்று ஏத்தும்
அவரினும் என்பு அணிந்த
பித்தனை எங்கள் பிரானை
அணைவது எளிதுகண்டீர்
அத்தனை ஞானசம் பந்தனைப்
பாதம் அடைந்தவர்க்கே. 1287

91. அடைத்தது மாமறைக் காடாதம்
கோயிற் கதவினை அன்று
உடைத்தது பாணன்தன் யாழின்
ஒலியை உரகவிடம்
துடைத்தது தோணி புரத்துக்கு
இறைவன் சுடரொளிவாய்
படைத்தது தண்மையை நள்ளாற்று
அரசு பணித்திடவே. 1288

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

92. பணிபடு நுண்ணிடை பாதம்
பொறாபல காதமென்று
தணிபடு மின்செற்க ளால்தவிர்த்
தேற்குத் தழல் உமிழ்கான்
மணிபடு பொற்கழல் ஞானசம்
பந்தன் மருவலர்போல்
துணிபடு வேலன்ன கண்ணியென்
னோவந்து தோன்றியதே. 1289

93. தோன்றல்தன் னோடுடன் ஏகிய
சுந்தரப் பூண்முலையை
ஈன்றவ ரேயிந்த ஏந்திழை
யாரவர் இவ்வளவில்
வான்தவர் சூழுந் தமிழா
கரன்தன் வடவரையே
போன்ற பொன் மாடக்கழுமல
நாடு பொருந்தவரே. 1290

94. பொருந்திடு ஞானத் தமிழா
கரன்பதி பொற்புரிசை
திருந்திய தோணி புரத்துக்கு
இறைவன் திருவருளால்
கருந்தடம் நீரெழு காலையில்
காகூ கழுமலமென்று
இருந்திட வாமென்று வானவ
ராகி இயங்கியதே. 1291

95. இயலா தனபல சிந்தைய
ராய்இய லுங்கொல் என்று
முயலா தனவே முயன்றுவன்
மோகச் சுழியமுந்திச்
செயலார் வரைமதில் காழியர்
கோன்திரு நாமங்களுக்கு
அயலார் எனப்பல காலங்கள்
போக்குவர் ஆதர்களே. 1292

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

96. ஆதர வும்பயப் பும்இவள்
எய்தினள் என்று அயலார்
மாதர் அவஞ்சொல்லி என்னை
நகுவது மாமறையின்
ஓதுஅர வம்பொலி காழித்
தமிழா கரன்ஓடு அன்றே
தீதுஅர வம்பட அன்னைஎன்
னோபல செப்புவதே. 1293

97. செப்பிய என்ன தவம்முயன்
றேன்அல்ல செந்தமிழால்
ஒப்புடை மாலைத் தமிழா
கரனை யுணர்உடை யோர்
கற்புடை வாய்மொழி ஏத்தும்
படிகத றிட்டிவர
மற்படு தொல்லைக் கடல்புடை
சூழ்தரு மண்ணிடையே. 1294

98. மண்ணில் திகழ்சண்பை நாதனை
வாதினில் வல்அமணைப்
பண்ணைக் கழுவின் நுதிவைத்துளம்
பந்த வினையறுக்கும்
கண்ணைக் கதியைத் தமிழா
கரனைஎங் கற்பகத்தைத்
திண்ணற் றொடையல் கவுணியர்
தீபனைச் சேர்ந்தனமே. 1295

99. சேரும் புகழ்த்திரு ஞானசம்
பந்தனை யானுரைத்த
பேருந் தமிழ்ப்பா இவைவல்
லவர்பெற்ற இன்புலகம்
காருந் தருமிடற் றாய்அரு
ளாய்என்று கைதொழுவார்
நீரும் மலரும் கொளாநெடு
மாலும் பிரமனுமே. 1296

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100. பிரமா புரம்வெங் குருசண்பை
தோணி புகலிகொச்சை
சிரமார் புரம்நற் புறவந்
தராய்காழி வேணுபுரம்
வரமார் பொழில்திரு ஞானசம்
பந்தன் பதிக்கு மிக்க
பரமார் கழுமலம் பன்னிரு
நாமம்இப் பாரகத்தே. 1297

## 101. வெண்பா

பாரகலத் துன்பம் கடந்தமர ராற்பணியும்
ஏரகலம் பெற்றாலும் இன்னாதால் - காரகிலின்
தூமம் கமழ்மாடத் தோணி புரத்தலைவன்
நாமஞ் செவிக்கிடையா நாள். 1298

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பியாண்டார் நம்பிகள் அருளிய

# ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம் (35)

திருச்சிற்றம்பலம்

**கட்டளைக் கலித்துறை**

01. பாலித் தெழில்தங்கு பார்முகம்
உய்யப் பறிதலையோர்
மாலுற் றழுந்த அவதரித்
தோன்மணி நீர்க்கமலத்து
ஆலித் தலர்மிசை அன்னம்
நடப்ப அணிங்கி தென்னாச்
சாலித் தலைமணி சண்பையார்
காவலன் சம்பந்தனே. 1299

02. கொங்குதங் கும்குஞ்சி கூடாப்
பருவத்துக் குன்றவில்லி
பங்குதங் கும்மங்கை தன்னருள்
பெற்றவன் பைம்புணரிப்
பொங்குவங் கப்புனல் சேர்த்த
புதுமணப் புன்னையின்கீழ்ச்
சங்குதங் கும்வயற் சண்பையர்
காவலன் சம்பந்தனே. 1300

03. குவளைக் கருங்கண் கொடியிடை
துன்பம் தவிர அன்று
துவளத் தொடுவிடும் தீர்த்த
தமிழின் தொகை செய்தவன்
திவளக் கொடிக்குன்ற மாளிகைச்
சூளிகைச் சென்னியின்வாய்த்
தவளப் பிறைதங்கு சண்பையர்
காவலன் சம்பந்தனே. 1301

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. கள்ளம் பொழில்நனி பள்ளித்
தடங்கடம் ஆக்கி அஃதே
வெள்ளம் பணிநெய்தல் ஆக்கிய
வித்தகன் வெண்குருகு
புள்ளொண் தவளப்புரி சங்கொடு
ஆலக் கயல்உகளத்
தள்ளம் தடம்புனல் சண்பையர்
காவலன் சம்பந்தனே. 1302

05. ஆறதே றுஞ்சடை யான்அருள்
மேவ அவனியர்க்கு
வீறதே றும்தமி ழால்வழி
கண்டவன் மென்கிளிமாந்
தேறல்கோ தித்தூறு சண்பகம்
தாவிச் செழுங்கமுகின்
தாறதே றும்பொழிற் சண்பையர்
காவலன் சம்பந்தனே. 1303

06. அந்தமும் தும்பிற வித்துயர்
தீர அரனடிக்கே
பந்தமுந் தும்தமிழ் செய்த
பராபரன் பைந்தடந்தேன்
வந்தமுந் தும்நத்தம் முத்தங்
கொடுப்ப வயற்கயலே
சந்தமுந் தும்பொழிற் சண்பையர்
காவலன் சம்பந்தனே. 1304

07. புண்டலைக் குஞ்சரப் போர்வையர்
கோயிற் புக அடைக்கும்
ஒண்டலைத் தண்டமிழ்க் குண்டா
சனிஉம்பர் பம்பி மின்னும்
கொண்டலைக் கொண்டுவண் டாடப்
பெடையொடும் கொக்குறங்கும்
தண்டலைக் குண்டகமழ்ச் சண்பையர்
காவலன் சம்பந்தனே. 1305

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. எண்டலைக் குந்தலை வன்கழல்
குடிஎன் உள்ளம் வெள்ளம்
கண்டலைப் பத்தன் கழல்தந்த
வன்கதிர் முத்தநத்தம்
விண்டலைப் பத்தியில் ஓடும்
விரவி மிளிர் பவளம்
தண்டலைக் கும்கடற் சண்பையர்
காவலன் சம்பந்தனே. 1306

09. ஆறுமண் டப்பண்டு செஞ்சொல்
நடாத்தி அமண் முழுதும்
பாறுமண் டக்கண்ட சைவ
சிகாமணி பைந்தடத்த
சேறுமண் டச்சங்கு செங்கயல்
தேமாங் கனிசிதறிச்
சாறுமண் டும்வயல் சண்பையர்
காவலன் சம்பந்தனே. 1307

10. விடந்திளைக் கும்அர வல்குல்மென்
கூந்தல் பெருமணத்தின்
வடந்திளைக் குங்கொங்கை புல்கிய
மன்மதன் வண்கதலிக்
கடந்திளைத் துக்கமு நீர்புல்கி
ஒல்கிக் கரும்புரிஞ்சித்
தடந்திளைக் கும்புனல் சண்பையர்
காவலன் சம்பந்தனே. 1308

11. பாலித்த கொங்கு குவளைகள்
ளம்பொழில் கீழ்பரந்து
ஆலிப்ப ஆறதே றுங்கழ
னிச்சண்பை அந்தமுந்து
மேலிட்ட புண்டலைக் குஞ்சரத்
தெண்டலைக் குந்தலைவன்
கோலிட்டவாறு விடந்தளைக்
கும்அர வல்குலையே. 1309

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பியாண்டார் நம்பிகள் அருளிய

# ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை (36)

திருச்சிற்றம்பலம்

## ஆசிரியப்பா

01. திங்கட் கொழுந்தொடு பொங்கரவு திளைக்கும்
கங்கைப் பேரியாற்றுக் கடுவரற் கலுழியின்
இதழியின் செம்பொன் இருகரை சிதறிப்
புதல்எருக்கு மலர்த்தும் புரிபுன் சடையோன்
திருவருள் பெற்ற இருபிறப் பாளன்

முத்தீ வேள்வி நான்மறை வளர
ஐவேள் உயர்த்த அறுதொழி லாளன்
ஏழிசை யாழை எண்திசை அறியத்
துண்டப் படுத்த தண்டமிழ் விரகன்
காழி நாடன் கவுணியர் தலைவன்

மழை நோக்கி மலைமகள் புதல்வன்
திருந்திய பாடல் விரும்பினர்க்கு அல்லது
கடுந்துயர் உட்புகக் கைவிளிக் கும்மிந்
நெடும்பிற விக்கடல் நீந்துவது அரிதே. 1310

## வெண்பா

02. அரியோடு நான்முகத்தோன் ஆதிசுரர்க்கு எல்லாம்
தெரியாமை செந்தழலாய் நின்ற - ஒருவன்சீர்
தன்தலையின் மேல்தரித்த சம்பந்தன் தாளிணைகள்
என்தலையின் மேலிருக்க என்று. 1311

## கட்டளைக் கலித்துறை

03. என்றும் அடியவர் உள்ளத்து
இருப்பன இவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துதிப்பன நல்லசங்கத்து
ஒன்றும் புலவர்கள் யாப்புக்
குரியன ஒண்கலியைப்
பொன்றும் கவுணியன் சைவ
சிகாமணி பொன்னடியே. 1312

## ஆசிரியப்பா

04. அடுசினக் கடகரி அதுபட உரித்த
படர்சடைக் கடவுள்தன் திருவருள் அதனால் பிறந்தது
கழுமலம் என்னும் கடிநகர் அதுவே வளர்ந்தது
தேங்கமழ் வாவிச் சிலம்பரை யன்பெறு
பூங்குழல் மாதிடு போனகம் உண்டே பெற்றது

குழகனைப் பாடிக் கோலக் காப்புக்கு
அழகுடைச் செம்பொற் றாளம் அவையே தீர்த்தது
தாதமர் மருகற் சடையனைப் பாடிப்
பேதுறு பெண்ணின் கணவனை விடமே அடைத்தது
அரசோடு இசையா அணிமறைக் காட்டுக்

குரைசேர் குடுமிக் கொழுமணிக் கதவே ஏறிற்று
அத்தியும் மாவும் தவிர அரத்துறை
முத்தின் சிவிகை முன்னாள் பெற்றே பாடிற்று
அருமறை ஒத்தூர் ஆண்பனை அதனைப்
பெறுநிறம் எய்தும் பெண்பனையாவே கொண்டது

பூவிடு மதுவில் பொறிவண்டு உழலும்
ஆவடு துறையில் பொன்னா யிரமே கண்டது
உறியொடு பீலி ஒருகையிற் கொள்ளும்
பறிதலைச் சமணைப் பல்கழு மிசையே நீத்தது
அவிழ்ச்சுவை யேஅறிந்து அரனடி பரவும்

தமிழ்ச்சுவை அறியாத் தம்பங் களையே நினைந்தது
அள்ளற் பழனக் கொள்ளம் பூதூர்
இக்கரை ஓடம் அக்கரைச் செலவே மிக்கவர்
ஊனசம் பந்தம் அறுத்துயக் கொளவல
ஞானசம் பந்தன்இஞ் ஞாலத் திடையே. 1313

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெண்பா

05. நிலத்துக்கு மேல்ஆறு நீடுலகத்துச்சித்
தலத்துக்கு மேலேதான் என்பர் - சொலத்தக்க
சுத்தர்கள்சேர் காழிச் சுரன்ஞான சம்பந்தன்
பக்தர்கள் போய் வாழும்பதி. 1314

### கட்டளைக் கலித்துறை

06. பதிகம் பலபாடி நீடிய
பிள்ளை பரசுதரற்கு
அதிகம் அணுக்கன் அமணர்க்குக்
காலன் அவதரித்த
மதியம் தவழ்மாட மாளிகைக்
காழிஎன் றால்வணங்கார்
ஒதியம் பணைபோல் விழுவர்அந்
தோசில ஊமர்களே. 1315

### ஆசிரியப்பா

07. கவள மாளிகைத் திவளும் யானையின்
கவுட்டலைக் கும்பத்து
உம்பர்ப் பதணத்து அம்புதம் திளைக்கும்
பெருவளம் தழீஇத் திருவளர் புகலி
விளங்கப் பிறந்த வளங்கொள்சம் பந்தன்

கருதியஞ் செவ்விச் சுருதியஞ் சிலம்பில்
தேமரு தினைவளர் காமரு புனத்து
மும்மதம் சொரியும் வெம்முகக் கைம்மா
மூரி மருப்பிற் சீரிய முத்துக்
கொடுஞ்சிலை வளைத்தே கொடுஞ்சரந் துரந்து

முற்பட வந்து முயன்றங்கு உதவிசெய்
வெற்பனுக்கு அலது
சுணங்கணி மென்முலைச் சுரிகுழல் மாதினை
மணஞ்செய மதிப்பது நமக்குவன் பழியே. 1316

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெண்பா

08. பழிஒன்றும் ஓராதே பாய்இடுக்கி வாளா
கழியுஞ் சமண்கையர் தம்மை - அழியத்
துரந்தரங்கச் செற்றான் சுரும்பரற்றும் பாதம்
நிரந்தரம்போய் நெஞ்சே நினை. 1317

### கட்டளைக் கலித்துறை

09. நினையா தரவெய்தி மேகலை
நெக்கு வளைசரிவாள்
தனைஆவ என்றின்று அருளுதி
யேதடஞ் சாலிவயற்
கனையா வருமேதி கன்றுக்(கு)
இரங்கித்தன் கால்வழிபால்
நனையா வருங்காழி மேவிய
சீர்ஞான சம்பந்தனே. 1318

### ஆசிரியப்பா

10. தனலி கமலத் திருவெனும் செல்வி
விருப்பொடு திளைக்கும் வீயா இன்பத்து
ஆடக மாடம் நீடுதென் புகலிக்
காமரு கவினார் கவுணியர் தலைவ
பொற்பமர் தோள நற்றமிழ் விரக

மலைமகள் புதல்வ கலைபயில் நாவ நினாது
பொங்கொளி மார்பில் தங்கிய திருநீறு
ஆதரித்து இறைஞ்சிய பேதையர் கையில்
வெள்வளை வாங்கிச் செம்பொன் கொடுத்தலிற்
பிள்ளை யாவது தெரிந்தது பிறர்க்கே. 1319

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெண்பா

11. பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனும் தோற்றோணி கண்டீர் - நிறைஉலகிர்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ். 1320

### கட்டளைக் கலித்துறை

12. ஞானத் திரளையி லேஉண்
டனையென்று நாடறியச்
சோனந் தருகுழ லார்சொல்
லிடாமுன் சுரும்புகட்குப்
பானந் தருபங்க யத்தார்
கொடுபடைச் சால்வழியே
கூனந் துருள்வயல் சூழ்காழி
மேவிய கொற்றவனே. 1321

### ஆசிரியப்பா

13. அவனிதலம் நெரிய எதிரெதிர் மலைஇச்
சொரிமதக் களிற்று மத்தகம் போழ்ந்து
செஞ்சே றாடிச் செல்வன அரியே எஞ்சாப்
படஅர வுச்சிப் பருமணி பிதுங்கப்
பிடரிடைப் பாய்வன பேழ்வாய்ப் புலியே இடையிடைச்

செறியிருள் உருவச் சேண்விசும்பு அதனிற்
பொறியென விழுவன பொங்கொளி மின்னே
உறுசின வரையால் உந்திய கலுழிக்
கரையால் உழல்வன கரடியின் கணனே நிரையார்
பொருகடல் உதைந்த சுரிமுகச் சங்கு.

செங்கயல் கிழித்த பங்கய மலரின்
செம்மடல் நிறைய வெண்முத்து உதிர்க்கும்
பழனக் கழனிக் கழுமல நாடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகையில் அமணரை வாதுசெய்து அறுத்த
சைவ சிகாமணி சம்பந்தன் வெற்பிற்

சிறுகிடை யவள்தன் பெருமுலை புணர்வான்
நெறியினில் வரலொழி நீமலை யோனே. 1322

### வெண்பா

14. மலைத்தலங்கள் மீதேறி மாதவங்கள் செய்து
முலைத்தடங்கள் நீத்தாலும் மூப்பர் - கலைத்தலைவன்
சம்பந்தற்கு ஆளாய்த் தடங்காழி கைகூப்பித்
தம்பந்தம் தீராதார் தாம். 1323

### கட்டளைக் கலித்துறை

15. தாமரை மாதவி சேறிய
நான்முகன் தன்பதிபோல்
காமரு சீர்வளர் காழிநின்
னாடன் கவித்திறத்து
நாமரு மாதவர் போல்அழ
கீந்துநல் வில்லிபின்னே
நீர்மரு வாத சுரத்தெங்ஙன்
ஏகும்என் நேரிழையே. 1324

### ஆசிரியப்பா

16. இழைகெழு மென்முலை இதழிமென் மலர்கொயத்
தழைவர ஒசித்த தடம்பொழில் இதுவே காமர்
கனைகுடைந் தேறித் துகிலது புனையநின்று
எனையும் கண்டு வெள்கிடம் இதுவே தினைதொறும்
பாய்கிளி இரியப் பைவந் தேறி

ஆயவென் றிருக்கும் அணிப்பரண் இதுவே ஈதே
இன்புறு சிறுசொல் அவைபல இயற்றி
அன்புசெய்(து) என்னை ஆட்கொளும் இடமே பொன்புரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடமலர்க் கமலக் குடுமியி லிருந்து
நற்றொழில் புரியும் நான்முகன் நாட்டைப்

புற்கடை கழீஇப் பொங்கு சராவத்து
நெய்த்துடுப் பெடுத்த முத்தீப் புகையால்
நாடொறு மறைக்குஞ் சேடுறு காழி
எண்டிசை நிறைந்த தண்டமிழ் விரகண்
நலங்கலந்(து) ஓங்கும் விலங்கலின் மாட்டுப்

பூம்புனம் அதனிற் காம்பன தோளி
பஞ்சில் திருந்தபடி நோவப் பொய்எனை
வஞ்சித் திருந்த மணியறை இதுவே. 1325

### வெண்பா

17. வேழங்கள் எய்பவர்க்கு வில்லாவது இக்காலம்
ஆழங் கடல்முத்தம் வந்தலைக்கும் - நீள்வயல்சூழ்
வாய்ந்ததிவண் மாட மதிற்காழிக் கோன்சிலம்பிற்
சாய்ந்தது வண்தழையோ தான். 1326

### கட்டளைக் கலித்துறை

18. தழைக்கின்ற சீர்மிகு ஞானசம்
பந்தன் தடமலைவாய்
அழைக்கின்ற மஞ்ஞைக்கு அலர்ந்தன
கோடல்அம்பு எய்திடுவான்
இழைக்கின்ற தந்தரத்து இந்திர
சாபம்நின் எண்ணமொன்றும்
பிழைக்கின்ற தில்லைநல் தேர்வந்து
தோன்றிற்றுப் பெய்வளையே. 1327

### ஆசிரியப்பா

19. வளைகால் மந்தி மாமரப் பொந்தில்
விளைதேன் உண்டு வேணுவின் துணியாற்
பாறை யில்துயில் பனைக்கை வேழத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்தி எழுப்பும் அந்தண் சிலம்ப அஃதிங்கு
என்னையர் இங்கு வருவர் பலரே.

அன்னை காணில் அலர்தூற் றும்மே பொன்னார்
சிறுபரற் கரந்த விளிகுரற் கிங்கிணி
சேவடி புல்லிச் சில்குரல் இயற்றி
அமுதுண் செவ்வாய் அருவி தூங்கத்
தாளம் பிரியாத் தடக்கை அசைத்துச்

சிறு கூத்து இயற்றிச் சிவன்அருள் பெற்ற
நற்றமிழ் விரகன் பற்றலர் போல
இடுங்கிய மனத்தொடும் ஒடுங்கிய சென்று
பருதியுங் குடகடல் பாய்ந்தனன்
கருதிநிற் பதுபிழை கங்குலிப் புனத்தே. 1328

## வெண்பா

20. தேம்புனமே உன்னைத் திரிந்து தொழுகின்றேன்
வாம்புகழ்சேர் சம்பந்தன் மாற்றலர்போல் - தேம்பி
அழுதகன்றாள் என்னாது அணிமலையார் வந்தால்
தொழுதகன்றாள் என்றுநீ சொல்லு. 1329

## கட்டளைக் கலித்துறை

21. சொற்செறி நீள்கவி செய்தன்று
வைகையில் தொல்அமணர்
பற்செறி யாவண்ணம் காத்தசம்
பந்தன் பயில்சிலம்பில்
கற்செறி வார்சுனை நீர்குடைந்து
ஆடும் கனம்குழையை
இற்செறி யாவண்ணம் காத்திலை
வாழி இரும்புனமே. 1330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆசிரியப்பா

22. புனலற வறந்த புன்முளி சுரத்துச்
சினமலி வேடர் செஞ்சரம் உரீஇப்
படுகலைக் குளம்பின் முடுகு நாற்றத்து
ஆடும் அரவின் அகடு தீயப்
பாடு தகையின் பஞ்சரங் கேட்டுக்

கள்ளியங் கவட்டிடைப் பள்ளி கொள்ளும்
பொறிவரிப் புறவே உறவலை காண்நீ நறைகமழ்
தேம்புனல் வாவித் திருக்கழு மலத்துப்
பையரவு அசைத்த தெய்வ நாயகன்
தன்அருள் பெற்ற பொன்னணிக் குன்றம்

மானசம் பந்தம் மண்மிசைத் துறந்த
ஞானசம் பந்தனை நயவார் கிளைபோல்
வினையேன் இருக்கும் மனைபிரி யாத
வஞ்சி மருங்குல் அஞ்சொற் கிள்ளை
ஏதிலன் பின்செல விலக்காது ஒழிந்தனை

ஆதலிற் புறவே உறவலை நீயே. 1331

### வெண்பா

23. அலைகடலின் மீதோடி அந்நுளையர் வீசும்
வலைகடலில் வந்தேறு சங்கம் - அலர்கடலை
வெண்முத்து அவிழ்வயல்சூழ் வீங்குபுனல் காழியே
ஒண்முத் தமிழ்பயந்தான் ஊர். 1332

### கட்டளைக் கலித்துறை

24. ஊரும் பசும்புர வித்தேர்
ஒளித்த(து) ஒளிவிசும்பில்
கூரும் இருளொடு கோழிகண்
துஞ்சா கொடுவினையேற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரும் உணர்ந்திலர் ஞானசம்
பந்தன்அந் தாமரையின்
தாரும் தருகிலன் எங்ஙனம்
யான்சங்கு தாங்குவதே. 1333

## ஆசிரியப்பா

25. தேமலி கமலப் பூமலி படப்பைத்
தலைமுகடு ஏறி இளவெயிற் காயும்
கவடிச் சிறுகாற் கர்க்கட கத்தைச்
சுவடிச் சியங்கும் சூல்நரி முதுகைத்
துன்னி எழுந்து செந்நெல் மோதும்

காழி நாட்டுக் கவுணியர் குலத்தை
வாழத் தோன்றிய வண்டமிழ் விரகன்
தெண்டிரைக் கடல்வாய்க்
காண்டகு செவ்விக் களிறுகள் உகுத்த
முட்டைமுன் கவரும் பெட்டையங் குருகே

வாடை அடிப்ப வைகறைப் போதிற்
தனிநீ போந்து பனிநீர் ஒழுகக்
கூசிக் குளிர்ந்து பேசா திருந்து
மேனி வெளுத்த காரணம் உரையாய்
இங்குத் தணந்தெய்தி நுமரும்

இன்னம்வந் திலரோ சொல்லிளங் குருகே. 1334

## வெண்பா

26. குருகும் பணிலமும் கூன்நந்தும் சேலும்
பெருகும் வயற்காழிப் பிள்ளை - அருகந்தா
முன்கலங்கநட்ட முடைகெழுமு மால் இன்னம்
புன்கலங்கல் வைகைப் புனல். 1335

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டளைக் கலித்துறை

27. புனமா மயில்சாயல் கண்டுமுன்
போகா கிளிபிரியா
இனமான் விழிஒக்கும் என்றுவிட்டு
ஏகா இருநிலத்துக்
கனமா மதிற்காழி ஞானசம்
பந்தன் கடல்மலைவாய்த்
தினைமாது இவள்காக்க எங்கே
விளையும் செழுங்கதிரே. 1336

## ஆசிரியப்பா

29. கதிர்மதி நுழையும் படர்சடை மகுடத்து
ஒருத்தியைக் கரந்த விருத்தனைப் பாடி
முத்தின் சிவிகை முன்னாட் பெற்ற
அத்தன் காழி நாட்டுறை அணங்கோ மொய்த்தெழு
தாமரை அல்லித் தவிசிடை வளர்ந்த

காமரு செல்வக் கனங்குழை அவளோ மீமருத்
தருவளர் விசும்பில் தவநெறி கலக்கும்
உருவளர் கொங்கை உருப்பசி தானோ
வாருணக் கொம்போ மதனன் கொடியோ
ஆரணி யத்துள் அருந்தெய்வ மதுவோ

வண்டமர் குழலும் கெண்டையம் கண்ணும்
வஞ்சி மருங்கும் கிஞ்சுக வாயும்
ஏந்தின முலையும் காந்தளம் கையும்
ஓவியர் தங்கள் ஒண்மதி காட்டும்
வட்டிகைப் பலகை வான்துகி லிகையால்

இயக்குதற்கு அரியதோர் உருவுகண்டு என்னை
மயக்கவந்து உதித்ததோர் வடிவுஇது தானே. 1337

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெண்பா

29. வடிக்கண்ணி யாளைஇவ் வான்சுரத்தின் ஊடே
கடிக்கண்ணி யானொடும் கண்டோம் - வடிக்கண்ணி
மாம்பொழில்சேர் வைகை அமண்மலைந்தான் வண்காழிப்
பூம்பொழிலே சேர்ந்திருப்பார் புக்கு. 1338

### கட்டளைக் கலித்துறை

30. குருந்தும் தரளமும் போல்வண்ண
வெண்ணகைக் கொய்மலராள்
பொருந்தும் திரள்புயத்து அண்ணல்சம்
பந்தன்பொற் றாமரைக்கா
வருந்தும் திரள்கொங்கை மங்கையை
வாட்டினை வானகத்தே
திருந்தும் திரள்முகில் முந்திவந்து
ஏறுதிங் கட்கொழுந்தே. 1339

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பியாண்டார் நம்பிகள் அருளிய

## ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை (37)

திருச்சிற்றம்பலம்

01. திருந்தியசீர்ச் செந்தா மரைத்தடத்துச் சென்றோர்
இருந்தண் இளமேதி பாயப் - பொருந்திய

02. புள்ளிரியப் பொங்கு கயல்வெருவப் பூங்குவளைக்
கள்ளிரியச் செங்கழுநீர் கால்சிதையத் - துள்ளிக்

03. குருகிரியக் கூனிறவம் பாயக் களிறு
முருகுவரி பொய்கையின்கண் மூழ்க - வெருவுற்ற

04. கோட்டகத்துப் பாய்வாளை கண்டலவன் கூசிப்போய்த்
தோட்டகத்த செந்நெல் துறையடையச் - சேட்டகந்த

05. காவி முகமலரக் கார்நீலம் கண்படுப்ப
வாவிக்கண் நெய்தல் அலமர - மேவிய

06. அன்னம் துயிலெழுப்ப அம்சிறைசேர் வண்டினங்கள்
துன்னும் துணையிழப்பச் சூழ்கிடங்கில் - மன்னிய

07. வள்ளை நகைகாட்ட வண்குமுதம் வாய்காட்டத்
தெள்ளுபுனற் பங்கயங்கள் தேன்காட்ட - மெள்ள

08. நிலவு மலரணையின் நின்றிழிந்த சங்கம்
இலகுகதிர் நித்திலங்கள் ஈன - உலவிய

09. மல்லைப் பழனத்து வார்பிரசம் மீதழிய
ஒல்லை வரம்பிடறி யோடிப்போய்ப் - புல்லிய

10. பாசடைய செந்நெல் படரொளியால் பல்கதிரோன்
தேசடைய வோங்கு செறுவுகளும் - மாசில்நீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. நித்திலத்தின் சாயும் நிகழ்மரக தத்தோலும்
தொத்தொளி செம்பொன் தொழிற்பரிய - மொய்த்த

12. பவளத்தின் செவ்வியும் பாங்கணைய வோங்கித்
திவளக் கொடிமருங்கில் சேர்த்தித் - துவளாமைப்

13. பட்டாடை கொண்டுடுத்துப் பைந்தோடு இலங்குகுழை
இட்டமைந்த கண்ணார் இளங்கமுகும் - விட்டொளிசேர்

14. கண்கள் அழல்சிதறிக் காய்சினத்த வாய்மதத்துத்
தண்டலையின் நிழல் தறியணைந்து - கொண்ட

15. கொலைபுரியா நீர்மையவாய்க் கொம்புவளைத் தேந்தி
மலையு மரவடிவங் கொண்டாங்கு - இலைநெருங்கு

16. சூதத் திரளும் தொகுகனிக ளால்நிவந்த
மேதகுசீர்த் தெங்கின் வியன்பொழிலும் - போதுற்று

17. இனமொருங்கு செவ்வியவாய் இன்தேன் ததும்பு
கனிநெருங்கு திண்கதலிக் காடும் - நனிவிளங்கு

18. நாற்றத்தால் எண்டிசையும் வந்து நலஞ்சிறப்ப
ஊற்று மடுத்த உயர்பலவும் - மாற்றமரும்

19. மஞ்சள் எழில்வளமும் மாதுளையின் வார்பொழிலும்
இஞ்சி இளங்காவின் ஈட்டமும் - எஞ்சாத

20. கூந்தற் கமுகும் குளிர்பாட லத்தெழிலும்
வாய்ந்தசீர்ச் சண்பகத்தின் வண்காடும் - ஏந்தெழிலார்

21. மாதவியும் புன்னையும் மன்னும் மலர்க்குரவும்
கேதகையும் எங்கும் கெழீஇப் - போதின்

22. இளந்தென்றல் வந்தசைப்ப எண்டிசையும் வாசம்
வளந்துன்று வார்பொழின் மாடே - கிளர்ந்தெங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. ஆலை ஒலியும் அரிவார் குரல்ஒலியும்
சோலைக் கிளிமிழற்றும் சொல்ஒலியும் - மாலும்

24. அறுபதங்கள் ஆர்ப்பொலியும் ஆன்றபொலி வெய்தி
உறுதிரைநீர் வேலை ஒலிப்ப - வெறிகமழும்

25. நந்தா வனத்தியல்பும் நற்றவத்தோர் சார்விடமும்
அந்தமில் சீரார் அழகினால் - முந்திப்

26. புகழ்வாரும் தன்மையதாய்ப் பூதலத்துள் ஓங்கி
நிகழ்கிடங்கும் சூழ்கிடப்ப நேரே - திகழ

27. முளைநிரைத்து மூரிச் சிறைவகுத்து மொய்த்த
வளகத்தின் பாம்புரிசூழ் போகி - வளர

28. இரும்பதணஞ் சேர விருத்திஎழில் நாஞ்சில்
மருங்கனைய வட்டாலை யிட்டுப் - பொருந்தியசீர்த்

29. தோமரமும் தொல்லைப் பொறிவீசி யந்திரமும்
காமரமும் ஏப்புழையும் கைகலந்து - மீமருவும்

30. வெங்கதிரோன் தேர்விலங்கு மிக்குயர்ந்த மேருப்போன்று
அங்கனகத்து இஞ்சி அணிபெற்றுப் - பொங்கொளி

31. மாளிகையும் மன்னியசீர் மண்டபமும் ஒண்தலத்த
சூளிகையும் துற்றெழுந்த தெற்றிகளும் - வாளொளிசேர்

32. நாடக சாலையும் நன்பொற் கபோதஞ்சேர்
பீடமைந்த மாடத்தின் பெற்றியும் - கேடில்

33. உருவு பெறவகுத்த அம்பலமும் ஓங்கு
தெருவும் வகுத்தசெய் குன்றும் - மருவினிய

34. சித்திரக் காவும் செழும்பொழிலும் வாவிகளும்
நித்திலஞ்சேர் நீடு நிலைக்களமும் - எத்திசையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. துன்னி எழில்சிறப்பச் சோதி மலர்மடந்தை
மன்னி மகிழ்ந்துறையும் வாய்மைத்தாயப் - பொன்னும்

36. மரகதமும் நித்திலமும் மாமணியும் பேணி
இரவலர்கட்கு எப்போதும் ஈந்தும் - கரவாது

37. கற்பகமும் காருமெனக் கற்றவர்க்கும் நற்றவர்க்குந்
தப்பாக் கொடைவளர்க்குஞ் சாயாத - செப்பத்தால்

38. பொய்ம்மை கடிந்து புகழ்புரிந்து பூதலத்து
மெய்ம்மை தலைசிறந்து மேதக்கும் - உண்மை

39. மறைபயில்வார் மன்னு வியாகரணக் கேள்வித்
துறைபயில்வார் தொன்னூல் பயில்வார் - முறைமையால்

40. ஆகமங்கள் கேட்பா ருங்கலைநூல் ஆதரித்துப்
போகம் ஒடுங்காப் பொருள்துய்ப்பார் - சோகமின்றி

41. நீதி நிலையுணர்வார் நீள்நிலத்துள் ஐம்புலனும்
காதல் விடுதவங்கள் காமுறுவார் - ஆதி

42. அருங்கலைநூல் ஓதுவார் ஆதரித்து வென்றிக்
கருங்கலிநீங் கக்கனல்வ குப்பார் - ஒருங்கிருந்து

43. காமநூல் கேட்பார் கலைஞானம் காதலிப்பார்
ஓமநூல் ஓதுவார் உத்தரிப்பார் - பூமன்னும்

44. நான்முகனே அன்னசீர் நானூற் றுவர்மறையோர்
தாம்மன்னி வாழும் தகைமைத்தாய் - நாமன்னும்

45. ஆரணங்கும் மற்றை அருந்ததியும் போல்மடவார்
ஏரணங்கு மாடத்து இனிதிருந்து - சீரணங்கு

46. வீணை பயிற்றுவார் யாழ்பயில்வார் மேவியசீர்ப்
பாணம் பயில்வார் பயனுறுவார் - பேணியசீர்ப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. பூவைக்குப் பாட்டுரைப்பார் பொற்கிளிக்குச் சொற்பயில்வார்
பாவைக்குப் பொன்புனைந்து பண்புறுவார் - ஆயெங்கும்

48. மங்கையர்கள் கூட்டமும் மன்னு சிறார்குழுவும்
பொங்குலகம் எல்லாம் பொலிவடையத் - தங்கிய

49. வேத ஒலியும் விழாவொலியும் மெல்லியலார்
கீத ஒலியும் கிளர்ந்தோங்கும் - மாதரார்

50. பாவை ஒலியும் பறையொலியும் பல்சனங்கள்
மேவும் ஒலியும் வியன்நகரம் - காவலர்கள்

51. பம்பைத் துடியொலியும் பௌவப் படையொலியும்
கம்பக் களிற்றொலியும் கைகலந்து - நம்பிய

52. கார்முழக்கம் மற்றைக் கடல்முழக்கம் போற்கலந்த
சீர்முழக்கம் எங்கும் செவிடுபடப் - பார்விளங்கு

53. செல்வம் நிறைந்தவூர் சீரில் திகழ்ந்தவூர்
மல்கு மலர்மடந்தை மன்னும் ஊர் - சொல்லினிய

54. ஞாலத்து மிக்கவூர் நானூற் றுவர்கள்ஊர்
வேலொத்த கண்ணார் விளங்கும்ஊர் - ஆலித்து

55. மன்னிருகால் வேலை வளர்வெள்ளத்து உம்பரொடும்
பன்னிருகால் நீரில் மிதந்தவூர் - மன்னும்

56. பிரமனூர் வேணுபுரம் பேரொலிநீர் சண்பை
அரன்மன்னு தண்காழி அம்பொற் - சிரபுரம்

57. பூந்தராய் கொச்சைவயம் வெங்குருப் பொங்குபுனல்
வாய்தநல் தோணி புரம்மறையோர் - ஏய்ந்த

58. புகலி கழுமலம் பூம்புறவம் என்றிப்
பகர்கின்ற பண்புற்ற தாகித் - திகழ்கின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

59. மல்லைச் செழுநகரம் மன்னவும் வல்லமணர்
ஒல்லைக் கழுவில் உலக்கவும் - எல்லையிலா

60. மாதவத்தோர் வாழவும் வையகத்தோர் உய்யவும்
மேதக்க வானோர் வியப்பவும் - ஆதியாம்

61. வென்றிக் கலிகெடவும் வேதத்து ஒலிமிகவும்
ஒன்றிச் சிவனடியார் ஓங்கவும் - துன்றிய

62. பன்னு தமிழ்ப்பதினா றாயிர நற்பனுவல்
நன்னு புவியவர்க்கு வாய்ப்பவும் - முன்னிய

63. சிந்தனையால் சீரார் கவுணியர்க்கோர் சேயென்ன
வந்தங்கு அவதரித்த வள்ளலை - அந்தமில்சீர்

64. ஞானச் சுடர்விளக்கை நற்றவத்தோர் கற்பகத்தை
மான மறையவற்றின் வான்பொருளை - ஆனசீர்த்

65. தத்துவனை நித்தனைச் சைவத் தவர்அரசை
வித்தகத்தால் ஓங்கு விடலையை - முத்தமிழின்

66. செஞ்சொற் பொருள்பயந்த சிங்கத்தைத் தெவ்வருயிர்
அஞ்சத் திகழ்ந்த அடல்உருமை - எஞ்சாமை

67. ஆதிச் சிவனருளால் அம்பொன்செய் வட்டிலில்
கோதில் அமிர்தநுகர் குஞ்சரத்தைத் - தீதறுசீர்க்

68. காலத் தொகுதியும் நான்மறையின் காரணமும்
மூலப் பொருளும் முழுதுணர்ந்த - சீலத்

69. திருஞான சம்பந்தன் என்றுலகம் சேர்ந்த
ஒருநாமத் தால்உயர்ந்த கோவை - வருபெருநீர்ப்

70. பொன்னிவள நாடனைப் பூம்புகலி நாயகனை
மன்னர் தொழுதிறைஞ்சும் மாமணியை - முன்னே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

71. நிலவு முருகர்க்கும் நீலநக் கற்கும்
தொலைவில் புகழ்ச்சிறுத்தொண் டற்கும் - குலவிய

72. தோழமையாய்த் தொல்லைப் பிறப்பறுத்த சுந்தரனை
மாழையொண்கண் மாதர் மதனனைச் - சூழொளிய

73. கோதைவேல் தென்னன்தன் கூடல் குலநகரில்
வாதில் அமணர் வலிதொலையக் - காதலால்

74. புண்கெழுவு செம்புனலாறு ஓடப் பொருதவரை
வண்கழுவில் தைத்த மறையோனை - ஒண்கெழுவு

75. ஞாலத் தினர்அழிய மன்னுநனி பள்ளியது
பாலை தனைநெய்தல் ஆக்கியும் - காலத்து

76. நீர்எதிர்த்து சென்று நெருப்பிற் குளிர்படைத்தும்
பார்எதிர்ந்த பல்விடங்கள் தீர்த்துமுன் - நேரெழுந்த

77. யாழை முரித்தும் இருங்கதவம் தானடைத்தும்
சூழ்புனலில் ஓடத் தொழில்புரிந்தும் - தாழ்பொழில்சூழ்

78. கொங்கிற் பனிநோய் பரிசனத்தைத் தீர்ப்பித்துத்
துங்கப் புரிசை தொகுமிழலை - அங்கதனில்

79. நித்தன் செழுங்காசு கொண்டுநிகழ் நெல்வாயில்
முத்தின் சிவிகை முதல்கொண்டும் - அத்தகுசீர்

80. மாயிரு ஞாலத்து மன்னா வடுதுறைபுக்கு
ஆயிரம் செம்பொன் அதுகொண்டும் - மாய்வரிய

81. மாண்புதிகழ் எம்பெருமான் மன்னுதிரு வோத்தூரில்
ஆண்பனைகள் பெண்பனைகள் ஆக்கியும் - பாண்பரிசில்

82. கைப்பாணி யொத்திக்கா ழிக்கோலத் காவிற்பொற்
சப்பாணி கொண்டு தராதலத்துள் - எப்பொழுதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

83. நீக்கரிய இன்பத் திராகமிருக் குக்குறள்
நோக்கரிய பாசுரம்பல் பத்தோடும் - ஆக்கரிய

84. யாழ்முரி சக்கரமாற்று ஈரடி முக்காலும்
பாழிமையால் பாரகத்தோர் தாமுய்ய - ஊழி

85. உரைப்பமரும் பல்புகழால் ஓங்கஉமை கோனைத்
திருப்பதிகம் பாடவல்ல சேயை - விருப்போடு

86. நண்ணு புகழ்மறையோர் நாற்பத்தெண் ணாயிரவர்
எண்ணில் முனிவரர் ஈட்டத்துப் - பண்ணமரும்

87. ஓலக்கத் துள்ளிருப்ப ஒண்கோயில் வாயிலின்கண்
கோலக் கடைகுறுகிக் கும்பிட்டால் - காலும்

88. புகலி வளநகருள் பூசுரர் புக்காங்கு
இகலில் புகழ்பரவி யேத்திப் - புகலிசேர்

89. வீதி எழுந்தருள வேண்டுமென விண்ணப்பம்
ஆதரத்தால் செய்ய அவர்க்கருளி - நீதியால்

90. கேதகையும் சண்பகமும் நேர்கிடத்திக் கீழ்த்தாழ்ந்த
மாதவியின் போதை மருங்கணைத்துக் - கோதில்

91. இருவேலி தன்னை இடையிருத்தி ஈண்டு
மருவோடு மல்லிகையை வைத்தாங்கு - அருகே

92. கருமுகையைக் கைகலக்க வைத்துக் கழுநீர்ப்
பெருகு பிளவிடையே பெய்து - முருகியலும்

93. புன்னாகந் தன்னைப் புணர விருவாச்சி
தன்னயலே முல்லை தலையெடுப்ப - மன்னிய

94. வண்செருந்தி வாய்நெகிழ்ப்ப மௌவல் அலர்படைப்பத்
தண்குருந்தம் மாடே தலையிறக்க - ஒண்கமலத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

95. தாதடுத்த கண்ணியால் தண்ணறுங் குஞ்சிமேல்
போதடுத்த கோலம் புனைவித்துக் - காதிற்

96. கனவயிர குண்டலங்கள் சேர்த்திக் கழுத்தின்
இனமணியின் ஆரம் இலகப் - புனைகனகத்

97. தொத்தடுத்த பூஞ்சுரிகைச் சோதிசேர் தாளிம்பம்
வைத்து மணிக்கண் டிகைபூண்டு - முத்தடுத்த

98. கேயூரத் தோள்மேல் கிடத்திக் கிளர்பொன்னின்
வாய்மை பெறுநூல் வலந்திகழ - வேயும்

99. தமனியத்தின் தாழ்வடமும் தண்டரளக் கோப்பும்
சிமைய வரைமார்பில் சேர்த்தி - அமைவுற்ற

100. வெண்ணீற்றின் ஒண்களபம் மட்டித்து மேவுதொழில்
ஒண்ணூல் கலிங்கம் உடல்புனைந்து - திண்ணோக்கில்

101. காற்றுருமோ குன்றோ கடலோ அடல்உருமோ
கூற்றுருவோ என்னக் கொதித்தெழுந்து - சீற்றத்

102. தழல்விழித்து நின்றெதிர்ந்து தாலவட்டம் வீசிப்
புழைத்தடக்கை கொண்டெறிந்து பொங்கி - மழை மதத்தால்

103. பூத்த கடதடத்துப் போகம் மிகப்பொலிந்த
காத்திரத்த தாகிக் கலித்தெங்கும் - கோத்த

104. கொடுநிகளம் போக்கிநிமிர் கொண்டெழுந்து கோபித்து
இடுவண்டை யிட்டுக் கலித்து - முடுகி

105. நெடுநிலத்தைத் தானுழ்க்கி நின்று நிகர்நீத்து
இடிபெயரத் தாளந் திலுப்பி - அடுசினத்தால்

106. கன்ற முகம்பருகிக் கையெடுத்து ஆராய்ந்து
வென்றி மருப்புருவ வெய்துரித்து - ஒன்றிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

107. கூடம் அரணழித்துக் கோபுரங்க ளைக்குத்தி
நடு பொழிலை நிகரளித்து - ஓடிப்

108. பணைப்பா கரைப்பரிந்து குத்திப் பறித்த
நிணைப்பாகை நீள்விசும்பின் வீசி - அணைப்பரிய

109. ஓடைக் கருங்களிற்றை ஒண்பரிக்கா ரர்கள்தாம்
மாடணையக் கொண்டு வருதலுமே - கூடி

110. நயந்து குரற்கொடுத்து நட்பளித்துச் சென்று
வியந்தணுகி வேட்டம் தணிந்தாங்கு - உயர்ந்த

111. உடல்தூய வாசிதனைப் பற்றிமேல் கொண்டாங்கு
அடற்கூடற் சந்தி யணுகி - அடுத்த

112. பயில்பலவும் பேசிப் படுபுரசை நீக்கி
அயர்வு கெடஅணைத்துத் தட்டி - உயர்வுதரு

113. தண்டுபே ரோசையின்கண் தாள்கோத்துச் சீர்ச்சிறுத்
தொண்டர் பிறகணையத் தோன்றுதலும் - எண்டிசையும்

114. பல்சனமும் மாவும் படையும் புடைகிளர
ஒல்லொலியால் ஓங்கு கடல்கிளர - மல்லல்

115. பரித்தூரங் கொட்டப் படுபணிலம் ஆர்ப்பக்
கருத்தோடு இசைக்கவிஞர்பாட - விரித்த

116. குடைபலவும் சாமரையும் தொங்கல்களும் கூடிப்
புடைபரந்து பொக்கம் படைப்பக் - கடைபடு

117. வீதி அணுகுதலும் வெள்வளையார் உள்மகிழ்ந்து
காதல் பெருகக் கலந்தெங்கும் - சோதிசேர்

118. ஆடரங்கின் மேலும் அணிமா ளிகைகளிலும்
சேடரங்கும் நீள்மறுகும் தெற்றியிலும் - பீடுடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

119. பேரிளம்பெண் ஈறாகப் பேதை முதலாக
வாரிளங் கொங்கை மடநல்லார் - சீர்விளங்கப்

120. பேணும் சிலம்பும் பிறங்கொளிசேர் ஆரமும்
பூணும் புலம்பப் புறப்பட்டுச் - சேண்மறுகில்

121. காண்டகைய வென்றிக் கருவரைமேல் வெண்மதிபோல்
ஈண்டுக் குடையின் எழில் நிழற்கீழ்க் - காண்டலுமே

122. கைதொழுவார் நின்று கலைசரிவார் மால்கொண்டு
மெய்தளர்வார் வெள்வளைகள் போய்வீழ்வார் - வெய்துயிர்த்துப்

123. பூம்பயலை கொள்வார் புணர்முலைகள் பொன்பயப்பார்
காம்பனைய மென்தோள் கவின்கழிவார் - தாம்பயந்து

124. வென்றிமேற் சேயென்ன வேனில்வேட் கோவென்ன
அன்றென்ன ஆமென்ன ஐயுற்றுச் - சேன்றணுகிக்

125. காழிக் குலமதலை என்றுதங் கைசோர்ந்து
வாழி வளைசரிய நின்றயர்வார் - பாழிமையால்

126. உள்ளம் நிலைதளர்ந்த ஒண்ணுதலார் வெல்களிற்றை
மெள்ள நடவென்று வேண்டுவார் - கள்ளலங்கல்

127. தாராமை அன்றியும் தையல்நல் லார்முகத்தைப்
பாராமை சாலப் பயன் என்பார் - நேராக

128. என்னையே நோக்கினான் ஏந்திழையீர் இப்பொழுது
நன்மை நமக்குண் டெனநயப்பார் - கைம்மையால்

129. ஒண்கலையும் நாணும் உடைதுகிலும் தோற்றவர்கள்
வண்கமலத் தார்வலிந்து கோடுமெனப் - பண்பின்

130. வடிக்கண் மலர்வாளி வார்புருவ வில்மேல்
தொடுத்தரந் தொண்டை துடிப்பப் - பொடித்தமுலைக்

131. காசைக் கருங்குழலார் காதற் கவுணியன்பால்
பூசற்கு அமைந்து புறப்படுவார் - வாசச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

132. செழுமலர்த்தார் இன்றெனக்கு நல்காதே சீரார்
கழுமலத்தார் கோவே கழல்கள் - தொழுவார்கள்

133. அங்கோல் வளையிழக்கப் போவது நின்னுடைய
செங்கோன்மை யோவென்று செப்புவார் - நங்கைமீர்

134. இன்றிவன் நல்குமேல் எண்பெருங் குன்றத்தில்
அன்றமணர் கூட்டத்தை ஆசழித்துப் - பொன்ற

135. உரைகெழுவு செந்தமிழ்ப்பா வொன்றினால் வென்றி
நிரைகழுமேல் உய்த்தானை நேர்ந்து - விரைமலர்த்தார்

136. பெற்றிடலாம் என்றிருந்த நம்மிலும் பேதையர்கள்
மற்றுளரோ வென்று வகுத்துரைப்பார் - மற்றிவனே

137. பெண்ணிரக்கம் அன்றே பிறைநுதலீர் மாசுணத்தின்
நண்ணு கடுவிடத்தால் நாட்சென்று - விண்ணுற்ற

138. ஆருயிரை மீட்டுஅன் றவளை அணிமருகல்
ஊரறிய வைத்த தெனவுரைப்பர் - பேரிடரால்

139. ஏசுவார் தாமுற்ற ஏசறவைத் தோழியர்முன்
பேசுவார் நின்றுதம் பீடழிவார் - ஆசையால்

140. நைவார் நலனழிவார் நாணோடு பூணிழப்பார்
மெய்வாடு வார்வெகுள்வார் வெய்துயிர்ப்பார் - தையலார்

141. பூந்துகிலைப் பூமாலை யென்றணிவார் பூவினைமுன்
சாந்த மெனமெய்யில் தைவருவார் - வாய்ந்த

142. கிளியென்று பாவைக்குச் சொற்பயில்வார் பந்தை
ஒளிமே கலையென்று உடுப்பார் - அளிமேவு

143. பூங்குழலார் மையலாய்க் கைதொழுமுன் போதந்தான்
ஓங்கொலிசேர் வீதி யுலா. 1340

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பியாண்டார் நம்பிகள் அருளிய

# ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் (38)

திருச்சிற்றம்பலம்

**ஒருபோகு கொச்சகக் கலிப்பா**

அலையார்ந்த கடலுலகத் தருந்திசைதோ றங்கங்கே
நிலையார்ந்த பலபதிகம் நெறிமனிதர்க்கு இனிதியற்றி
ஈங்கருளி யெம்போல்வார்க்கு இடர்கெடுத்தல் காரணமாய்
ஓங்குபுகழ்ச் சண்பையெனும் ஒண்பதியுள் உதித்தனையே.

செஞ்சடைவெண் மதியணிந்த சிவனெந்தை திருவருளால்
வஞ்சியன நுண்ணிடையாள் மலையரையன் மடப்பாவை
நற்கண்ணி யளவிறந்த ஞானத்தை அமிர்தாக்கிப்
பொற்கிண்ணத்து அருள்புரிந்த போனகமுன் நுகர்ந்தனையே.

தோடணிகா தினன்என்றும் தொல்லமரர்க்கு எஞ்ஞான்றும்
தேடரிய பராபரனைச் செழுமறையின் அகன்பொருளை
அந்தச்செம் மேனியனை அடையாளம் பலசொல்லி
உந்தைக்குக் காணஅரண் ஆவனாம்என்று உரைத்தனையே.

(இவை மூன்றும் நான்கடித் தாழிசை)

வளமலி தமிழிசை வடகலை மறைவல
முளரிநன் மலரணி தருதிரு முடியினை.

கடல்படு விடமடை கறைமணி மிடறுடை
அடல்கரி யுரியனை யறிவுடை யளவினை.

(இவை இரண்டும் அராகம்)

கரும்பினும்மிக்கு இனியபுகழ்க் கண்ணுதல்விண் ணவன்அடிமேல்
பரம்பவிரும் புவியவர்க்குப் பத்திமையை விளைத்தனையே.
பன்மறையோர் செய்தொழிலும் பரமசிவா கமவிதியும்
நன்மறையின் விதிமுழுதும் ஒழிவின்றி நவின்றனையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இவை இரண்டும் இரண்டடித் தாழிசை)

அணிதவத் தவர்களுக்கு அதிகவித் தகனும்நீ
தணிமனத்து அருளுடைத் தவநெறிக்கு அமிர்தம்நீ
அமணரைக் கழுநுதிக்கு அணைவுறுத் தவனும்நீ
தமிழ்நலத் தொகையினில் தருசுவைப் பவனும்நீ

(இவை நான்கும் நாற்சீர் ஓரடி அம்போதரங்கம்)

மறையவர்க்கு ஒருவன் நீ
மருவலர்க்கு உருமு நீ
நிறைகுணத்து ஒருவன் நீ
நிகரில்உத் தமனும் நீ

(இவை நான்கும் முச்சீர் ஓரடி அம்போதரங்கம்)

அரியை நீ: எளியை நீ:
அறவன் நீ: துறவன் நீ:
பெரியை நீ: உரியை நீ:
பிள்ளை நீ: வள்ளல் நீ:

(இவை எட்டும் இருசீர் ஓரடி அம்போதரங்கம்)

எனவாங்(கு)

(இது தனிச்சொல்)

அருந்தமிழ் விரகநிற் பரசுதும் திருந்திய
நிரைச்செழு மாளிகை நிலைதொறும் நிலைதொறும்
உரைச்சதுர் மறையின் ஓங்கிய ஒலிசேர்
சீர்கெழு துழனித் திருமுகம் பொலிவுடைத்
தார்கெழுதண்டலை தண்பனை தழீஇக்

கற்றொரு புரிசைக் காழியர் நாத
நற்றொகு கீர்த்தி ஞானசம் பந்த
நின்பெருங் கருணையை நீதியின்
அன்புடை அடியவர்க்கு அருளுவோய் எனவே. 1341

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரும்போதரங்கம்

01. அணித்தவத்தவர்த்தோர்க்கு அதிக வித்தகன் நீ!
தனிமனத்தருளுடைத் தவநெறிக்கு அமிழ்தமும் நீ!
சமணர்களைக் கழுவில் ஏற்றியவனும் நீ!
தமிழ்நலத் தொகையினில் தகுசுவைப்பவனும் நீ!
மறையவர்க்கு ஒருவன் நீ!
பகைவர்கட்கு இடிபோன்றவன் நீ!
நிறைகுணத்து ஒருவன் நீ!
நிகரற்ற உத்தமனும் நீ!
அருமையானவன் நீ!
எளிமையானவனும் நீ!
அறநெறியாளன் நீ!
துறவறநெறியாளன் நீ!
பெரியவன் நீ!
உரிமையுடையவன் நீ!
பிள்ளை நீ!
வள்ளல் நீ!

## வெண்பா

02. எனவே இடரகலும் இன்பமே எய்தும்
நனவே அரனருளை நாடும் - புனல்மேய
செங்கமலத் தண்தார்த் திருஞான சம்பந்தன்
கொங்கமலத் தண்காழிக்கோ. 1342

## கட்டளைக் கலித்துறை

03. கோலப் புலமணிச் சுந்தர
மாளிகைக் கும்தளவார்
ஏலப் பொழிலணி சண்பையர்
கோனை இருங்கடல்சூழ்
ஞாலத்து அணிபுகழ் ஞானசம்
பந்தனை நற்றமிழே
போலப் பலபுன் கவிகொண்டு
சேவடி போற்றுவனே. 1343

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

04. போற்று வாரிடர் பாற்றிய புனிதன்
பொழில்சு லாவிய புகலியர் பெருமான்
ஏற்ற வார்புகழ் ஞானசம் பந்தன்
எம்பி ரான்இருஞ் சுருதியங் கிரிவாய்ச்
சேற்று வார்புனங் காவல் புரிந்தென்
சிந்தை கொள்வதும் செய்தொழி லானால்
மாற்றம் நீர்எமக்கு இன்றுரை செய்தால்
வாசி யோகுற மாதுந லீரே. 1344

## எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

05. நலமலி தரும்புவனி நிறைசெய்புகழ் இன்பம்நனி
பனிமதி யணைந்த பொழில்சூழ்
பொலமதில் இரும்புகலி அதிபதி விதம்பெருகு
புனிதகுணன் எந்தம் இறைவன்
பலமலி தருந்தமிழன் வடகலை விடங்கன்மிகு
பரசமய வென்றி யரிதன்
சலமலி தரும்கமல சரண்நினைவன் என்றனது
தகுவினைகள் பொன்றும் வகையே. 1345

## பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

வகைதகு முத்தமிழ் ஆகரன்
மறைபயில் திப்பிய வாசகன்
வலகலை வித்தகன் வானவில்
மதியணை பொற்குவை மாளிகை
திகைதிகை மட்டலர் வார்பொழில்
திகழ்புக லிக்கரசு ஆகிய
திருவளர் விப்ரசி காமணி
செழுமல யத்தமிழ்க் கேசரி
மிகமத வெற்றிகொள் வாரணம்
இடைவரு டைக்குலம் யாளிகள்
விரவிரு ளிற்றனி நீள்நெறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைதுயர் மொய்த்துள வேமணி
நகையெழில் இற்குற மாதுனது
அருமை நினைக்கிலள் நீயிவள்
நசையின் முழுப்பழி யாதல்முன்
நணுகலின் இக்கிரி வாணனே. 1346

07. வாணில வும்புன லும்பயில்
செஞ்சடை வண்கரு ணாகரனை
மலைமா துமையொடும் இவனா
வானென முன்னாளுரை செய்தோன்
சேணில வும்புகழ் மாளிகை
நீடிய தென்புக லிக்கரசைத்
திருவா ளனைஎழில் அருகா
சனிதனை மருவா தவர்கிளைபோல்

நாணில வும்பழி யோகரு
தாதய லான்ஒரு காளையுடன்
நசைதீர் நிலைகொலை புரிவே
டுவர்பயில் தருகா னதர்வெயிலிற்
கேணில வுங்கிளி பாவையொடு
ஆயமும் யாயெனை யும்பொழியக்
கிறியா லெனதொரு மகள்போய்
உறுதுயர் கெடுவேன் அறிகிலேனே. 1347

## எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

08. அறிவாகி இன்பஞ்செய் தமிழ்வாதில் வென்றந்த
அமணான வன்குண்டர் கழுவேற முன்கண்ட
செறிமாட வண்சம்பை நகராளி யென்தந்தை
திருஞானசம்பந்த அணிநீடு திண்குன்றில்
நெறியால மண்டுன்றி முனைநாள்சி னங்கொண்டு
நிறைவார் புனந்தின்று மகள்மேல் வருந்துங்க
வெறியார் மதந்தங்கு கதவா ரணங்கொன்ற
வெகுளாத நஞ்சிந்தை விறலான் உளன்பண்டே. 1348

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதின்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

09. பண்டமுதுசெய்ததுமை நங்கையருள் மேவுசிவ ஞானம்
பைந்தரள நன்சிவிகை செம்பொன் அணி நீடுகிறதாளம்
கொண்டதரன் உம்பர்பரன் எங்கள்பெரு மானருள் படைத்துக்
கொடுத்ததமி ழைத்தவகு லத்தவர்க ளுக்குலகில் இன்பம்
கண்டதரு கந்தர்குலம் ஒன்றிமுழு துங்கழுவி லேறக்
கறத்தது வினைப்பயன் மனத்திலிறை காதலதுவன்றி
விண்டதுவும் வஞ்சகரை மஞ்சணவு கின்றமணி மாட
வேணுபுர நாதன்மிகு வேதியர்சி காமணி பிரானே. 1349

## அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

10. பிரானை மெய்த்திரு ஞானசம்
பந்தனை மறையவர் பெருமானைக்
குராம லர்ப்பொழிற் கொச்சையர்
நாதனைக் குரைகழல் இணைவாழ்த்தித்
தராத தலத்தினில் அவனருள்
நினைவொடு தளர்வுறு தமியேனுக்கு
இராவி னைக்கொடு வந்ததிவ்
அந்திமற் றினிவிடி வறியேனே. 1350

## களி

## பதினான்குசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

11. ஏனமு கத்தவ புத்தரை இந்திர
சித்து மணம்புணர் வுற்றான்
ஈழல னார்சொரி தொட்டி இனங்களை
வெட்டி இசித்தனர் பட்டர்
தானம் இரக்கிற சீதை மடுப்பது
சாதி குடத்தொடு கண்டீர்
சக்கர வர்த்திகள் சிக்கர மட்டுவர்
தத்துவ முப்பரி சுண்டே
ஆன புகழ்ப்பயில் விப்ர சிகாமணி
அத்தகு மைப்புரை யுங்கார்
ஆர்பொழில் நீடிய சண்பையர் காவலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்களி யேன்எளி யேனோ
சோனக னுக்கும்எ னக்கும் எனத்தரை
யம்மனை சூலது கொண்டாள்
...........யை வென்று நிலத்திடை
........க்குகி றாரே 1351

## அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

12. ஆர்மலி புகலி நாதன்
அருளென விரவில் வந்தென்
வார்முலை பயலை தீர
மணந்தவர் தணந்து போன
தேரதர் அழியல் உம்மைச்
செய்பிழை யெம்ம தில்லை
கார்திரை புரள மோதிக்
கரைபொருங் கடலி னீரே. 1352

## கலி விருத்தம்

13. கடல்மேவு புவியேறு கவிநீரர் பெருமான்தன்
தடமாடு மிகுகாழி தகுபேதை யருளாமல்
திடமாகில் அணிநீறு செழுமேனி முழுதாடி
மடலேறி எழில்வீதி வருகாதல் ஒழியேனே. 1253

## எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

14. ஒழியாது இன்புறு பொழில்சூழ் சண்பைமன்
உயர்பார் துன்றிய தகுஞா னன்புகழ்
எழிலா ருங்கவு ணியர்தீ பன்திகழ்
இணையார் செங்கரன் நிகழ்வான் விண்குயின்
பொழியா நின்றன துளிதார் கொன்றைகள்
புலமே துன்றின கலைமான் ஒன்றின்
பழிமேல் கொண்டது நுமர்தேர் அன்பொடும்
அருகே வந்தது அதுகாண் மங்கையே. 1354

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

15. மங்கை யிடந்தர னைக்கவி
நீர்எதி ஓட மதித்தருள்செய்
தங்கு புகழ்ச்சதுர் மாமறை
நாவளர் சைவசி காமணிதன்
துங்க மதிற்பிர மாபுரம்
மேவிய சூழ்பொழில் நின்றொளிர்மென்
கொங்கை யுடைக்கொடி யேரிடை
யான்குடி கொண்டனள் எம்மனமே. 1355

## எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

16. மனங்கொண்டு நிறைகொண்டு கலையுங் கொண்டு
மணிநிறமும் இவள்செங்கை வளையுங் கொண்ட
தனங்கொண்ட பெருஞ்செல்வம் திகழும் கீர்த்திச்
சண்பையர்கோன் திருஞான சம்பந்தற்கு
நனங்கொண்டு மெய்கொண்டு பயலை கொண்டே
நன்னுதலாள் அயர்கின்றாள் நடுவே நின்றும்
இனங்கொண்டு நகைகொண்டு மடவீர் வாளா
என் செயநீர் அலர்தூற்றி எழுகின் றீரே. 1356

## சம்பிரதம்

17. எழுகுல வெற்பிவை மிடறில் அடக்குவன்
எறிகட லிற்புனல் குளறிவ யிற்றினில்
முழுதும் ஒளித்திர வியையி நிலத்திடை
முடுகுவன் இப்பொழுது இவையல விச்சைகள்
கழுமல நற்பதி அதிக தமிழ்க்கடல்
கவுணிய நற்குல திலகன் இணைக்கழல்
தொழுது வழுத்திய பிறரொரு வர்க்குறு
துயர்வரு விப்பினி தரியதொர் விச்சையே. 1357

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

20. சயமி குத்தரு கரைமு ருக்கிய
தமிழ்ப யிற்றிய நாவன்
வியலி யற்றிரு மருக லிற்கொடு
விடம ழித்தருள் போதன்
கயலு டைப்புனல் வயல்வ ளத்தகு
கழும லப்பதி நாதன்
இயலு டைக்கழல் தொழநி னைப்பவர்
இருவி னைத்துயர் போமே. 1358

### எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

19. மேதகுந் திகழ்பூ நாகசண் பகசூத
வேரிவண் டறைசோலை யாவைதுன் றியகாழி
நாதன்அந் தணர்கொன்ள னானைவண் புகழாளி
ஞானசுந் தரன்மேவு தார்நினைந் தயர்வேனை
நீதியன்றன பேசும் யாவும்இந் துவும்வாசம்
நீடுதென் றலும்வீணை ஓசையும் கரைசேர
மோதுதெண் திரைசேவல் சேரும்அன் றிலும்வேயும்
மூடுதண் பனிவாடை கூடிவன் பகையாமே. 1359

20. வன்பகை யாமக் குண்டரை வென்றோய்
மாமலர்வாளிப் பொருமத வேளைத்
தன்பகை யாகச் சிந்தையுள் நையும்
தையலை யுய்யக் கொண்டருள் செய்யாய்
நின்புகழ் பாடிக் கண்பனி சோரா
நின்றெழில் ஞானா வென்றதும் நெக்கிட்டு
அன்பக லாமெய்ச் சிந்தையர் இன்பா
அம்பொழில் மாடச் சண்பையர் கோவே. 1360

### மறம்

21. கோவின்திரு முகமீதொரு வருதூவன் ஈர
குளிர்பைம் பொழில் வளநாடெழில் நிதியம்பரிமீசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவீரியர் இவர்தங்கைஎன் மகுடம்திறம் அமண
மறவெங்குலம் அறிகின்றிலன் பழியச்சத அரசன்
பாவேறிய மதுரத்தமிழ் விரகன்புக லியர்மன்
பயில்வண்புகழ் அருகாசனி பனியன்றெனின் நமர்காள்
தூவேரியை மடுமின்துடி யடிமின்படை எழுமின்
தொகுசேனையும் அவனும்பட மலையும்புரி சினியே. 1361

## எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

22. இனியின்று ஒழிமின்இவ் வெறியும் மறிபடு
தொழிலும் மிடுசூர வையுமெல்லாம்
நனிசிந் தையின்இவள் மின்அன் புறவதொர்
நசையுண் டதுநரை முதுபெண்டிர்
புனிதன் புலியர் அதிபன் புனைதமிழ்
விரகன் புயமுறும் அரவிந்தம்
பனிமென் குழலியை அணிமின் துயரொடு
மயலுங் கெடுவது சரதம்மே. 1362

## எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

23. சரத மணமலி பரிசும் வருவன
தளர்வில் புகலியர் அதிபன் நதிதரு
வரதன் அணிதிகழ் விரகன் மிகுபுகழ்
மருவுசுருதிநன் மலையின் அமர்தரு
விரதம் உடையைநின் நடையின் அவள்மனம்
விரைசெய் குழலியை அணைவது அரிதென
இரதம் அழிதர வருதல் முனம்இனி
எளியது ஒருவகை கருது மலையனே. 1363

24. அயன்நெடிய மாலும் அவர் அறிவரிய தாணுவரன்
அருளினொடு நீடவனி யிடர்முழுது போயகல
வயலணிதென் வீழிமிழ லையின்நிலவு காசின்மலி
மழைபொழியு மானகுண மதுரன்மதி தோய்கனக
செயநிலவு மாடமதில் புடைதழுவு வாசமலி
செறிபொழில்சு லாவிவளர் சிரபுரசு ரேசன்முதிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்நிலவு ஞானதமிழ் விரகன்மறை ஞானமுணர்
பரமகுரு நாதன்மிகு பரசமய கோளரியே. 1364

25. அரியாருங் கிரிநெறியெங் நுமைநீர் வந்தீர்
அழகிதினிப் பயமில்லை அந்திக்கு அப்பால்
தெரியாடின் சிறுநெறிகள் எந்தம் வாழ்விச்
சிறுகுடியினின்று இரவிங்கே சிரமந் தீர்ந்திச்
சுரியார்மென் குழலியொடும் விடியச் சென்று
தொகுபுகழ்சேர் திருஞான சம்பந் தன்தன்
வரியாரும் பொழிலும்எழில் மதிலும் தோற்றும்
வயற்புகலிப் பதியினிது மருவ லாமே. 1365

### ஈற்றடி மிக்குவந்த நான்கடிக் கலித்தாழிசை

26. ஆமாண்பொன் கூட்டகத்த அஞ்சொல்இளம் பைங்கிளியே
பாமாலை யாழிமுரியப் பாணழியப் பண்டருள்செய்
மாமான சுந்தரன்வண் சம்பந்த மாமுனியெம்
கோமான்தன் புகழொருகால் இன்புறநீ கூறாயே
கொச்சையர் கோன் தன்புகழ்யான் இன்புறநீ கூறாயே. 1366

### எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

27. கூற தாகமெய் யடிமை தானெனை
உடைய கொச்சையர் அதிபதி
வீற தார்தமிழ் விரகன்மேதகு
புகழி னான்இவன் மிகுவனச்
சேற தார்தரு திரள்க ளைக்கன
செழுமு லைக்குழி யவர்சினந்து
ஏறு தானிது தழுவி னார்என
இடிகொள் மாமுரசு அதிருமே. 1367

### அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

28. சதுரன் புகலியர் அதிபன்சூர்
தவசுந் தரகவு ணியர்தஞ்சீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல்வன் புகலியர் அதிபன்தாள்
முறைவந் தடையலர் நகரம்போல்
எதிர்வந் தனர்விறல் கெடவெம்போர்
எரிவெங் கணைசொரி புரிமின்கார்
அதிர்கின் றனஇது பருவஞ்சேர்
அலர்தம் பதிமதில் இடிமின்னே. 1368

### எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

29. மின்னும் ஆகத்து எழிலி யும்சேர்
மிகுபொன் மாடப் புகலிநாதன்
துன்னு ஞானத்து எம்பி ரான்மெய்த்
தொகைசெய் பாடற் பதிகம் அன்னாள்
பொன்னு மாநல் தரள மும்தன்
பொருக யற்கண் தனம்நி றைந்தாள்
இன்னும் ஏகிப் பொருள்ப டைப்பான்
எங்ஙனேநான் எண்ணு மாறே. 1369

### பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

30. மாறி லாத பொடிநீறு
ஏறு கோலவடிவும்
வம்பு பம்பு குழலும்
துங்க கொங்கை இணையும்
ஊறி யேறு பதிகத்து
ஓசை நேச நுகர்வும்
ஒத்து கித்து நடையும்
சித்த பத்தி மிகையும்
வீறது ஏறும் வயல்சூழ்
காழி ஞான பெருமான்
வென்றி துன்று கழலின்
ஒன்றி நின்ற பணியும்
தேறல் போலும் மொழியும்
சேல்கள் போலும் விழியும்
சிந்தை கொண்ட பரிசும்
நன்றி மங்கை தவமே. 1370

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

31. கைதவத்தால் என்இடைக்கு நீ வந்தது
அறியேனோ கலதி பாணா
மெய்தவத்தார் உயிரனைய மிகுசைவ
சிகாமணியை வேணுக் கோனைச்
செய்தவத்தால் விதிவாய்ந்த செழுமுலையார்
அவனுடைய செம்பொன் திண்தோள்
எய்தவத்தால் விளிவெனக்கென் யாதுக்கு
நீபல பொய் இசைக்கின் றாயே. 1371

## மதங்கியார்

## எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

32. இசையை முகந்தெழு மிடறும்இ திங்கிவன்
இடுகர ணங்களின் இயல்பும் வளம்பொலி
திசைதிசை துன்றிய பொழில்கல வுந்திகழ்
சிரபுர மன்தகு தமிழ்விர கன்பல
நசைமிகு வண்புகழ் பயிலும் மதங்கிதன்
நளிர்முலை செங்கயல் விழிநகை கண்டபின்
வசைதகு மென்குலம் அவைமுழு துங்கொள
மதிவளர் சிந்தனை மயல்வரு கின்றதே. 1372

## மதங்கியார் (ஆடல் பாடல்களில் சிறந்தவள். பாணன் மகள்.)

## எண்சீர்க் கழிநெடிலடி விருத்தம்

33. வருகின் றனன்என் றனதுள் ளமும்நின்
வசமே நிறுவிக் குறைகொண் டுதணித்து
அருகும் புனல்வெஞ் சுரம்யான் அமரும்
மதுநீ இறையுன் னினையா தெனின்முன்
கருகும் புயல்சேர் மதில்வண் புகலிக்
கவிஞன் பயில்செந் தமிழா கரன்மெய்ப்
பெருகுந் திருவார் அருள்பே ணலர்போல்
பிழைசெய் தனைவந் ததர்பெண் கொடியே. 1373

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மதங்கியார்

34. கொடிநீடு விடையுடைய பெருமானை அடிபரவு
குணமேதை கவுணியர்கள் குலதீப சுபசரிதன்
அடியேன(து) இடர்முழுதும் அறவீசு தமிழ்விரகன்
அணியான புகலிநகர் அணையான கனைகடலின்
முடிநீடு பெருவலைகொள் தலையூடு புகுவன்நுமர்
முறைவேயு பணிபுரிவன் அணிதோளி புனைவனவை
படியாரும் நிகரரிய அரியாரும் மதர்நயனி
பணைவார்மென் முலைநுளையார் மடமாதுன் அருள்பெறினே.
1374

### மதங்கியார்

35. பெறுபயன் மிகப்புவியுள் அருளுவன பிற்றைமுறை
பெருநெறி அளிப்பனபல் பிறவியை ஒழிச்சுவன்
உறுதுயர் அழிப்பனமுன் உமைதிரு வருட்பெருக
உடையன நதிப்புனலின் எதிர்ப.்.றி உய்த்தனபுன்
நறுமுறு குறைச்சமணை நிரைகெழு நிறுத்தியன
நனிகத வடைத்தனதுன் அருவிடம் அகற்றியன
துறுபொழில் மதிற்புறவ முதுபதிமன் ஒப்பரிய
தொழில்பல மிகுந்ததமிழ் விரகன கவித்தொகையே. 1375

### பன்னிரு சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

36. தொகுவார் பொழில்சுற் றியவான்
மதிதோ யுமதிற் கனமார்
தொலையா ததிருப் பொழில்மா
ளிகைமா டநெருங் கியசீர்
மிருகா ழிமன்முத் தமிழா
கரன்மே தகுபொற் புனைதார்
விரையார் கமலக் கழலே
துணையா கநினைப் பவர்தாம்
மகரா சுரநித் திலநீர்
நிலையார் புவியுந் தமராய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலா றுபிழைப் பினினூ
ழியிலக்......... கிதமா
தகுவாழ் வுநிலைத் தொழில்சேர்
அறமா னபயிற் றுவர்மா
சதுரால் வினைசொற் றதன்மேல்
அணுகார் பிறவிக் கடலே. 1376

## நேரிசை ஆசிரியப்பா பாணாற்றுப்படை

37. கருமங் கேண்மதி கருமங் கேண்மதி
துருமதிப் பாண கருமங் கேண்மதி
நிரம்பிய பாடல் நின்கண் ணோடும்
அரும்பசி நலிய அலக்கணுற்று இளைத்துக்
காந்திய உதரக் கனல்தழைத் தெழுதலின்

தேய்ந்துடல் வற்றிச் சின்னரம் பெழுந்தே
இருகுபு சுள்ளி இயற்றிய குரம்பை
உறுசெறித் தனைய உருவுகொண் டுள்வளைஇ
இன்னிசை நல்கி யாழ்சுமந் தன்னம்
மன்னிய வளநகர் மனைக்கடை தோறும்

சென்றுழிச் சென்றுழிச் சில்பலி பெறாது
நின்றுழி நிலாவு வன்றுயர் போயொழிந்து
இன்புற்று இருநிதி எய்தும் அதுநுனது
உள்ளத்து உள்ள தாயின் மதுமலர்
வண்டறை சோலை வளவயல் அகவ

ஒண்திறல் கோண்மீன் உலாவு குண்டகம்
உயர்தரு வரையில் இயல்தகு பதணத்துக்
கடுநுதிக் கழுக்கடை மிடைதரு வேலிக்
கனகப் பருமுரட் கணையக் கபாட
விலையக் கோபுர விளங்கெழில் வாயில்

நெகிழ்ச்சியில் வகுத்துத் திகழ்ச்சியில் ஓங்கும்
மஞ்சணை இஞ்சி வண்கொடி மிடைந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செஞ்சுடர்க் கனகத் திகழ்சிலம் பனைய
மாளிகை ஒளிச் சூளிகை வளாகத்
தணிவுடைப் பலபட மணிதுடைத்து அழுத்திய

நல்லொளி பரந்து நயந்திகழ் இந்திர
வில்லொளி பலபல விசும்பிடைக் காட்ட
மன்னிய செல்வத்துத் துன்னிய பெருமைச்
செம்மலர் மாது சேர்ந்திறைபிரியாக்
கழுமல நாதன் கவுணியர் குலபதி

தண்தமிழ் வீரகன் சைவ சிகாமணி
பண்டிதர் இன்பன் பரசமய கோளரி
என்புனை தமிழ்கொண் டிரங்கிஎன் னுள்ளத்து
அன்பினை அருளிய ஆண்டகை தன்புகழ்
குறைவறுத் துள்கி நிறைகடை குறுகி

நாப்பொலி நல்லிசை பாட
மாப்பெருஞ் செல்வம் மன்னுதி நீயே. 1377

### வஞ்சித்துறை

38. நீதியின் நிறைபுகழ்
மேதகு புகலிமன்
மாதமிழ் விரகனை
ஓதுவது உறுதியே. 1378

### எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

39. உறுதி முலைதாழ எனைஇ கழுநீதி
உனது மனமார முழுவ துமதாக
அறுதி பெறுமாதர் பெயல்த ருதல்தானும்
அழகி தினியானுள் அருள்பு னைவதாகப்
பெறுதி இவைநீயென் அடிப ணிதல்மேவு
பெருமை கெடநீடு படிறொ ழிபொன்மாட
நறைக மழுவாச வளர்பொ ழில்கலாவு
நனிபு கலிநாத தமிழ்வி ரகநீயே. 1379

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியத்துறை

40. நீ மதித்து உன்னி நினையேல் மடநெஞ்சமே
காமதிக் கார்பொழிற் காழி
நாமதிக் கும்புகழ் ஞானசம் பந்தனொடு
பூமதிக் குங்கழல் போற்றே. 1380

## கட்டளைக் கலிப்பா

41. போற்றி செய்தரன் பொற்பழல் பூண்டதே
புந்தி யானும்தம் பொற்பழல் பூண்டதே
மாற்றி யிட்டது வல்விட வாதையே
மன்னு குண்டரை வென்றது வாதையே
ஆற்றெ திர்ப்புனல் உற்றதந் தோணியே
ஆன தன்பதி யாவதந் தோணியே
நாற்றி சைக்கவி ஞானசம் பந்தனே
நல்ல நாமமும் ஞானசம் பந்தனே. 1381

## கைக்கிளை மருட்பா

42. அம்புந்து கண்ணிமைக்கும் ஆனநுதல்வியர்க்கும்
வம்புந்து கோதை மலர்வாடும் - சம்பந்தன்
காமரு கழுமலம் அனையாள்
ஆமிவள் அணங்கலன் அடிநிலத் தனவே. 1382

## பன்னிரு சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்

43. தனமும் துகிலும் சாலிக்
குலையும் கோலக் கனமாடச்
சண்பைத் திகழ்மா மறையோன்
அதிபன் தவமெய்க் குலதீபன்
கணவன் கொடைநீ டருகா
சனிதன் கமலக் கழல்பாடி
கண்டார் நிறையக் கொள்ளப்
பசியைக் கருதாது எம்பாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனைதண் டமிழின் இசையார்
புகலிக் கரசைப் புகழ்பாடிப்
புலையச் சேரிக் காளை
புகுந்தால் என்சொற் புதிதாக்கிச்
சினவெங் கதமாக் களிறொன்று
இந்தச் சேரிக் கொடுவந்தார்
சேரிக் குடிலும் இழந்தார்
இதனைச் செய்வது அறியாரே. 1383

## இன்னிசை வெண்பா

44. யாரேஎம் போல அருளுடையார் இன்கமலத்
தாரேயும் சென்னித் தமிழ்விரகன் - சீரேயும்
கொச்சை வயன்தன் குரைகழற்கே மெச்சி
அடிமைசெயப் பெற்றேன் அறிந்து. 1384

## பதின்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

45. அறிதரு நுண்பொருள் சேர்பதி கம்மரன் கழல்போல்
அணிதரு சுந்தர மார்தமிழ் விரகன் பிறைதோய்
செறிதரு பைம்பொழில் மாளிகை சுலவுந் திகழ்சீர்த்
திருவளர் சண்பையில் மாடலை கடலொண் கழிசேர்
எறிதிரை வந்தெழு மீனிரை நுகர்கின் றிலைபோய்
இனமும் அடைந்திலை கூரிடர் ஓடுருந் தனையால்
உறுதுயர் சிந்தையின் ஊடுத வினரெந் தமர்போல்
உமரும் அகன்றன ரோஇது உரைவண் குருகே. 1385

## கலி விருத்தம்

46. குருகணி மணிமுன்கைக் கொடியுநல் விறலவனும்
அருகணை குவர்அப்பால் அரிதினி வழிமீள்மின்
தருகெழு முகில்வண்கைத் தகுதமிழ் விரகன்தன்
கருகெழு பொழில்மாடக் கழுமல வளநாடே. 1386

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கலி விருத்தம்

47. நாடே றும்புகழ் ஞானசம் பந்தன்வண்
சேடே றுங்கொச்சை நேர்வளம் செய்துணை
மாடே றுந்தையல் வாட மலர்ந்தனை
கேடே றுங்கொடி யாய்கொல்லை முல்லையே. 1387

### எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

48. முல்லை நகையுமைதன் மன்னு திருவருளை
முந்தியுறுபெரிய செந்தண் முனிவன்மிகு
நல்ல பொழில்சுலவு தொல்லை அணிபுகலி
நாதன் மறைமுதல்வன் வேத மலையதனில்
வில்லை யிலர்கணையும் இல்லை பகழியுறு
வேழ மிரலைகலை கேழல் வினவுறுவர்
சொல்லை யிலர்விரகர் அல்லர் தழைகொணர்வர்
தோழி இவர்ஒருவர் ஆவ வழிதர்வரே. 1388

### வஞ்சித்துறை

49. வழிதரு பிறவியினுறு
தொழிலமர் துயர்கெடுமிகு
பொழிலணி தருபுகலிமன்
எழிலிணை யடியிசைமினே. 1389

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பியாண்டார் நம்பிகள் அருளிய

# ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை (39)

திருச்சிற்றம்பலம்

01. பூவார் திருநுதல்மேல் பொற்சுட்டி யிட்டொளிரக்
கோவாக் குதலை சிலம்பரற்ற - ஓவாது
அழுவான் பசித்தான்என் றாங்கிறைவன் காட்டத்
தொழுவான் துயர்தீர்க்கும் தோகை - வழுவாமே
முப்பத் திரண்டறமும் செய்தாள் முதிராத

செப்பொத்த கொங்கைத் திருநுதலி - அப்பன்
அருளாலே ஊட்டுதலும் அப்பொழுதே ஞானத்
திரளாகி முன்னின்ற செம்மல் - இருள்தீர்ந்த
காழி முதல்வன் கவுணியர்தம் போரேறு
ஊழி முதல்வன் உவனென்று காட்டவலான்

வீழி மிழலைப் படிக்காசு கொண்டபிரான்
பாழி அமணைக் கழுவேற்றி னான்பாணர்
யாழை முரித்தான் எரிவாய் இடும்பதிகம்
ஆழி உலகத்து அழியாமல் காட்டினான்
ஏழிசை வித்தகன்வந்து ஏனோரும் வானோரும்

தாழும் சரணச் சதங்கைப் பருவத்தே
பாலையும் நெய்தலும் பாடவலான் - சோலைத்
திருவா வடுதுறையில் செம்பொற் கிழியொன்று
அருளாலே பெற்றருளும் ஐயன் - தெருளாத
தென்னவன்நா டெல்லாம் திருநீறு பாலித்த

மன்னன் மருகல்விடம் தீர்த்தபிரான் பின்னைத்தென்
கோலக்கா வில்தாளம் பெற்றிக் குவலயத்தில்
மாலக்கா லத்தே - மாற்றினான் - ஞாலத்து
முத்தின் சிவிகை அரன்கொடுப்ப முன்னின்று
தித்தித்த பாடல் செவிக்களித்தான் - நித்திலங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடத் தொளிரும் மறைக்காட் டிறைக்தவைப்
பாடி அடைப்பித்த பண்புடையான் - நீடும்
திருவோத்தூர் ஆண்பனையைப் பெண்பனையா கென்னும்
பெருவார்த்தை தானுடைய பிள்ளை - மருவினிய
கொள்ளம்பூ தூர்க்குழகன் நாவா யதுகொடுப்ப

உள்ளமே கோலாக ஊன்றினான் - வள்ளல்
மழவன் சிறுமதலை வான்பெருநோய் தீர்த்த
குழகன் குலமறையோர் கோமான் - நிலவிய
வைகையாற்று ஏடிட்டு வானீர் எதிரோட்டும்
செய்கையால் மிக்க செயலுடையான் - வெய்யவிடம்

மேவி இறந்தஅயில் வேற்கண் மடமகளை
வாவென்று அழைப்பித்துஇம் மண்ணுலகில் வாழ்வித்த
சீர்நின்ற செம்மைச் செயலுடையான் நேர்வந்த
புத்தன் தலையைப் புவிமேற் புரள்வித்த
வித்தகப் பாடல் விளம்பினான் - மொய்த்தொளிசேர்

கொச்சைச் சதுரன்தன் கோமனைத் தான்செய்த
பச்சைப் பதிகத் துடன்பதினா றாயிரம்பா
வித்துப் பொருளை விளைக்க வலபெருமான்
முத்திப் பகவ முதல்வன் திருவடியை
அத்திக்கும் பத்தரெதிர் ஆணைநம தென்னவலான்

கத்தித் திரிபிறவிச் சாகரத்துள் ஆழாமே
பத்தித் தனித்தெப்பம் பார்வாழத் தந்தபிரான்
பத்திச் சிவமென்று பாண்டிமா தேவியொடும்
கொற்றக் கதிர்வேல் குலச்சிறையும் கொண்டாடும்
அற்றைப் பொழுதத்து அமணரிடு வெந்தீயைப்

பற்றிச் சுடுகபோய்ப் பாண்டியனை என்னவல்லான்
வர்த்தமா னீசர் கழல்வணங்கி வாழ்முருகன்
பத்தியை ஈசன் பதிகத்தே காட்டினான்
அத்தன் திருநீல நக்கற்கும் அன்புடையான்
துத்த மொழிக்குதலைத் தூயவாய் நன்னுதலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திலப் பூண்முலைக்கும் நீண்டதடங் கண்ணினுக்கும்
கொத்தார் கருங்குழற்கும் கோலச்செங் கைம்மலர்க்கும்
அத்தா மரையடிக்கும் அம்மென் குறங்கினுக்கும்
சித்திரப்பொற் காஞ்சி செறிந்தபேர் அல்குலுக்கும்
முத்தமிழ்நூல் எல்லாம் முழுதுணர்ந்த பிள்ளையார்க்கு

ஒத்த மணம்இதுவென்று ஓதித் தமர்கள்எல்லாம்
சித்தங் களிப்பத் திருமணஞ்செய் காவணத்தே
அற்றைப் பொழுதத்துக் கண்டுட னேநிற்கப்
பெற்றவர்க ளோடும் பெருமணம்போய்ப் புக்குத்தன்
அத்தன் அடியே அடைந்தான் அழகிதே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பியாண்டார் நம்பிகள் அருளிய

## திருநாவுக்கரசு தேவர் திருஏகாதசமாலை (40)

திருச்சிற்றம்பலம்

01. புலனோடு ஆடித் திரிமனத்தவர்
பொறிசெய் காமத் துரிசடக்கிய
புனித நேசத் தொடுத மக்கையர்
புணர்வி னாலுற்று உரைசெ யக்குடர்
கலவு சூலைப் பிணகெ டுத்தொளிர்
சுடுவெ ணீறிட்டு அமண்அ கற்றிய
துணிவி னான்முப் புரம்எ ரித்தவர்
சுழலி லேபட் டிடுத வத்தினர்
உலகின் மாயப் பிறவி யைத்தரும்
உணர்வி லாஅப் பெரும யக்கினை
ஒழிய வாய்மைக் கவிதை யிற்பல
உபரி யாகப் பொருள்ப ரப்பிய
அலகில் ஞானக் கடலி டைப்படும்
அமிர்த யோகச் சிவவொ ளிப்புக
அடிய ரேமுக்கு அருளி னைச்செயும்
அரைய தேவத் திருவ டிக்களே. 1391

02. திருவாவுக் கரசடி யவர்நாடற் கதிநிதி
தெளிதேனொத்து இனியசொல் மடவார்உர்ப்பசிமுதல்
வருவானத்து அரிவையர் நடமாடிச் சிலசில
வசியாகச் சொலுமவை துகளாகக் கருதிமெய்
உருஞானத் திரள்மன முருகாநெக் கழுதுகண்
உழவாரப் படைகையில் உடையான் வைத்தனதமிழ்
குருவாகக் கொடுசிவ னடிசூடத் திரிபவர்
குறுகார்புக்கு இடர்படு குடர்யோனிக் குழியிலே. 1392

03. குழிந்து சுழிபெறுநா பியின்கண் மயிர்நிரையார்
குரும்பை முலையிடையே செலுந்தகை நன்மடவார்
அழிந்த பொசியிதிலே கிடந்தி ரவுபகல்நீ
அளைந்த யருமதுநீ அறிந்திலை கொல்மனமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழிந்த கழிகிடுநாள் இணங்கி தயநெகவே
கசிந்தி தயம்எழுநூ றரும்ப திகநிதியே
பொழிந்த ருளுதிருநா வின்எங்கள் அரசினையே
புரிந்து நினையிதுவே மருந்து பிறிதிலையே. 1393

04. இலைமாடு என்றிடர் பரியார் இந்திர
னேஒத் துறுகுறை வற்றாலும்
நிலையாது இச்செல்வம் எனவே கருதுவர்
நீள்சன் மக்கட லிடையிற்புக்கு
அலையார் சென்றரன் நெறியா குங்கரை
யண்ணப் பெறுவார்கள் வண்ணத்தின்
சிலைமா டந்திகழ் புகழ்ஆ மூர்உறை
திருநா வுக்கரசு என்போரே. 1394

05. என்பட்டிக் கட்டிய இந்தப்பைக் குரம்பையை
இங்கிட்டுச் சுட்டபின் எங்குத்தைக் குச்செலும்
முன்பிட்டுச் சுட்டிவ ருந்திக்குளத் திக்கென
மொய்ம்புற்றுக் கற்றறி வின்றிக்கெட் டுச்சில
வன்பட்டிப் பிட்டர்கள் துன்புற்றுப் புத்தியை
வஞ்சிக் கத்திவி ழுந்துளச்சுத் தட்டுவர்
அன்பர்க்குப் பற்றிலர் சென்றுஅர்ச்சிக் கிற்றிலர்
அந்தக்குக் கிக்கிரை சிந்தித்த பித்தரே. 1395

06. பித்தரசு பதையாத கொத்தைநிலை உளதேவு
பெட்டியுரை செய்துசோறு சுட்டியுழல் சமண்வாயர்
கைத்தரசு பதையாத சித்தமொடு சிவபூசை
கற்றமதி யினன்ஓசை இத்தரசு புகழ்ஞாலம்
முத்திபெறு திருவாளன் எற்றுணையின் மிதவாமல்
கற்றுணையில் வருமாதி........
பத்தரசு வசைதீர வைத்தகன தமிழ்மாலை
பற்பலவும் அவையோத நற்பதிக நிதிதானே. 1396

07. பதிகம்ஏழ் எழுநூறு பகருமா கவியோகி
பரசுநா வரசான பரமகா ரணவீசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகமா நகர்மேவி அருளினால் அமண்மூடர்
அவர்செய்வா தைகள்தீரும் அனகன்வார் கழல்சூடின்
நிதியரா குவர்சீர்மை உடையரா குவர்வாய்மை
நெறியரா குவர்பாவம் வெறியரா குவர்சால
வதியரா குவர்ஈசன் அடியரா குவர்வானம்
உடையரா குவர்பாரில் மனிதரா னவர்தாமே. 1397

08. தாரைமநகும் அகஇதழ் தகுவன
சாய்பெறுசிறு தளிரினை அனையன
சார்தரும்அடி யவர்இடர் தடிவன
தாயினும்நல கருணையை உடையன
தூமதியினை ஒருபது கொடுசெய்த
சோதியின்மிகு கதிரினை யுடையன
தூயனதவ முனிவர்கள் தொழுவன
தோமறுகுண நிலையின தலையின
ஓமரசினை மறைகளின் முடிவுகள்
ஒலிடுபரி சொடுதொடர் வரியன
ஓவறுமுணர் வொடுசிவ வொளியன
ஊறியகசி வொடுகவி செய்தபுகழ்
ஆமரசுயர் அகநெகும் அவருளன்
ஆரரசுஅதி கையின்அரன் அருளுவன்
ஆம்அரசுகொள் அரசுஎனை வழிமுழுது
ஆளரசுதன் அடியினை மலர்களே. 1398

09. அடிநாயைச் சிவிகைத் தவிசேறித் திரிவித்து
அறியாவப் பசுதைச் சிறியோரிற் செறியும்
கொடியேனுக்கு அருளைத் திருநாவுக் கரசைக்
குணமேருத் தனைவிட்டு எனையாமொட் டகல்விற்
பிடியாரப் பெறுதற்கு அரிதாகச் சொலும்அப்
பிணநூலைப் பெருகப் பொருளாகக் கருதும்
செடிகாய்த் துறிகைச் சமண்மூடர்க்கு இழவுற்று
அதுதேவர்க்கு அரிதுஅச் சிவலோகக் கதியே. 1399

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. சிவசம் பத்திடைத் தவஞ்செய்து
திரியும் பத்தியிற் சிறந்தவர்
திலகன் கற்றசிட் டன்வெந்தொளி
திகழும் பைம்பொடித் தவண்டணி
கவசம் புக்குவைத்து அரன்கழல்
கருதும் சித்தனில் கவன்றிய
கரணம் கட்டுதற்கு அடுத்துள
களகம் புக்கநற் கவந்தியன்
அவசம் புத்தியிற் கசிந்துகொடு
அழுகண் டத்துவைத்து அளித்தனன்
அனகன் குற்றமற் றபண்டிதன்
அரசெங் கட்கொர்பற் றுவந்தறு
பவசங் கைப்பதைப் பரஞ்சுடர்
படிறின் றித்தனைத் தொடர்ந்தவர்
பசுபந் தத்தினைப் பரிந்தடு
பரிசொன் றப்பணிக் குநன்றுமே. 1400

11. நன்றுமாதர நாவினுக் கரைசடி
நளினம் வைத்துஉயின் அல்லால்
ஒன்றுமாவது கண்டிலம் உபாயம்மற்று
உள்ளன வேண்டோமால்
என்றும் ஆதியும் அந்தமும் இல்லதோர்
இகபரத்து இடைப்பட்டுப்
பொன்று வார்புகும் சூழலிற் புகேம்புகிற்
பொறியில்ஐம் புலனோடே. 1401

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Noolaham Foundation.
g | aavanaham.org




# திருமுறை மடம்

Designed & Printed By: Anush Printers, Colombo-13. Tel: 0777-244893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org